குக்கிடக்கருவு	0	மேகத்திமிர்வியாதிக்கு	0
முள்ளங்கிஉபயோகம்	0	ரிணங்களார	76
தாதுபுஷ்டிக்கி	0	நீரொழுக்கிற்கு	0
		வாய்வேக்காட்டிற்கு	0
(கண்டாவிழ்தவகைபரணி.)		சயித்தியத்திற்கு	0
நோய்வராதிருக்க	70	சாதாரணபிரமலுக்கு	0
நாக்குபூச்சி	0	வாய்வேக்காட்டிற்கு	0
கண்ணோய்க்கு	0	பல்வலிக்கு	0

அவுஷதங்கள்.	பக்கம்.	அவுஷதங்கள்.	பக்கம்.
சாட்பத்து	77	தினவுசிரங்கிற்கு	79
சொரிசிரங்கு	0	பிரசவேதனைக்கு	0
அம்மைகாணுதிருக்க	0	கருத்தேமலுக்கு	0
ரிணங்களார	0	தலைசிரங்கிற்கு	0
பெண்கட்கு	0	மரித்தபிண்டம்வெளிப்பட	0
தக்காளியோழம்	0	கெற்பமில்லாதவர்க்கு	0
சோம்புகூரணம்	78	குட்டிஞல்வந்த	80
பேன்சாக	0	பல்நோய்க்கு	0
பல்நோய்க்கு	0	வெளுத்தமயிர்கருக்க	0
நீராதவெள்ளைக்கு	0	ஒருதலைவலிக்கு	0
மயிர்க்கருக்க	0		

அவுஷிதங்களின் அட்டவணை.

முற்றிற்று.

இனி மூன்றும்பாகத்தில் வியாதிகட்கு நேர்த்தியான

இயாழவகைகள் சொல்லப்படும்.

உ

வேலுமயிலுந்துணை. ૫૪

ஆயுள்வேத அரிச்சுவடி

யென்னும்

அனுபோகவயித்திய

பிரம்மரகசியம்.

இரண்டாம்பாகம்.

வணக்கச் செய்யுள். ๑

அத்தியை முத்திக்கான அருட்பெருஞ் சோதிதன்னை
சித்தியை பாகங்கொண்ட சிவகிரி மூலாதாரப்
பத்தியை பரமஞானம் பாலிக்கு மெய்கோன்றனை
நத்தியே யிரண்டாம்பாகம் நவிலுவேன் படியுளோர்க்கே.

இதுவுமது.

காலமொரு மூன்றினையுங் கடந்தஞானக்
கடவுள்தன் னடிபணிந்து கருத்துளோர்க்கு
ஞாலமதில் அனுபோக வயித்தியத்தை
நாடியிரண் டாம்பாகம் நவிலுதற்குப்
பாலமர்த மீந்தருளும் சத்திவாலைப்
பராபரியா ளிருகமலம் பணிந்துவாழ்த்திச்
சீலமுள முனிவர்நவ நாதர்சித்தர்
செய்யதிருச் சீர்பாதஞ் சென்னிசேர்ப்பாம்.

பாயிரம்.

சென்னிமிசை நாதாக்கள் பாதம்சேர்த்து
செப்புமிரண் டாங்காண்ட செய்திதன்னில்
உன்னிதமாங் குளிகைவகை பரணியோடு
உயிர்கொடுக்கும் சஞ்சீவிக் குழம்பின்மார்க்கம்
தன்னியஞ்சேர் சிந்தூர மெழுகுபற்பம்
தாதுவிர்த்தி யாம்பரணி தன்னேடொக்க
பின்னமிலா சூரணங்கள் பெருமைதன்னை
பேசவினி நாவுண்டோ பூமியோர்க்கே. (1)

பூமிமிசை பிரவிதரித் திரன்தனக்கு
புதைவிதியங் கிடைத்தாற்போற் பொதுவதாக
நேமித்த வனுபோக யிருகாண்டத்தை
நேரறிந்து செய்தவரே சித்தியோராவர்
காமியொடு தலைவணங்காச் சாமியானோர்
கற்றகமிச் சொல்லிர குற்றேமாய்வர்
வாமிசிவ காமியருள் வேண்டும்பேர்கள்
வையமிசை யெத்தொழிலும் வழிகாண்பாரே. (2)

வழிப்பட்டுப் பெரியோரை வணங்கல்வேண்டும்
வருள்சுரந்த நாதாக்கட் கிணங்கல்வேண்டும்
தொழிம்பட்டு யெவ்வழியும் துடரல்வேண்டும்
தொல்லுலகில் சிரியோர்போற் கருங்கல்வேண்டும்
செழித்தவளஞ் சிறுமணலூர் முனிசாமிச்சொல்
செந்தமிழி னனுபோக வயித்தியந்தான்
கழித்தமுறை யானாலும் அறிவின்மிக்கோர்
கைக்கொள்வார் ஆனந்த மெய்க்கொள்வாரே. (2)

உ

தேவிசகாயம். 49

முதலாவது

மாத்திரைவகைபாணி.

அல்லது குளிகையெனக் கொள்க.

தசாவதாரபேதி.

இவை பச்சையாகக்கூட்டவும்.			இவை வறுத்துக்கூட்டவும்.		
1 - தாளம்	விராகனிடை	க	பெருங்காயம்	விராகனிடை	க
2 - மனோசிலை	,,	க	கடுகுரோணி	,,	க
3 - இரசம்	,,	க	திப்பிலி	,,	க
4 - வெண்காரம்	,,	க	கருஞ்சீரகம்	,,	க
5 - இந்துப்பு	,,	க	வாளம்	,,	கூ

இவை-ம் இதனில் (கூ) ம் வகைக்கு விராகனிடையாக நிறுத்தெடுத்துக்கொண்டு முதற்கலத்தில் காட்டியமெம்பரைப்போல் முதலாவது தாளகத்தை கல்வத்திலிட்டரைத்து பிறகு மனோசிலைஇரசம், வெண்காரம், இந்துப்பு, இப்படி ஐந்துங்கலக்கவரைத்துக்கொண்டு இரண்டாங்கலத்தி லுரைத்த கற்கவகை (ச) தினுசை இளம் வறுப்பாக வறுத்து சேர் [illegible]றைத்து வாளத்தை குற்றமின்றி சுத்திசெய்து (கூ) விராகனிடை நிறுத்தெடுத்துமற்றசரக்குடன் ஒக்கப்போட்டு இரண்டுஜாமம் அரைக்கவேண்டியது மோரும்சாதமும் திருப்தியாகசாப்பிட்டு அரைக்கவும்ஜாமக்கணக்கு சரியாய்முடிந்தவுடன் மாட்டுக்கொம்புசிமிளியில் வை[illegible]ள்ளவும் குன்றிப்பிரமாணம் யெடுத்து பனவெல்லம் அல்லது சர்க்கரையில்வைத்து சாப்பிடலாம் பேதியதிகமானல் வசம்புசுட்டு யொழும்கொள்ளவும் இரைச்சிகுப்பூ, கத்திரி, முருங்கை, அவரை, இதுகளின்பிஞ்சு மிளகுநீர் கூட்டாமல் மாலையில் மிளகு யிளம் வறும்பிட்டு சுக்குகட்டிப்போட்டு யொழும் சாப்பிடவும்.

மலஜெலங்கட்டினுல் நவாச்சாரபேதி.

நவாச்சாரம் பலம் (க) கல்வத்திலிட்டு கொடிக்கள்ளிபால் விட்டு விளக்கெண்ணெ (கூ) அல்லது (ரு) துளிவிட்டு ஒருஜாமம் அரைத்து மாட்டுக்கொம்பு சிமிளியில் வைத்துக்கொள்ளவும் (அநுபானம்) குண்டுமணிப் பிரமாணம் யெடுத்து பழய வெல்லம் அல்லது கூழு இதுகளில்வைத்து சாப்பிடவும் பேதியதிகமானுல் யெலுமிச்சம்பழச்சார் அல்லது புளித்தமோர்சாதம் சாப்பிடவும் (தீரும்வியாதியாவன) மலக்கட்டு, ஜெலக்கட்டு, பெருவயர், வாய்வுகட்டி, மகோதரம், நீராம்பல், இவை தீரும், இச்சாபத்தியம்.

பேதிக்கு காசுக்கட்டிமாத்திரை.

காசுக்கட்டி விராகனிடை (௰உ) சுத்திசெய்தவாளம் விராகனிடை (சு) தேன்விட்டு ஒருஜாமம் அரைத்து குண்டுமணிப் பிரமாணம் மாத்திரைசெய்து சீசாவில் வைத்துக் கொள்ளவும் (அநுபானம்) ஒரு மாத்திரையை பொடித்து வாயில் போட்டு கொஞ்சம் ஜெலம் குடிக்கவும் பேதியாம் வயிற்றுவலி, வாந்தி கடினமானபேதிகண்டால் யெலுமிச்சம்பழச்சார் குடிக்கவும்நிற்கும் அல்லது குளிர்ந்தஜெலத்திற் குளித்துவிட்டு மோர்சாதம் சாப்பிட நிற்கும் மாலையில் மிளகுயியாழம் சாப்பிடவும்.

பேதிக்குஜெலமாத்திரை.

ஜாதிலிக்கம்	விராக	க	மிளகு	விராக	க
இரசபற்பம்	,,	க	வெண்காரம்	,,	க
சுக்கு	,,	க	சிற்றுமணக்குபருப்பு	,,	க
திப்பிலி	,,	க	சுத்திசெய்தவாளம்	,,	எ

இவைகளை கல்வத்திலிட்டு குளிர்ந்தஜெலம்விட்டு ஒருஜாமம் அரைத்து குண்டுமணிப்பிரமாணம் மாத்திரைசெய்து சீசாவில்

வைத்துக் கொள்ளவும் (அநுபானம்)ஒரு மாத்திரை யெடுத்து கொஞ்சம் வாழைப்பழத்திற்குள் வைத்து சாப்பிட்டு உடனே கொஞ்சம் குளிர்ந்த ஜெலம்குடிக்க பேதியாகும் பேதியதிகமானுல் சுடுதண்ணீர் குடிக்க பேதிகட்டும் வென்னீரில் குளித்து மோர்சாதம் சாப்பிடவும் மாலையில் மிளகுயியாழம் சாப்பிடவும்

கிருமிகள் விழ

சவுக்கியபேதி.

சித்தாமணக்கெண்ணெயும் பசும்பாலும் சமயிடையாய்சேர்த்து நன்றாய்க்கலந்து ஒருசிட்டிக்கை கற்கண்டுபொடி போட்டு சாப்பிட சவுக்கியமாகும் இளப்பு ஆயாசமில்லாமல் பேதியாகும் நாக்கு பூச்சியென்னும் கிருமிகள் கட்டு கட்டாய் வெளிப்படும் இரச்சி சூப்பு மிளகுநீர் இவையாகும் கத்திரி அவரை முருங்கை இதுகளின் பிஞ்சு சேர்த்துக்கொள்ளலாம் மாலையில் சுக்குமிளகு கியாழம் சாப்பிடவும்.

குழந்தைகள் ஊதுமாந்தத்திற்கு

பேதிமாத்திரை.

நெல்லிகெந்தகம் விராகனிடை (வ) இரசம் விராகனிடை(வ) வெண்காரம் விராகனிடை (வ)சுக்குவிராகனிடை (வ)சுத்திசெய்த வாளம் விராகனிடை (க)குளிர்ந்ததண்ணீர் விட்டரைத்து பாசிப் பயர்பிரமாணம் மாத்திரைசெய்துஒருமாத்திரைதண்ணீரிலுரைத்துக்கொடுக்கவும் ஊதுமாந்தம்தீரும் பேதியாம் பொருமல் வாதம் யிவையெல்லாம் தீரும்.

வாயுபேதிக் குளிகை.

மிளகுவிராகனிடை(ரு) வாளம்விராகனிடை(ரு) சுக்குஓமம், ரோகணி, ஆமையோடு, கோஷ்டம் வகைக்கு விராகனிடை (க) பழச்சார்விட்டரைத்து மிளகுபிரமாணம் மாத்திரை செய்துவைத்துக்கொள்ளவும் ஒருமாத்திரையை முலைப்பாலில் யிழைத்து

குழந்தைகளுக்கு கொடுக்க பேதியாகும் சன்னிசுரம் சீதசுரம் தீரும் அதிகமானால் பன்னீர் சாதம் கொடுக்கவும்.

சுரங்களுக்கு பூரக்குளிகை.

ரசகற்பூரம், ரசச்செந்தூரம், லவுங்கம், சுக்கு, திப்பிலி, மிளகு, வகைக்கிவிராகனிடை (க) இஞ்சிச்சார்விட்டரைத்துவலரிசியளவு மாத்திரைசெய்து சீசாவில் வைத்துக்கொள்ளவும் இஞ்சிசுரசம், தேன், முலைப்பால், இதுகளில் ஒருமாத்திரை யிழைத்துக்கொடுக்கவும் எந்தசுரமும்தீரும் சிறுபிள்ளைகளுக்கும்ஆகும், கடும்சுரம் அல்லது அசாத்திய சுரத்திற்கு கடும்பத்தியம் மெதுவானசுரங்களுக்கு இச்சாபத்தியம்.

கோரோசனக்குளிகை.

கோரோஜனம்	அப்ரேகம்
குங்குமப்பூ	ஏலம்
கற்பூரம்	கோஷ்டம்
ரசசெந்தூரம்	கிராம்பு
பச்சைகற்பூரம்	அக்கிராகாரம்

இவை (ய) தினுசுகளும் வகைக்கிவிராகனிடை (க) வீதம் நிறுத்தெடுத்து சந்தனத்தூள் கியாழம் விட்டு (ச) ஜாமம் அறைத்து லவுங்கப்பூகியாழம்விட்டு (உ) ஜாமம்அறைத்து செண்பகப்பூகியாழம்விட்டு (உ) ஜாமம்அறைத்து குன்டுமணியளவு மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி செப்புடப்பியில் வைத்துக்கொண்டு முலைப்பாலில் (க) மாத்திரை உரைத்துக் கொடுக்கவும் தொண்டைக்கட்டு, சிலேட்டுமம், ஜன்னி, நீர்தோஷம், சிலேட்டுமசுரம், வாதசுரம், இவைதீரும் பத்தியம் நோயின்திடமறிந்து வைக்கவும்.

சுரங்கள் சன்னிக்கு
வைரவானந்தக் குளிகை.

சுக்கு	இரசம்
திப்பிலி	நாவி
மிளகு	நெல்லிகெந்தகம்
வெண்காரம்	ஜாதிலிங்கம்

இவைகளைகிரமப்படிசுத்திசெய்து வகைக்கி (க) விராகனிடையாகநிறுத்து எலுமிச்சம்பழச்சார் விட்டரைத்து உளுந்துப்பிரமாணம் மாத்திரைசெய்துசீசாவில் வைத்துக்கொள்ளவும் (அநுபானம்) இஞ்சிசுரசம், தேன், முலைப்பால், பஞ்சமூலகியாழம் இவ்வைகளி லெதிலேனும் (க) மாத்திரை யிழைத்துக் கொடுக்கவும் நோய்க்குத்தக்கவாறு யோசித்து இரண்டுவேளைகொடுத்தாலும் கொடுக்கலாம் ஜன்னி, சுரம், சிலேற்பனம் தீரும் கைப்பு புளிப்பு மாங்கிஷம் நீக்கவும்.

வைரவ சஞ்சீவிக்குளிகை.

வாளம் விராகனிடை (அ) சுக்கு, திப்பிலி, மிளகு, வெண்காரம், நாபி, ரசம், கெந்தி, வகைக்கி (க) விராகனிடையாக நிறுத்தெடுத்து கரிச்சாலைசார்விட்டு (அ) ஜாமம் அறைத்து மிளகு பிரமாணம் மாத்திரைசெய்து சீசாவிலடக்கம்செய்யவும் (அநுபானம்) இஞ்சிரசத்தில் ஒருமாத்திரை யிழைத்துக்கொடுக்கலாம் அல்லது திரிகடுகு லவுங்கம் தாளிசம் இவைகளை வறுத்துப்பொடித்து திருகடிபொடியில் ஒருமாத்திரையை பொடித்துவைத்துக் கொடுக்கலாம் பித்தசுரங்களும் ஜன்னியும்போம் வாதசுரத்திற்கு முலைப்பாலில் ஒருமாத்திரையிழைத்து துளி தேன்விட்டு கொடுக்கவும் சீதளத்திற்கு சன்றுஷ்டக கியாழத்திற்கொடுக்கவும்.

அஜீரணம் மந்தத்திற்கு ஓமம்பாலில் கொடுக்கலாம்மாசிப்பத்திரிகியாழத்தில்கொடுக்க மாரல் சுரம்தீரும் இச்சாபத்தியம்.

சுகாநந்தசஞ்சீவிமாத்திரை.

இரசம் அரிதாரம் கெந்தகம் நாபி துத்தம் மனோசிலை வெண்காரம் கோஷ்டம் வகைக்கி விராகனிடை (க) நிறுத்தெடுத்து கிரமப்படி சுத்திசெய்து பழச்சார்விட்டு (எ) நாள் அறைத்து மிளகளவு மாத்திரை செய்து நிழலி லுலர்த்தி சீசாவில் வைத்துக்கொள்ளவும் (அநுபானம்) தேன், இஞ்சி, முலைப்பால், பன்னீர், குளிர்ந்தநீர், துளசிச்சார், லவுங்கக்கியாழம் இதுகளில் யேதிலே

னும்கொடுக்கலாம் சர்வசுரத்திற்குமாகும் பத்தியம் அறிந்துவைக்கவும்.

ஆனந்தசஞ்சீவிக்குளிகை.

அரசம்	அரிதாரம்	கெந்தகம்
நாபி	வெண்காரம்	தாளிக்கா
சுக்கு	வருத்தமிளகு	திப்பிலி

இவைகள் வகைக்கி(க) விராகனிடையாக நிறுத்து சுத்திசெய்தவாளம் விராகனிடை(கு) இவையாவும் கல்வத்திலிட்டு ஒருநாளைக்கி ஒருஜாமமாக எ-நாள் அரைத்து பயரளவு மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி சீசாவில்வைத்துக் கொள்ளவும் (அனுபானம்) மூலவாய்வுக்கு ஜாதிக்காய் கியாழம் சிறுநீரில்கொடுக்கவும் சூலைக்கி முருங்கப்பட்டை சாற்றில் கொடுக்கவும் வலிகுன்மத்திற்குநொச்சிசாற்றில் கொடுக்கவும் குளிருக்கு தாணிக்காய் சாற்றில் கொடுக்கவும் மலக்கட்டுக்கு விளக்கெண்ணெயில் கொடுக்கவும் க்ஷயத்திற்கு வெள்ளாட்டுப்பாலில்கொடுக்கவும் பாம்புகடிக்குஎலுமிச்சம்பழச்சாற்றில் கொடுக்கவும் பத்தியம் நோய்க்கு தக்கவாறுபார்த்துவைக்கவும்.

சுர-சுரத்திற்கும்
அஞ்சனக்குளிகை.

இரசம்	நாபி	அரிதாரம்	வெண்காரம்
கெந்தி	திரிகடுகு திரிபலை		வெள்ளுள்ளி

இவைகள் வகைக்கி விராகனிடை (க) இவைகட்குசரியிடைவாளம்யாவும் கிரமப்படி சுத்திசெய்து கல்வத்திலிட்டு கரும்புச்சார்விட்டு ஒருநாளைக்கி இரண்டுஜாமம்விழுக்காடு மூன்று நாளைக்கி அரைத்து குன்றிப்பிரமாணம் மாத்திரைசெய்து சீசாவில்வைக்கவும் (அனுபானம்)நெய் தேன் திரிகடுகுகியாழம் இதுகளில்(க) மாத்திரைகொடுக்கவும் பத்தியம் தேகதிடமும்சுரங்களின்உரட்டியும்பார்த்துவைக்கவும்.

சுரங்கட்கு அபினிகுளிகை.

அபினி விராகனிடை (௬) சுக்கு விராகனிடை (௫) திப்பிலி விராகனிடை (௮) சீரகம் விராகனிடை (௬) மிளகு விராகனிடை (௰) இவைகளை விஷ்ணுகாந்தி சார்விட்டு (ச) ஜாமம்அரைத்து குன்றியளவு மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி சீசாவில் வைத்துக் கொள்ளவும் (அனுபானம்) விஷ்ணுகாந்தி, சீரகம், வெற்றிலைக்காம்பு கியாழம்வைத்து அதில் ஒருமாத்திரை யிழைத்துக் கொடுக்கவும் இப்படி காலைமாலை இருவேளையும் (௩) நாள்கொடுக்கவும் கழிச்சல், தாபசுரம்தீரும் சிறுவர்களுக்கும்ஆகும் புளிதள்ளவேண்டியது (௩) நாட்சென்றால் வேகம் மெத்தவுண்டாகும் முன்சொல்லிய கியாழம் செய்து மிளகுதூள் போட்டுக் காய்ச்சி மாலையில் ஒருவேளையாக (௩) நாள் சாப்பிடவும் (எ) வதுநாள் சுட்டபுளி கூட்டவும்.

இனிசமுகக்குளிகை.

பச்சைக்கற்பூரம் [illegible] லவங்கப்பட்டை, ஜாதிக்கா வகைக்கி விராகனிடை (உ) இதற்[illegible]யிடை வாளம் குமரிச்சார் விட்டு அரைக்கவும் உளுந்து[illegible] பிரமாணம் மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி சீசாவில்வைக்கவும் (அனுபானம்) சக்கரையில் (க) மாத்திரைகொடுக்க பேதியாய் சுரம்தீரும் இச்சாபத்தியம்.

வாலைசஞ்சீவிக்குளிகை.

திரிகடுகு, லிங்கம், வெண்காரம், ஓமம், கிராம்பு சமயிடை பழச்சாற்றாலாட்டி உளுந்தளவு மாத்திரைசெய்து நிழலிலுலர்த்திசீசாவில் வைத்துக் கொள்ளவும் ஜன்னிசுரத்திற்கு துளசி-நாய்துளசிசாற்றிலிடவும் முலைப்பாலிலுங்கொடுக்கலாம் தோஷசுரத்திற்கு வெற்றிலையில் ஒருமாத்திரைவைத்து மென்று தின்னவும் பத்தியம் சுரத்திற்கு தக்கினபடிவைக்கவும்.

குழந்தைகள் விடாக்கழிச்சலுக்கு

கட்டுவாதி மாத்திரை.

ஜாதிக்காய், ஜாதிபத்திரி, அதிவிடையம், அபினி, வகைக்கி விராகனிடை (உ௦) யாக நிறுத்தெடுத்து நல்லெண்ணெயில்தோய்த்து (உ) ஜாமம் அறைத்து பணவிடையுருண்டைசெய்து முலைப்பாலில் கொடுக்கவும் ஒருநாளைக்கி காலைமாலை உச்சி மூன்று தடவையும் கொடுக்க பேதிநிற்கும்.

மாந்தக்கழிச்சலுக்குமாத்திரை.

ஜாதிலிங்கம் விராகனிடை (௭) திப்பிலி விராகனிடை (க) ஆவின்பால்விட்டு ஒரு ஜாமம் அறைத்து பயரளவு மாத்திரை செய்து சீசாவில் வைத்துக்கொள்ளவும் (அனுபானம்) கரசனாங்கண்ணி, மிளகு, நாயுருவிவேர், பிரண்டைவேர், வசம்பு, (இ)தினுசும் சாம்பலாக்கி கருஞ்சீரகம் வெடிக்கவிட்டு கொஞ்சியிலையை சிவக்கவறுத்து உழக்கு ஜெலம்விட்டு சுக்குதட்டிப்போட்டு ஆழாக்குகியாழமாகக் காச்சியிறக்கி ஒரு பாலடைகியாழத்திற்கு ஒருமாத்திரை யிழைத்துக்கொடுக்கவும் மாந்தக்கழிச்சல் திரும் இச்சாபத்தியம்.

சுரஹரமாத்திரை.

கோரோசனம்	கோரைக்கிழங்கு
பச்சைகற்பூரம்	சித்திரைமூலம்
அதிமதுரம்	நன்னாரிவேர்
ஏலம்	அகிற்கட்டை
லவுங்கம்	தேவதாரம்
செண்பகப்பூ	தாளிசப்பத்திரி
கோஷ்டம்	கிச்சிலிக்கிழங்கு
விலாமிச்சு	கடுக்காய்
கருடப்பச்சை	நெல்லிக்காய்
கல்நார்	தான்றிக்காய்

இந்த (உ௰) தினுசுகளும் வகைக்கி விராகனிடை (க) நிறுத்தெடுத்து இடித்து வஸ்திரகாயம்செய்து கல்வத்திலிட்டு செவ்

விளநீர்விட்டு (௪) ஜாமம் அறைத்து மிளகுபிரமாணம் மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி சீசாவில் வைத்துக் கொள்ளவும், (அனுபானம்) சிரகக்கியாழத்தில் காலை ஒருமாத்திரை மாலை ஒருமாத்திரையாக இருவேளையும் (௯) நாள்கொள்ள பித்தசுரந்தீரும் இப்படியே தேனில் (௯) நாள்கொள்ள வாதசுரந் தீரும் இஞ்சி சுரசத்தில் கொள்ள சேத்துமசுரந் தீரும் * பஞ்சதீபாக்கினி சூரணத்தில் கொள்ள தொந்தசுரங்கள் தீரும் இச்சாபத்தியம்.

* பஞ்சதீபாக்கினிசூரணம் பின்வரும் சூரணவகைபாணியில் பார்த்துக்கொள்ளவும்.

சுரகேசரிகுளிகை.

செஞ்சந்தனம்	விராகனிடை	௫	நன்னாரி	விராகனிடை	க
கோரோசனம்	,,	உ௦	தாளிசப்பத்திரி	,,	க
ஏலரிசி	,,	க	தேவதாரம்	,,	க
லவுங்கம்	,,	க	மாசிக்காய்	,,	க
அதிமதுரம்	,,	க	ருத்திராட்சம்	,,	க
பேரீச்சு	,,	க	முருங்கிரிக்கை	,,	க
இலுப்பைப்பூ		க	ரோகணி	,,	க

இவைகளில் இடிக்கவேண்டியதுகளை யிடித்து சீலையில்வடிக்கட்டி மெல்லிய தூளாய் செய்து யாவும்கல்வத்திலிட்டு பன்னீரினால் (க) ஜாமம் அறைத்து குங்குமப்பூ (க) விராகனிடை சேர்த்து இளநீர்விட்டு (உ) ஜாமம் அறைத்து குன்றிமணிபிரமாணம் மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி சீசாவில் வைத்துக் கொள்ளவும் (அனுபானம்) இஞ்சிசுரசம் கருந்துளசி யியாழம் தேன் இதுகளில் காலை-க, மாலை-க, இருவேளையும் கொடுக்க தாபசுரம் உஷ்ணசுரம், அதிசாரசுரம், வரட்சிசுரம், பழைய காச்சல்திரும், அதாவதுமுறைக்காச்சலும் திரும் முலைப்பாலில் இருவேளையும் (உ) மாத்திரைகொடுக்க தோஷசுரம்தீரும் சீராகாரத்தில்கொடுக்க உஷ்ணகாந்தல்சுரம் தீரும் பரிங்கிசெக்கைகியாழத்தில் கொடுக்க கணசுரம் தீரும் பத்தியம் புளியாகாது அறைஉப்பு கூட்டவும்.

உளமுறிமணி.

பளிங்கு சாம்பிராணி	விராகனிடை -	சு
பெருங்காயம்	,,	அ
வெள்ளெருக்கன்னரம்பு	,,	கூ௨
மிளகு	,,	கூ௨
கரியுப்பு.	,,	கூ௨
விரைகாம்புபோக்கியகஞ்சா	,,	உ௩
பூரம்	,,	க
லிங்கம்	,,	க

இவை கல்வத்திலிட்டு எட்டிக்கியாழத்தினால் (உ) ஜாமம் அரைத்து முழுக்கடலை பிரமாணம் மாத்திரைசெய்து சீசாவில் வைத்துக்கொள்ளவும் (அநுபானம்) வென்னீரில் அல்லது சாராயத்தில் ஒருமாத்திரை யிழைத்துக்கொடுக்கவும் ஒருஜாமத்திற்கு ஒருமாத்திரையாக கொடுத்துவரவும் இடையில் ஆகாரம்வேண்டில் பச்சரிசிகஞ்சி மிதமாய்கொடுக்கவும்.

இராஜபூபதிமாத்திரை.

உலர்ந்தலிங்கம்	மனோசிலை
கெல்லிகெந்தகம்	சுக்கு
வெண்காரம்	திப்பிலி
காலரசம்	மிளகு
நாபி	ஏலரிசி

வகைக்கு விராகனிடை (க) வீதமாய் இஞ்சிச்சாற்றில் (உ) ஜாமம் அரைத்து மிளகளவு மாத்திரைசெய்து வைக்கவும் (அநுபானம்) முலைப்பால் தேன் திரிகடுகு சூரணம் இஞ்சிசுரசம் இதுகளில் ஒருமாத்திரை கொடுக்க சகலசுரமும் தோஷமும் தீரும் கடும்பத்தியமிருக்கவும்.

இராஜசவுக்கியமாத்திரை.

ஜாதிக்காய்	விராகனி -	க	வால்மிளகு	விராகனிடை -	க
ஜாபத்திரி	,,	க	கிராம்பு	,,	கூ
கிச்சிலிக்கிழங்கு	,,	க	குங்குமப்பூ	,,	௨
ஏலம்	,,	க	பச்சைகற்பூரம்	,,	௨
கோஷ்டம்	,,	க	கஸ்தூரி	,,	௨
சந்தனம்	,,	க			

இவைகளை யெலுமிச்சம்பழச்சாறுவிட்டு (க) ஜாமம் அரைத்து குன்றிமணிபிரமாணம் மாத்திரைசெய்து நித்தியம்இருவேளையும் வெற்றிலையில் (க) மாத்திரைவைத்துதின்றுவரவும் சன்னி சீதளம் அணுகவொட்டாது கண்டத்திற்கு மேற்பட்ட வியாதிகள் யாதொன்றும் வாராது கண்கள் பிரகாசம் கொடுக்கும் சகலவாய்வும் கண்டிக்கும் பத்தியமில்லையாது போஜனம் செய்தபிறகு இம்மாத்திரையை சாப்பிடவேண்டியது.

—(ஶ்ரீ)—

பிள்ளைகட்கு சாதிலிங்க மாத்திரை.

லிங்கம் (அரைப்பலம்) முலைப்பால்விட்டு மூணுஜாமம் அரைத்து சிறுபயறுபிரமாண மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி சீசாவிலடக்கம் செய்யவும் (அநுபானம்) ஒருமாத்திரையை முலைப்பாலில் யிழைத்துகொடுக்க சன்னி சீதளசுரம் தீரும்.

ஆடாதோடைசாற்றிலிட மந்தசுரம் தீரும்
நொச்சிச்சாற்றிலிட வாதசுரம் தீரும்
சேத்தும சுரத்திற்கு குப்பைமேனி சிறுநீரிலிடவும்
வலம் ஜெலம் கண்டத்தால் கடுக்காய் கியாழத்திலிடவும்
பத்தியம் உப்பு புளிகூடாது.

பால சஞ்சீவி மாத்திரை.

இரசம்	விராகனிடை -	க
கெந்தி	,,	க
வாளம்	,,	க
அரிசித்திப்பிலி	,,	க

யாவும்சுத்தஜெலம்விட்டு (க) ஜாமம் அரைத்து சிறுபயறுபிரமாணம்மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி சீசாவிலடக்கம் செய்யவும் (அநுபானம்) முலைப்பால் நொச்சி துளசி இஞ்சிசுரசம் இதுகளிலெதிலேனும் ஒருமாத்திரையிட உப்புமாந்தமுதலாக என்னவகைமாந்தம்தீரும் சுட்டபுளியும் வறுத்தவுப்பும் கூட்டலேனும்.

இதுவும் பிள்ளைகட்கு

சுராங்கிசபச்சைகற்பூர மாத்திரை.

பச்சைகற்பூரம்	விராகனிடை -	உ
லவங்கப்பட்டை	,,	உ
ஜாதிக்காய்	,,	உ
வாளம்	,,	ச

கற்றாழையினுள்ளிருக்கும் சோற்றை (எ) திரம் அலம்பி விட்டுபிறகு சீலையில்முடித்துப்பிழிந்து அச்சாற்றினாலிம்மருந்தை(க)ஜாமம்அரைத்து உளுந்தளவுமாத்திரைசெய்து சீசாவிலடக்கவும் திருகடிசக்கரையில் (க) மாத்திரை பொடித்துவைத்து குழந்தைகட்குகொடுக்க (உ௰)நாழிகையில்நாலைந்துவிசைபேதியாய்சுரம்விட்டுவிடும் இச்சாபத்தியமிருக்கவும்.

நவமூலக்குளிகை.

பூரம்	விராகனிடை -	க
நாளகம்	,,	க
மனோசிலை	,,	க
பொரிகாரம்	,,	க
கல்நார்	,,	க

இவைகளை கிரமப்படி சுத்திசெய்து கல்வத்திலிட்டு கொடிக்கள்ளிப்பால்விட்டு(உ)ஜாமம்அரைக்கவும் அப்படி அரைக்கையில் முதலாவது நாளகத்தை செகிழவரைத்து அதன்மேல் கல்நார்போட்டரைத்து அதன்மேல் மனோசிலை பொரிகாரம் பூரம் போட்டு ங-ஜாமம் குறையாமலரைத்து குகையில் வைத்து மேலோடுமூடி சீலைமண்ஒன்றுசெய்து குக்கிடபுடம்போட்டெடுத்து திரும்பவும்கல்வத்திலிட்டு ஆவின்பால் துளிதுளியாய் விட்டு(க) ஜாமம்அரைத்து பழச்சாற்றிலொருஜாமம் அரைத்துகுமரிச்சாற்றி லொருஜாம மாட்டி துளசியிலைச் சாற்றி லொருஜாம மாட்டி

துதளங்காயளவு மாத்திரைசெய்யவும் காலையில் ஒருமாத்திரையாக நாற்பதுநாள்கொள்ள நவமூலமும்தீரும்இந்தமாத்திரையை (ரு) வயதுபிள்ளைகள்முதல் (ங) வயதுமட்டிலும் சாப்பிடலாம் வியாதியைநடையின்றிகேழ்க்கும் இச்சாபத்தியம்.

இதுவும் பிள்ளைகட்கு

அற்புதகற்பூரமாத்திரை.

பச்சைகர்பூரம்	விராகனிடை	உ௰
கெந்தி	,,	க
இந்துப்பு	,,	க
லவுங்கம்	,,	க௰
ஜாதிக்காய்	,,	க
ஜாபத்திரி	,,	க

இவைகளை எலுமிச்சம்பழச்சார்விட்டு ங-ஜாமம்அரைத்து உளுந்தளவு குளிகைசெய்து சீசாவில் வைக்கவும் இந்தினைய அரைத்து கெச்சக்காயளவு உருண்டையில்-ங மாத்திரை வைத்துக்கொடுக்கவும் அல்லது சக்கரையில்-க மாத்திரை கொடுக்கவும் எந்தசுரமும்தீரும் இச்சாபத்தியம்.

மாந்தக்குளிகை.

பூரம்	பலம் -	ஒ
லவுங்கம்	,,	வ
ஏலம்	,,	வ
வசம்பு	,,	வ
சீரகம்	,,	ள
மாசிக்காய்	,,	வ
அதிவிடையம்	,,	வ

பூரத்துக்கிசைந்த சுத்திசெய்து மற்றதை யிடித்து வஸ்திரகாயம்செய்து யாவும் ஒன்றுபட கல்வத்தி லிட்டு விஷ்ணுகாந்திசார்விட்டரைத்து கோதுமைப்பிரமாணம் மாத்திரை செய்து நிழலுலர்த்தி சீசாவில்வைக்கவும் (அநுபானம்)வேளைவேர் சுக்கு

வசம்பு வெந்தயம் பாளைஓமம் இதுகள் சமன்கொண் டிடித்து கி யாழமிட்டு ஒருபாவை டைகியாழத்தில் ஒருமாத்திரையிழைத்துக் கொடுக்க சகலமாந்தமும் தோஷமும்தீரும் இச்சாபத்தியம்.

மகாவர்த

மூசாம்பரக்குளிகை.

மஞ்சள்கிரமுள்ள } மூசாம்பரம் }	ரூபாயி	அ	மிளகு	ரூபாயிடை -	வ
			லவுங்கம்	,,	வ
ஜடாமாஞ்சி	,,	வ	பெருலவுங்கப்பட்டை		வ
அசாருன்	,,	வ	கஸ்தூரி	விராகனிடை	வ
ரூமஸ்தகி	,,	வ	தேன்	பலம்	சு
குங்குமப்பூ	,,	வ			

முதலாவது தேனை அடுப்பேற்றி காச்சி அழுக்கு நீங்கச் செய்து ஷை மருந்துகளை தனித்தனியிடித்து வஸ்திரகாயம் செய்து தேனிலிட்டுயிரக்க யாவும் ஒன்றுபட ஊக்கமாக ரேகித்து குன்றியளவு உருண்டைசெய்து பத்திரப்படுத்தவும் க-ச குன்றி உள்ளுக்குகொடுத்துவர வலி, காக்கைவலி, வாய்கோணல், பின்னிழுப்பு, பாரிசவாய்வு, முருக்கல், சூதகவாய்வு, சீதளம், ஜன்னி இவைதீரும் வாதம் சன்னிகளுக்கிசைந்த பத்தியம் வைக்கவும்.

கப்பாடமாத்திரை,

ஜாதிக்காய், ஜாபத்திரி, காயம், சீரகம், அதிவிடையம், கிராம்பு, அபினி, கெஞ்சா, களச்சிவித்து, வெந்தியம், குராசானி, ஓமம், இவை வகைக்கி(உ௦) விராகனிடையெடுத்து கெஞ்சாவின் சாற்றாலாட்டி இலந்தம்விரைபிரமாணம் மாத்திரைசெய்து எருமைத்தயிரில் (க) மாத்திரையாக இருவேளையும் கொடுக்க (உ) நாள்(௩)நாள் கொடுக்கவும் வாழைப்பூசாத்திலுங்கொடுக்கலாம் ஜெலக்கிராணி வாய்வுகிராணி, மூலக்கிராணி, அதிசாரம்இதுகள் தீரும் காரம்நீக்கிசாதம்கொடுக்கவும் புளிகூட்டலாம்.

வெள்ளைமாத்திரை

ரசகற்பூரம்	விராகனிடை -	ரு
ரசசெந்தூரம்	,,	ரு
கெந்தகம்	,,	க

இம்மூன்றும் கல்வத்திலிட்டு சங்கங்குப்பி சாற்றினால் (க) ஜாமம் அரைத்து பணவிடைபிரமாணம் குளிகைசெய்து சுக்குத்தூள் ஒருசிட்டிகைகையில் ஒருமாத்திரைவைத்து காலையில் கொடுக்கவும் (௩) நாள்கொடுக்க தீராதவெள்ளை மேகம்பிடிப்பு தீரும் இச்சாபத்தியம்.

மேகவாய்வுக்கு மாத்திரை.

கருநாபியை (௩) நாள் பசுங்கோமியத்தில் ஊறவைத்தெடுத்து மேல்தோலுரிக்கி உலர்த்தி தூள்செய்து விராகனிடை (உ) யெடுத்துக்கொண்டு அத்துடன்.

கோரோசனை	விராகனிடை -	க	கெந்தகம்	விராகனிடை -	ஹ
சூதம்	,,	வ	தும்பராஷ்டகம்	,,	ஹ
பூரம்	,,	வ	அக்கராகாரம்	,,	ஹ
ரசச்செந்தூரம்	,,	வ	வெண்காரம்	,,	வீசம்
வெள்ளைக்காக்கணம்வேர்		வ	லவுங்கம்	,,	வீசம்
லிங்கம்	,,	வ	திப்பிலி	,,	ஹ
சயசெந்தூரம்	,,	ஹ	இப்பிலிமூலம்	,,	ஹ
சுக்கு	,,	ஹ			

இவைகளை கருப்புவெத்திலை சார்விட்டரைத்து பயறுபிரமாணம் மாத்திரைசெய்து சீசாவில் வைத்துக்கொள்ளவும் வாய்வு, வாய்கிட்டல், இடுப்புவலி, இவைகட்கு வெத்திலை ரசத்தில் (க) மாத்திரையாக இருவேளையும் தரலாம் திமிர், வீக்கம் இவைகளுக்கு இஞ்சிரசத்தில் யிடவும் ஆள் தேகதிடப்படி (௩)

நாள் (௯) வேளைகொடுக்கவும் ஏழாவதுநாள் முத்தெண்ணையுடன் மஞ்சள் ஓமம் வெத்திலைக்காம்பு அன்னநீரில் பழகிய காடிஜெலமும் கொஞ்சம் விட்டு காச்சி ஸ்தானம்செய்து வைக்கவும்.

மாத்திரைவகைபாணி

முற்றிற்று.

இன்னும் அனேகமாயுள்ள மாத்திரைவகைகளையும் பாஷாணம் முதலாயுள்ள சரக்குவகை சுத்திகளையும் முதற்பாகத்தில் அச்சிட்டு விற்பனைசெய்து வருவதால் இந்தஇரண்டாம் பாகத்தின் அவுழ்தங்களின் சரக்குசுத்திகள் யாவும் முதற்பாகத்தில் விளங்கும்.

இனி மூன்றாம்பாகத்தில் கியாழவகை சொல்லப்படும்

தற்காலம் அனுபோகவயித்தியமென்னும்புத்தகம்தாறுமாறாக இடைகளைக்கெடுத்தும் ஆரிய அனுபோகவயித்தியமென்றும் அவிழ்தபாகங்களைகெடுத்து அச்சிட்டு குறைந்தவிலைக்கு விற்பனைசெய்கிறார். அதைநீக்கி சுந்தரவிலாச அச்சுக்கூடத்தில் பதிப்பித்த புத்தகமாக வாங்கி கையாடுவது உத்தமம்,

உ

வேலுமயிலுந்துணை. 57.

இரண்டாவது

குழம்புவகைபாணி.

கௌசிகர்குழம்பு.

மனோசிலை	விராகனிடை -	௧
தாளகம்	,,	௧
நாபி	,,	௧
இந்துப்பு	,,	௧
வெண்காரம்	,,	௧
ரசம்	,,	௧
கடுக்காய்	,,	௧
காயம்	,,	௧
திப்பிலி	,,	௧
கடுகுருணி	,,	௧
சீரகம்	,,	௧

இவைகளை ௰ விராகனிடையா யெடுத்து இதற்குச் சரியிடை வாளம் சேர்த்து இவையாவும் கொண்ட யிடைக்கு சரியிடை சேலத்து பழையபனவெல்லம் சேர்த்து தேங்காயோடு சுட்டக்கரி விராகனிடை (௫) பொரித்தவெண்காரம் விராகனிடை (௫) இவையாவும்கல்வத்திலிட்டு பழச்சார்விட்டு ( ) ஜாமம் அரைத்து தேங்காய்ப் பால்விட்டு (௧) ஜாமம் அரைத்து மாட்டுக் கொம்பு டப்பியில் வைத்துக்கொள்ளவும் பட்டாணி பிரமாணம் யெடுத்து பனவெல்லம் வாழைப்பழம் சக்கரை யிதுகளில் கொடுக்கவும் பேதியாம் வாதபித்தசிலேத்தும தொந்தரைகள்யாவும் நீங்கும் பேதியதிகமானால் மோர்சாதம் சாப்பிடவும் மாலையில் மிளகுகியாழம் சாப்பிடவும் தலைவலி நீரேற்றம், கழுத்துவலி, ஜன்னிஇதுகட்கு தகுந்த அனுபானங்களில் கையாடவும்.

அகஸ்தியர்

லிங்கக்குழம்பு.

லிங்கம்	விராகனிடை	ச
பூரம்	,,	உ
வெண்காரம்	,,	கா
வாளம்	,,	ம உ
சித்தாமணக்குபருப்பு	,,	ச

இவைகளை கிரமப்படி சுத்திசெய்தபின் நிறுத்தெடுத்துகல்வத்திலிட்டு (ச) ஜாமம் அறைக்க மெழுகாகும் அதையெடுத்து மாட்டுக்கொம்பு சிமிளில் வைத்துக்கொள்ளவும்.

வயற்றுவலிக்கு—பிரண்டையை கொண்டுவந்திடித்து ஒருபிடி
,, யெடுத்து (அரைக்காற்படி) ஜெலத்திலிட்டுசிவக்
,, கக்காச்சி யிரக்கிவடித்த கியாழத்தில் ஒரு பண
,, விடைக் குழம்புகூட்டி உள்ளுக்கு கொடுக்க கா
,, லை ஒரேவேளையாக (க) நாள் கொடுக்க நீய்கும்
,, இச்சாபத்தியம்.

அண்டவாத சூலைக்கு—கற்கடகம், சிங்கி, கழற்சிக் கொடிக்காய்
,, வெள்ளுள்ளி, சுக்கு, முருங்கைத்துளிர், சக்கரை
,, இவை சமனிடை யெடுத்தரைத்து கெச்சக்காய்
,, பிரமாணமுருட்டி அதிநடுவில் ஷை குழம்புபண
,, விடைவைத்துக் கொடுக்கவும் நீங்கும் சுட்டபுளி
,, வருத்தவுப்பு கூட்டவும்.

சூலைமுடக்குக்கு—சித்திரமூலவேரின் பட்டை ஒருபிடி யெடு
,, த்து பஞ்சுபோல்கருக்கி கியாழமிட்டு காலை ஒரு
,, வேளையாக பணவிடை குழம்பு சேர்த்துக் கொ
,, டுக்கவும் தீரும் கடும்பத்தியம் (க-ரு-எ) நாள்
,, வியாதியின் திடமறிந்து யியவும்.

வாதசுரத்திற்கு கொச்சியிலைசார்—ஒருகரண்டி யளவுக்கு பண
,, விடை குழம்பு மத்தித்துக்கொடுக்கவும் இச்சா
,, பத்தியம.

கிரந்தி நோய் நந்தைச்சூரி - கொடிவேலி குப்பைமேனி இது
(ம-க்கும்) களின் சாறுசமயிடைஒன்றாய்கலந்து அதற்குசரி
,, யிடை முத்தெண்ணை சேர்த்து மெழுகுபதமாய்
,, காச்சிஇரக்கி காலைஒருவேளையாகஉச்சிக்கரண்டி
,, யெண்ணையில் பணவிடைக் குழம்பு மத்தித்து
,, கொடுக்கவும் இப்படி (க) அல்லது (ரு) நாள்சா
,, ப்பிடவும் கடும்பத்தியமிருந்தாலேசலமாம் இவை
,, ஒவ்வொன்றிற்கும் மருந்துகொண்ட அளவுபோ
,, ல்மருபத்தியங்கார்க்கவும்.

சுரத்திற்கு, ஏலம்அதிமதுரம் கொத்தமல்லி அரைத்தைகோ
,, ஷ்டம் சமயிடை யெடுத்திடித்து கியாழம் வைத்
,, திருத்து அந்தகியாழத்தில் பணவிடை குழம்பு
,, மிழைத்துகொடுக்கவும்தீரும் இச்சாபத்தியம் கடு
,, சுரமாசில் தகுந்தபத்தியம் பதார்த்தம் சேர்க்க
,, வும் க-நாள்கொடுக்கவும்.

வலிகுன்மத்திற்கு—நிலவாகை ஒருபிடி காலபடி ஜெலத்திலிட்டு
,, (வீசம்படியாக)சுருங்கக்காச்சிபணவிடைகுழம்பு
,, மத்தித்துக்கொடுக்கவும் க-நாள் இச்சாபத்தியம்

திரிவாதப்பிடிப்புக்கு—உத்தாமணியின் சாற்றில் பணவிடைகு
,, ழம்புசேர்த்துக்கொடுக்கவும் க-ரு-நாள்கொடுக்க
,, வும்கடும்பத்தியமிருக்கவும்.

காமாலைக்கு—செங்கடுக்காய் பூவரசம்பட்டை சமயிடைதூக்கியி
,, டித்துகியாழமிட்டு பணவிடைகுழம்பு சேர்த்துக்
,, கொடுக்கவும் கடும்பத்தியம் க-ரு-எ-நாள் கொடு
,, க்கவும்.

கடிவிஷங்களுக்கு, சிறுசின்னியிலைசார் துட்டிடையெடுத்து அதி
,, ல்பணவிடைகுழம்பு கலந்து கொடுக்கவும் படர்
,, தாமரையுந்தீரும் சுட்டபுளிவருத்தஉப்பு கூட்ட
,, வும் ௩-நாள்.

பிள்ளையுண்டாக—பெண்கள் இரகசியஸ்தானஞ்செய்கிறமூன்று
,, நாளும் விஷ்ணுகாந்திச்சார் துட்டிடையெடுத்து
,, அதில் (உ) பணவிடை யிழைத்துக்கொடுக்கவும்
,, கருக்குழியின் சதையடைப்புகிருமிமுதலிய அறு
,, வகைக்குற்றமும்நீங்கிகருதரிக்கும்.

பேதிக்கு—பனைவெல்லம் கழற்சிக்காயளவு அதினடுவில்பண
,, விடைகுழம்புவைத்து மூடிகொடுக்கவும்குளிர்ந்த
,, ஜெலம்குடித்தால் பேதியதிகமாகும் வென்னீர்கு
,, டித்தால் பேதிகட்டும் அப்படியும் மிஞ்சினால்ஆ
,, வின்மோர்கூட்டி போஜனஞ்செய்யக்கட்டும் அப்
,, படியும்அதிகமானால் வசம்புசுட்டுக் கியாழமிட்டு
,, சாப்பிட பேதினின்றுவிடும் மாலையில் மிளகு
,, கியாழம்.

எலிகடிக்கு—எருக்கிலையை அரைத்துகழற்சிக்காய்பிரமாணமெ
,, டுத்து பணவிடைகுழம்புவைத்துருட்டிகொடுக்க
,, டு அ - எலிவிஷமும்நீங்கும் கடும்பத்திய மருபத்
,, தியம் சுட்டபுளிவருத்தவுப்பு.

அலர்ஜன்னி—அலர்ஜன்னி ஆனந்தஜன்னிமுதலானதுஷ்டவிஷ
,, ங்கட்கு வேப்பெண்ணெயில் குன்றிப் பிரமாணம்
,, யிழைத்து கலிக்கமிடவும்.

அகஸ்தியர்

பெருங்குழம்பு.

பெருங்காயம்	கருஞ்சீரகம்
கடுகு	ஓமம்
திப்பிலி	கடுக்காய்
கோஷ்டம்	கடுகுரோணி
சுக்கு	கார்போகரிசி
மிளகு	நெல்லி
தாணிக்காய்	திராட்சி
அக்கிராகாரம்	ஏலம்

இவைதினுசுகள் ௧௬-ம் வகைக்கு(௧)விராகனிடையாகநிறுத்தெ டுத்து இளம்வருப்பாய்வருத்து சூரணித்து வைத்துக்கொண்டு.

பெருநாவி	மனோசிலை
நிருவிஷம்	நெல்லிக்காகெந்தி
லிங்கம்	இந்துப்பு
தகட்டரிதாரம்	வெண்காரம்
இரசம்	

இவைகள் தினுசு(௯ ம்) வகைக்கு(௧)விராகனிடை யெடுத்துபச் சையாகவே முன்சூரணத்துடன் சேர்த்துநிறுத்துஅவ்விடைக்கு சரியிடை சுத்திசெய்த வாளம் சேர்த்துக்கொள்ளவும் தேங்காய் ஓட்டைசுட்டகரி விராகனிடை (அ) பனை வெல்லம் விராகனிடை அ-இவையாவும்கல்வத்திலிட்டு தேங்காய்ப்பால்விட்டு(௧)நாள்மு ழுமையும்அரைக்கவும் உத்தாமணிசார்விட்டு ஒருநாள்முழுமை யும்அரைக்கவும் மெழுகுபதத்தில்வழித்து யாட்டுக்கொம்புசிமி ழில்வைத்துக்கொள்ளவேண்டியது இதைஅரைக்கும்போதுவிள க்கெண்ணெய், நெய், பசும்வெண்ணை மூன்றும்குழைத்து முகத்தி ற்குபூசிக்கொண்டு கேள்வரகுமாவின் கூழும் மோரும்கரைத்து திருப்தியாக சாப்பிட்டுஅரைக்கவும்.

(இதற்கனுபானம்.)

சுரத்திற்கு—கடுக்காய்சாற்றில்அல்லதுகடுக்காய்கியாழத்திலொரு
,, காசுயிடை ஷை குழம்பு யிழைத்துக் கொடுக்கத்
,, தீரும்.

குளிர்சுரத்திற்கு சுக்குநீரில் ஒருகாசுயிடைகுழம்பை யிழைத்து
,, க்கொடுக்கவும்.

ரெத்தமூலத்திற்கு; வெள்ளாட்டுபாலில் ஒருகாசுயிடை குழம்பு
,, கலந்துக்கொடுக்கவும்.

நீரொழுக்கிற்கு, பரண்டுமகோதரம் நீராம்பல் பெருவயர் இதுக
,, ட்குமிளகுதூள் அல்லதுவெங்காயத்தில் ஒருகாசு
,, யிடைகுழம்பு வைத்துக்கொக்கவும்.

ஜன்னிகளுக்கு, இஞ்சி தேன் முலைப்பாலில் வெந்நீரில் இவை
,, யெதிலேனும் ஒருகாசுயிடை குழம்பு மத்தித்துக்
,, கொடுக்கவும்தீரும்.

பெரும்பிள்ளை, துடைவாழை அரையாப்பு புண்ணுபெருஞ்சில
,, ந்திஇவைகட்கு உமிநீரில்ஒருகாசுயிடை யிழைத்
,, துக்கொடுக்கவும் அன்னீரா லிழைத்தே சிலந்தி
,, முதலிய ரிணத்தின்மீதும்தடவலாம்.

மூலைக்குத்துக்கு, நொச்சிச்சாற்றில் ஒருகாசுயிடை யிழைத்துக்
,, கொடுக்கவும் அந்தசாத்திறலிழைத்தே மேலுக்
,, கும்பூசவும்.

வாதசூலை இளங்குட்டத்திற்கு, நொச்சியிலைவதக்கிப்பிழிந்தசாற்
,, றில் காசுயிடைகொடுக்கவும்.

வாய்வுகளுக்கு, இஞ்சி அல்லது கொஞ்சிப்பட்டை யொழத்தில்
,, ஒருகாசுயிடைகொடுக்கவும்.

ஜன்னி யிசு-க்கும், வெங்காயச்சார் முசுமுசுக்கைச்சார்நொ
ச்சிச்சார் இதுகளில்கொடுக்கவும்.

தலைபாரம்—கழுத்திமுப்பு இதுகட்கு யெருக்கிலைஅல்லதுவேப்
,, பஞ்சார்வேப்பம்யெண்ணெயில்யிழைத்து கண்ணில்
,, கலிக்கம்போடவும்.

சந்தானமில்லாதவர்க்கு—அரசன்கொழுந்து ஆவின்பால் விட்ட
,, ரைத்து நெச்சககாய்பிரமாணமெடுத்து அதில் காசு
,, யிடை வைத்துக்கொடுக்கவும்.

உதிரவாய்வுக்கு—கருத்த ஆட்டின்பாலில் வில்வப்பட்டையை
,, நருக்கிப்போட்டுக் காச்சி காசுயிடைமருந்து கலந்து
,, கொடுக்கவும்.

உப்பிசத்திற்கு—கொன்னைக்கொழுந்து கடுக்காயெண்ணைமூலை
,, ப்பால் இதுகளில் காசுயிடைகொடுக்கவும்.

இருமலுக்கு—இஞ்சி கொஞ்சிப்பட்டை யிதுகளில் காசு யிடை
,, கொடுக்கவும்.

ஐம்பாயிரம்விஷக்கடிகளுக்கும்—கருப்பு வெற்றிலைச்சார்வேப்பெ
,, ண்ணெவெந்நீர் இதுகளில் பயரளவுவைத்துக்கொ
,, டுக்கவும் அன்றியும் கடிவாயிலும் தடவவும் மற்று
,, முள்ள அனுபானங்களறிந்து கொடுக்கவும் இதற்கு
,, பத்தியம் வியாதிகளின்குணமறிந்து அந்தந்த வியா
,, திக்குத்தக்க பதார்த்தம் பத்தியம்வைக்கவும்.

அகஸ்தியர்மஹாகுழம்பு.

விருத்தம்.

பருவதம் தன்னில்வாழும் பரமனாருளினாலே
பெருமையா யுலகில்வாழும் புண்ணிய ஜெனங்களுக்கு
உருபல் வியாதிவந்தால் உண்மையாய் தீரவென்று
பிரபல முனிவர்தானும் பேசிய மருந்துகேளே. 2

பேசியமருந்து கேளாய் பெருங்காயம் கடுகிந்துப்பு
வீசியரசம் பொற்காரம் விஷமனே சிலையுங்கூட்டி
ஆசிலாத்திப்பிலியும் அதட்டியதாரத்தோடு
மாசிலாக்கருஞ்சீரகம்வகைக் கழஞ்சு வாங்கே. 2

வாங்கிய மருந்துக்கொக்க வாளமும் வருத்துப்பாதி
தாங்கியபச்சைபாதி சமன்முளைத் தோடுபோக்கி
நில்லாமருந்து பத்தும் சேரவே யரைக்கக்காற்றும்
ஓங்கிய யோரும் சாதம் உண்டபின் னரைத்துக்கூட்டே. 3

கூட்டிய மருந்தின்பேரு அகஸ்தியர் குழம்பதாகும்
மீட்டிய சுரமேசுக்காம் இரும்பலே கடுக்காய்சாறு
வாட்டிய குளிர்சுரங்கள் வகைசுக்கு மிளகுதாளம்
பாட்டிய ரெத்தமூலம் நெய்யினில் மேதைபாலே. 4

பாலினி லொழியும்பாண்டு மகோதரம் பெருவயறு
மேலும் நீராமைகூகை மிளகுதாள் வெள்வெங்காயம்
சாலவே சன்னிக்கெல்லாம் தேனிஞ்சி சாற்றிலாகும்
ஏலவேசுகஜன்னிக்கு வேப்பெண்ணெயி லிடுகண்ணுக்கே. 5

இடுகண்ணில் கடுகிம்பாதி மிருங்துகற்றாழஞ்சோறு
வடிதயிர் சந்தணங்கள் வைத்துநீ கட்டமாறும்
படுபரு பிளவைவாழை பற்கறையாப்பு புண்கள்
வடுபெருஞ் சிலந்தியாகில் உமிழ்நீரில் குழைத்துப்பூசே. 6

பூசிடு மூலக்குத்துக்கும் புண்ணுக்கு மிதுவேயாகும்
சூசிக வலிகுன்மங்கள் தோன்றிடில் நொச்சிசாற்றில்
காசங்கள் திரிகடுகு தேனிலின் கலந்துதின்ன
நாசமாம் வாதசூலை நருசுக்கு நொச்சிபாமே. 7

பாராய் கபாலவலிமுதலாய் பசர்சுபரக்கும் திரிபுகையால்
நேரியெடுக்கும் நீர்சொரிப்பு நீர்சலஅடைப்பு தாழைவிழுதில்
தீரும்தீராக் கபாலகிரந்தி திருங்குப்பிச் சாற்றிலிட
நிராய்கொடுக்க பலவிஷமும் தீருந்தீரும் திரிபிடியே. 3

பிடிக்குந்திரிக்கு முன்னரைக்கில் பிரட்டிசிலையைபுலரவைத்து
பிடிக்கும்வலிக்கும் தனுர்வாதம் பினாத்தேசாடும் புகைகாட்ட
குடிக்கும்பியாழம் கழற்சியிலே கொடியநொச்சி மாவிலிங்கம்
பிடிக்கும்ஜன்னி பதினெட்டும் அநுபானஞ்செய்நால்விதியே 9

விதியால்வந்த மருந்தெல்லாம் வேறேதேடவேண்டாங்காண்
பதியாம்பிபாதி நாலாயிரம் பகருநாற்சத நாற்பத்தெட்டும்
துதியாயிணங்கும் குரிப்பரிந்து தூயவகை யநுபானந் செயில்
துடியாய்தீரு மெனவென்று சொன்னார்முனிவர் துகையாக, 10

சொன்னார்மடவார் தங்கட்கு சுதனும்கெற்பம் வரும்படிகேள்
முன்னேஅரசங் கொழுந்ததனை மிகவாவின்பால்விட்டரைத்து
முன்னார்குளம்பில் பணவிடைதான் மூட்டிமூன்றுநாட்கொடுக்க
பொன்னும்புதல்வருண்டாகும் புவியோர்க்குறுதிகண்டமே. 11

கண்டூர்காவில் பட்டைதனை கருத்தியாட்டுப் பால்தனிலே
கொண்டேசீரகம்பொடிகூட்டி குளம்பில்பணவிடைதானுண்டா
பண்டேசூத கத்தில்வரும் உயர்ந்தவாய்வு உடன்தீரும் [ல்
வண்டார்குழல்சேர்மடமானே மலைசேர்முனிவன்வகுத்ததுவே

வகுத்தபிரமன்விதியாலே வருந்துசிகமாம்வாயுவுடன்
இறகுமிருக்க வலிதீரும் இன்னேசொன்னார் விரகுடனே
பறுத்தகொச்சிச் சாறுதனில் பாங்காம்சாரணை மிளகுசுக்கு
தொகுத்தகுளம்பில் பணவிடைதான் சொன்னோம் கேட்டுக்கொள்வீரே

கொள்ளும்பிரவிச் சுதனுக்கு கொடுக்கமருந்து தனைக்கேளு
உள்ளிமுருங்கைப்பட்டையுடன் வுபர்ந்தபுங்கு பெருக்கிலைவேர்
விள்ளாவரிதாம் திருகுகள்ளி விரைசேரிஞ்சி ரசமதிலே
கொள்ளுங்குளம்பில்பணவிடைதான் சேர்த்துக்கொடுக்கவல்லீரே 14

வல்லீரெஞ்சுவலிகளுக்கு வகையாம் மருந்துதான்கேளீர்
வெல்லும்மலவுங்கப் பத்திரியும் விரைசேர்கிரும்பு அதிமதூரம்
சொல்லும்தாளிச்சப்பத்திரியும் சிரந்தஆவின்வெண்ணெயுடன்
அல்லிலேகுளம்பில் பணவிடைதான் அருந்தத்தீருங்கண்டமே

அருந்தும்தாளி யிலையவரி ஆவின்வெண்ணெ யதுவுடனே
பொருந்துங்குளம்புரெண்டுபணம் போலசேர்த்துக்கொடுத்திடல்

பொருந்தவினையாய் விரியன்விஷம் பேயுந்திரும்பெரியோர்காள்
வருந்தாதிதனைநீருண்ண வலிபோம்சொன்னேன்மறவீரே 16

மறவீர்காவல் கொழுந்துடனே வாய்த்தமிளகு விராகன்ரெண்டு
முறையாயருந்த வெற்றிலையில் முன்னங்குளம்புபணவிடைதான்
பறையாயிதெல்லாமொன்றாக பரிந்துகொடுக்கவல்லீரேல்
பிறவார்நாகங் கடிவிஷமும் பிணியுந்திரும் பெரியோரே 17

திருந்தேளின் விஷந்தனக்கும் செய்யான்குந்துகுளசிலையில்
சேருங்குளம்புபணவிடைதான் நிரமாய்சேர்த்து கொடுத்துவிடு
பேருங்கடிவாய்யுமிழ்நீரில் ஆட்டிப்பூச விஷம்போங்காண்
மாருங்குபிலே மட்டமானே வாளைகடிக் கனுபானங்கேள் 18

கேளாய்வெல்லம் புகைபூரம் கிரிபேயிளகு பேப்பீர்க்கில்
நாளைசெய்யும் விறைமூன்று நன்றாய்குழம்பமேனியின்பால்
ஆளவார்த்து தெலுமிள அன்பாய்குளம்பு பணவிடையும்
வேளைகொடுக்க வல்லீராய் விடுமேவாளை விஷந்தானே 19

தானேகஞ்ச வலிதனக்கு சாற்றுமருந்து தனைக்கேளாய்
மானேபழைய புளிவெல்லம் வகையாய்சித்திர மூலியுடன்
தேனேகுழம்பு மேனியின்பால் திரமாய்விட்டுசேர்த்தரைத்து
வானோர்குழம்பில் பணவிடைதான் வகையாய்கொடுக்க வலிபோமே 20

வலியேசெய்யும் நீர்கட்டு மாறமருந்து நீகேளாய்
வலியாமிளகுவெண்காரம் நன்றாய்பொரித்துகந்தகனுடனே
மெலியாய்ரெண்டுவிராகன்பொடி மெய்யாவின்பால்செப்பதனில்
புலியான்குழப்பு பணவிடைதான் புகழ்ந்தேகொடுக்கபிணிபோமே

பிணிபாம் விஷபாகத்தோடு பின்னும்வீக்கம் தான்தீர
துணிபாம்கொச்சி சாறுடனே சொல்லுந்திரிகடு தான்கூட்டி
மணிபாங்குழம்பு பணவிடைதான் வகையாய்சேர்த்துகொள்வீரே
தெணிபாவெழுந்த வீக்கமெல்லாம் கெடுமேசொன்னேன்கேளாயே 23

கேளாயிந்த வகையெல்லாம் கிளியேபேதி மிகவுண்டாம்
பாராய்மயங்க வசம்புசுட்டு பாங்காய்மெழுகு வைத்ததனில்
கூடாய்வெண்ணை பாக்களவு சுருக்காய்போட்டு கொடுப்பீராய்
மீளாய்பேதி யுள்ளதெல்லாம் மின்னேதீரும் மெய்யிதுவே 23

மெய்யாய்வசம்பு தானரைத்து மிதமாய்கலக்கி தண்ணீரில்
கையாலெடுத்து தானருந்த கறையறுந்திருக்கும் காண்பேதி
வையாமோரும் பழச்சாறும் வாழைநீருங்கூட்டி தான்கொடுக்க
பையாபேதி தான்தீரும் பதமாய்சேர்த்து கொடுப்பீரே 24

கொடுக்கவசம்பு தான்முருங்கை கூறுமயிலிரகு திராக்ஷத்தில்
தடுக்காயேந்தி கொடுப்பீராய் தானேவிற்கு மலக்கழிச்சல்
அடுக்காய்வாந்தி மிகக்கண்டால் அரணாச்சீரக கியாழத்தில்
நடுக்காய்சக்கரை கூட்டியிட நலமாம்வாந்தி கண்டீரே, 25

குடி செய்யுளுக்கு விபரம்.

மனோசிலை	விராகனிடை	க	பெருங்காயம்	விராகனிடை -	க
ரசம்	,,	க	கடுகுரோகிணி	,,	க
தாளகம்	,,	க	திப்பிலி	,,	க
பொரிகாரம்	,,	க	கருஞ்சீரகம்	,,	க
நாவி	,,	க	வாளம்	,,	சூ

மேற்கண்ட மனோசிலைமுதலாய் நாபிவரையிலுமுள்ள (ரு) வகைமருந்துகளையும் பச்சையாகவே கூட்டவேண்டும் அதாவது சுத்திசெய்யவேண்டுவதில்லை; மோரும் சாதமும் திருப்தியாகசாப்பிட்டு அரைக்கத்துடங்கவேண்டும், முதலாவது தாளகத்தை கல்வத்திலிட்டரைத்து அதன்மேல் மனோசிலையை போட்டரைத்து பிறகு மற்றமூன்று மிட்டரைக்கவும் பெருங்காயம் முதலாய் வாளம்மட்டிலுள்ள இவுசுகள் ரு-ல், நான்கை இளம் வருப்பாகவறுத்து கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்துக் கூட்டியரைக்கவும், வாளத்தை சாணிப்பாலில் கொதிப்பித்து மேலோடெட்டி முளைநீக்கி விளக்கெண்ணை கூ - துளிவிட்டுவதைக்கிசேர்த்து அரைக்க் குழம்பர்கும் மாட்டுக்கொம்புசிமிளில்வைத்துக்கொண்டு குடி அனுபானப்படி பிரயோகிக்கவும்.

சண்டமாருதக்குழம்பு.

காயம்	விராகனிடை -	க	சாரம்	விராகனிடை -	க
ஓமம்	,,	க	சித்திரமூலம்	,,	க
சுக்கு	,,	க	பனைவெல்லம்	,,	சு
பூநீர்	,,	க	கஸ்தூரிமஞ்சள்	,,	ச
காரம்	,,	க			

இவைகளை கல்வத்திலிட்டரைத்து சுண்டக்காய்வீதம் உருண்டைசெய்து சீசாவில்வைத்துக் கொள்ளவும் (அனுபானம்) பத்தாய் அல்லது பிராந்தியாமு... நீரைகரைத்துக்கொடுக்க வாந்திபேதி யிவைகளுக்கும் ஒருசமயம் தாகம் மீறினாலும் மருந்து வாந்தியானாலும் பனிக்கட்டியென்னும் அய்ஸ்கட்டியை பிராந்தியில்கரைத்துக் கொடுக்கவும் தீரும்.

சுடுகாடுமீட்டான்குழம்பு.

கெந்தி	துருசு
ரசம்	இந்துப்பு
லிங்கம்	மகிழம்விரை
தாரம்	சுக்கு
மனோசிலை	திப்பிலி
வெண்காரம்	மிளகு
காரி	காயம்

இவைகளை சமனிடைகொண்டு பொடித்து கல்வத்திலிட்டு அரைக்கவும் அரைக்கையில் தூவந்திப்பழத்தின் சாறுகூட்டி அரைத்து செப்புசிமிழில் வைத்துக்கொள்ளவும் (அனுபானம்) விஷத்தீண்டி வந்தவர்களுக்கு குன்றியளவெடுத்து வெத்திலையில் தடவிகொடுக்க விரியன்முதலிய சர்வவிஷங்களும் தீரும் உடனே தவளையைபிளந்து கடிவாயில் வைத்துக்கட்டவும் விஷம் மலத்தால்கழியும் பச்சரிசியும் பயரும் கஞ்சிகாசிக் கொடுக்கவும் அல்லது முருங்கையீர்க்குசார் காசிக்கொடுக்கவும்,

வீ ர க் கு ழ ம் பு.

வீரம்	விராகனிடை -	க
பூரம்	,,	க
லிங்கம்	,,	௨
வெண்காரம்	,,	க
சாரம்	,,	௫
ஏலம்	,,	அ
லவுங்கம்	,,	அ
வாளம்	,,	ம

இவைகளை கல்வத்திலிட்டு வாளத்தை சுத்தித்தபிறகு விளக்கெண்ணெயில் புரட்டி சுற்றியெதுப்பி யெடுத்து சேர்த்தரைக்கவும் வாதம் (அச) க்கும் விரோஜனத்திற்கும் சன்னிகளுக்கும் குன்றியிடை வெத்திலையில் அல்லது சக்கரையில்கொடுக்கவும் இச்சாபத்தியம்.

கொழும்புவகைபரணி

முற்றிற்று.

இவ்வளவு வெள்ளியனண்டயாய் அச்சிட்டு பயிரங்கப்படுத்திய அனுபோக வயித்தியத்திற்கு சரக்குசுத்திகள் சொல்லவில்லையென கவலைப்படவேண்டாம் இதற்குமுதல்பாகம் வேறேயிருக் கின்றமையால் சகலவிஷயமும் அதிற்றெறிந்துக் கொள்ளலாம்.

இனி மூன்றாம்பாகத்தில் தியாழவகைசொல்லப்படும்.

அனுபோகவயித்திய பிரம்மரகசியம் 5-ம்-பாகம், 6-ம்-பாகம், 7-ம்-பாகங்களில் அநேக அற்புதமுறைகள் சொல்லப்பட்டிருக்கிறது கடைசி 8 - ம் பாக முழுமையும் சுத்தி வகைகள் சொல்லப்பட்டிருக்கிறது.

உ

தேவிசகாயம்.

மூன்றாவது
செந்தூரவகைபரணி.

காளமேகசெந்தூரம்.

இரசம்	விராகனிடை -	அ
தாளகம்	,,	க
கெந்தி	,,	க
லிங்கம்	,,	க

இவைநான்கும் கல்வத்திலிட்டு குமரிச்சார்விட்டு(க) ஜாமம் பழச்சார்விட்டு (க) ஜாமம் அரைத்து பில்லைதட்டி காயவைத்து அகலில்வைத்து மேலோடுமூடி சீலைமண் (ங) செய்து (ரு) எருவில் புடம்போட செந்தூரமாம் (அனுபானம்) நெய், தேன், வெண்ணெ, இதுகளில் பணவிடைகொடுக்க தந்திமேகம் மதுமேகம் சுக்கிலமேகம் கண்டமாலை இதுகள்தீரும் வயற்றுநோவிற்கு சக்கரையில் கொடுக்கவும் இச்சாபத்தியம் புளி தள்ளவேண்டியது நோய்திடமிருந்து (ங) நாள் அல்லது (ரு) நாள்கொடுக்கவும்.

அன்னபேதிசெந்தூரம்.

அன்னபேதி (க) பலம்வாங்கி பெரும்பாட்டை சார்விட்டரைத்து பில்லைதட்டி காயவைத்து ஓட்டிலிட்டு ஓடுமூடி சீலைமண்செய்து (ச) எருவில் புடம்போட செந்தூரமாம் வாந்திக்குதேனில் பணவிடை கொடுக்க நீங்கும் பத்தியம் பச்சரிசிக்கஞ்சிகொடுக்கவும்.

இதுவுமது.

அன்னபேதிசெந்தூரம்.

அன்னபேதி(உ)பலம் வாங்கி சிறுநீராவது பழச்சாராவது விட்டு பிட்டுபோல்கிளறி அகலில்வைத்து மேலோடு மூடி சீலைமண் செய்து (ய) எருவில் புடம்போட செந்தூரமாம்(அனுபானம்) தேன் நெய் பசும்பால் இவைகளில் பணவிடை கொடுக்க பாண்டு காமாலை மகோதிரம் பெருவயர் வீக்கம் இதுகள் தீரும் இருவேளையும் சாப்பிடவும் இச்சாபத்தியம்.

சண்டமாருதசெந்தூரம்.

பூரம்	விராகனிடை-	ய
லிங்கம்	,,	அ
வீரம்	,,	உ
கெந்தி	,,	[illegible]
ரசச்செந்தூரம்	,,	உ

இவைகளை கல்வத்திலிட்டு(கூ)ஜாமம்அரைத்துசிசாவில்வைத்துக்கொள்ளவும் பனவெல்லத்தில் பணவிடைசெந்தூரம்வைத்துசாப்பிடவும் ரு-எ நாள்கொள்ளவும் இச்சாபத்தியம் யஅ-ஜன்னிவகையும் பீலிபவுத்திரம் வாதம் அய-வகையும் தனுர்வாதம், விரைவாதம்,மூக்கல், கடுக்கல்,புண்,கிரந்தி,வெடிசூலை,கண்டமாலை,பெரும்பாடு,வெவ்விதசுரம்,அறையாப்பு,சிலந்தியாவும்தீரும்

பஞ்சபாணசெந்தூரம்.

சூரத்துகற்பூரம்	கந்தகம்
ஜாதிலிங்கம்	ரசம்
மனோசிலை	சங்குபாஷாணம்
தாளகம்	கெந்தகம்

இவைகள்வகைக்கி(க)பலம்வாங்கி கல்வத்திலிட்டுமேனிச்சாற்றினால்(ங)ஜாமம்அரைத்து அப்படியே நிழலிலாரவைத்து மறு

நாள்கருப்புவெத்திலைச்சாற்றால்(ச)ஜாமம்மறுநாள்செம்பருத்திச் சாற்றால்(ச)ஜாமம் வெள்ளருகுசாற்றில் துளசிச்சாற்றில் வேலிப் பருத்திச்சாற்றில்பொடுதலைச்சாற்றில் நாளொன்றுக்கு ச-ஜாமம் குறையாமல்அரைத்து ஒருசட்டியில் கருப்புவெத்திலைபரப்பி அ ரைத்தமருந்தை பில்லைதட்டி அதன்மேல் வைத்து மேல் சட்டி மூடி சீலைமண்(எ)செய்துஅடுப்பிலேற்றி ஒரேஜாதிவிரகால் (ச) ஜாமம்யெரிக்கவும் அடிசட்டிசிவக்கக்கண்டால் தீயைவாங்கி கம லம்போல்யெரிக்கவும் இப்படி ஒருநாழிகையெரித்தபின் யிறக்கி ஆறினபிறகு எடுக்க செந்தூரமாம் சீசாவில் வைத்துக் கொண்டு இஞ்சிதேன் இவைகளில்(உ)அரிசியிடை கொடுக்கவும்.

சுரம், சுச-ஜன்னி, மக, குட்டம், மஅ-பிரங்கி,தலைசாய்ந்த வாய்வு, உசு-வாதம் அய,மேகம், உக குன்மம்-அ, கிராணி- சு, முடக்குசூலை, வெடிசூலை, கன்னப்புத்து, யோனிப்புத்து, அண் டப்புத்து, கபாலகுட்டம், கண்டமாலை, குலைநோய், அரிகரப்பா ன்,தேமல், சூலைவாழை, தொடை வாழை, அழுகண்ணி. அரை யாப்பு, கபால குத்தல், கண்நோய், பவுத்திரம், பிளவைவிரணம், மூலம், காசரோகம், இடுப்புசூலை, இவையெல்லாம்தீரும்இச்சா பத்தியம் நோயின்திடமறிந்து கு-எ-நாள்கொடுக்கவும் மறுபத்தி யமும் அப்படியேகாக்கவும் பிறகு ஸ்நானம்செய்விக்கவும் குரு கடாக்ஷம்.

லிங்க செந்தூரம்.

முதல்தரமான லிங்கம்(க) பலம்நிறுத்தெடுத்து சித்திரமூல வேரின் பட்டையைகொண்டுவந்துஅரைத்து அந்த லிங்கத்திற்கு கவசங்கட்டி சீலைமண்செய்து (ம)யெருவில்புடம்போட்டு ஆறிய பின்எடுக்கசெந்தூரமாம் தேனிலாவதுஇஞ்சிரசத்திலாவது அரி சியிடைகொடுக்கவும் சகலவாய்வுகளையுங்கண்டிக்கும் இச்சாபத் தியம்.

செந்தூரவகைபரணி

முற்றிற்று.

நான்காவது

மெழுகுவகைபரணி.

சூதக வாய்விற்கு

அண்டமெழுகு.

(ச) கோழிமுட்டையையுடைத்து ஓடுநீங்கலாக சமூலமும் ஒருகலையத்திலூற்றி மரு எலுமிச்சம்பழச்சார்விட்டு-வீரம்பலம் வ, பூரம்பலம்-வ, சாரம் பலம்-வ, படிகாரம் பலம்-வ, இவைக ளைபொடியாக கல்வத்திலிட்டரைத்து அந்த கலயத்தில் போட்டு ரு-நாள்சூரியபுடம்வைத்து சுண்டினபிறகெடுத்து அரைத்துவை த்துக்கொள்ளவும்(அநுபானம்) ஒருவேளைக்கு மிளகுபிரமாண மாக கூ-நாள்இருவேளையும் கொள்ளவும் இச்சாபத்தியம்.

குங்குமப்பூமெழுகு.

குங்குமப்பூ	விராகனிடை	உ	அக்கிராகாரம்	விராகனிடை	க
கோரோஜனை	,,	உ	பளிங்குசாம்பிராணி	,,	க
ருமஸ்தகி	,,	ரு	சிறுநாகப்பூ	,,	க
ஜாதிக்காய்	,,	உ	பழயவெல்லம்	,,	க
கருஞ்சீரகம்	,,	உ			,,

இவையாவும்கல்வத்திலிட்டு தேன் சிதானமாய்விட்டுமெழு குபதமாய் அரைத்து கிளாசு அல்லது டப்பியில்வைத்துக்கொள் ளவும் மாலை சு-மணிக்கு எலந்தங்காய் பிரமாணம் சாப்பிடவும் பசும்பால் உபயோகப்படுத்திவந்தால் மிக நன்று மமரு - நாள் முறையாகசாப்பிட்டுவரவும் சாப்பிடுகிறவன்ராயில் அரைபுளி கூட் டிவருநலமாகும் ஸ்ரீபோகத்திலும் மிகுந்த சுகத்தைக் கொடுக் கும் நாதம்கெட்டிப்படும்.

வெற்றை விறைவாதமெழுகு.

மிளகு	பலம்	க
பூரம்	களஞ்சி	க
லிங்கம்	விராகனிடை	கவ

இவையாவுந்தேன்விட்டு ஒருஜாமமறைத்து மெழுகுபதத்திலெடுத்துவைத்துக்கொள்ளவும் துத்தளங்காய் பிரமாணம் காலை மாலை யிருவேளையுங்கொடுக்கவும் வாய்வுடதார்த்தங்கள் தள்ளுவதுடன் மிச்சாபத்தியமிருக்கவும்.

தோஷநாயிர்த மெழுகு.

லிங்கம்	விராகனிடை	உ௰
பூரம்	,,	உ௰
ஓமம்	பலம்	க

இம்மூன்றும் கல்வத்திலிட்டு முலைப்பால் விட்டு(கூ) ஜாமம் அறைத்து பிறகு தேன் அரைபலம் கொண்டுவந்து துளி துளியாய்விட்டு ஒருஜாமமறைத்து கோப்பையில் வைத்துக் கொள்ளவும் குண்டுமணிப்பிரமாணம் எடுத்து தேனிலாவது இஞ்சிரசத்திலாவதுகொடுக்கவும் ஜன்னிசுரதோஷந்தீரும் இச்சாபத்தியம் மாலையில் மிளகுவுங்குழியாழம் கொடுக்கவும்.

வீரமெழுகு.

வீரம் ஒரு பலங் கொண்டுவந்து மெல்லிய சீலையில் முடிந்து வேபெத்தாத மிளகீர்(ரு)கொண்டுவந்து உடைத்து பழங்கலையத்திலூத்தி அடுப்பேற்றி அதில் மை வீரத்தைவிட்டு தொலாந்திரமாகக்கட்டி யெரிக்கவும் இரண்டு நாழிகை எரிந்தான பிறகு கலையத்தை எடுத்துவிட்டு தொலாந்திரம் கட்டியிருக்கும் வீர முட்டையை அடுப்புக்குநேராய்தொங்கவிட்டு அடுப்பின்நெருப்பை நன்றாய்க்கிளறி கணகணப்புக்காட்டவும் அந்த நெருப்பு குளிர்ந்தவுடனே முடியை அவிழ்த்து மருந்தை பதனம் பண்ணி வைத்துக் கொள்ளவும்(அனுபானம்) மிளகுபிரமாணமெடுத்து

தேன், முலைப்பால், அல்லது இஞ்சிசுரசத்திலாவது கொடுக்கவும் ஜன்னி சுரதோஷம் யாவுந்தீரும், இச்சாபத்தியம மாலையில் மிளகுகியாழம் கொடுக்கவும்.

வேருவிதவீரமெழுகு.

வீரம், பூரம், லிங்கம். சுத்திசெய்தவாளம், சுக்கு. திப்பிலி மிளகு, வகைக்கு ஒருவிராகனிடையெடுத்து கல்வத்தி லிட்டு தேன்விட்டறைத்து சிமிளில் வைத்துக்கொள்ளவும், (அனுபானம) பேதிக்கு பட்டாணிப்பிரமாணம் சக்கரையில் அல்லது வாழைப்பழத்தில் கொடுக்கவும் பேதியதிகமானல் மோர்சாதங் கொடுக்கவும் தேனில் இஞ்சிரசத்தில் மிளகுபிரமாணம் கொடுக்க சகலவாய்வுந் தீரும் வாதத்தைகேழ்க்கப்பட்ட கியாழங்களிலும்கொடுக்கலாம், அந்தியில் சுக்கு மிளகு கியாழங் கொடுக்க வேண்டியது.

மெழுகுவகைபரிணி ௨

முற்றிற்று.

இவ்வளவு வெள்ளியகடையாய் அச்சிட்டு பயிரங்கப்படுத்திய அனுபோகவயித்தியத்திற்கு சரக்கு சுத்திகள்சொல்லவில்லையென கவலைப்படவேண்டாம் இதற்கு முதல்பாகம் வேறேயிருக்கின்றமையால் சகலவிஷயமும் அதிற்றெறிந்துக்கொள்ளலாம்.

இனி மூன்றம்பாகத்தில் கியாழவகை சொல்லப்படும்

உ

கடவுள் துணை.

ஐந்தாவது

பற்பவகைபாணி.

கற்பூரசிலாசித்துபற்பம்.

சிலாசத்து பலம் (க) பொட்டிலுப்பு பலம் (௯) பொரிகாரம் பலம் (உ) இவைகளை சுண்ணாம்பு தெளிவுநீரில் அரைத்து (ச) பில்லைசெய்து அடுப்புத்தட்டில் காயவைத்து (ச) நாளான பிறகு யெடுத்து நாலுபில்லைக்கும் வெவ்வேறாக சீலைமண் செய்து உலர்த்தி (௯௰) வரட்டியில் (ச) பில்லையும் வைத்து புடம் போட பற்பமாம் அதையெடுத்து சீசாவில் வைத்துக்கொள்ளவும். வெண்ணெயிலாவது சீரகக்கியாழத்திலாவது கொடுக்க நீர் உடையும் குளுத்தியானபதார்த்தம் சேர்க்கவும்இச்சாபத்தியம்.

இன்னொருவித சிலாசத்துபற்பம்.

சிலாசத்து பலம் (க) பொரிகாரம் பலம் (க) இவைபொரித்துக்கொண்டு பழச்சாற்றாலாட்டி பில்லைதட்டி காயவைத்து (௰) வரட்டியில் புடமிட்டெடுக்கவும் நீரடைப்பு கல்லடைப்பு சதையடைப்பு நீர்கடுப்பு நீர்யெரிப்பு பிரமேகம் வெட்டை இவைதீரும் வெண்ணெயில் கொடுக்கவும் இச்சாபத்தியம்.

இன்னொருவித
சிலாசத்துபற்பம்.

சிலாசத்து பலம் (க) க்கு நாயுருவிக்கொழுந் தரைத்துக் கவசம்செய்து சுண்ணாம்புசீலை செய்து (உ௰) வரட்டியில் புடம்

போட பற்பமாகும் சூடுதணியும் யித்துடன்கல்னார் பற்பமும் கலந்துகொடுக்கவும்.

கல்னார்பற்பம்.

கல்னார்பலம் (க) மேனிச்சார் விட்டரைத்து பில்லைதட்டி காயவைத்து மூணுசீலைசெய்து அகலில்வைத்து மேல் அகல்மூடிசீலைசெய்து (௩௰) வரட்டியில் புடமிட பற்பமாகும்.

சிங்கிபற்பம்.

சிங்கியென்னும் கலைமான்கொம்பை சீத்து சீத்தாயுடைத்து வாழைமரத்தடியின் பெருங்கட்டையில் சொருகிவைத்து (௯) நாள்சென்றெடுத்து துத்தியிலையை யிடித்து கனக்க கவசமிட்டு (௫) சீலைசெய்து (௫௰) வரட்டியில் புடம்போட பற்பமாம்.

சினகாரபற்பம்.

சினகாரமென்னும் படிகாரம் பலம் (க) வசலை யிலையில் ஐந்துயிலை பெண்ணிவைத்து அரைத்து பில்லைதட்டி காயவைத்து (௫) சீலைசெய்து (௯௰) வரட்டியில் புடமிட பற்பமாம்.

இங்கனம்கூறிய (ச) வித

பற்பஉபயோகவிதி.

கல்னார், சிலாசத்து, சிங்கி, படிகாரம், நாலுவிதபற்பமும் சரியிடையாய்கலந்து சீசாவில்வைத்துக் கொண்டு வெண்ணெயில் ஒருவிராகனிடை வைத்துசாப்பிடவும் இப்படி (௫ - ௭ - ௰) நாள் கொள்ள மேகம் உஷ்ணம் காங்கைதீரும் வெள்ளைக்கு கற்கண்டுபொடி (௩) சிட்டிக்கையில் (உ) விராகனிடை வைத்து சாப்பிடவும் புளி புகை போகம் தள்ளவும் யிச்சாபத்தியம்.

தாளகபற்பம்.

ஒருபலம் தாளகத்தை பொடியாயிடித்து ஒரு கலயத்திலிட்டு எருக்கன்பால் தளரவிட்டு ஒருநாள் சூரியபுடம்வைத்தெ

டுத்து மேலோடுமூடி சீலைமண்செய்து (உ0) வரட்டியில் புடம்போடவும்பற்பமாகும் தேனில் ; அரிசியிடைகொடுக்க காச்சல் யிருமல்திரும் அயப்பொடியும்மிப்படியே செய்துக்கொள்ளவும்.

பவளபற்பம்.

கெட்டிப்பவழம் ஒருபலம்வாங்கி மூசையில்போட்டு அதன்மேல் வெள்ளைபாஷாணம் (ஒ) பலம் பொடித்து பவழத்தின் மேல்போட்டு செப்புத்தகடுதட்டி மேல்வாய்மூடி சீலைமண் (ரு) செய்து (யரு) வரட்டியில் புடம்போடவும் ஆறினபிறகெடுத்து வெள்ளெருக்கன் பால்விட்டறைத்து பில்லைதட்டி காயவைத்து ஓட்டிலிட்டு மேலோடுமூடி சீலைமண் செய்து (ய) வரட்டியில் புடம்போட்டெடுத்து கல்வத்தில் பொடித்து வைத்துக்கொண்டு ஸ்ரீகள் பிரசவித்தபேறு காணுகிற அசாத்தியமான ஜன்னிக்கு அரிசியிடை தேனில்கொடுக்கவும் நீங்கும் இதுசர்வசன்னிக்குமாகும் யிச்சாபத்தியம்,

சிங்கிபற்பம்.

கலைமான்கொம்பை பிளந்து மேனியிலையை யறைத்து மேலுக்குதளமாய் அப்பி முழுப்புடத்திலிட்டுவாங்கி பிறகு ஆவின் பால் விட்டறைத்து பில்லைதட்டி காயவைத்து ஓட்டிலிட்டு மேலோடுமூடி திருப்பமுழுப்புடம் போட்டுவாங்க தவளம்போலிருக்கும் ஆவின்நெய்யில் யிரண்டுபணவிடை கொள்ள மேகம்உஷ்ணம் காந்தல் நீர்சொரிப்பு நீங்கும் யிச்சாபத்தியம்.

லிங்கபற்பம்.

லிங்கம் (க) பலம்யெடுத்து கடலுப்பு ஆறாக்கு கொண்டுவந்து கருந்துளசிச்சார்விட்டறைத்து கெட்டி லிங்கத்திற்கு கவசம்செய்து சீலைசுத்தி காயவைத்து (ய) வரட்டியில் புடம்போட

டெடுக்கவும் பற்பமாம் ஜன்னி தோஷங்களுக்கும் குளிர்சுரங்களுக்கும் கொடுக்கவும் (அனுபானம்) இஞ்சிசுரசம் தேன் சற்கரை யிதுகளாகும்.

வெள்ளியபற்பம்.

வெள்ளியம் (க) பலங் கொண்டுவந்து இலைபோல் தகடுதட்டி நூலைப்போல் சன்னப்பொடிகளாகக் கத்தரித்து வைத்துக்கொண்டு புதியசடைக்கஞ்சா ஒருபலம் கொண்டுவந்து நெகிழ்அறைத்து ஒருவட்டமான ஓட்டுபில்லையில் பாதிவைத்து அதன்மேல் கத்தரித்தபொடிகளைப் பரப்பி மேலே அறைத்த பில்லையைவைத்து மேலோடுமூடி சீலைமண் (ரு) செய்து (ரு0) வரட்டியில் புடமிட்டெடுக்கவும் பற்பமாம் மேகங்களுக்கு வெண்ணெய்யில் பிரயோகப்படுத்தலாம் யிச்சாபத்தியம்.

பற்பவகைபாணி

முற்றிற்று.

அனுபோகவயித்திய பிரம்மரகசியம் 1, 2, 3, 4, 5, 6, 7, 8 பாகம்வரை பாகங்கள் வரையில் உண்டு, அதில் 1, 2, 3, 4, பாகம் அச்சிட்டு விற்பனைசெய்துவருகிறோம், 5-ம்-பாகம், 6-ம்-பாகம், 7-ம்-பாகங்களில் அநேக அற்புதமுறைகளும், கடைசி 8-ம்பாக முழுமையும் ஒவ்வொருமருந்துகள் சுத்திசெய்யும்பாகமும் இன்னயின்ன ரோகத்தைக் கண்டிக்குமென்றும் விவரமாக சொல்லப்பட்டிருக்கிறது 5-6-7-8-வது, ஆக நாலு பாகங்களும் 1898ஹு பிப்ரவரி முதல்தேதிக்குமேல் வேண்டியவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

உ

தேவிசகாயம்.

ஆறுவது

சூரணவகைபரணி.

கழிச்சலுக்கு

கபாடசூரணம்

தயிரில் ஊரப்போட்டு உலர்த்திய சுண்டக்காய் வற்றல் கருவேப்பிலை ஓமம் பழய மாங்காய் பருப்பு அடைகட்டியுலர்ந்த வெல்லிக்காயுருகாய் [illegible]த்தோல் வெந்தியம் இவை வகைக்கி கால்[illegible]க்காய் ஒன்று எட்டுதினுசுகளும் கல்லுரலிலிட்டு யிடித்து வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொண்டு வடிகட்டி நீர்போக்கிய யெருமைத்தயிர் ஆழாக்கில் ஷெ சூரணம் கால்பலம் போட்டுசாப்பிடவும் இப்படி இருவேளையும் மூன்றுநாள் சாப்பிட வயிரிரைச்சல் அதிசாரம் மூலக்கிராணி கழிச்சல் பல்வாயெரிச்சல் இவைதீரும் காரமட்டாகக்கூட்டி போஜனம்செய்யவும் கழிச்சலுக்குத் தகுந்த பிரயோகமென்றறிய.

குன்மம் (அ) க்கும்

உப்புசூரணம்.

உப்பு படி (க) யெருமைமோர் படி (க) வரிக்குமட்டிச்சார் படி (க) இந்துப்பு வெடியுப்பு சவுட்டுப்பு வளையலுப்பு வகைக்கிபலம் அரைக்கால் இவையாவும் ஒன்றாகப்போட்டு அடுப்பேற்றியெரித்துக்கொண்டிருப்பதுடன் பூவரசங் குச்சியினால் கிளறவும் சர்க்கரைபோலாகும் சமயத்தில் யிறக்கிவைத்துக் கொள்ளவும் ஒரு விராகனிடை உப்பு வாயில்போட்டுக்கொண்டு நீராகாரம் சாப்பிடவும் வாய்வு சோகை காமாலை எரிவு கவிசை கிரிச்சி

ணம்கெண்டை இவைதீரும் இச்சாபத்தியம் குன்மமாருக்கும்ஓர் வித தகுந்த பிரயோகமிதுவாம்,

இஞ்சிசூரணம்.

மேல்பரணி சீவிய இஞ்சி பத்துபலம் நிறுத்தெடுத்து பில்லை பில்லையா யருத்தெடுத்து நெய்யில்வருத்து பொடிசெய்து வைத்துக்கொண்டு சுக்கு திப்பிலி மிளகு ஏலம் கிராம்பு ஓமம் சீரகம் வாலுழுவை ஜாதிக்கா திப்பிலிமூலம் அதிமதுரம் குராசாணி ஓமம் அமுக்குரா கசகசா லவுங்கப்பத்திரி கொத்தமல்லி பேரீச்சு முந்திரிக்கை வகைக்கு கால்பலம் இளம்வருப்பாக வருத்து சூரணம்செய்து சீனிபலம் (பத்து) பொடித்துயாவும் ஒன்றாய்க் கலந்துவைத்துக்கொண்டு வேளைக்கி கால்பலம் விதமாக காலைமாலை இருவேளையும் சாப்பிட்டுவரவும் உஷ்ணம் பித்தவாய்வு தீரும் பசிதீபனம் உண்டாம் தின்றுட மலம் பரிசுத்தமாய் கழியும்.

கருங்கோழிசூரணம்.

முக்தினகருப்புச்சாவல் கொண்டுவந்து மயிர்களைப்போக்கி கால்தலை அருத்தெரிந்துவிட்டு முதுகைக்கீரி வயற்றிலுள்ளகுடல்முதலான அசுத்தங்களை நீக்கிவைத்துக்கொண்டு

இந்துப்பு	கருஞ்சீரகம்
கல்லுப்பு	வெள்ளுள்ளி
வளையலுப்பு	சீரகம்
சவுட்டுப்பு	வாய்விளங்கம்
கரியுப்பு	ஜாதிக்காய்
கிராம்பு	லவுங்கப்பத்திரி
சிறுநாகப்பு	ஏலம்
பெருங்காயம்	தாளிச்சப்பத்திரி
சுக்கு	ஓமம்
மிளகு	நவாச்சாரம்
திப்பிலி	சத்திசாரம்

இவைகள் வகைக்கி (கவ) விராகனிடைவாங்கி இடித்து வஸ்திரகாயம்செய்து கல்வத்திலிட்டு யிரண்டைச்சார் சித்திரை

மூலச்சார் வேலிப்பருத்திச்சார் பேய்த்தும்மட்டிச்சார் நாக்ல
கைச்சாற்றிலும் (ச) நாழிகைஅரைத்து குக்குடத்தில் வயற்
றிலடைத்து நாலினல்கைத்துவிடவும் பெருஞ்சட்டியாகஇரண்
டுகொண்டுவந்து இரண்டிற்கும் உட்புறத்தில் சீலை சாற்றையுள
மாய்பூசி ஒரு சட்டியில் குக்குடத்தைவைத்து கரிச்சாலைச்சாறு
(ச) படி மேனிச்சாறு (ச) படி பசுங்கோமியம் (ச) படி ஆக
(௰௨) படியும் ஊற்றி மேல்சட்டிமூடி வாய்தெரியாமல் மண்
சீலைசெய்து ஒரு ஜாதிவிரகால் யெரிக்கவும் சாரெல்லாம் வற்று
மளவும் யெரித்து யிரக்கிக்கொண்டு யெலும்பெல்லாம் போக்கி
மற்ற யாவற்றும் சூரணமாக வரைத்து சீசாவில் வைத்துக்கொ
ள்ளவும் வேளை ஒன்றுக்கு திருகடிபிரமாணமாக யிருவேளையும்
சாப்பிடவும் வியாதிக்கிசைந்தவாறு (௰-உ௰-ச௰) நாள் சாப்பிட
வும் அஷ்டகுன்மம் சோகை மகோதரம் பாண்டு நீர்க்கோவை
வெப்புகாச்சலினல்வரும் குண்டைக்கட்டி வாய்வுவாதம் இவை
கள்தீரும் மீன் மரக்கறிகள் ஆகாது தயிர் மோர்நெய் வெள்ளாட்
டுகறி வத்தல் இதுகள் ஆகும்.

வெள்ளாட்டு

ஓதப்பைசூரணம்.

வெள்ளாட்டு ஓதப்பை யென்பது ஆட்டினது பீலிக்குட
ல்யென்பர் அதைக்கொண்டுவந்து ஜெலத்தினல் அலம்பி சுத்தி
செய்து பிழிந்து காயவைத்து யிடித்து சூரணமாக்கி (உ) பலம்
நிறுத் தெடுத்துக்கொண்டு,

* குங்குமப்பூ	சித்தரத்தை
* கோரோஜனம்	கருஞ்சீரகம்
* கற்கண்டு	கோஷ்டம்
* மனோசிலை	நெற்பொரி
சீரகம்	ஆடாதொடைவேர்
கிராம்பு	திப்பிலிமூலம்

இவைகள் வகைக்கி (க௰) விராகநிடையாக வாங்கி * இக்
த அடையாளம்வைத்த நாலுவிதுசும் நீக்கி மற்றதை இளம் வ
றுப்பாகவறுத்து யாவும் ஒன்றிட்டு யிடித்து சூரணம் செய்து

முன்செய்த சூரணத்துடன் கலந்து வெள்ளாட்டுப்பாலில் பிசிரி
உலர்த்தி வைத்துக் கொள்ளவும் பசும்நெய்யில் திருகடி பிரமா
ணம் வைத்துசாப்பிடவும் இப்படிஇருவேளை அரைமண்டலம்
கொள்ளவும்.

சேத்துமம் தொண்ணூற்றியாறு காசம் என்பது யிளை இ
ருமல் வாதம் பித்தம் பித்தவாய்வு வரட்சி உப்பிசம் வாந்தி யி
றைப்புசகலமுந் தீரும் வெள்ளாட்டுக்கறி வத்தல் நெய் பால் ஆ
கும் தயிர்மோர்புளிப்பு கைப்பு புகை போகம் லாகிரி ஆகாது.

—(ஸ்ரீ)—

ஸ்ரீ கந்த சூரணம்

அன்னபேதி	விராகநிடை	க
அண்டவாளப்பொடி	,,	அ
படிகாரம்	,,	க
மாசிக்காய்	,,	க
துருசு	,,	க
வெள்ளைக்குங்கிலியக்கட்டி	,,	க
சூராசாலிஓமம்	,,	க
வசம்பு	,,	க
கொட்டைப்பாக்கு	,,	ச
ரசபற்பம்	,,	க
வேப்பம்வேர்பட்டை	,,	ச
அமுக்குராவேர்	,,	க

இவைகளைக்கல்லுரலிலிட்டு யிடித்து தூள்செய்து வஸ்திர
காயமிட்டு டப்பியில் வைத்துக்கொள்ளவும் இரவில் போஜனம்
செய்வதற்குமுன்னர் இந்தசூரணத்தில் ஒருசிட்டிகையெடுத்து
பல்தேய்த்து வென்னீரினல் வாய்நன்ருகக் கொப்பளித்து சுத்தி
செய்துக்கொண்ட பிறகு அன்னம் பொசித் தூங்கவும் இப்படி
சதாகாலம் இரவில் துலக்கிவருவதினல் பெண்களுக்கு பற்களி
ருகுவதுமன்றி மாதவிடாயென்னும்ரகசியஸ்தானம்குருகலாகும்
அதனல் தேககாந்தியும் முகவசீகரமும் பெண்களுக்கு வலிவு
முண்டாகும் இப்பொடி புருஷருக்கன்று.

நாபிரெணத்திற்கு

குங்கலியச் சூரணம்.

வெள்ளைகுங்கிலியம் ஒருபலங்கொண்டுவந்து ௫-பிளநீர் உடைத்துசட்டியில்வார்த்தி குங்கிலியக்கட்டியை அதில்போட்டு அடுப்பேற்றி நீர்சுண்டுகிறவரையில்எரித்து பிறகு குங்கிலியத்தை கல்வத்திலிட்டு பொடித்துசூரணமாக்கி புட்டியில்வைத்துக்கொள்ளவும் இரண்டுஅரிசியிடை சூரணத்தை வெண்ணை அல்லது நெய்யில் குழைத்துகொடுக்கவும் நாபிரெணம் உலர்ந்து சூடுதணியும்.

திருகடுகு சூரணம்.

சுக்கு, திப்பிலி, மிளகு, சரியிடைதூக்கி உலர்த்தியிடித்து வஸ்திரகாயஞ் செய்து சீசாவில் வைத்துக்கொண்டு வேண்டியபோது காலணாயிடை சூரணத்தை பனைவெல்லங்கூட்டி பிசைந்துசாப்பிடவும் ௩-௰-௰௫-நாள் கொள்ள வாய்வுகள்மாந்தக்கழிச்சல்முதலியவியாதிகள்தீரும் மற்றமேகாதி பற்பங்களுக்கும் யிது அனுபானமாமென்றறிக.

சூ ர ண வ ங் க ப ர ணி
மு ற் றி ற் று.

இவ்வளவு வெள்ளியங்கடையாய் அச்சிட்டு பயிரங்கப்படுத்திய அனுபோக வயித்தியத்திற்கு சரக்குசுத்திகள் சொல்லவில்லையென கவலைப்படவேண்டாம் இதற்கு முதற்பாகத்திலும் எட்டாம்பாகத்திலும் சுத்திகள் விவரமாக தெறிந்துக் கொள்ளலாம்.

இனி மூன்றம்பாகத்தில் தியாழவகைசொல்லப்படும்.

உ

வேலுமயிலுந்துணை.

எ ழ ா வ து

எண்ணெய்வகைபரணி.

பிள்ளைகள் கணத்திற்கும்
பெரியவர்கள் மேகத்திற்கும்

தெ ய் ல ம்.

அவுரிச்சார்	படி	௧
குப்பைமேனிச்சார்	,,	௧
சித்தாமணக்கெண்ணெய்	,,	௧

இம்மூன்றும் ஒன்றாய்கலந்து அடுப்பேற்றி கருப்புவெத்திலைச்சார் ௨-ரூபாயிடைவிட்டு ஒருநாழிகையெரித்து வசம்பு யிடித்து வஸ்திரகாயம்செய்து சித்தாமணக்கெண்ணைவிட்டரைத்த விழுது ௨-ரூபாயிடைஅத்துடன்போட்டுகலக்கி மெழுகுபதமா குமட்டும்காச்சிவடித்து பத்திரப்படுத்திவைத்துக்கொண்டு நாளொன்றுக்குகாண்டிவீதம் ௩-அல்லது ௭-நாள்கொடுக்கவும் இச்சாபத்தியம் வயற்றிலுள்ள கசடெல்லாம் போகும்.

ஸ்ரீபோகமேகத்தால்வந்த

வெள்ளைக்கி யெண்ணை.

பரங்கிச்சேக்கை	பலம்	௩
பிச்செங்கன்வேர்	,,	௨
பூமிசக்கரைக்கிழங்கு	,,	௧
நரிமிரட்டிவேர்	,,	௧
மிள்கரணைவேர்	,,	௧

சுக்கு	,,	க
தாணிக்காய்	,,	க
கருஞ்சீரகம்	,,	க
முதல்தரம்சந்தனம்	,,	க
ஆடுதின்னாப்பாளை	,,	உ
மாவிலிங்கம்பட்டை	,,	உ

இவைகளையுலர்த்தியிடித்து வஸ்திரகாயம்செய்து ௰-பலம் சித்தாமணக்கெண்ணெயில்கலந்து அடுப்பேற்றி மெழுகுபதமாய் காச்சி யிறக்கும்போது பூரம் உ-விராகனிடை யெடுத்து கொடி யெண்ணெ விட்டரைத்து கலக்கி வைத்துக்கொண்டு வேளைக்கு கரண்டிவீதம் ௩-அல்லது ரு-எ-நாள்சாப்பிடவும் கொள்ளுஎள்ளு பூசினி அவுத்தி மீன் கருவாடு லாகிரி புகை போகம் இவை யாகாது மறுபத்தியமும் இவ்வாறிருந்து ஓமம் தேய்த்துத் தலை முழுகவும்.

கொறுக்கு வெள்ளைக்கு

யெண்ணெ.

பூரம்	விராகனிடை -	க
ஓமம்	,,	க
ஏலம்	,,	க
லவுங்கம்	,,	அ

இவைநான்கும் செம்பருத்திச்சார்விட்டு ச-ஜாமம் அரைத்து ரு-பலம்விளக்கெண்ணெயில்கலக்கி ஒருநாள் சூரியபுடம்வைத்து மறுநாள்முதல்காலையில் கரண்டிவீதம் ரு- அல்லது எ-நாள் சாப்பிடவும் இச்சாபத்தியம் மறுபத்தியம் அவ்வாறே யிருக்கவும் தீரும்.

பொக்கு மேகத்திற்கு

எண்ணெ.

அகத்திச்சார் வெங்காயச் சார் மணத்தக்காளிச் சார் வகைக்கி பலம்-உ- உத்தாமணிச்சார் உ-க்கு விளக்கெண்ணெய் படி (உ). இவை யாவும் ஒன்றாய்க் கலந்து பூரம் (உஉ) விராக

னிடையெடுத்து கொடி யெண்ணெய்விட்டு அரைத்து அத்துடன் கலக்கி சூரியபுடம் மூன்றுநாள்வைத்தெடுத்து காலையில் கரண்டிவீதம் ரு-எ-நாள்சாப்பிடவும்கடும்பத்தியமிருக்கவும் மாலையில் இருகடுகுகியாழம்கொடுக்கவும்.

கை கால் பிடிப்புக்கு

யெண்ணெய்.

விளக்கெண்ணை	பலம்	௰
சுத்திசெய்தவாளம்	விராகனிடை -	ச
ஏலம்	,,	உ
சுக்கு	,,	உ
பூரம்	,,	உ
புங்கம்பால்	பலம்	க

இம்மருந்துகள் நாலுவகையும் கல்வத்திலிட்டு விளக்கெண்ணெவிட்டறைத்து கொடி யெண்ணெயில் கலக்கி மூன்றுநாள் சூரியபுடம்வைத்தெடுத்து காலையில்கரண்டிவீதம் ரு-எ-நாள்சாப்பிடவும் சுட்டபுளி வருத்தஉப்பு கூட்டவும்.

விரைவாத யெண்ணெய்.

சித்தாமணக்கெண்ணெய்	படி -	௩
குப்பைமேனிச்சார்	,,	ஹ
முடக்கொத்தான்சார்	,,	ஹ
வெள்ளைகாக்கட்டான்சார்	,,	ஹ
கெச்சக்காய்வேர்	பலம்	உ
வெள்ளைப்பூண்டு	,,	வ
கருஞ்சீரகம்	,,	வ
வசம்பு	,,	வ

கடைசரக்கு யாவும்யிடித்து யெண்ணெய்விட்டரைத்து கொடி யெண்ணெயுடன்கலக்கி அடுப்பேற்றி மெழுகுபதமாய்காச்சி வடித்து ௩-அல்லது எ-நாள்சாப்பிடவும் வாய்வுபண்டங்கள் ஆகாது இச்சாபத்தியமிருக்கவும்.

குளித்தியெண்ணெய்.

மணத்தக்காளிரசம் படி-வ கந்தாழைமடல்சேர்ருபலம்-ரு பரிங்கிசெக்கை பலம் மூணுவிசம் கண்ணுல் முருக்கன் பட்டை ரசம் ஆழாக்கு வெள்ளைவெங்காய் ரசம் பலம்-௰ சித்தாமணக் கெண்ணெய் படி-வு ஏயம்வர்ணமப்பிழம்-உ வெந்தியம்விராகனிடை-க பனவெட்டுவிராகனிடை-உ௦ கற்கண்டு விராகனிடை-உ௦ இவையாவும் ஒன்றாய்கலந்து அடுப்பேற்றி யிளம்பதமாய்காச்சி யிரக்கி காலையில் கரண்டியளவு ஏழுநாள் சாப்பிடவும் இச்சா பத்தியம்

சகலரெணத்திற்கும் எண்ணெய்.

கொடிக்கள்ளிசார்	படி	ரு
பித்திரமூலவேர்	பலம்	க
எருக்கன்வேர்	,,	க
கொடிக்கள்ளிவேர்	,,	க
அமுக்கனங்கிழங்கு	,,	க
ரசம்	கான்சி	க
ரசச்செந்தூரம்	,,	௩
கெந்தகம்	,,	அ

வேருவகையாவும் யிடித்துசூரணித்து மற்றசரக்குயாவும் கல்வத்திலிட்டு விளக்கெண்ணைவார்த்து உ-ஜாமம்அரைத்துஒரு படிவிளக்கெண்ணையில் போட்டுக்கலக்கி கொடிகள்ளிச்சாறும்வி ட்டுமெழுகுப்பதமாய்காச்சிவடித்துகாலையில் உச்சிகரண்டி வீதம் ௫-அல்லது எ-நாள்சாப்பிடவும்இச்சாபத்தியம்அரைபுளிஅரை காரம்சேர்க்கவும் சுட்டபுளிஉப்புசேர்ப்பதே உத்தமம்.

வெள்ளெண்ணெய்.

சுக்கு	வி-நி,	உ௦	வாளம்	வி-நி,	௰
ஏலரிசி	,,	உ௦	பூரம்	,,	உ

இவைகளை கல்வத்திலிட்டு விளக்கெண்ணைவிட்டு இரண்டு ஜாமம் அரைத்து ம-பலம் விளக்கெண்ணையில் கலக்கி ஒருநாள் சூரியபுடம்வைத் தெடுத்துக் கொள்ளவும் குழந்தைகள் காலசிர ங்கு தலைச்சிரங்கு மாந்தம் கணம் பொருமல் வாய்வுகள் யாவும் தீரும் காலையில்கரண்டிவீதம் கூ-நாள் எ-நாள்கொடுக்கவும் இச் சாபத்தியம்.

{ ஒட்டுப்புண் கண்டமாலை மேகவாய்வு பக்கசூலை இதுகட்கு }

இரசகற்பூரயெண்ணெய்.

பூரம்	விராகனிடை	௰
லவுங்கம்	,,	க
மிளகு	,,	க
பரங்கிச்செக்கை	,,	க

இவைகளை உலர்த்தி யிடித்துகல்வத்திலிட்டு பரித்திஇலைச் சார்விட்டு ஒருஜாமம்அரைத்து ம-பலம்விளக்கெண்ணையில்கலே க்கிஅத்துடன் பரித்திஇலைச்சாறும் அரை யாழாக்கு விட்டு நன் றாய்கலக்கி ஒருநாள்சூரியபுடம்வைத்து யெடுத்துக்கொண்டு கா லையில்உச்சிக்கரண்டிவீதம் ௫-நாள்அல்லது எ-நாள் சாப்பிடவு ம் கடும்பத்தியமிருக்கவும்.

மாந்தயெண்ணெய்.

சுக்கு	கோஷ்டம்
திப்பிலி	ஜாதிக்காய்
மிளகு	லவுங்கம்
ஓமம்	ஜாபத்திரி
சீரகம்	அரத்தை
கருஞ்சீரகம்	சித்தரத்தை
அக்கிராகாரம்	சம்பங்கிமொக்கு
குராசானியோமம்	கருவாப்பட்டை
அதிமதுரம்	காட்டுசீரகம்

இவைகள் வகைக்கு விராகனிடை (க) கடுகுரோகணி பலம் (உ) மயிர்மாணிக்கம்வேரின் பட்டை பலம்(உ) இவைகள்யாவும்

வெய்யலில் உலர்த்தி யிடித்து வஸ்திரகாயஞ் செய்து முக்காற்படி விளக்கெண்ணெயில் போட்டு கலக்கி வைத்துக்கொண்டு பூரம் விராகனிடை (ரு) விளக்கெண்ணெய்விட்டு ஒருஜாமம் அரைத்து மேற்படி எண்ணெயில் நன்றாய்கலக்கி சூரியபுடம் ஒருநாள்வைத்தெடுத்து காலையில் உச்சிக்கரண்டிவீதம் (ங-எ-ம) நாள் சாப்பிடவும் மாந்தம், உட்காய்ச்சல், கணம், மேகத்தால்வந்த வியாதிகள், வாய்ரணம், அட்சரம், அசீர்ணம் இவைகள்தீரும் மீன், கருவாடு, மாமிசம், யிரைச்சியாகாது இச்சாபத்தியம்.

அச்சரத்திற்கு எண்ணெய்.

வசம்பு	புளிக்கருணைக்கிழங்கு
வெங்காயம்	வெள்ளருகு
கருஞ்சீரகம்	நஞ்சருப்பான்வேர்
பெருங்கிழங்கு	கடுகுரோகணி
நிலப்பனங்கிழங்கு	தும்பராஷ்டம்
காட்டுக்கருணைக்கிழங்கு	

இவைகள் வகைக்கி பலம் -க-ஆத்து தும்மட்டிக்காய்-உ- சவுரிக்கிழங்குபலம்-க-இந்தஇனுசுகள் யாவும் பஞ்சபோ லிடித்து ஒருபடிவிளக்கெண்ணெயில் போட்டுகாச்சி வடித்து வைத்துக்கொண்டு உச்சிக்கரண்டியளவு வார்க்கவும் ச-கு-விசை பேதியாகும் அதிகமாய் பேதியானால் ஓமம் கொண்டுவந்து வெந்நீரில் அரைத்து அந்தபால்பிழிந்து க-அல்லது உ-பாலடைவார்க்கவும் எண்ணெ ௲-நாள்கொடுக்கவும் சுட்டபுளிவருத்த உப்பு கூட்டவும் சிறுபிள்ளையானால் தாய் பத்திய மிருக்கவேண்டியது.

கரப்பானுக்குயெண்ணெ.

வசம்பு	முளகருணை
கருஞ்சீரகம்	சங்கம்குப்பியிலை
கார்போகஅரிசி	செங்கத்தாரியிலை
நீர்முந்து	கடுகுரோகணி
வெங்காயம்	செப்புருப்பட்டை
சங்கம்பட்டை	

இவை வகைக்கி பலம் (க) யெண்ணைப்படி (க) இந்தமருந்தெல்லாம் பஞ்சுபோல் யிடித்து யெண்ணெயில்போட்டு கடுகு திரள்க்காச்சி வடித்து சிறுகரண்டி வீதம் (௲ - ரு) நாள் கொடுக்கவும் அடியிலுள்ள கடுகையெடுத்து கெந்தகம்சேர்த்தரைத்து கரப்பான் ரணத்தின்பேரில் பூசவும்.

யெண்ணெய்வகைபரணி

முற்றிற்று.

அனுபோகவயித்திய பிரம்மரகசியம் 1, 2, 3, 4, 5, 6,7, 8, பாகங்கள் வரையில் உண்டு, அதில் 1, 2, 3, 4, பாகம்வரை அச்சிட்டு விற்பனைசெய்துவருகிறோம், 5-ம்-பாகம், 6-ம்-பாகம், 7-ம்-பாகங்களில் அநேக அற்புதமுறைகளும், கடைசி 8-ம்பாக முழுமையும் ஒவ்வொருமருந்துகள் சுத்திசெய்யும்பாகமும் இன்னயின்ன நோயைக் கண்டிக்குமென்றும் விவரமாக சொல்லப்பட்டிருக்கிறது 5-6-7-8-வது, ஆக நாலு பாகங்களும் 1898ஸு பிப்ரவரி௴ முதல்தேதிக்குமேல் வேண்டியவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

உ

கடவுள் துணை.

எட்டாவது

தைலவகை பரணி.

அண்டத்தைலம்.

கோழிமுட்டை (௰) கொண்டுவந்து அவித்து மஞ்சள் கருவையெடுத்து எண்ணெபழகிய சட்டியில்போட்டு அடுப்பில்வைத்து யெரித்தால் தைலமிரங்கும் யெரிக்கும்போது கிளரிக்கொண்டிருக்கவேண்டியது அத்தயிலத்தை ஒரு கோப்பையில் யிருத்துக்கொண்டு பிரகு இரண்டு பலம் பூண்டு கொண்டுவந்து மேற்றோல் உரித்து கல்வத்தில் போட்டு அறைத்து கொஞ்சம் உபிபோட்டுப் பிசரி பிழிந்தால் தைலமிரங்கும் கஸ்தூரி விராகனிடை (௪) குங்குமப்பூ விராகனிடை (௨) கோரோஜனை விராகனிடை (௨) இம்மூன்றும் பூண்டுதயிலத்தில் குழைத்து மேற்படி அண்டத்தயிலம் ஒன்றாய்கலந்து குலிக்கி சீசாவில் வைத்துக் கொண்டு பெரியதுட்டிடை நாக்கில் தடவவும் சகலதோஷமும் தீரும் நாவரட்சி வாய்வுமுதலானதும் தீரும் இப்படி (௰-௫) அல்லது (௭) நாள் கொடுக்கவும் கடும்பத்தியம்.

தலைவலிக்கு தைலம்.

இஞ்சிச்சாறு	படி	ஹு
கருஞ்செம்பைச்சாறு	,,	ஹு
கஸ்தூரிமஞ்சள்	பலம்	௧
மிளகு	,,	௰

இரண்டுவகையும் யிடித்து சூரணித்து (௮) படி நல்லெண்ணெயில் போட்டு இருவகைச் சாறும் ஊத்தி அடுப்பேற்றி

கடுகுபதத்தில் காச்சியிரக்கி (௪) நாள் வட்டமாக (௪) ஸ்தானம் செய்யவும் தீரும்.

கண்சாலேசுரத்திற்கு

சந்தநாதித்தைலம்.

சந்தண அத்தர்	பலம்	௨
கஸ்தூரி	,,	ஹு
ஓமப்பூ	,,	ஹு
வெட்டிவேர்	,,	ஹு
அவுரிவேர்	,,	ஹு
மர்கிலிங்கம்வேர்	,,	ஹு
பொன்னாங்கண்ணிவேர்	,,	ஹு
ஓரெலைத்தாமரைவேர்	,,	ஹு
செப்புநெரிஞ்சிவேர்	,,	ஹு
அமுக்கனங்கிழங்கு	,,	ஹு
கஸ்தூரிமஞ்சள்	,,	ஹு

இவைகளில் கஸ்தூரியும் அத்தரும் தவிரமற்ற இனுசுகளை வெய்யலில் உலர்த்தியிடித்து சூரணம்செய்து அறைப்படி நல்லெண்ணெயில்போட்டு கடுகுபதமாய் காச்சிவடித்து (௪) நாள்வட்டமாக நாலுஸ்தானம் செய்யவும் கண்சாலேசுரம் உடனே நீங்கிப்போகும்.

கழுத்திசுவுக்குத்தைலம்.

ஒரு பேய்த் துமட்டிக்காயை சிறு பில்லைகளாக அருத்து (௫) பலம் நல்லெண்ணெயில்போட்டு துட்டிடை கிச்சிலிக்கிழங்கு துட்டிடை கஸ்தூரிமஞ்சள் ஒருவிராகனிடை கஸ்தூரி இவ்வகளைப்பொடித்து எண்ணெயில்போட்டு காச்சிதலைமுழுகிவரவும் கழுத்திசுப்பு நீங்கும்.

சர்வரிணத்திற்கும்

சிங்கித்தைலம்.

முதார்சிங்கி	படிகாரம்
கெந்தகம்	நீலம்
சூதம்	பரங்கிசெக்கை
லாவி	துத்தம்
வசம்பு	கடுக்கா

இவைகள் வகைக்கி பலம் (ல) யெடுத்துயிடித்து தூள்செய்துவைத்துக்கொண்டு புங்கம்பால் ஓதியம்பால் வகைக்கி ஆழாக்கு தேங்காயைத்திரிகி உழக்குபால் பிழிந்து அந்தபாலை காச்சிநெய்யெடுத்து அந்த நெய்யில் சரக்குத்தூளை சேர்த்து ஷை இருவகைப்பாலும் விட்டு வெங்காயச்சார் ஆழாக்குவிட்டு கடுகுதிரளக்காச்சி இரக்கிவைத்துக்கொண்டு அரையாப்பு ரிணம் ஆராதபுண் புரைரிணம் குழிப்புண் இரத்தக்கசிவுரிணம் ஆரியாசிசினக்கும் ஆனைரிணம் சிங்கிரிணம் இதுகளுக்கெல்லாம் பூசவும் ஆரிவிடும்.

தைலவகைபரணி

முற்றிற்று.

இவ்வளவு வெள்ளியகடையாய் அச்சிட்டு பயிரங்கப்படுத்திய அனுபோகவயித்தியத்திற்கு சரக்கு சுத்திகள்சொல்லவில்லையென கவலைப்படவேண்டாம் இதற்கு முதல்பாகத்திலும் எட்டாம்பாகத்திலும் சுத்திகள் விவரமாகதெறிந்துக்கொள்ளலாம்.

இனி மூன்றாம்பாகத்தில் கியாழவகை சொல்லப்படும்

உ

தேவிசகாயம்.

ஒன்பதாவது

லேகியவகைபரணி.

பித்தயெரிவிற்கு லேகியம்.

சுக்கு	சக்கரை
திப்பிலி	பரிங்கிச்செக்கை
மிளகு	அமுக்கரங்கிழங்கு
லவுங்கம்	நிலப்பனங்கிழங்கு
ஏலம்	தண்ணிவிட்டான்கிழங்கு
சாதிக்கா	விழலரிசி
சாபத்திரி	எலிமிச்சம்விரை
தாளிசப்பத்திரி	நெல்லிக்காய்
லவுங்கப்பட்டை	கடுக்கா
சிமை அத்திப்பழம்	தாணிக்காய்
பேதாளும்	விளாம்பழம்
சாலாம்பிசினி	திராக்ஷிப்பழம்
சீரகம்	முந்திரிப்பழம்
கொத்தமல்லி	பேரீச்சம்பழம்
சோம்பு	

இவைகள் தினுசுக்கு பலம் (க) இஞ்சிரசம்பலம் (ம) பழரசம் பலம் (ம) புளிப்புமாதளம்ரசம் பலம் (ம) யிளநீர் பலம் (ம) நாட்டுச்சக்கரை ஒரு வீசை தேன்பலம் (ம) நெய்பலம் (ம) பசும்பால் ஒருபடி மேற்கூரியதினுசுகளிற் பழவர்க்கம்தவிர மற்றவையாவும் யிளம்வருப்பாகவருத்து யிடித்து சூரணித்து வஸ்திரகாயம் செய்துக்கொண்டு பழம், பால் நெய், ரசங்களின் வகையாவும் ஒன்றாய்க்கலந்து அடுப்பேற்றி சக்கரையைக் கொட்டி பாகுபதமாய் வரப்பார்த்து முன்வஸ்திரகாயம்செய்த தூளைக் கொஞ்சகொஞ்சமாய் போட்டு கிளரிக்கொண்டிருக ஷை தூள் முழுமையும் பூர்த்தியானபிறகு கைவிடாமல் சற்றுநேரம் கின்டி அடிபிடிக்கா முன்னம் ஜாக்கிரதையாகப்பார்த்து யிரக்கிவைத்

துக்கொண்டு தேன்விட்டுகிளரி கோப்பையில் வழித்துவைத்துக்கொள்ள வேளைக்கு கெச்சக்காய்பிரமாணம் காலைமாலை யிருவேளையும் ஒருமண்டலம் சாப்பிடவும் இச்சாபத்தியம் புகை, சுருட்டு, கள்ளு, சாராயம், பெண்போகம், அன்னியபதார்த்தம், நல்லெண்ணை கடுகு இதுகளாகாது, பித்தயெரிவு, குலையெரிவு, பித்தவாய்வு, மேகவாய்வு, மேககாரிகம் இவைதீரும்

ஊஷ்ணத்திற்கு லேகியம்.

சுக்கு பலம் (൩) அரிசித்திப்பிலி பலம் (க) திப்பிலியையொரு குடுவையில்போட்டு கொஞ்சம் உமியைப்போட்டு அது முழுகும்படி ஜெலம்விட்டு வேகவைத்து யிரக்கி திப்பிலியை யெடுத்துக்கொண்டு சுக்கும் கூடச்சேர்த்து கல்வத்திலிட்டு கெகிழ அரைத்து பில்லைதட்டி எண்ணைஊரிய சட்டி அடுப்பில் வைத்து (உ൩) பலம் நெய்விட்டு அதில் பில்லையைவைத்து (൧) நாழிகை யெரிக்கவும் பிறகுயெடுத்து கல்வத்தில்வைத்து அரைத்து பில்லைதட்டி மறுபடியும் நெய்யில்வேகவைக்கவும் இப்படி ஐந்துவிசை அரைத்து வேகவைத்தெடுக்க யிளகியிருக்கும்லேகியமாக பிசைந்து வைத்துக்கொண்டு சுண்டக்காய் பிரமாணம் அந்திசந்தி சாப்பிடவும் இச்சாபத்தியம் கடுகு நல்லெண்ணை கூடாது ஊஷ்ணந்தீரும் தேகம்தணியும்.

கரிச்சாலை லேகியம்

சீமை கரிசலாங்கண்ணிச்சார் படி (உ) கெரிஞ்சிச்சார்படி (உ) சிறுகீரைச்சார்படி (க) கீழாநெல்லிச்சார் படி (க) இந்த சாறுகள்யாவும் பழயபாண்டத்தில் ஊத்திவைத்துக்கொண்டு.

நாகப்பட்டை, கருங்காலிப்பட்டை, அத்திப்பட்டை, தென்னம்பாளையுள்ளிருக்கும் அரிசி, மஞ்சள், இவைகள் வகைக்கி பலம் (உ൩) யெடுத்து யிடித்து எட்டுபடி ஜெலத்தில்போட்டு அரைப்படி கியாழமாகக் காச்சிவடிகட்டிக்கொண்டு முன் சாறுவகையிருக்கும் பாண்டத்தில் ஊற்றிகலந்து வைத்துக்கொண்டு

மிளகு, மிளகருணை, சித்தாமுட்டி வேர், பேராமுட்டி வேர், யெலுமிச்சம்வேர், ஆகவகைக்கி பலம் (௮) இவைகளை கல்லுரலிலிட்டு பஞ்சுபோல் யிடித்து யெட்டுபடி ஜெலத்தில் போட்டு அரைப்படி கியாழமாகயிரக்கி வடித்து முன்பாண்டத்தில் யிருக்கும் மருந்துடன்ஊத்தி அடுப்பில் யேத்தி கொதிக்கவைக்கவும் உடனே பனவெல்லம் பலம் (௯) நல்லவெல்லம்பலம் (௯) பசும்பால் படி (௪) இந்தபாலில் இரண்டுவகை பெல்லமும் போட்டு கறைத்துமுன் அடுப்பின்பேரில் யிருக்கும் பாண்டத்தில் ஊத்தி கமலாக்கினியாக யெரித்து கொதிக்கச்செய்யவும் எலிமிச்சங்கட்டையால் கிளரவேண்டியது அப்படி கிளரிக்கொண் டிருக்கையில்தானே.

சீரகம்	கடுக்காய்பூ
சுக்கு	கோஷ்டம்
ஏலம்	அக்கிராகாரம்
கிராம்பு	அதிமதுரம்
ஜாதிக்காய்	தாளிசப்பத்திரி
ஜாபத்ரி	மிளகு
ஓமம்	திப்பிலி
குரோசாணியோமம்	திருபலாதி
சிறுநாகப்பூ	

ஆக வகைக்கி பலம் (க) இவைகளை கல்லுரலிலிட்டு யிடித்து சூரணித்து வஸ்திரகாயம்செய்து பசும்நெய் வீசை (൩)தேன் வீசை (൧) ஷெ சூரணத்துடன் ✳ மண்டூர செந்தூரம் ஒரு பலம்சேர்த்துக்கொண்டு நெய்யை முன்பாகமருந்தில்லூத்திகிளரிக்கொண் டிருக்கும்போதே சூரணத்தை சிறுகத் தூவிக்கொண்டுவரவும் அப்படி சூரணம் பூர்த்தியானபிறகு கால்மணி நேரம் கைவிடாமல்கிளரி யிரக்கிவைத்துக்கொண்டு உடனே தேன்விட்டு விரைநீக்கிய திராட்சப்பழம் (௫) பலம் போட்டு கிண்டி கோப்பையில் வழித்து வைத்துக்கொள்ளவும் காலைமாலையுமாக வேளைக்கி புன்னக்காயளவு ஒரு மண்டலம் சாப்பிடவும்.

✳ இந்த அனுபோக வயித்தியம் முதற்காண்டம் (௯௪) வது பக்கத்தில் சொல்லியிருக்கும் (கனமண்டூரசெந்தூரம்) சேர்த்துக்கொள்ளவும்,

இந்த கரிசாலைலேகியத்தால் தீரும்
வியாதிகட்கு உருதிமொழி

விருத்தம்.

ஆச்சப்பா பாண்டுவ்கை யெல்லாம்போகும்
அப்பனே பித்தவெட்டை கைகாலேர்ச்சல்
காச்சப்பா காந்தலுடன் யெரிவுபோகும்
கனமான வாந்தியொடு மயக்கம்தூக்கம்
ஓச்சப்பா விக்கமொடு நீர்சுரப்பு
உத்தமனே கிராணியெலா மொழிந்துப்போகும்
நீச்சப்பா வியாதியங்க ளெல்லாம்போகும்
நிசமாகத் தாயாரை நிகழ்த்துவாயே.

மேகம்-உக-க்கும் லேகியம்.

செகப்புசாயுருவிவேர்	உப்பிலாங்கொடிவேர்
செகப்புநெருஞ்சிவேர்	அவுரிவேர்
கையாந்தகரைவேர்	முடக்கத்தான்வேர்
மாவிலிங்கம்வேர்	புங்கன்வேர்
மிளகரணைவேர்	கருஊமத்தன்வேர்
சிவன்வேம்புவேர்	வெட்டிவேர்
காட்டுக்கருணைவேர்	ஆடுதின்னாப்பாளைவேர்
நீர்முள்ளிவேர்	சிறுகீட்டுக்கொடிவேர்
வில்வவேர்	ஆவாரம்பட்டை
துத்திவேர்	வலரிவேர்
வெள்ளெருக்கம்வேர்	பூமிசக்கரைக்கிழங்கு
சீதேவிசெங்கழனிவேர்	மருதம்பட்டை
இலைமஞ்சம்வேர்	பூவரசம்பட்டை
வெள்ளைவிஷ்ணுகாந்திவேர்	செங்கத்தாரிபட்டை
ஆனைநெருஞ்சிவேர்	பாவட்டையிலை
பொன்னாங்கண்ணிவேர்	புளிக்கருணைக்கிழங்கு

இவைகள்யாவும் வகைக்கு (ரு - பலம்) கொண்டுவந்து உலர்த்தி யிடித்து வஸ்திரகாயம் செய்து அரைவீசை நெய்யை அடுப்பிலேற்றி உருகினவுடன் சக்கரை பலம்(ய) போட்டு பாகுபதமாய் காய்ச்சிக்கொண்டே கிளரவேண்டியது நெய் போதாவிட்

டால் முன்பாகக்காச்சி யெடுகட்டிய பசும்பால் போதுமானமட்டும் கிதானமாய் விட்டுக்கொண்டு கிளரவும் இறக்கும்போது மலை தேன் ரு- பலம் விரையில்லாத பழய கிராட்சிபழம் பலம் ரு பொடியாகக் கத்தரித்த பாதம்பருப்பு பலம் ரு-போட்டு கிண்டி வைத்துக்கொள்ளவும் கைப்புதோன்றாமல் இன்பதற்குமினிப்பாகவும் வியாதியைகண்டிக்கும் தன்மையுள்ள நல்லலேகிய மென்றறியவும் காலைமாலையாக இருவேளையும் புன்னைக்காய்விதம் உ௰-நாள்சாப்பிடவும் மீன், கருவாடு, யிரச்சி, லாகிரி, ஸ்திரீபோகம், புகைசுருட்டு, இவை கூடாது மேகம் உ௲ம் தீரும் கருமேகத்தையும் கண்டிக்கும் இச்சாபத்தியம்

கைகால்பிடிப்புக்கு லேகியம்.

மாவிலிங்கம்பட்டை	செப்புநெருஞ்சிவேர்
சிறுகாஞ்சொரி	முடக்கத்தான்வேர்
அமுக்கராங்கிழங்கு	தாழம்விழுதுசாறு
கண்டங்கத்திரி	பொன்னைவேர்
பரங்கிப்பட்டை	பூனைவணங்கிவேர்
நீரடிமுத்து	மிளகரணைவேர்
ஓரிலைத்தாமரைவேர்	

வகைக்குபலம்-க-கோரோஜனம்விராகனிடை அரிக்கால் கஸ்தூரிவிராகனிடை அரிக்கால் ஓமப்பூவிராகனிடை அரிக்கால் இவைகளைசூரணித்து சமயிடைசர்க்கரை கலந்து அந்திசந்தி திருகடிபிரமாணம்தின்னலாம் அல்லது-க-வீசை விளக்கெண்ணெயில் போட்டுகாச்சியும்சாப்பிடலாம் அல்லது-ய௫-பலம்நெய்அடுப்பிலேட்டு சூரணத்தை கொட்டி கிண்டி வருகையில் நெய் போதாவிட்டால் தேன்போதுமானமட்டும்விட்டு கிளரி யிரக்கிவைத்துக்கொண்டு நெச்சக்காய்பிரமாணம் இருபதுநாள்சாப்பிடவும் இச்சாபத்தியம்.

லேகியவகைபரணி

முற்றிற்று.

உ

வேலுமயிலுந்துணை.

பத்தாவது

கியாழவகைபரணி.

பித்தசீதளத்திற்குகியாழம்.

வட்டத்திருப்பி, ஆமையோடு,மிளகு,நிலவேம்பு,காவட்டம்பில்லு, காடிகாரம்,கரசலாங்கண்ணி,இவைகளைசாம்பலாகவருத்துக்கொண்டு,சூரியகாந்தி,விஷ்ணுகாந்தி, நிலத்துளசி, இம்மூன்றும் பொன்வருப்பாய் வருத்து மேற்படிசாம்பலுடன் போட்டுக்கொண்டு, கருஞ்சீரகம், ஓமம்,வெடிக்கவிட்டு, சுக்கு,சன்னராஷ்டகம், சிந்தில்தண்டு, கடுக்காய்த்தோல், களிப்பாக்கு,கடுகுரோகணி, கத்தாழைசருகு, இவைகளை நருக்கிப்போட்டு படிஜலம்விட்டு கால்படியாக யிரக்கி அந்தியிலும் காலையிலும் வேளைக்கு ஆழாக்குவீதம் இரண்டுநாள் கொடுக்க நிவர்த்தியாகும்,

பித்த வாய்விற்கு கியாழம்.

வட்டத்திருப்பி,நிலவேம்பு,மிளகு, மயிலிரகு,பட்டுத்துணி, வசம்பு, இவைகளைசாம்பல்அல்லதுபஸ்பமாகவருத்துக்கொண்டு கருஞ்சீரகத்தைவெடிக்கவிட்டு சுக்குமஞ்சள் கொஞ்சம்போட்டு முக்கால் படி தண்ணீர்விட்டு ஆழாக்கு கியாழமாகயிரக்கி இருவேளைசாப்பிடவும் தீரும்,

பித்தவாய்விற்கு வேறுவித கியாழம்.

கோஷ்டம், கொத்தமல்லி, பரிங்கிச்செக்கை, வில்வவேர்,சுக்கு,சீரகம், நெல்லுப்பொரி, இவை யேழும் சமயிடை போட்டு அரைப்படிதண்ணீர்விட்டு ஆழாக்குகியாழமாகஇரக்கி இருவேளையும்பாகித்துசாப்பிடவும் இப்படிமூன்றுநாள்கொள்ளத்தீரும்

இதுவுமது.

நன்னாரிவேர், அதிமதுரம், சிந்தில்தண்டு, சந்தணத்தூள், சோம்பு, இதுகளையிடித்துகியாழம்வைத்து இருவேளையும்மூன்றுநாள்சாப்பிட சகலசுரமும்கால்பிடிப்பும்தீரும்.

சாதாரணபித்தத்திற்கு கியாழம்.

வசம்பு	பலம் -	வ
லவுங்கப்பட்டை	,,	வ
வெள்ளைப்பூண்டு	,,	வ

இம்மூன்றும் ஒன்றிரண்டாய் உடைத்து வருத்து ஆழாக்கு ஜெலம்விட்டு அரையாழாக்கு கியாழமாகயிரக்கி தேன்விட்டு ௩ வேளைகொடுக்கவும்.

பித்தவாய்வினால் கண்ட வயற்றுவலிக்கு கியாழம்.

வெட்பாலரிசி	பலம் -	௪
சீரகம்	,,	௪
செப்புநெருஞ்சிவேர்	,,	௨

இம்மூன்றுமருந்தும் சேர்த்துயிடித்து மூன்றுநாளைக்கிஇரண்டுவேளையும் கியாழம் வைத்து சாப்பிட வயற்றுநோய் தீரும்.

சிறு பிள்ளைகட்கு அபானத்தில் இரத்தங்கண்டால்கியாழம்.

வில்வயிலை, துத்தியிலை, செம்பருத்தியிலை, வெள்ளைவெங்காயம், சீரகம், இவைகள் சமமாய்போட்டு யிடித்து கியாழம்வைத்து காலையில்மாத்திரம் கொடுக்க மூன்றுவேளையில் சவுக்கியமாகும் வாய்ரெணம்கண்டவர்களுக்கு இந்தகியாழத்தை யிருவேளையாக மூன்றுநாள்கொடுக்க நாபியின்ரெணம்தணிந்து வாய்புண்ணுஆறிவிடும்.

குளிர்காச்சலில்கண்ட தாவரட்சிக்குகியாழம்.

வட்டத்திருப்பி, வசம்பு, நிலவேம்பு,நிலப்பூச்சி,மிளகு, இவை ௫-தினுசும்சட்டியில்போட்டு நீராகக்கருக்கி கருஞ்சீரகம், ஓமம் பொரியவிட்டு அரைப்படி தண்ணீர்விட்டு ஆழாக்குகியாழமாகயிரக்கிஇருவேளைகொடுக்கத்தீரும்.

ஷிகாச்சலுக்கு வேறுவித கியாழம்.

ருத்திரசடையை பிட்டிட்டுபிழிந்து அந்தரசத்தில்மிளகு,லவுங்கம்,தூளாக்கிப்போட்டுகொடுத்தால் சுரம்விட்டுப்போகும்.

வாதசுரத்திற்குக் கியாழம்.

வட்டத்திருப்பிவேர்	விஷ்ணுகாந்தி
மரமஞ்சள்	மூக்கிரட்டைவேர்
பேருமுட்டிவேர்	நொச்சியிலை
சுக்கு	கஞ்சாங்கோரை
மிளகு	துளசி
திப்பிலி	நார்த்தம்வேர்
கடுக்கா	நார்த்தம்யிலை
தாணிக்கா	நொச்சியிலை
வெள்ளைப்பூண்டு	சிறுதேக்கு

இவைவகைக்கு க-பலம்யிடித்து தாணிநீரில் போட்டு நாலுக்கொன்றாய்கியாழம்வடித்துகொடுக்கவும் பத்தியமாகயிருக்கவும்.

ஊஷ்ணவாயுவிற்கு கியாழம்.

உ௲-பலம் சிவதைவேர்கொண்டுவர்து பஞ்சிபோல்யிடித்து ஒருபடி ஜெலம்விட்டு ஆழாக்கு கியாழமாகக்காச்சிவடித்து இருவேளைகொடுக்க நிவர்த்தியாகும்.

பல்வலிக்கு கியாழம்.

நீலிமருந்துசெடியென்னும் அவுரிச்செடிசமூலம் கொண்டுவந்து நாலுக்கொன்றாய் கியாழம்வடித்து வாய்கொப்பளிக்கபல்வலிதீரும் ௬-ரு-வேளைசெய்யவும்.

கியாழவகைபாரணி

முற்றிற்று.

உ

தேவிசகாயம்.

பதினோராவது

வீரியவிர்த்திவகைபாரணி.

மதனகாமேசுரக்குளிகை.

வாலைரசம்	களஞ்சி	கூ	பூனைக்காஞ்சிவித்து	,,	உ
லிங்கம்	,,	க	பூமிசக்கரைக்கிழங்கு	,,	உ
முருங்கைவித்து பலம்		உ	நிலப்பனங்கிழங்கு	,,	உ
ஜாதிக்காய்	,,	உ	சமுத்திராசோகிவிரை	,,	உ
முத்து	,,	உ	ஜாதிப்பத்திரி	,,	உ
இரும்பு	,,	உ	சாரப்பருப்பு	,,	உ
அபினி	,,	உ	வெண்காரம்	,,	உ
கஞ்சா	,,	உ			

இவைகள்யாவும் பொடிசெய்து முத்தின தேங்காய்க்குள் அடைத்துமூடி சாணிபொதிந்து காயவைத்து சிரட்டை கருகும்படி புடம்போட்டெடுத்து சிரட்டைநீக்கி அப்படியேகல்வத்திலிட்டரைத்து, பீங்கானில் வைத்துக்கொண்டு கெச்சக்காய் பிரமாணமெடுத்து சக்கரையிற் பொதிந்து சாப்பிடவும், ரு-நாள் எநாளுண்டபிறகு போகிக்கவும், வீரியம்கெட்டிப்படும் கலிதமாகாது இதற்குமாற்று எலுமிச்சம்பழம், நித்தியம் மாலையில்இந்தகுளிகை தின்றபிறகு யிரவில் புளிசேர்க்காமல் பால்சோற்றுக்கொண்டு போசனம் செய்யவும்.

ஸ்தம்பனக்குளிகை.

குங்குமப்பூ, அபின், ஆபில்விரை, வகைக்கு ரூபாயிடை-க ஜாதிக்காய் விராகனிடை-க, இவைகளை கல்வத்திலிட்டு தேன்சிவகவிட்டு மெழுகுபோலரைத்து கடலையளவு குளிகைசெய்து மாலையில் ௬-மணிக்கு சாப்பிடவும், படுக்கையில் வெற்றிலைதின்றுபோகிக்கவும் வீரியமதிகரிக்கும்.

தாதுபுஷ்டிக்கு அதிசயக்குளிகை.

மிளகு, எள்ளு, கெஞ்சா, சரியெடையெடுத்து வெந்தயம் வேகாததுமாய்வறுத்து கல்வத்திலிட்டு தேன்விட்டுமெழுகுபோலரைத்து காட்டு இலந்தங்காய் பிரமாணம் குளிகைசெய்து மாலையில்படுக்கைக்கு நாலுமணிநேரம்முன்னதாய் ஒருகுளிகைதின்று உடனே ஆழாக்குபால் சாப்பிடவேண்டியது புளிப்பும் தண்ணீரும் கூடாது இஷ்டம்போல் போகிக்கலாம்.

வீரியகட்டுக்கு
அடைக்கலாங்குருவி.

அடைக்கலாங்குருவி-௫-கொண்டுவந்து வயிற்றைக்கீறி பிச்சிமுதலான அசுத்தமெல்லாம் எடுத்துவிட்டு துவரை பிரமாணம் அபினி, சாலாம்மிசிரி, தாலம்கான், கருவாப்பட்டை ஜாதிக்கா, சபேத்துமுசலி, சிலாமுசலி, வகைக்கு விராகனெடை-௧, இப்படி ஐந்துகுருவிக்கும் வயிற்றில்போட்டு தைத்து ௧-குருவிக்கு துலாம்நெய்யாக ௫-துலாம் நெய்விட்டு பொன்னிறமாகவறுத்து கல்வத்திலிட்டு எலும்புநீக்கி கொஞ்ச கொஞ்சமாய் தேன்விட்டு மைபோலரைத்து காலைமாலை சுண்டக்காய்வீதம் சாப்பிடவும் காலையில்காரசாரத்துடன் போசனம்செய்யலாம் மாலையில் பால்சர்தம் சாப்பிடவேண்டியது.

—(ஸ்ரீ)—

தாதுபுஷ்டிக்குபேரீச்சம்பழம்.

நீர்முள்ளிவிரை (௨௰) விராகனெடை அபினி விராகனெடை (வ) இதை பேரீச்சம்பழத்திற்கு உள்ளேவைத்து சாப்பிடவும் இப்படிகாலைமாலை (௫) நாள் (௭) நாள் சாப்பிடவும்.

தாதுபெருக்க வெங்காயஉபயோகம்.

வெள்ளைவெங்காயம் அரிந்து நெய்யில்வறுத்து சாப்பிடவும் இப்படி வேளைக்கு ஒரு வெங்காயமாக இருவேளையும் இருபது நாள் கொள்ளவும்.

ஆண்குறிபெருக்க.

ஆண்காக்கை பித்து கொண்டுவந்து கல்வத்திலரைத்து (௯) நாள் தண்டில் தடவிக்கொண்டுவர பெருத்தும் நீண்டும் இருக்கும்.

தாதுபுஷ்டிக்குலேகியம்.

திப்பிலி	இருவேலி
சித்தரத்தை	முதல்நாரசந்தனம்
அமுக்கனுக்கிழங்கு	கருஞ்சீரகம்
ஏலரிசி	கிராம்பு
கோஷ்டம்	மாசிக்காய்
சடாமாஞ்சி	மிளகு
அதிமதுரம்	ஜாதிக்காய்
தானிக்காய்	ஜாபத்திரி
கடுக்காய்	வால்மிளகு
யேலக்காய்	நற்சீரகம்
அக்கிராகாரம்	

இதுகள் வகைக்கு களஞ்சி (௧வ்) சுத்தி செய்த கெஞ்சாத்தூள்பலம்(௫)அமுக்கனுங்கிழங்கு பலம்அரை வெள்ளைகற்கண்டுபலம்அரை கடைசரக்குகள்யாவும்இடித்து வஸ்திரகாயம்செய்து வெங்கலப்பாத்திரம் அடுப்பிலேற்றி தேன்சேர்(வ) நெய்சேர்(வ) ஷை பாண்டத்திலூற்றி சீனிசக்கரை வெல்லம்வகைக்கு கால்சேர்போட்டு பாகுபோல்கிளறி பிறகு கெஞ்சா தூளை போட்டுகிளறி அதன்பிறகு மற்றசூரணத்தை கொஞ்சங்கொஞ்சமாய்தூவிக் கிளறி வழித்து கோப்பையில் வைத்துக்கொண்டு வேளைக்கு பாக்களவாக இருவேளையும் (௪௰) நாள் அல்லது (௨௰)நாள்சாப்பிடவும் இச்சாபத்தியம் பசி அதிகரிக்கும் வாதக்கட்டு வாய்வு, மேகம், உடம்புமெலிவு, உட்புண்ணு, வாந்தி, மயக்கம், இவையெல்லாம் தீர்ந்து தாதுபுஷ்டியுண்டாகும் இந்தலேகியம் சாப்பிடும்போது தேகத்தில் சிரங்குஉண்டாகும் அதற்குபயந்துநிறுத்தவேண்டாம் விடாமல்சாப்பிட்டுக்கொண்டேவந்தால்வியாதியெல்லாம் போய்விடும் விந்துஅதிகரிக்கும் இரத்தம்உபிரியாம் தேகபுஷ்டியாம்.

தாதுபுஷ்டிக்கு சூரணம்.

நிலப்பனங்கிழங்கு வேண்டியமட்டும் கொண்டுவந்து மேற்றோல்சீவி கிழங்குகளையிடித்து வஸ்திரகாயம்செய்து சமவிடை வெள்ளைசருக்கரைசேர்த்து நித்தியம் திருகடிபிரமாணம் சாப்பிட்டுவர சொரிசிரங்கு வராது தாதுபுஷ்டி யதிகரிக்கும் விந்து ஊறும்.

தாதுவிர்த்திக்கு குடிநீர்.

இரும்பை சிவக்கக்காச்சி ஜலத்தில்தோய்த்து இப்படிமூன்றுதிரம் தோய்த்துவடிக்கட்டி வைத்துக்கொண்டு அந்தஜலத்தை ஒருமண்டலம் தாகத்திற்குவேண்டும்போதெல்லாம் போஜனம் செய்யும்போதெல்லாம் அதே ஜலத்தை உபயோகப்படுத்திவந்தால் தாதுபுஷ்டி யுண்டாகும் அன்றியும் குடலிலுள்ள மாசுகளை அருக்கும் சீதளத்தைபிரிக்கும் அஜீர்ணபேதி அதிசாரபேதி கிராணி இவைகளை நீக்கும் மூலஉதிரத்தை நிறுத்தும் இந்ததண்ணீர் மொத்தமா யில்லாவிட்டாலும் அப்போதைக்கப்போது செய்துக்கொள்ளலாம்.

தாதுபுஷ்டிக்கு ஜாதிக்கா.

ஜாதிக்காயை துளைசெய்து பணவிடை அபினியை உள்ளேவைத்து பேரீச்சம்பழத்தை விரைபோக்கி ஜாதிக்காய்க்கு கவசஞ்செய்து உளுந்துமாவரைத்து அதற்குமேல் கவசஞ்செய்து மூன்றெருவில் புடமிட்டு உளுந்துமாவின்கவசம் வெந்தபிறகெடுத்து மாவின்கவசத்தைநீக்கி கல்வத்திலிட்டு தேன்விட்டரைத்து கடலைப்பிரமாணம் உண்டைசெய்து மாலையில்சாப்பிடவும் உடனே ஆழாக்குபாலில் சக்கரைபோட்டு காச்சி சாப்பிடவும் ௰-நாள்கொள்ளவும் தாதுவிர்த்தியாம் முகம்தேஜஸ்கொடுக்கும்.

இன்பமருந்து.

பொன்னம்பர் அல்லது வெள்ளியம்பர், ஒரு கெல்விடையெடுத்து நீர்தாரையில் சொருகிவைக்க யின்பம் அதிகரிக்கும், ஸ்திரீபுருஷாள் யிருவருக்கும் அதிகயின்பத்தைக்கொடுக்கும் ஷை அம்பரில்-௫-குண்டுமணியிடை மூன்றுநாள் சாப்பிட்டால் குன்மம்முதலிய வயற்றுவலிகள் தீரும்,

தாதுபுஷ்டிக்கு.

நீர்முள்ளிவிரை, சாலாம்பிசினி, கருவாப்பட்டை சமமாகவெடுத்திடித்து வஸ்திரகாயம்செய்து வைத்துக்கொண்டு கொடியாட்டின் பால் ஆழாக்கில் அரைபலந்தூள் போட்டுகாச்சி குடித்துவர கட்டுப்படாத வீரியபுஷ்டியுண்டாகும்.

தாதுபுஷ்டிக்கு குக்குடக்கருவு.

வெங்காயவிரை கால் பலம் எடுத்து கோழி முட்டையின் வெள்ளைக்கருவில்கலக்கி குடித்துவர வீரியம்அதிகரிக்கும் ஷை விரையை தேனில்கலந்துகுடித்தாலும் தாதுபுஷ்டியுண்டாகும்.

தாதுபுஷ்டிக்கு முள்ளங்கி உபயோகம்.

செம்முள்ளாங்கிவிரை ௨-பலம் ஆழாக்கு எருமைப்பாலில் போட்டு காச்சி குடித்துவர தாதுவிர்த்தியாம், விந்து அதிகரிக்கும்.

தாதுபுஷ்டிக்கு.

போரத்தை பொடி செய்து ௨-விராகனிடை பொடியை ஆழாக்கு பசும்பாலில்கரைத்து குடித்துவர தாதுவிர்த்தியாகும் நாற்பதுநாள்கொள்ளவும்.

வீரியவிர்த்திவகைபரணி

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

பனிரெண்டாவது

கண்டாவிழ்துபர்ணி.

நோய்வாராதிருக்க.

அதிமதுரச்சூரணம், சோம்புச்சூரணம் வெள்ளைச்சற்கரை வகை
,, க்கி (க) விராகனிடை, சித்திரமூலச்சூரணம்(௨)விரா
,, கனிடை, யாவுமொன்றாய்க்கலந்து இரண்டுபங்காக்
,, கி காலையில் ஒருபங்கு மாலையில் ஒருபங்கு சாப்பிட
,, வேண்டியது இதேபிரகாரம் சித்திரைமாதம் முதல்
,, தேதிமுதல் ஆடிமாதம் கடைசிவரையில் சாப்பிட்டு
,, அப்பியாசப் படுத்தினவர்களுக்கு யாதொருநோயும்
,, வராது கண்தெளிவுண்டாகும் தீராததலைவலி ஒரு
,, தலைவலி சுரம்நீக்கும் பரிசைஷபாருங்கள் இதைசா
,, ப்பிடுகிறவர்கள் வாரத்திற்கொருநாள் எருவிலிப்பிஞ்
,, சும் ரோஜாப்பூவும் சமனிடைபோட்டிடித்து பனங்
,, கற்கண்டுபோட்டு காப்பிசெய்து சாப்பிட்டு வரவே
,, ண்டியது.

நாக்குப்பூச்சியென்னும் பூநாக வுபையோகம்—நாக்குப்பூச்சியை
,, யெள்ளெண்ணெயில் காச்சிகுடிக்க நாள்பட்ட பிரும
,, லேகிவர்த்திசெய்யும்ரணங்களில்தடவஆறிப்போகும்

கண்ணோய்க்கு—சிறுமா அல்லது நீலாஞ்சனம் கஸ்தூரி முத்து
,, இவை சமமாய்சேர்த்து கலிக்கம்போல் தீட்ட கண்
,, ணோய்கள் அனைத்தும் தீரும்.

சுகபேதிக்குளிகை—சுத்திசெய்தவாளத்துடன் ரோஜாப்பூவுலர்
,, ந்த நெல்லிக்காயின் மேற்றோல் சமனிடை சேர்த்
,, து பழச்சார்விட்டு (௩) நாள் அரைத்துகடலைப்
,, பிரமாணம் மாத்திரைசெய்து பெருஞ்சீரகக்கியா
,, ழத்தில் கொடுக்க வருத்தமில்லாமல் சுகுணமாக
,, பேதியாகும்.

கட்டிகளுக்கு—உடையாத கட்டிகளுக்கு நீலமருந்தை அரைத்
,, துப்பூச வுடையும் இடைவிடாது (௪-கு)வேளை
,, பூசவும்.

பருக்களுக்கு—துத்தியிலையை அரைத்து பருக்களின்மேல் தட
,, வவும் அல்லது நொச்சி யிலையை அரைத்து காடி
,, வார்த்து கிளரிக்கட்டினாலும் கரையும்.

பருக்கள்உடைய — கிராட்சப்பழம் ஆட்டுக்கொழுப்பு சமமாக
,, சேர்த்தரைத்து பருக்கள்மேல்தடவ உடையும்.

கட்டிகள்உடைய—சவுக்காரத்தையும் புறாவின் மலமும் சேர்த்
,, தரைத்து பருக்கள் கட்டிகள்மேல் தடவ உடை
,, யும்,

வெண்குட்டசாந்தி — வெள்ளைப் பூண்டை நவாச்சாரத்துடன்
,, அரைத்து வெண்குட்டத்தின்மேல் தடவிவர
,, வெண்மைமாறும்.

சிரங்கிற்கு—சீரிடிமுத்தின் பருப்பை தயிரில் ஊரவைத்து எலு
,, மிச்சம் பழச்சார் அல்லது காடிவார்த் தரைத்து
,, உடம்பில் பூசிக்கொண்டு உலர்ந்தபிறகு சாணம்
,, தேய்த்து குளிக்க சொறி சிரங்கு முதலியதும்
,, தீரும்.

ரிணங்களுக்குநாயுருவி—நாயுருவி சமூலங் கொண்டுவந்திடித்து
,, சாற்பிழிந்து யீயவெள்ளையைக் கலந்து ரெணங்க
,, ளின்மேல் தடவிவர புண்கள் ரிணங்கள் ஆறிவி
,, டும்.

தெய்வமோதிரம்—சூரியன் சந்திரன் சுக்கிரன் மூவரும் ஒரேரா
,, சியில் சேர்ந்திருக்கும்போது பொன்வெள்ளிசம
,, மாய் சேர்த்து மோதிரம்செய்து அதில் பவழம்
,, பொதித்ததாகச் செய்து வலதுகை விரலிலணிந்
,, தவர் யாவராலும் பூசிக்கப்படுவாரென்றும் சகல
,, வித பொல்லாங்கினின்றும் நீங்குவாரென்றும்ப
,, ரிட்சையுள்ள அனேகயூனானி பண்டிதர்களும் சி
,, லநூல்களும் சொல்லி யிருக்கின்றதை யிங்ஙனம்
,, சுருக்கமாய் யெழுதினோம்,

பயம்நீங்க—(ஏ) அல்லது (கூ) பாழுத்தை குழந்தைக ளிடுப்பிற்க
,, ட்ட நித்திரையில் மருண்டு அழுவதை நீங்கிபரி
,, பூரண நித்திரை செய்யுமென்பது யூனானி ஆயு
,, ள்வேதம் சொல்லுகின்றது.

தொண்டைவலிக்கி—கோழிமுட்டை வெள்ளைக்கருவுடன் நவா
,, ச்சாரம் சேர்த்துகுழைத்துப்பூச தொண்டைவலி
,, யல்லது நோய்தீரும்.

நவாச்சாரஉபயோகம்— நவாச்சாரத்தை தேனில் உரைத்துப்பூச
,, மயிர் உதிர்வதை நிறுத்தும்.

இரண்டாவதுபயோகம்—நவாச்சாரத்தை முலைப்பாலில் உரை
,, த்து கண்களில்பூச கண்மாசுகளையருக்கும்,

மூன்றாவதுபயோகம்—வீடுமுதலிய மனுஷாள் சஞ்சாரம் செய்
,, யுமிடங்களில் விஷப்பூச்சிகள் இருக்க அல்லது,

,, வந்து நுழையவாகிலும் கண்டால் அந்தயிடத்
,, தில் கட்டைநெருப்பில் நவாச்சாரத்தை போட்டு
,, புகைகொடுத்தால் பயிரங்கப்படும் ஒருவித மூர்
,, ச்சையாயும் கிடக்கும்

—»(*)«—

பல்வலிக்கி—நன்னாரிவேர் கியாழத்தில் காடிகொஞ்சம் விட்டு
,, வாய் கொப்பளித்துவர பல்வலி சுவஸ்தப்படும்.

—»(*)«—

கீல்வாதசாந்தி—நன்னாரிவேர் சூரணத்தோடு சமபாகம் வெள்
,, ளை சருக்கரை சேர்த்து வேளைக்கு ஒரு விராக
,, னிடையாக இருவேளையும் யேழுநாள் சாப்பிட
,, கீல்வாதம் ரொம்பவும் சவுக்கியப்படும் பரிங்கி
,, செக்கைக்கு உள்ளகுண மெல்லாம் நன்னாரிவே
,, ர்க்கும் உண்டென்று அறிவீராக.

—»(*)«—

சர்பத்து– ஒருபலம் நன்னாரிவேருக்கு நாலுபலம் தண்ணி
,, விட்டு நாலில் ஒன்றாய் காச்சி யிறுத்து அதற்கு
,, சமபாகம் சர்க்கரைசேர்த்து சர்பத்து போல்காச்
,, சி குடிக்க பழமையான யிருமல் மூச்சடைப்புபா
,, ரிசவாய்வு சாந்தியாம்.

—»(*)«—

ஆராதபுண்ணுக்கு—ஒரு நத்தையை பிடித்து வந்து கம்பியில்
,, கோர்த்து விளக்கில் காட்ட தைலமிறங்கும் அ
,, தை பீங்கானில் பிடித்துக்கொண்டு அதில் கரிய
,, போளம் வாலேந்திர போளம் சமம்சேர்த்து அ
,, ரைத்து ஆராத மேகப்புண்கள் பருக்கள் மேல்
,, பூச சீக்கிரத்திலாறும்.

—»(*)«—

படைகளுக்கு—நத்தையைசுட்ட சாம்பலை தேனில் கலந்து
,, படைகளின் ஓரத்தில்வரும் புண்ணின் மேல் பூச
,, சொஸ்தமாகும்.

வாந்திக்கு—மரக்காளான் காயின் சதை இரண்டு விராகனி
,, டை யெடுத்து யிராத்திரிக்கு வென்னீரிலூரவை
,, த்து காலையில் தெளிவாக யிருத்து சாப்பிட வாந்
,, தியாகும் பித்தநீர் வெளிப்படும்.

—※(*※—

நீர்உடைய—வெள்ளைசார்வேளை யிலையின்சார் (௬) விராகனி
,, டை, பசும்பால் (௰௨) ரூபாயிடை கலந்து குடி
,, க்க கட்டுபட்ட நீரை உடனே உடைக்கும்.

—※*※—

காயகற்பமூலிகை—முத்தின வெள்ளைசாருவேளை வேரில் முத
,, ல்நாள் குண்டுமணிப் பிரமாணம் சாப்பிடவும்
,, இரண்டுநாள் (௨) குண்டுமணி இப்படியே நா
,, ளுக்குநாள் ஒவ்வொன் றதிகப்படுத்தி நாற்பதா
,, வதுநாள் நாற்பது குண்டுமணி பிரமாணம் சாப்
,, பிடவும் (௪௧) நாள் துடங்கி வொவ்வொரு குண்
,, டு மணி குறைத்துக் கொண்டே நாற்பதாவது
,, நாள் (௧) குண்டுமணியில் நிருத்தவும் இப்படி
,, செய்தவர்களுக்கு ஒருவிதத்திலும் தீராத வாத
,, ரோகங்கள் சுரங்கள் யெரிக்காச்சல் பிணிசங்களு
,, ம் தீரும் இது கிடையாவிட்டால் காட்டுசாறு
,, வேளையும் உபயோகப் படுத்தலாம்.

—※(*)※—

காதுவலிக்கிசாம்ராணி—சாம்ராணியை பொடித்து யெள்ளெண்
,, ணையில் போட்டுக் காச்சி காதில் நாலைந்து துளி
,, விட (௩) வேளையில் காதுவலி நீங்கும்.

—※(*)※—

முள்வெளிப்பட—ஆற்றுநண்டு அல்லது வயல்நண்டு பிடித்து
,, யிடித்து முள்ளதைத்தயிடத்தில் வைத்துக்கட்ட மு
,, ள் வெளிப்படும்.

—※*)※—

முலைசிலந்திக்கு— ஷை ஆற்றுநண்டை பிடித்திடித்து அல்லது
,, அரைத்து முலையின்மேல் வைத்துக்கட்ட முலை
,, சிலந்தி ரணம் ஆறும்.

குதிக்கால்அல்லதுஆசனவெடிப்புக்கு—ஷை ஆற்றுநண்டை யி
,, டித்து பில்லை தட்டி சுட்டசாம்பலை குதிக்கால்
,, ஆசன வெடிப்பின்மேல் தேனுடன்கலந்து பூச
,, ஆறும்,

பெரும்பாட்டுக்கு—இரும்பை செவக்கக்காச்சி பசும்மோரில் தோ
,, ய்த்து அந்த மோரை சாதத்திற்கு வேண்டிய
,, பேர்தெல்லாம் தாகத்திற்கும் குடித்துவர பெரு
,, ம்பாடு சகலகழிச்சல் பேதியும் கட்டும் சூட்டு
,, உடம்பிற்கு ஆகாது இரச்சி நெய் சேர்த்துக்
,, கொள்ளவும்.

படைகட்கு—நண்டுக்கல்லை யரைத்து படைகளின்மேல் பூச
,, நமச்சல் சொரி விலகும் ஷை கல்லை யரைத்து
,, பொன்வெள்ளி சாமான்களை விளக்க அதிகசோ
,, தியுண்டாம்,

மூலரெத்தம்நீங்க—ஒருபிடி துத்தியிலையை சுத்த ஜெலத்தில்
,, போட்டு ஒருயிராத்திரி ஊரவைத்து காலையில்
,, பிசைந்து யிருத்துக் கொண்டு அத்துடன் சம
,, பாகம் பசும்பால் விட்டு குலுக்கிசாப்பிடவும் இப்
,, படி (௩) நாள் (௫) நாள் அல்லது (௭) நாள் சா
,, ப்பிடவும் கடைசிநாளில் சக்கரைசேர்த்து சாப்பி
,, டவும் மூலவுதிரம் நீங்கிவிடும்

மேகத்திமிர்வியாதிக்கு—துத்திச்செடியின்கிளை அல்லது காம்பு
,, களை கத்தையாகக் கட்டிக்கொண்டு வேண்டியம
,, ட்டும் பசும்பால் அடுப்பேற்றி தியெரித்து ஷை
,, துத்திக்காம்புகளால் துழாவிக் கொண்டே யிருந்
,, தால் சுண்டிவரும் அதன்பிறகுயிரக்கி ஒரு யிரா
,, த்திரி முழுதும் அசையாமல் ஆரவைத்து காலை
,, யில் பார்க்க உரைந்து சக்கரைபோலாகும் அதி
,, ல் நாலுக்கொருபங்கு யேலரிசிபொடித்து சேர்
,, த்து வைத்துக்கொண்டு அந்திசந்தியாக இருகடி

,, பிரமாணம் நாற்பதுநாள் சாப்பிட்டுவர திமிர்,
,, சோம்பல், மேகஊரல், மேகவியாதிகள், யாவும்
,, நீங்கும் இச்சாபத்திய மிருக்கவும்.

ரிணங்கள் ஆற — துரிசியை பொடித்து தேங்காயெண்ணெயில்
,, விட்டு கல்வத்திலிட்டு அரைத்து ரிணங்களில்
,, தடவிவர ஆரிப்போகும் பேன்கொட்டை ஏலரி
,, சியும் கொஞ்சம்சேர்க்கலாம்.

நீரொழுக்கிற்கு — இலிதாட்பிறந்துடன் மிளகும்சமமாய்சேர்த்
,, தரைத்து சாப்பிட கல்லடைப்பு நீரொழுக்கு
,, நீங்கும்.

வாய்வேக்காட்டிற்கு — அதிமதுரமிலில் இருநீற்றுபச்சிலைவாய்கொ
,, ண்டமட்டும் மென்றுதின்ன நீங்கும் (ங-எ) நாள்
,, தின்னநீங்கும்.

சயித்தியத்திற்கு — அரிசித்திப்பிலியை பொடிசெய்து பச்சைவெ
,, த்திலைசாறும் தேனும் சமமாய்சேர்த்து குழை
,, த்தை களுக்கு கொடுக்க சயித்தியம், கோழை,
,, சுரம், முதலியதும் தீரும்.

சாதாரணபிறமலுக்கு — ஆனைத்திப்பிலியை பொடிசெய்து தே
,, னில்குழைத்து சாப்பிட பிறமல் யிளைப்பைபோ
,, க்கும் அஜீரணத்தை மாற்றும் வயற்று உப்பி
,, ஷத்தை நீக்கும்.

வாய்வேக்காட்டிற்கு — தாணிக்காயை சுட்டு சூரணம் செய்து
,, சமஎடை சக்கரைசேர்த்து நிதம் ஒரு விராகனெ
,, டையாக வென்னீரில் சாப்பிட்டுவர வாயில் அதி
,, கநீர் ஒழுக்கல் கட்டுப்படும், கண்கள்குளிரும்.

பல்வலிக்கு — தாளிசப்பத்திரியை பொடிசெய்து பல்லில்தே
,, ய்க்க வலிதீரும் பிருபலப்படும்.

சர்பத்து — தாழம்பூவின் வேர் கியாழமிட்டு அதில்சக்கரை
,, சேர்த்து சர்பத்துபோல்காச்சி சாப்பிட்டுவந்தால்
,, சொரிசிரங்கு தினவு படைகள் மாறும் தேக வலி
,, வுதரும்.

—※—

சொரிசிரங்கிற்கு, அரைப்படி நல்லெண்ணெயில் செந்தாழைப்பூ
,, வின் மிகழ்களைப்போட்டு பூமிபுடமாக யிருபது
,, நாள் புதைத்துவைத்து பிரகெடுத்துதேகத்திற்பூ
,, சிவரமேகரிணங்கள், சொரிசிரங்கு, தினவு, படை
,, கள்தீரும் தேகம்சுத்தியாம் அவயவங்களுக்குவலி
,, வுதரும்.

—※—

அம்மைகாணாதிருக்க — மேற்கூறியபடி பூமிப்புடம் வைத்தெடுத்
,, த தாழம்பூஎண்ணெயை அம்மைகாணாத பிள்ளை
,, கட்குமாதம் ஒன்றுக்கு ங-அல்லது ரு-நாள் வீதமாக
,, அந்தந்தமாதம் முதலில் கொடுத்துக்கொண்டு வ
,, ரில் ஒருகால் அம்மையுங்காணாது அப்படி அம்மை
,, வந்தாலும் அ-து கொப்பளத்திற்கு அதிகமாய் கா
,, ணமாட்டாது.

—※—

ரிணங்களாற — ரிணங்கள் அல்லது புண்ணுகளை சிக்காய் தேய்த்
,, துகழுவிவிட்டு தாழம்பூ சுட்ட சாம்பலை போட்டு
,, அப்பிக்கொண்டுவந்தால் ஆரிவிடும்.

—※—

பெண்கட்கு வெள்ளைகண்டால் — மணத்தக்காளி, தக்காளி, இர
,, ண்டும் சமமாய் இலையுங்காயுமாகப் பரித்துவந்து
,, கியாழமிட்டு உள்ளுக்குசாப்பிட்டு ஒண்ணுக்குப்
,, போகும்போதெல்லாம் யோனியிற் படும்படியாக
,, தாராளமாய் இந்தகியாழத்தால் அலம்பிக்கொண்
,, டுவர நீங்கும் உள்ளுக்குயிருவேளையும் சாப்பிட
,, வேண்டியது.

—※—

தக்காளிகியாழம் — தக்காளி அல்லதுமணத்தக்காளியையிலையுங்
,, காயுமாகபரித்து கியாழமிட்டுவாய்கொப்பளித்து

,, வர பல்லுநோய், உண்ணாக்கு வளர்ச்சி, தொண்
,, டைநோய், யிரல், வீக்கம் இவைதீரும்.

—(✤)—

சோம்புசூரணம்—சோம்பு யென்னும் பெருஞ்சீரகத்தை யிடித்
,, து சூரணஞ்செய்து அதற்குசமன் சற்கரைசேர்த்
,, துகலந்து புட்டியில்வைத்துக்கொண்டு சித்திரை
,, மாதம்.முதற்றேதிமுதல்நிதம்.உ விராகனிடையா
,, க ஜூனிமீ கடைசிவரையில் சாப்பிட்டு வருவோ
,, ருக்கு அந்தவருடம் முழுமையும் யாதொருவியா
,, தியுமுண்டாகாது.

—(✤)—

பேன்சாக—படிகாரத்தை பொடித்து மைபோல் வஸ்திரகாயஞ்
,, செய்து தண்ணீரில் கரைத்து தலையில்தேய்த்து
,, ஒருஜாமம்சென்று ஸ்நானஞ்செய்ய பேன் யீர்மு
,, தலானதுஞ்சாகும்.

—≫(*)≪—

பல்நோய்க்கு—படிகாரமும் கொட்டைப்பாக்கும் சமமாய் கொ
,, ண்டுவெட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து பல்லில்
,, தேய்த்துவரபல்வலிதீரும்.

—≫*)≪—

நீராதவெள்ளைக்கு—படிகாரத்தைபொரித்துபொடித்துஅதற்கு
,, சமன் கற்கண்டும் உலர்ந்த நெல்லிக்காயின் மேற்
,, றோலும்பொடித்து வஸ்திரகாயஞ் செய்து கலந்
,, துவைத்துக்கொண்டு வேளைக்கு யிரண்டு விராக
,, னிடையாக நாளொன்றிற்கு மூன்றுவேளையும் பசு
,, வின்மோரில்கரைத்துசாப்பிடவும் இப்படி எ-நா
,, ட்கொள்ள நீராதவெள்ளைநீர்கடுப்பு இவைதீரும்
,, இச்சாபத்தியம் ஒருசமயம் இரும்பல் காணுமாகி
,, ல்பசும்பால்கறந்தவுடன் துறையோடுசாப்பிடவும்.

———

மயிர்கருக்க—சூரத்துநிலாவிரையை பச்சையாகக்கொண்டுவந்து
,, அத்துடன் மருதோன்றியிலை சமனுக சேர்த்து
,, பூசிவர மயிர்கறுத்துவரும்.

நினவுசிரங்கிற்கு—சூரத்துநிலாவிரை கியாழத்தில் காடிசேர்த்து
,, உடம்பில்தேய்த்து உ-மணிநேரம் சென்று குளி
,, த்துவர சொரி, சிரங்கு,தினவு படைமுதலியதும்
,, நீங்கும்.

———

பிரசவவேதனைக்கு—ஐவ்வாது அரைவிராகனிடையுங்குங்குமப்பூ
,, கால் விராக னிடையுஞ் சேவல் குப்பில் கலந்து
,, கொடுக்க பிள்ளையுதிக்காமல் உபத்திரவப்படுகிற
,, வர்கட்கு உடனே பிண்டம்வெளிப்படும்.

———

கருந்தேமலுக்கு—மருதோன்றி யிலையுடன் சவுக்காரம்சேர்த்து
,, அரைத்துப்பூசிவர கருந்தேமல் படைகள் நரம்பி
,, ழுப்பு கால்நோய் இதுகள்தீரும்.

———

பிள்ளைகள்தலைசிரங்கிற்கு—சவுக்காரத்தை ரோஜாப்பு எண்ணெ
,, யில்குழைத்து பிள்ளைகள்தலையில்பூசிவர சிரங்கு
,, கள் ஆறும்.

———

வயிற்றில்மரித்தபிண்டம்வெளிப்பட—சரக்கொன்றைகாயின் மே
,, லோட்டை பொடிசெய்து அத்துடன் குங்குமப்
,, பூவும் சற்கரையுஞ் சேர்த்து பன்னீர்விட்டரைத்
,, து உருண்டைசெய்து பிள்ளையுதிக்காமல் வருத்
,, தப்படுகிறவர்க்கும் அல்லது வயிற்றில்தானே மரி
,, த்தவர்களுக்குங்கொடுக்க உடனே வெளிப்படும்.

———

கெர்ப்பமில்லாதவற்கு—சதகுப்பை, கருஞ்சீரகம் மரமஞ்சள் இ
,, வைகள் சமனுகச்சேர்த்து சூரணஞ்செய்து அத்
,, ற்குசரிபாகம் புட்டிவெல்லஞ் சேர்த்து பிசைந்து
,, கொட்டைப்பாக்குபிரமாணம் காலைமாலை யிரண்
,, டு வேளையும்சாப்பிட்டுவீரில் உதிரச்சிக்கலை யறுக்
,, கும் கருப்பக்குழியை சுத்திபடுத்தி கரு தங்கும்ப
,, டிச்செய்யும் கூட்டுடம்பிற்கு புளிப்பு மாதுளம்ப
,, ழம்சாப்பிட்டுக்கொண்டுவரில் மிகவும் நலம்.

குட்டிஞல்வந்ததலைவலிக்கி — கொத்தமல்லிவிரையையும் சந்தன
,, மும் அரைத்துப்பூச தலைவலிநீங்கும்.

பல்லுநோய்க்குஅற்புதமருந்து — சித்திரமூலத்தையரைத்து வ
,, லது உள்ளங்காலில் தடவ யிடதுபக்கம் பல்வலி
,, தீரும் இடதுள்ளங்காலில்தடவ வலதுபக்கம் பல்
,, வலி தீரும் இதைபடைகளின் மேல்தடவ மாறிப்
,, போகும் இதை கோழிமுட்டைமேல் தடவி ஒரு
,, நாள் வைக்கமேல்தோல் சிவந்திரமாய்விடும்.

வெளுத்தமயிர்கருக்க — கொட்டைக்கரந்தை செடியானது பூவெ
,, டுப்பதற்குமுன் சமூலமும் பிடுங்கிவந்து இதற்கு
,, சமயிடை கையாந்தகரைசமூலம் சேர்த்து நிழலி
,, லுலர்த்திச்சூரணம் செய்து தேன் அல்லது நெய்
,, யிற் கலந்து ஒரு மண்டலம் சாப்பிட்டுவர வெளு
,, த்த மயிர்கருத்துப்போகும் சிவகரந்தைக்கு இதி
,, லுமதிககுணமுண்டு யென்பார்கள்.

ஒருதலைவலிக்கி — குங்குமப்பூ அபினி விளாம்பிசினி பனைவெல்
,, லம் இதுகள் வகைக்கிவிராகனிடை கூகிருத்தெடு
,, த்து கல்வத்திலிட்டரைத்து காயிதத்திற்றடவ க
,, ன்னப்பொரி யாகிய உயர்ந்து வலியெடுக்கும் நர
,, ம்பின் மேலொட்டிவர இரண்டொரு வேளையில்
,, தீரும்.

இரண்டாங் காண்டம்.

முற்றிற்று.

—❖—

இனி மூன்றாம் பாகம்.

உ

தேவிசகாயம்.

விளம்பரம்

இதனால் சகலருக்கும் அறிவிப்பது சென்னை பெரம்பூர் போலீஸ்டைச்சார்ந்த பெருமாள்பேட்டை வல்லம்பங்காருசெட்டிவீதி, 3 - வது, நெ, வீட்டில் ஸ்தாபித்திருக்கும் சுந்தரவிலாச அச்சுக்கூடத்தில் தமிழில் தேவையான புத்தகங்களும் அவிழ்தங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

அனுபோகவயித்திய பிரம்மரகசியம் 8 - காண்டங்களில், ஆறுகாண்டம் தயாராயிருக்கிறது. மற்றஇரண்டுகாண்டமும் விளம்பிஷு கார்த்திகைமீ 30உ அச்சிட்டு முடிவாகும்.

தனித்தனிவாங்குவோர்க்கு காண்டம் 1-க்கு விலை	0	8	0
௸ 4-காண்டமும் ஒரேகட்டடம்வேண்டியவர்	1	8	0
௸ ஆறுகாண்டமும் ஒரேகட்டடம் ,,	2	4	0
௸ எட்டுகாண்டமும் ஒரேகட்டடம் ,,	3	0	0
கோயில்லாவாழ்வு என்னும்புத்தகம் 1-க்கு விலை	0	12	0
பதினெண்சித்தர் ஞானக்கோவை விலை	0	8	0
மேற்படி இரண்டாம்பாகம் ,,	0	8	0
இரண்டுபாகமும் ஒரேகட்டடம் கலிகோபயிண்டு	1	0	0

ஜாதகங்கணிக்கும்விபரமும், ஜாதகனுக்கு பலாபலன்களும், பெண்கள்ஜாதகமும், எளிதிலறியும்படி அச்சிட்டிருக்கிற

அனுபோகஜாதகரகசியம் கிளேஸ்கடிதம் 0 12 0

அஷ்டதிக்கின் ஆருடம், பஞ்சபக்ஷி ஆருடம், ஆஞ்சனேயர் ஆருடம், ஜெயமுனிவராருடம், வால்மீகர் ஆருடம், ஆக ஐந்தாருடமும் அடங்கிய,

அஷ்டதிக்காருடம் கிளேஸ்கடிதம்விலை அணா 12

இதுகட்கு. வி. பி, போஸ்ட்சார்ஜி பிரத்தியேகம்.

☞ அநேகமான தமிழ்புத்தகங்களும், மருந்துவகைகளுமுண்டு விபரம்வேணுமானால், ½-அணாலேபில் அனுப்பி தங்கள் அட்ரஸ்ஸமுறியனுப்பினால் 5-கேட்லாக்புத்தகமனுப்பப்படும்.

இப்படிக்கு,

☞ பூ. க. குப்புசாமிமுதலியார்.

உ

தேவிசகாயம்.

ரிஜிஸ்தர் அறிவிப்பு.

அடங்காப் பிரதாபம்பொருந்திய இந்த அனுபோகவயித்திய பிரம்ம ரகசியமென்னும் புத்தகமானது ஸ்ரீமான். ஜெ கோஷாயி சுவாமிகளது, கிருபையால் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, காண்டங்களில் தற்காலம் அச்சிட்டு முடிவு பெற்ற ஆறுகாண்டத்திற்கும், உடையோருகிய சுந்தரவிலாச அச்சுக்கூடத் தலைவராகிய, பூ. சு. குப்புசாமிமுதலியார் அனுமதியின்றி யாவரும் எவ்விதத்தும் அச்சிடாவண்ணம் கனம்பொருந்திய கெவர்மெண்டு சட்டப்படி (Registered Copy Right) ரிஜஸ்தர் காபிரயிட் செய்யப்பட்டிருக்கிறது.

இப்படிக்கு,

பூ. சு. குப்புசாமிமுதலியார்.

உ

தேவிசகாயம்.

அவுஷதங்களின் அட்டவணை.

அவுஷதங்கள்.	பக்கம்.	அவுஷதங்கள்.	பக்கம்.
நான்முகம்	1	தைலாப்யந்சனகுளம்	22
ஆயுர்வேதஉற்பத்தி	3	வைத்தியர்லக்ஷணம்	23
சாஸ்திரங்கள்	0	துஷ்டவயித்தியலக்ஷணம்	0
புராணங்கள்	0	கூட்டிடவருபவனபரிட்சை	24
கலிக்கியானங்கள்-கூசா	0	அசுபசகுனங்கள்	0
யுகங்கள்-சா	4	சுபசகுனங்கள்	25
ஸலலியம் ஸஸ்திரிகம்	5	சரீரலட்சணம்	0
ஊர்த்துவாங்க சாலக்கியம்	0	தேகதத்துவசாஸ்திரசங்கிரக	0
காயசிகிச்சை	0	இரத்தவிஷயவிவரணம்	26
பூதவயித்தியம்	0	ஜடராக்கினிவிசாரம்	27
கௌமாரபிரத்யம்	0	வாதாதிபேதவிவரணம்	28
அகத்திரம்	0	வாதத்தின்தொழில்	31
ரசாயனதந்திரம்	0	பித்தத்தின்தொழில்	32
வசீகரணதந்திரம்	0	சிலேஷ்மத்தின்தொழில்	0
ரோகங்களைப்பற்றியவிபரம்	10	நாடிபார்க்கும்விதி	0
வயித்தியபரிபாஷை	13	ஸ்திரீபுருஷநாடிபேதம்	33
எரிப்புதிட்டம்	15	ஜீவசாட்சிநாடிகதனம்	0
புடதிட்டம்	0	நாடிசின்னம்	0
லங்கணம்	0	அஷ்டநாதஸ்தானங்கள்	34
வயித்தியர்கவனிக்கவேண்டிய	0	ஸ்வஸ்தநாடிலட்சணம்	35
லேபனவிதி	17	தோஷநாடி	0
கல்கம்சுரசவிதி	0	ஸ்பரிட்சலட்சணம்	36
சூரணவிதி	18	ரூபலட்சணம்	0
மருந்து அருந்துங்காலம்	0	சத்தலட்சணம்	0
மாத்திரைவிதி	19	ரோகோற்பத்தி	0
ஔஷதம்கூட்டுமுறை	20	சுரரோகஸ்வரூபம்	37
பஸ்பவிதி	0	இஜ்வராதிபேதங்கள்	0
கல்வங்களின்லக்ஷணம்	21	முறைக்காச்சலின்லட்சணம்	38
பத்தியபிரம்சை	0	சீதசுரலட்சணம்	39
சிகிச்சைபேதங்கள்	0	பாசுபதாஸ்திரசம்	0
கோயன்றியிருக்க	22	மஹாபாசுபதாஸ்திரசம்	0

அவுஷதங்கள்.	பக்கம்.	அவுஷதங்கள்.	பக்கம்
துவாஹிகசுரலட்சணம்	40	அபிகாதசுரம்	57
திரிராத்திரிசுரம்	0	விஷச்சுரம்	0
பிரதாபமார்த்தாண்டரசம்	0	காலாக்கிருத்திரபைரவரசம்	59
சுராங்குசம்	41	சுக்கிலகதசுரம்	0
விஸ்வாமித்திரசுராங்குசம்	0	சுரசிகிச்சை	60
நந்திதேவர்சுராங்குசம்	42	சங்கமதோஷச்சுரம்	61
4-நாளுக்கொருமுறைசுரம்	43	வாந்திசுரம்	0
மஹாதக்கினிகுமாரரசம்	0	ஷை சிகிச்சை	0
முறைக்காய்ச்சலுக்குநசியம்	44	வாந்திசுரத்திற்குஅக்கினி குமாரரசம்	62
அம்மைசுரலட்சணம்	0	காமாலைசுரம்	0
அசாத்தியஅம்மைசுரலட்ச	45	தருணசுரபிரமாணம்	0
ஷை சிகிச்சை	0	அசாத்தியசுரலட்சணம்	0
அம்மைசுரங்களுக்கு	0	சுரத்தின்தசாவஸ்தைகள்	63
புழுக்களாலுண்டாகுஞ்சுர	47	சுரத்தின்பிரமாணம்	0
கிருமிரோகபத்தியங்கள்	48	பழயசுரங்களுக்கு மாலினீவசந்தரசம்	64
கிருமிரோகிகட்குஆகாதது	0	ரசகல்பங்கள்	0
பூச்சிக்கடியாலுண்டான சுரலட்சணம்	0	கபரிசுத்தி	65
சீடமார்த்தனரசம்	49	ஜ்வரமுராரி	0
சுராதிலட்சணம்	0	இச்வரஹரி	0
கனகசுந்தரரசம்	0	சகலசுராதிஹாரகுளிகை	66
ரக்தாதிசாரலட்சணம்	50	ச்வரவைரிகுளிகை	0
தோஷாதிசாரம்	0	ச்வரகஜகேசரி	67
சுரம்விட்டதற்குலட்சணம்	51	நாரசிம்மரசம்	0
சுரம்வருங்காரணம்	0	சகலசுரங்கட்கு சண்டேஸ்வரரசம்	0
சுரத்தின்முன்ரூபம்	52	ஸ்ரீஜயமங்களரசம்	68
வாதசுரம்	0	சகலசுரங்களை அரிக்குங்கஷா	0
பித்தசுரம்	53	வாதசுரத்திற்குகஷாயம்	69
சிலேஷ்மசுரம்	0	பித்தசுரத்திற்கு திராக்ஷாதிகஷாயம்	0
வாதபித்தசுரம்	54	சிலேஷ்மசுரத்திற்கு பிப்பல்யாதிகஷாயம்	0
வாதசிலேஷ்மசுரம்	0	வாதசிலேஷ்ம சுரத்திற்கு முஸ்தாதிகஷாயம்	0
சிலேஷ்மபித்தசுரம்	55	வாதபித்தசுரத்திற்குகஷாயம்	0
தொந்தசுரலட்சணம்	0		
சந்நிபாதசுரம்	0		
தாகசுரம்	56		
அசிரணசுரம்	0		
பூதசுரம்	57		

அவுஷதங்கள்.	பக்கம்.	அவுஷதங்கள்.	பக்கம்.
பித்தசிலேஷ்மசுரத்திற்கு கண்டகாரியாதிகஷாயம்	70	முறைக்காய்ச்சல்களுக்கு நிம்பாதிசூரணம்	74
சன்னிபாதத்திற்கு பூநிம்பாதிகஷாயம்	0	சகலசுரங்களுக்கு சுதரிசனசூரணம்	0
ஆகந்துகசுரத்திற்கு வியாக்கிருதிகஷாயம்	0	சகலசுரங்களுக்கு ஆமலக்யாதிசூரணம்	75
விஷசுரத்திற்கு முஸ்தாதிகஷாயம்	71	விஷசுரங்களுக்கு ஹரீதக்யாதிசூரணம்	0
ஆபிகசுரங்களுக்கு நாகராதிகஷாயம்	0	சீதசுரத்திற்குகிராதாதிசூர	0
திரிதியகசுரகஷாயம்	0	மேகசுரத்திற்கு அசுவகந்திரசாயனம்	76
சகலசுரத்திற்கும் சுகபேதிகஷாயம்	0	அந்தர்கதகாய்ச்சலுக்கு அஸ்வகந்திலேகியம்	0
சாதுர்திகசுரகஷாயம்	0	சுரங்களுக்குவாய்விளங் காதிசூரணம்	77
அதிசாரசுரத்திற்கு கஷாயங்கள்	72	சகலசுரங்களுக்கு பிப்பிலிரசாயனம்	0
ஆமாதிசாரத்திற்கு தான்யாதிகஷாயம்	0	சுரபாண்டுரோகத்திற்கு தாளீசாதிவடகம்	78
சுராதிசாரங்களுக்கு நாகராதிகஷாயம்	0	அசீரணத்திற்கு ஹரித்ராவடகம்	79
இரக்தாதிசாரசுரத்திற்குகஷா	0	சுரங்களுக்குஅரக்குதைலம்	0
சோமாதிசாரத்திற்குகஷாயம்	0	விஷசுரங்களுக்கு சஹதேவிகிருதம்	80
பழயசுரங்களுக்கு மகாலவங்காதிசூரணம்	73	விஷசுரங்களுக்கு க்ஷீரஷட்பலகிருதம்	0
பழயசுரங்களுக்கும் க்ஷயகாசங்களுக்கும் ஏலாதிசூரணம்	0		

அவுஷதங்களின் அட்டவணை

முற்றிற்று.

உ

தேவிசகாயம்.

சிவகிரி அங்கமுத்துசுவாமிநாயகர்

அநுபவமாயிருந்த

நிர்மாண நாடி.

கனமாக வேமுன் நூனாடிப்புமா னெழுந்திடில் ஜன்னியாம்
தானசைந்து குதித்தஅம்புபோல் தானடந்திடில் ஜன்னியாம்
ஊனமானமையும் ரெண்டுவாதம் தொடர்ந்திடில் ஜன்னியாம்
உற்றவாதத்தை ஐயந்தொடர மேவிடாதிடில் ஜன்னியாம்
மீனபற்பாம் நீரில்வண்டிபோல் மிரிகந்திடில் ஜன்னியாம்
மிக்கவேதெரித் தோடிடல்பித்த மிக்கவெரித்திடில்ஜன்னியாம்
போனமாய்கை மாதுதம்மை புணர்ச்சிசெய்வது போலவே
பித்தவாதத்தை யையந்தொடர பேசியாடிடில் மரணமே.

இனவெண்பா.

உத்தமத்திலுத்தமமாம் உதையகதிர்வெள்ளி
மத்திபமாம்திங்கள்புதன் வன்குருவே—சத்துருவாம்
செவ்வாய்சனிமரணம் செப்பிறோயித்தினத்தில்
அவ்வாய்மருந்துண்ண நாள்.

வினையரியும் விருத்தம்.

கந்தவெற்றிலைபாக்கை யெண்ணிமூன்றிற்பெருக்கியாறில்
முந்தவேகழித்துமீந்த தொன்றுக்குலாபம்ரெண்டில்
வந்திடும்ஆனிமூன்றில் வருந்தசுபம்நாலில்துக்கம்
ஐந்துஜீவனமுண்டாகும் ஆறுக்குமரணந்தானே.

உ

தேவிசகாயம். 91

நூன்முகம்.

இதைக்கண்ணுறுக்கும் ஆசிரியரே, இவ்வுலகின்கண் பேரின்பத்தைப்பெறவும், சிற்றின்பத்தை யநுபவிக்கவும், மனிதனல்லது மற்றப்பிராணிகளுக்கு மிகவுங் கஷ்டமாயிருக்கிறது, ஏனெனில், நன்மை தீமையென்கிற கிருத்தியங்களைப் பகுத்தறிந்து நடக்கவும், கஷ்ட, சுக, துக்க சந்தோஷங்களைந்தனதுசெய்கைவாறு அனுபவிக்கவும், வருங்காலம் நிகழ்காலம், சென்றகாலம், என்னும் முக்காலங்களின் உணர்வை உணரவும் ஏதுவான ஆன்மா என்னும் அறிவு மானிடதேகத்தில் நிலைகொண்டிருக்கிறது. மற்ற ஜந்துவர்க்கத்திற்குப் பகுத்தறியும் அறிவு இல்லாமையால் மனிதன் சகலஜந்து ஜாலங்களுக்கு மேலானவன் எனப்படுகிறான். ஆகையால் தான் மற்றச்சராசரப்பொருள்கள் இவனது உபயோகார்த்தமாக உண்டாக்கப்பட்டிருக்கிறதென்று எண்ணப்படுகிறது. மனிதனுக்கு வேண்டிய நன்மைகளை சிருஷ்டித்த கடவுளை எவ்வாறு தொழுவதோ தெரியவில்லை.

மனிததேகம் தாயினது குக்ஷியிலிருந்து "பிரசூதிகாவாயுவினால்" தள்ளுண்டாய் பூமியின்மேல் தள்ளப்பட்டது முதல் (மரணம் அதாவது தேகமாறல்) வரைக்கும் கஷ்டம், சுகம், துக்கம், சந்தோஷம், என்னு மவைகளை பிரத்தியேகமாயும் கலந்தும் அநுபவித்தேவருகிறது. அநுபவிப்பது ஆன்மாவா அல்லது தேகமா? என்று கேள்விகேட்குமிடத்தில் நூலாசிரியர் அவரவர்களுக்குத் தோன்றும்வாறு தங்கள் சித்தாந்தங்களில் புகட்டியிருக்கிறார்கள். அவைகளையெடுத்துக்கூறின் இச்சிறியநூல்விஸ்தாரமாய் முடியும். ஆன்மாவென்ற பதத்திற்குப் பொருள்,—சுருதி. ("ஆத்மாமீத்ருஸ: ஸ்தூலசூக்ஷ்மகாரண சரீரேப்யோ வியதிரிக்த: பஞ்சகோசாதீத: அவஸ்தாத்ரிய ஸாக்ஷிஸ்ஸன் எதிஷ்டதிஸா ஆத்மா") ஆன்மாவென்பது புலன்படாதது,

ஸ்தூலம், சூக்ஷுமம், காரணமென்னும் காரணபெயருடைய மூன்று சரீரங்களுக்கு வேறானது, அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்னும் (௫) கோசங்களுக்கு எட்டாதது, சாக்கிரத்தை, சொப்பனம், சுழுத்தி யென்னும் மூன்று அவஸ்தைகளுக்குசாட்சி சுரூபமாயுள்ளது. இத்தியாதி குணங்களுடையதை ஆன்மா வென்று சொல்லுவார்கள்.

“தேகம்” என்னும் பதத்திற்குப்பொருள்;—திஹயதே அன்னரசேனேதி தேஹ: அன்னதிறை உபசயே அன்னரசாதிகளினால் விருத்தியாக்கப்படுகிறது தேகம். சரீரம் என்னும் சொல்லுக்கு சீர்யத இதிசரீரம். விருத்திவிபரயாம், நசிக்கிறது சரீரம், என்றுபொருள். வார்த்தைகளது சொல்லர்த்தத்தை ஆராயும்பொழுது மேற்கூறிய சுகதுக்காதி விஷயங்களை (ஆத்துமா என்னும் பிராணன்) தேகத்திலிடமாக அனுபவித்து வருகிறதல்லது தேகத்தைவிட்டல்ல பிராணனை ஆக்கையினிடமாக உண்டென அறிந்தோமேயல்லது பிரத்தியேகமாய் பார்த்ததில்லை. விஷயாதிகளின்பயனை தேகத்தின் பிரிவுகளால் ஆன்மா அனுபவிக்கிறதென்று பூர்வாசிரியர் தங்களது செய்யுட்களில் புகட்டியிருக்கினும், தோற்றத்திற்கு தேகந்தற்கென்றே நிச்சயிக்கப்படுகிறது. வியாதிகள் சம்பவிப்பதால் பிராணனுக்கு இடையூர் உண்டாகுமென்ற பயமேயல்லதுவேறல்ல. ஒருமனிதனுக்குவியாதிகளுண்டாகி சிகிச்சைகள்செய்யாமல் அதிகரித்தால் வரும்பயனை “பிராணன்போய்விடும்” என்றேமுடியும். “ஆத்துமசக்தி” என்னும் இரண்டுசொற்களுக்கு தேகத்தில் (வியாதிகள் - உறுப்புகளின் அக்கிரமநடத்தல்) எதிரவைகள் இல்லாமலிருத்தல், மனசாஞ்சல்யம் இல்லாமை எப்பொருள் விளங்குகின்றது ஆகையால், “பூர்வஜன்மக்ருதம்பாபம் வியாதிரூபேண பீடயேத்” என்றும் ஜன்மாந்திரத்தில் செய்தபாவம் இந்தஜன்மத்தில் வியாதி உருவங்கொண்டு நம்மைபீடிக்கிறது, எனத்தெரிந்து சிகிச்சைகள்செய்யாமல் இருந்துவிட்டால் வியாதிகள் நீங்குமா, ஒருக்காலும் நீங்காது. தேகத்தை வியாதிகளணுகாமல் காப்பாற்றி வருவது (அவயவங்கள் - உறுப்புகள்) அவயவங்களின்தொழில் கிரமமாய் நடத்தலே சௌக்கியம். அக்கிரமமாய் நடத்தல்வியாதி. வியாதிகளைப்போக்க அனுபவத்தால் கண்டுகொண்ட பதார்த்தமே ஔஷதம். ஔஷதங்களைத் தெரிவிப்பது ஆயுர்வேதம்.

ஆயுர்வேத
உற்பத்தி சரித்திரம்.

வேதங்கள்-௪. ருக்குவேதம், எஜுர்வேதம், சாமவேதம், அதர்வணவேதம், இவைகளைச் செய்தவர் பிரம்மதேவர். சீர்திருத்தினவர், வேதவியாசர்.

சாஸ்த்திரங்கள்-௬. வேதாந்தம், வைசேஷிகம், பாட்டம், பிரபாகரம், பூர்வமீமாம்ஸை, உத்தரமீமாம்ஸை. (சிக்ஷை, வியாகரணம், சந்தஸ்ஸு, நிருக்தம், ஜோதிஷம், கல்பம்) என மதாந்திரம்.

புராணங்கள்-௧௮. மச்சபுராணம், கூர்மபுராணம், வராகபுராணம், வாமனபுராணம், பிரம்மபுராணம், வைஷ்ணவபுராணம், பாகவதபுராணம், சைவபுராணம், லிங்கபுராணம், பௌஷியாத்புராணம், நாரதிய புராணம், கருடபுராணம், பிரம்மகைவர்த்தபுராணம், ஸ்காந்தபுராணம், மார்கண்டேயபுராணம், ஆக்கினேயபுராணம், பிரம்மாண்டபுராணம், பத்மபுராணம்.

கலைக்கியானங்கள்-௬௪. அக்ஷரலக்ஷணம், லிகிதம், கணிதம், வியாகரணம், நீதிசாஸ்திரம், ஜோதிஷம், தர்மசாஸ்திரம், யோகசாஸ்திரம், மந்திரசாஸ்திரம், சகுனசாஸ்திரம், சிற்பசாஸ்திரம், வைத்தியசாஸ்திரம், சாமுத்திரிகசாஸ்திரம், ரூபசாஸ்திரம், இதிஹாஸம், காவியம், அலங்காரம், சாதுரியம், நாடகம், நிருத்தம், சப்தப்பிரமம், கானசாஸ்திரம், வேணுசாஸ்திரம், மிருதங்கசாஸ்திரம், தாளவாத்தியம், தனுர்வித்தை, சுவர்ணபரிக்ஷை, இரதபரிக்ஷை, கஜபரிக்ஷை, அஸ்வபரிக்ஷை, இரத்தினபரிக்ஷை, பூபரிக்ஷை, யுத்தலக்ஷணம், மல்லயுத்தம், ஆகர்ஷணம், உச்சாடனம், வித்துவேஷணம், மதனசாஸ்திரம், மோகனம், வசீகரணம், ரசவாதம், காந்தருவவாதம், பிபீலவாதம், கௌதுகவாதம், தாதுவாதம், ஆரூடம், நஷ்டப்பிரசனம், முஷ்டிப்பிரசனம், ஆகாசப்பிரவேசம், பரகாயப்பிரவேசம், ஆகாசகமனம், அதிர்சியம், இந்திரஜாலம், மஹேந்திரஜா

ஸம், அக்கினிஸ்தம்பனம், ஜலஸ்தம்பனம், வாயுஸ்தம்பனம், திருஷ்டிஸ்தம்பனம், வாக்குஸ்தம்பனம், சுக்கிலஸ்தம்பனம், ஜனஸ்தம்பனம், கட்கஸ்தம்பனம், அவஸ்தைப்பிரயோகம்.

யுகங்கள்-௪. (௧-வது) கிருதயுகம் இக்காலத்தில் மனிதர்கள் சத்தியவந்தரும், நோயற்ற வாழ்வை யுடையவர்களாயும், நித்தியானந்த ஸ்திதியில் இருந்தார்கள்.

(௨-வது) திரேதாயுகம். இந்தயுகத்தில், மனிதர்கள் இரண்டிலொருபங்கு அஷ்டாங்கனாயும், வியாதிகளுக் குட்பட்டு வயதுகுறைந்து, ஞானசக்தியில் க்ஷீணிதசை அடைந்து, ஔஷதியின் சகாயம் வேண்டுவோராய் இருந்தார்கள் இந்தயுகம் தொடங்கி மனிதர்களுக்கு ஔஷதப்பிரயோகங்கள் வேண்டி இருந்தன.

(௩-வது) துவாபரயுகம். மனிதர்களில் பேர்பாதி பாவிகளாகிய பரஸ்திரீலோலராய் இருந்தார்கள்.

(௪-வது) கலியுகம். இந்தயுகத்தில் பாவம் அதிகரித்து வயது வரவர குறைந்துகொண்டு வியாதிகள் அதிகரித்து உலகமுழுதும் வியாபித்து ஜனங்களை அதிக சேதப்படுத்திக்கொண்டிருக்கிறது.

திரேதாயுகம் தொடக்கத்தில் சிலர் கொடுமைசெய்ய முயன்றதை சிருஷ்டிகர்த்தாவான பிரமதேவர் அறிந்து இனிமேல் தடையில்லாமல் பிராணிகளுக்குவியாதிகள்வந்தணுகும் அவைகளால் மனிதர்களுக்கு இடையூறுகளும், உயிர்ச்சேதங்களும் சம்பவிக்கும் என்று யோசனையுடன், முன்பு தன்னால் சிருஷ்டிக்கப்பட்ட நான்கு வேதங்களுக்கு நான்கு உபவேதங்கள் உண்டுபண்ணினார். அவைகளென்றால், அர்த்தவேதம், ஆயுர்வேதம், காந்தருவவேதம், தநுர்வேதம் என்ற நான்குவேதங்களாம். இந்த உபவேதங்கள் நான்கில், ஹேது, லிங்கம், சிகிச்சை என்னும் முப்பொருளை விவரிக்கிற ஆயுர்வேதத்தில் நோய் அணுகாமலும், அனுசரித்த நோயை நீக்கிக்கொண்டு இவ்வுலகத்தில் சுகமாய் வாழும்படியான விதிகளையும் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த ஆயுர்வேதத்தை சர்வ தயாபரமூர்த்தியாய் பஞ்சகிருத்தியங்களுக்கு ஆதாரபூதராய், சச்சிதானந்த ரூபமாய்விளங்கும் தேவர்களுக்கெல்லாம் தேவருமான மகாதேவர் தமது தேவியாகிய பார்வதி தேவியாருக்கு அருளிச்செய்தாரென்றும், அந்த சர்வேஸ்வரமாதா நந்திதேவருக்கு கடாக்ஷித்தா ளென்றும், அந்நந்திதேவர் தேவர்களுக்கும், முனிவர்களுக்கும், சித்தபுருஷர்களுக்கும் கற்பித்து கொடுத்தாரென்றும் சிலநூலாசிரியர் எழுதி இருக்கிறார்கள். யுகங்களின் தொடக்கத்தில் பிரமதேவரால் உண்டான ஆயுர்வேதமே நமக்கு முக்கியமானது. இதில் ஒருலக்ஷம் சுலோகங்கள் உண்டென சொல்லப்பட்டிருக்கிறது இந்த ஆயுர்வேதம் மனிதர்களின் அறிவுக்கு முற்றிலு மெட்டாதப் பொருளென்று பிரஜாபதி அறிந்து எட்டுபாகங்களாக பிரித்தார். காலகதியால் சேர்ந்த அழிவினால் அந்த கிரந்தம் நாசமடைந்து சிலபாகங்கள் மாத்திரம் அபூருபமாய்அகப்படுகின்றன தற்கால வைத்தியசாஸ்திரங்களெல்லாம் இந்த ஆயுர்வேதத்திலிருந்து உற்பத்தி யானவைகள்.

(௧-வது) சல்லியம். ஸஸ்திரீகம், இது ஸஸ்திரசிகிச்சை காயசிகிச்சை, விரணசிகிச்சை, ஆயுதங்களின் பிரயோசனம், இவை முதலியவைகளை தெரிவிக்கின்றது.

(௨-வது) ஊர்த்துவாங்க சாலக்கியம். இதில் கண்டத்திற்கு மேலிருக்கிற உறுப்புகளின் விவரணத்தையும் அவைகளுக்கு காணுகிற வியாதிகளையும் தெரிந்துக்கொள்ளலாம்.

(௩-வது) காயசிகிச்சை இது ஜுரம், அதிசாரம் உன்மாதம் குஷ்டம்முதலிய தேகத்தில் உண்டான வியாதிகளையும், அவைகளின் சிகிச்சைகளும் தெரிவிக்கின்றது.

(௪-வது) பூதவைத்தியம். இதில் பேய்முதலிய வைகளால் சம்பவிக்கிறதென்னும் மனோரோகங்களை தெரிவித்திருக்கின்றது. தேவதைகள், பிதுர்தேவதைகள், பிசாசுகள்முதலியவைகள் கோபமடைந்து தேகத்துக்குள் பிரவேசித்து மனதைக்கெடுத்து பூதகரம் முதலியவைகளை உண்டுபண்ணுகின்றனவாம். இவ்வித ரோகங்களை மணிமந்திர ஸ்நானபூசை பிரார்த்தனைகளால் நீக்கவேண்டியதாம்,

(௫-வது) கௌமாரபிருத்தியம், இதில் குழந்தைகளுக்கு காணுகிற வியாதிகளையும், சிகிச்சைகளையும் அறியலாம்,

(௬-வது) அகதந்திரம், இது விஷயங்களைக்குறித்து சொல்லுகிறது,

(௭-வது) ரசாயனதந்திரம். இதில் வாதம்செய்கிற முறைகளை அறியலாம். ஜீவிக்கும் நாட்களை விர்த்திசெய்கிற கற்பமுறைகளையும் தெரிந்துக்கொள்ளலாம். வியாதிகள் அணுகாமலிருக்க நாம் அனுசரிக்கவேண்டிய விதிகளையுந் தெரிந்துக்கொள்ளலாம்,

(௮-வது) வாஜீகரணதந்திரம். இதில் ஜனனேந்திரியங்களுக்கு காணுகிற வியாதிகளையும் வீரியவிர்த்திசெய்துக் கொள்ளுகிறவழிகளையும் அறிந்துக்கொள்ளலாம்,

மேற்கூறிய எட்டுவித பிரிவுகள் உளதென்று பழயநூல்களாகிய சரகம், ஸுஸ்ருதம், முதலிய கிரந்தங்களில் சொல்லியிருக்கிறது. ஆராய்ச்சியாலும், பழக்கத்தினாலும் வைத்தியகிரந்தங்கள் உண்டாயினவென்றுசொல்ல அத்தாக்ஷிகளனேகங்களுண்டு. சவத்தை அறுத்து உறுப்பு உறுப்புகளாய் சோதித்து சரீர ஏற்பாட்டுகளை செவ்வையாய் அறிந்து நூலாசிரியர்கள் லோகோபகாரமாய் தங்கள் நூல்களில் எழுதினார்களென்றும் கண்டிருக்கின்றது நிகழ்காலத்து வைத்தியர்கள் தேகசோதனைகளை பாராட்டாமல் அசதிகொண்டிருக்கிறபடியால் வைத்திய விஷயங்கள்யாவும் அவர்களுக்குச் சந்தேகமாகயிருக்கிறது,

இந்த (ஆயுர்வேதம் ஆயுசைதெரியப்படுத்தும்நூல்) பிரம்மாவினால்தக்ஷப்ரஜாபதிக்குஉபதேசிக்கப்பட்டது. அவர் அதையுணர்ந்து (சிகிச்சாதர்சனம்) என்னும் சாஸ்திரத்தை உண்டாக்கி பானுவின் புதல்வர்களாகிய அஸ்வனி தேவர்களுக்கு கற்பித்தார். அஸ்வனி தேவர்கள் வைத்தியமுணர்ந்து தேவவைத்தியர்களானார்கள். அவர்கள் சிகிச்சாரத்னதந்திரம், பிரம்மஹிக்கியம் என்னும் கிரந்தங்களைச் செய்தார்கள். வைரவமூர்த்தியால் கிள்ளிவிடப்பட்ட சதுர்முகனது சிரசை இவர்கள் வைத்தியயுக்தியால் ஒழுங்காக சேர்த்துவிட்டார்கள், தேவர்களுக்கும் அசுரர்களுக்கும்நடந்தயுத்தங்களில் உண்டானகாயங்களைதட்சணமே

சொஸ்தப்படுத்தினார்கள். முதலில் சல்லியம்மென்னும் சாஸ்திரத்தை பழக்கத்திற்கு கொண்டுவந்ததாய் தெரியவருகிறது. நிகழ்காலத்து வைத்தியர்கள் அதை கையாடாமல் அசதிகொண்டு நாவிதர்களுக்கும், சக்கிலிகளுக்கும் கொடுத்துவிட்டார்கள். தேவ அரசனுக்குஉண்டான பாரிசவாதத்தைகுணப்படுத்தினார்கள் இன்னும் அனேக அற்புதசிகிச்சைகளைசெய்து இவ்விருவர் கீர்த்தியையும் புகழையும் பெற்றார்கள். தேவர்கோன் அவர்களது வைத்திய திறமையை அறிந்து தானும் இவர்களிடத்தில் ஆயுர்வேதத்தை கற்றுக்கொண்டு அனேகருக்கு உபகாரியானான்.

சிலகாலஞ்சென்றபிறகு வைத்தியருக்குள் வருணாசிரமபேதங்கள் ஏற்படவே சிகிச்சைகளும் வெவ்வேறாக பிரிந்தது பூலோகத்தில் மனிதர்கள் நோய்களாலபடுந் துயரத்தை ரிஷிகள் அறிந்து அவைகளைநீக்க மார்க்கத்தைதேட ஆங்கீரசர், பரத்வாஜர், கார்கேயர் முதலான ரிஷிகள் இமயமலையில் சபைகூடினார்கள். தங்களது ஞானதிருஷ்டியில் மனிதர்களது பிணிகளைநீக்கதேவராஜனது சகாயம்வேண்டியதென்று தெரிந்துகொண்டார்கள். பிறகு அச்சபையோர் பரத்வாஜரை தேவலோகத்திற்குப்போய் இந்திரனிடத்தில் வைத்தியம் கற்றுவரும்படி வேண்டிக்கொண்டார்கள்; பரத்வாஜரும் சம்மதித்து மேல்லோகத்திற்குப்போய் இந்திரனைக்கண்டு பலவித ஆசிகள்கூறி தன்கருத்தைவெளியிட்டார். தேவகோனும் சந்தோஷத்தோடு ஆயுர்வேத சூத்திரமுழுவதையும் பரத்வாஜருக்கு கற்பித்தார், ஆயுர்வேதமுழுதுங் கற்ற பரத்வாஜர் மறுபடியும் இமயமலைக்குவந்து ஆயுர்வேதமுழுவதையும் ரிஷிகளுக்குகற்பித்தார், ரிஷிகள் ஆயுர்வேதசூத்திரங்களை முழுதுங்கற்றுணர்ந்து தேசங்கள்தோறும்போய் மனிதர்களின் பிணிகளை சொஸ்தப்படுத்தி ஆங்காங்கு தங்கள் ஆசிரமங்கள்தோறும் வைத்திய கல்விச்சாலைகளை ஏற்படுத்தி வருபவர்களுக்கு கற்பித்து வந்தார்கள்,

அத்திரேயர் தனது ஆசிரமத்தில்வைத்தியகல்விச்சாலையை ஏற்படுத்தி அனேக ஜனங்களுக்கு நூலைகற்பித்துவந்தார் தமது மாணாக்கர்களில் சிறந்தவர்களாகிய அக்கினிவேஸ், பேலர், ஜதுகர்ணர், பாராசர், ஹாரிதர், க்ஷீரபாணி ஆகிய இவர்களுக்கு ஆயுர்

வேத சூத்திரமுழுதுங் கற்பித்துக்கொடுத்தார், இவர்களேரோகநிதானம், குணபாடம் முதலிய அத்தியாயங்களைச்செவ்வையாக அறிந்து, பிரபலவைத்தியர்களாகி அனேக ஆண்டுகள் மரணாவஸ்தையன்றி வாழ்ந்தார்களென்று சரகம்முதலிய நூற்களிற்சொல்லியிருக்கிறது, இவர்கள் தங்கள் தங்கள் பேர்வழியாகச் செய்தநூல்களாவன:—அக்கினிவேசதந்திரம், பேலதந்திரம், ஜதுகர்ணசம்ஹிதை, பாராசரம்ஹிதம், ஹாரீதசம்ஹிதம், க்ஷீரபாணிதந்திரம் ஆகிய இவைகளாம் இக்கிரந்தங்களை ரிஷிகளுக்குமுன் அரங்கேற்றப்பட்டன, அவைகளுக்குள் அக்கினிவேசதந்திரம் முக்கியமானதென்று பிரகடனஞ்செய்தார்கள், சிலகாலம் சென்றபிறகு சரகமுனிவர் இந்நூலைத்திருத்திசரகமென்னும் ஒருநூல் செய்தார், இந்தச்சரகமே பூர்வசிறந்த கிரந்தம்,

வேறுகிரந்தங்களில் செப்பியிருப்பது என்னவெனில், ஜலப்பிரளயத்தில் சாஸ்திரங்களெல்லாம் அடித்துக்கொண்டு போனதாகவும், அவைகளை ஆதிசேடன் கண்டெடுத்ததாகவும், அமிர்தத்துக்காக, தேவர்களும், அசுரரும் மந்திரகிரியைக்கொண்டு பாற்கடலை கடைந்தபோது அமிர்தகலசத்தோடு தன்வந்திரிபகவான் பிறந்து இந்திரனிடத்தில் வைத்தியம் கற்றுக்கொண்டு சுவர்க்கலோகத்தில் வைத்தியஞ்செய்து மஹாவைத்தியரென்று புகழ்பெற்றுப் பூலோகத்து மனிதர்கள் வியாதியால் பீடித்துயருவதை ஞானதிருஷ்டியால் அறிந்து இவர்களதுபிணிகளைநாசப்படுத்த காசிராஜாவாக திருவவதாரஞ்செய்தனரும்,

தன்வந்திரிபகவான் பூலோகத்து ஜனங்களை நோய்களிலிருந்துமீட்க இராஜனாக அவதரித்திருப்பதை ரிஷிகள் ஞானதிருஷ்டியால் அறிந்து, இவரிடத்தில் உபதனுபர் போதாரணயர், ஸுஸ்ருதர், கோபிரஜர், ஆரப்பிரஹு, ருசிகர் ஆகிய இவர்களை வைத்தியம் கற்றுக்கொள்ளும்படியாய் அனுப்பினார்கள், ரிஷிகளும், தன்வந்திரியான அரசனை வனத்தில்கண்டு நமஸ்கரித்து வைத்தியத்தைக் கற்பிக்கும்படிக்கு பிரார்த்தித்தார்கள், அவர் அதற்கிசைந்து வைத்தியசாஸ்திரமுழுதுங் கற்றுக்கொடுத்தார் இச்சங்கதி ஸ்ரீராமர் அரசாண்டநாட்களில் நடந்ததாக குறித்திருக்கிறது, பிறகு தன்வந்திரிபகவான், ஸுஸ்ருதரை அழைத்து

ஆயுர்வேதம் பெரியகிரந்தமாகையால் இக்கால ஜனங்களதை அறிந்துக்கொள்ளுவதுகஷ்டம். ஆகவேசகலரும் சுலபமாய்தெரிந்துக்கொள்ளும்படி சங்கிரகித்து ஒருகிரந்தம் எழுதுமென்றார் அவரும் ஆசானது கட்டளையின்படி ஒருநூல்செய்தார் அதற்கு ஸுஸ்ருதமென்றுபெயர். அக்காலத்தில், ஜனங்கள் வியாதிகளற்றவர்களாய் யெங்கும் யுத்தங்கள் அதிகரித்திருந்தமையால் காயசிகிச்சையை அதிகமாய் பாராட்டாமல் ஸஸ்திரசிகிச்சைமுக்கியமாய் எழுதியிருக்கிறது.

பூர்வீக ஆயுர்வேத சூத்திரங்களை அனுசரித்து, சரகம் ஸுஸ்ருதம் என்கிற இரண்டு கிரந்தங்கள் எழுதப்பட்டன. இக்கிரந்தங்கள் இந்துவைத்தியத்திற்கு மூலகிரந்தங்கள். ரிஷிகள், தேவர்கள், சித்துபுருஷர்கள் முதலானவர்கள் இவ்விரண்டு கிரந்தங்களை கற்று தங்கள் தங்கள் இஷ்டப்படி அனேகநூல்களை செய்தார்கள். சரகத்தை யனுசரித்தவர்கள் காய வைத்தியர்களானார்கள். ஸுஸ்ருதத்தை யனுசரித்தவர்கள் ஸஸ்திரவைத்தியர்களானார்கள். ஆயுர்வேதத்திலுள்ள (அ) பிரிவுகள் ஸுஸ்ருதத்தில் (சு) பிரிவுகளாய்க் காணலாம். (க-வது) சூத்திரஸ்தானம், (உ-வது) நிதானஸ்தானம், (ங-வது) சரீரஸ்தானம், (ச-வது) சிகிச்சாஸ்தானம், (ரு-வது) கல்பஸ்தானம், (சு-வது) லோகவிஸ்வுத்திர ஸ்தானம் ஆகிய இவைகளாம்.

சரகம், ஸுஸ்ருதம், இவ்விரண்டையும் அனுசரித்து (வாஹட்டாசாரியார், பாஹாட்டம், அஷ்டாங்கஹிருதயம்) என்னும் ஒருநூலைஇயற்றினார், இதில் நூதனவிஷயங்களையுங்காணலாம்.

ஆயுர்வேதத்தை சம்கிரகித்த பூர்வாசாரியர்கள் பிரேதங்களைதொடக்கூடாதென்று யாருஞ்சொல்லவில்லை. சரீரஸ்தானத்தை யெழுதுவதற்கு பிரேதத்தை அறுத்துப்பார்க்காமல் யூகையின் மீதில யெழுதுவது மிகவும் அசாத்தியம் ஆயுர்வேத ஆரம்பத்திலிருந்து ஸஸ்திர சிகிச்சையுண்டென தெரியவருகிறது அது எந்தகாரணத்தினால் அற்றுப்போயிற்றோ தெரியவில்லை. ஸஸ்திரசிகிச்சை யில்லாததினாலும், நூதனமாய் கற்றுக்கொள்பவன் சரீர அவயவங்களின் பரிசோதனைசெய்யாததாலும், இந்து வைத்தியம் இந்தஹீனஸ்திதிக்கு வந்துவிட்டது. சமஸ்கிருதத்தி

லும் மற்றுபாஷைகளிலும் கணக்கிடமுடியாத வைத்தியகிரந்தங்கள் ரிஷிகளாலும், சித்தபுருஷர்களாலும், பண்டிதர்களாலும் இயற்றப்பட்டிருக்கின்றன. இவைகளை யெடுத்துக்கூறின் கிரந்தம், விஸ்தாரமாய்முடியும். சகலவைத்தியகிரந்தங்கள் சரகம் ஸுஸ்ருதம் என்னும் இரண்டு கிரந்தங்களிலிருந்து யெடுத்து கூறப்பட்டதல்லது வேறல்ல. ஆகையால், அக்கிரந்தங்களுடைய பெயர்களும், நூலாசிரியர்களையும் இவ்விடமெடுத்து யெழுதுவதால் பிரயோஜனமில்லை.

ரோகங்களைப்பற்றிய விதங்கள்.

பூர்வாசாரியர்கள் குறித்திருக்கிற (௲௬௬௮) ரோகங்கள் எளிதில் அறியும்பொருட்டு வருப்புவகுப்புகளாக பிரித்திருக்கிறார்கள். அப்பிரிவுகள், ஒருவர்பிரித்தவிதமாய் மற்றொருவர் பிரிக்கவில்லை.

ஆயுர்வேதத்தில்கண்டிருக்கிறவகுப்புகள்.

1 வது, காதரோகங்கள், கிரந்திரோகங்கள்
2 ,, இந்திரியரோகங்கள், சிரோரோகங்கள்
3 ,, சர்வாங்கரோகங்கள்
4 ,, பூதகணரோகங்கள்
5 ,, பாலரோகங்கள், பாலிந்தரோகங்கள்
6 ,, விஷப்பிரதிவிஷம்
7 ,, ரசாயனம்
8 ,, மனுஷிய அபிவிர்த்தி

வேறொருசாஸ்திரத்தின் வகுப்புகள்.

1 வது, சாத்தியரோகங்கள்
2 ,, கஷ்டசாத்தியரோகங்கள்
3 ,, அசாத்தியரோகங்கள்

மற்றொரு சாஸ்திரம்.

1 வது, பாரம்பரியரோகங்கள்
2 ,, ஆகந்துகரோகங்கள்

சரகசாஸ்திரம்.

1 வது, ஆகந்துகரோகங்கள்
2 ,, நிஜரோகங்கள் அல்லது சரீரரோகங்கள்
3 ,, மானசரோகங்கள்
4 ,, ஸ்வாபாவிகரோகங்கள்

மற்றொருசாஸ்திரம்.

1 வது, ஸஸ்திரசாத்தியரோகங்கள்
2 ,, சினேகாதிகிரியாசாத்தியரோகங்கள்

மற்றொருசாஸ்திரம்.

1 வது, ஆதிபாலப்பிரவர்த்திதரோகங்கள்
2 ,, ஜன்மபலப்பிரவர்த்திதரோகங்கள்
3 ,, தோஷபலப்பிரவர்த்திதரோகங்கள்
4 ,, சங்காதபலப்பிரவர்த்திதரோகங்கள்
5 ,, காலபலப்பிரவர்த்திதரோகங்கள்
6 ,, தெய்வபலப்பிரவர்த்திதரோகங்கள்
7 ,, ஸ்வபாவபலப்பிரவர்த்திதரோகங்கள்

வடமொழியில் உள்ள ஆயுர்வேத பாலபோதினி என்னும் அநுபோகவைத்திய பிரமரகசியமென்றநூலை மொழிபெயர்த்து முதலிலிருந்து அச்சிடக்கருதி இந்நூலின் பிரயோஜனத்தை சகலருக்குங்காட்டும்படிக்கு அதிலுள்ளசில வைத்தியமுறைகளை மாத்திரம் இரண்டுபாகங்களாக, ம-ள-ள-ஸ்ரீ, ஜெகந்நாதபுரம் கோஷாமிகளவர்கள் அனுக்கிரகத்தின்படி எனது சினேகிதருள்ள சிறுமணலூர் - முனிசாமி முதலியாரவர்களால் அச்சிட்டிருக்கின்றது அம்முறைகளாலுபிரயோஜனத்தைக்கண்டு தனிகூர்ந்து இந்தியா, சிலோன், சிங்கப்பூர் முதலிய இடங்களிலிருந்து அனேக வைத்தியர்கள் அந்நூலை சாங்கோபாங்கமாய் மொழிபெயர்த்து வசனரூபமாய் அச்சிடும்படி கேட்டுக்கொண்டமையால் மேற்படி கிரந்தத்தை மொழிபெயர்த்து, சரகம், ஸுஸ்ருதம், பாஹடம், சித்தஸார்ணவம், அஸ்வினிசம்ஹிதம், கார்க்கேயம், மாதவநிதானம்முதலிய கிரந்தங்களின் அபிப்பிராயங்களையும், சிகிச்சைகளையும் கூடச்சேர்த்து மூன்றாவது பாகமுதல் கிரந்தபூர்த்தியாகிறவரையிலும், வசனமாக வெளியிடலாகினேன்.

மூன்றாவது பாகத்தில், வைத்திய பரிபாஷையும், வைத்தியர்கள் கவனிக்கவேண்டிய சிலமுக்கிய விஷயங்கள், கஷாயவிதி சுரசவிதி, சூரணவிதி, மருந்து அருந்தும்காலம், மாத்திரைவிதி ஔஷதங்கூட்டுமுறை, பஸ்பவிதி, பத்தியபிரசம்சை, சிகிச்சைகள்பேதம், ஆரோக்கியபிரசம்சை, தைலாஞ்சனகுணம், ரோகஆரம்பம், வைத்தியன்லக்ஷணம், தூதபரீக்ஷை முதலியவைகள் சரீரலக்ஷணம், இரத்தவிஷயவிவரணம், ஜடராக்கினிவிசாரம், வாதாதிபிரகுருதி பேதவிவரணம், நாடிகள்விவரணம், நாடிபரீக்ஷை, அஷ்டவித பரீக்ஷைகள், சுரங்களும் அவைகளுக்கு சிகிச்சைகளும் அடங்கியிருக்கின்றன.

சில ஔஷதிகளின்பெயர்களை தமிழில் காண்பது மிககஷ்டமாய் இருந்தபடியால் அவைகளை வடமொழிகளாகவே அச்சிட்டிருக்கிறது.

இலக்கண இலக்கிய விதியின்படி இந்நூல் அச்சிட்டால் கல்விமான்களுக் கல்லது மற்றவர்களுக்கு பயன்படாது. ஆகையால் சிறியகுழந்தையும் இதிலுள்ள விஷயங்களை தெரிந்துக்கொள்ளும்படியான சுலபநடையுடன் எழுதலாயிற்று. வடமொழியிலிருந்து இக்கிரந்தம் மொழிபெயர்த்ததால் அளவிடமுடியாத சொற்குற்றங்கள், பொருட்குற்றங்கள் அடங்கி யிருக்கின்றன. ஆகையால் இதைக்கண்ணுறுக்கும் கனவான்கள், சலத்தினின்று பாலையுண்ணும் அன்னத்தைப்போல் பிழைகளை பாராட்டாமல் குணங்களை நாடுவீர்களென்று நம்புகின்றேன்

இப்படிக்கு,

ஜெ. தொரும்பிராந்.

வைத்திய பரிபாஷை.

திரிகடுகு. சுக்கு-மிளகு-திப்பிலி

திரிபலை. கடுக்காய்-தான்றிக்காய்-நெல்லிவற்றல்

திரிகந்தம். சந்தனம்-அகில்கட்டை-தேவதாரி

திரிசுகந்தம். சாதிக்காய்-சாபத்திரி-லவங்கம்

திரிமதுரம். பால்-நெய்-தேன்

திரிமஞ்சள். மஞ்சள்-கஸ்தூரிமஞ்சள்-மரமஞ்சள்

திரிமூலம். திப்பிலிமூலம்-சித்திரமூலம்-கண்டுமூலம்

திரிபத்திரி. லவங்கப்பத்திரி-சாபத்திரி-தாளிசப்பத்திரி

திரிநிம்பம். வேம்பு-நிலவேம்பு-கறிவேம்பு

திரிசாதம். லவங்கப்பத்திரி-லவங்கப்பட்டை-நாககேசரம்

முக்கூட்டுயெண்ணெய். நெய்-எள்ளெண்ணெய்-ஆமணக்கு யெண்ணெய்

முக்காலம். காலை-உச்சி-மாலை

திரிதோஷம். வாதம்-பித்தம் சிலேத்துமம்

முப்பழம். வாழைப்பழம்-மாம்பழம்-பலாப்பழம்

சதுர்சாதம். லவங்கப்பத்திரி-லவங்க பட்டை-நாககேசரம்-ஏலம்

மஹாபஞ்சமூலம். வில்வவேர்-பின்னவேர்-சுக்சுமூலி-பாதிரிவேர்-பெருமாவேர்ப்பட்டை

லகுபஞ்சமூலம். கண்டங்கத்திரி இருவிதம்-சிறிலைத்தாமரை-மூன்றிலைத்தாமரை-நெருஞ்சி

ஷை (௰) சரக்குகள் கூட்டுக்கு தசமூலமென்று பெயர்

திருணபஞ்சமூலம். நாணல்வேர்-தர்ப்பைவேர்-கரும்புவேர்-நெல்பயிர்வேர்-வெள்ளை அருகம்வேர்

பஞ்சகோலம். சுக்கு-திப்பிலி-திப்பிலிமூலம்-செவ்வியம்-சித்திரமூலம்

பஞ்சவாசம். லவங்கம்-ஏலம்-கருப்பூரம்-சாதிக்காய்-தக்கோலம்

பஞ்சஅமிர்தம். பால்-சருக்கரை-நெய்-தேன்-வாழைப்பழம்

அஷ்டமூலம். முத்தக்காசு-விஷ்ணுகிரந்தி - பேய்ப்புடல் வேர்-சிந்தில்கிழங்கு-கஞ்சாங்கோரை-ஆடாதோடைவேர் - கருந்துளசி-பற்பாடகம்

அஷ்டவர்க்கம். சீரகம்-கருஞ்சீரகம்-சுக்கு-மிளகு-திப்பிலி இந்துப்பு-பெருங்காயம்-ஓமம்

பரிமளதிரவியம். சாதிக்காய்-ஏலம்-லவங்கம்-லவங்கப் பட்டை-சாபத்திரி

உப்புபேதங்கள். அமரிஉப்பு-கறிஉப்பு-கந்தகஉப்பு-கல்லுப்பு-கம்பிஉப்பு-அல்லதுவெடியுப்பு-அல்லதுபொட்டிலுப்பு- சவட்டுப்பு-அட்டுப்பு-கருப்புப்பு-விளையலுப்பு-இந்துப்பு - மரஉப்பு வழலையுப்பு

காரங்களாவன. வெங்காரம்-சினக்காரம்-சவிக்காரம் - அப்பளாக்காரம்

க்ஷாரங்களாவன. நவாக்ஷாரம்-யவாக்ஷாரம்-சத்திக்ஷாரம் தும்பக்ஷாரம்

நவஇரத்தினங்களாவன. மாணிக்கம்-வயிரம் - வைடூரியம்-கோமேதகம்-புட்பராகம்-பவளம்-முத்து-மரகதம்-நீலம்

உலோகங்கள். பொன்-வெள்ளி-தாம்பிரம்-பித்தளை-வெண்கலம்-தரா-வெள்ளீயம்-காரீயம்-துத்தநாகம்-இரும்பு-எமுகு-காந்தம்-மண்டூரம்

பாஷாணவகையாவன. பாதரசம்-பூரம்-லிங்கம்-வீரம்-கந்தம்-தாளகம்-அரிதாரம்-மனோசிலை-மிருதார்சிங்கி-வெள்ளைப் பாஷாணம்-கௌரிபாஷாணம்-நீலாஞ்சனபாஷாணம் தொட்டி பாஷாணம்-மடல்துத்தம்-மயில்துத்தம்-துரிசி-அன்னபேதிமுதலியவைகளாம்.

லேக்கியம். நாக்கால்நக்கிச் சாப்பிடும்படியான மருந்து

சோஷியம். உறிஞ்சிவிழுங்கும்படியான மருந்து

பேயம். குடிக்கும்படியான மருந்து

காதியம். மென்றுதின்னும்படியான மருந்து

எரிப்புதிட்டம் (உ) விரல் கனமுள்ள, ஒருவிரகால் எரிப்பது, தீபாக்கினி என்பது. மேற்படி கனமுள்ள (உ) விரகால் எரிப்பது, கமலாக்கினி மேற்படி கனமுள்ள (சு-ரு) விரகால் எரிப்பது, கடாக்கினி.

புடதிட்டம் (உ) முழம் அகலம் (உ) முழம் உயரம், வரட்டியை அடுக்கிப்போடுகிற புடத்திற்குப்பெயர் கஜபுடமென்பது ஒரு முழப்புடம், லகுபுடம் என்பது ஒருஜாண் உயரத்திற்குட்பட்ட புடத்திற்குப்பெயர். குக்குடபுடம் என்பது.

லங்கணம், ஆகாரம் இல்லாமல் வைப்பதற்கு லங்கணம் என்றுபெயர். இதில் மூன்றுவிதம். சுத்தலங்கணம், தாரலங்கணம் லகுலங்கணம், ஆம்.

வைத்தியர்கள்

கவனிக்கவேண்டிய

சில முக்கியவிஷயங்கள்.

செம்பு, பித்தளை, வெங்கலம், இவைகளில் மருந்துகள்செய்யவும் வைக்கவுங்கூடாது. பிரயோகத்தில் அனேக சரக்குகளைச்சேர்ப்பது நல்லதல்ல. பிரயோகத்திலிருக்கிற முக்கியச்சரக்கின்குணத்தை யதிகப்படுத்த இரண்டொன்றும், அந்தமுக்கியசரக்குக்கேதாகிலும் துர்க்குணமிருந்தால் அதைச் சமனப்படுத்த ஒன்றிரண்டும் இருந்தால்போதும் நிகழ்காலத்து ஜனங்களது தேகஸ்திதியையும், பூசாரத்தையும், காலங்களின் பேதாபேதங்களையும் அறிந்து நாலேயே ஸ்திரமெனாம்பி மாற்றுமலிருக்கப்படாதென்பது அவிவேகம்.

மற்றொரு முக்கியவிஷயம், வைத்தியன் அறிந்திருக்கவேண்டியதென்னவெனில், ஒவ்வொரு ஔஷதமும் சரீரத்திலவியாபித்துசெய்கிற குணங்களேயாம். அப்படியறிந்துகொண்டவனே பதார்த்தங்களை ரோகத்தின்மேல் உபயோகப்படுத்த பாத்திரனாகிறான், குணமும்பிரமாணமும் அறியாமல், பதார்த்தங்களை யுபயோகப்படுத்துவதால், நமதுதேசத்து திவ்விய ஔஷ

தங்கள்மேல் இங்கிலீஷ்ஜனங்கள் தூஷணை நேரிட்டிருக்கின்றன. சிலவிடங்களில் அகாலமிருத்யு சம்பவிக்கின்றது. இதுசகலரும் அறிந்தவிஷயம்.

(௪) மாதங்களுக்குட்பட்ட குழந்தைகளுக்கு அபினிசேர்ந்த மருந்துகள் கொடுக்கலாகாது, ரசஞ்சேர்ந்த ஔஷதங்கள் குழந்தைகளுக்கு அதிகமாய்க் கொடுத்தபோதிலும் கெடுதி செய்யும்.

ரசம், கந்தகம், பாஷாணம் இவைகள் குருமருந்துகள். ரோகச்சிகிச்சைகளில் இவைகளைக் கையாடிவருதைப்பார்க்கிலும் மூலிகைகளின்மேல் ஞாபகம்வைத்தால், ரோகிகள்வருத்தமடையார்கள்.

ஔஷதப் பிரயோகங்களோடு ரோகிக்கு நல்ல ஊட்டம் கொடுக்கவேண்டியது. சுப்பிரவஸ்திரம் கட்டிக்கொள்ளும்படி செய்யவேண்டியது. துர்க்கந்தபதார்த்தங்களையும், ஜனக்கூட்டத்தையும் நீக்கிவைக்கவேண்டியது, ரோகியை நல்லகாற்றுள்ளவிடத்தில் இருக்கச்செய்யவேண்டியது, ரோகிக்குவேண்டியவைகளை நடப்பிக்க ஒரு ஆள் அருகாமையி லிருக்கும்படிச் செய்யவேண்டியது. மேற்கூறிய விஷயங்களில், வைத்தியர்கள் ஞாபகம்வைத்து நடப்பிக்கவேண்டிய தவசியம், தவசியம், தவசியம்.

ஔஷதங்கள்செய்வதில் புதியசரக்குகளையே உபயோகப்படுத்தவேண்டியது. ஆனால் வாயுவிளங்கம், திப்பிலி, வெல்லம், கொத்தமல்லி, தேன்முதலிய பதார்த்தங்கள் ஒருவருஷத்திற்கு மேற்பட்டதாய் இருக்கவேண்டியது. ஆடாதோடை, தண்ணீர்விட்டான்கிழங்கு, சிந்திற்கொடி, கொடிபுனிவேர், கொடிசம்பாலைப்பட்டை, பெரியசோம்பு, அமுக்கிராகிழங்கு, நன்னாரிவேர், நிலவேம்பு இவைமுதலிய மூலிகைகளில் யெப்பொழுதும் பச்சையாகத்தானே உபயோகப்படுத்தல்வேண்டும் ஆயின் அவைகள் பச்சையென்று இடைக்குமேலிடவும்படாது குறைக்கவும்படாது மேலும் மூலிகையின் பிரிவுகள் சொல்லாத இடங்களில், அம்மூலிகையின் வேர்களையே சேர்த்துக் கொள்ளவும்.

கஷாயங்கள், சூரணங்கள் முதலியவைகளில்சேர்க்கப்படும் மூலிகைகளில் யேதாவது அகப்படாமல்போனால், அவைகளுக்குபதில், சமானகுணமுடைய வேறுமூலிகையை, "தன்வந்திரிநிகண்டின்படி சேர்த்துக்கொள்ளவேண்டியது" ஔஷதங்களில் சேர்க்கப்படும் திரவியங்களது பிரமாணம் சொல்லப்படாத இடங்களில் சமஎடையாய் சேர்த்துக்கொள்ளவும்.

கியாழவிதி

கியாழங்கள் காய்ச்சுவதில் உபயோகப்படும் சரக்குகளை வகை ஒன்றுக்கு (௪) துலாம் எடையாய் சேகரித்து, அவைகளை இடித்து ஒருபாண்டத்தில் போட்டு அதில் ஒருபடி சுத்தஜலம் விட்டு மந்தாக்கினியால் எட்டில் ஒருபங்காய்ச் சுண்டக்காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவேண்டியது, சிறியவர்களுக்கு (வ) துலாம் எடைமுதல் ஒருதுலாம் எடைவரைக்கும் கொடுக்கலாம், பெரியவர்கள் (௪) துலாம் வரையிலும் குடிக்கலாம், மேலும் கியாழத்தில் சர்க்கரை சேர்க்கவேண்டியிருந்தால், வாததோஷத்தில் கியாழத்திற்கு நாலிலொருபாகமும், பித்ததோஷத்திலெட்டிலொருபாகமும், சிலேத்துமதோஷத்தில் பதினாறிலொருபாகமும், சேர்த்துக்கொள்ளவேண்டியது, தேனைச்சேர்ப்பதில், சிலேத்துமதோஷத்தில் கியாழத்திற்கு நாலிலொருபாகமும், பித்தரோகத்தில் எட்டிலொருபாகமும், வாதரோகத்தில் பதினாறில்ஒருபாகமும் சேர்த்துக்கொள்ளவேண்டியது, ஆகிலும், சீரகம், குக்கிலம், க்ஷாரங்கள், சிலாசத்து, பெருங்காயம் முதலியவைகள் (வ) துலாமிற்கு அதிகமாய் சேர்க்கப்படாது, பால், வெல்லம், நெய், எண்ணெய், சுரசம், சூரணம் முதலியவைகள் ஒருதுலாத்திற்கு அதிகமாய் கியாழத்தில் சேர்க்கப்படாது.

(கல்கம் அல்லது சுரசவிதி) இலை, பச்சைவேர், பச்சைப்பட்டை, இவைகளில் ஒன்றை இடித்துபிழிந்த தனிரசத்துக்கு, சுரசம் அல்லது சுவரசகஷாயமென்றுபெயர், அதிமதுரம், அரத்தை, இவ்வித உலர்ந்தச் சரக்குகளைத் தண்ணீர்விட்டிடித்து அல்லது அரைத்து ரசம்பிழிந்துக்கொள்ள வேண்டியது. இதற்குக் கல்ககஷாயம் என்றுபெயர்.

(சூரணவிதி) சிலபதார்த்தங்களை வெண்கலம், அல்லது, இரும்பு உரலிலும், மிருதுவான பதார்த்தங்களை கல்லுரலிலல்லது கலுவத்திலுமிட்டு தூள்செய்துக்கொள்ள வேண்டியது. மாசிக்காய், கடுக்காய், இவ்வித துவர்ப்பு பதார்த்தங்களை இரும்பு உரலிலிட்டு தூள்செய்யலாகாது. கறுத்துக்கெட்டுப்போகும் தூள்செய்வதற்கு வேண்டிய கருவிகளாகிய உரல் உலக்கை, கலுவம், சுத்தி இவைமுதலியவைகள் சுத்தியாய் இருக்கவேண்டியது. யோகங்களில் சேருகிற சரக்குகளை, முதல்சூரணித்து பிறகு நிறுத்தெடுத்துக் கொள்ளவேண்டியது. முதல்நிறுத்துக் கொண்டு, பிறகு சூரணிப்பதில் சேதமாகிற சரக்குநிறைகுறையும். அப்படி சூரணித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணத்தை ஸ்திரீபுருஷாள், அரைதுலாம் முதல் ஒருதுலாம் நிறைவரையிலும், சிறியவர்கள், எழுகுன்றிமணி எடைமுதல் இருபத்தொன்று குன்றிமணி எடைவரையிலும், தேகதத்துவங்கள், வியாதியின்பலன், தேசகாலங்களை அறிந்து அருந்தல்வேண்டியது. இச்சூரணத்துடன் வெல்லம்சேர்க்கவேண்டுமானால் சம எடையாயும், சர்க்கரையானால் இரட்டிப்பாயும், பெருங்காயம், நெய்யில்வறுத்துக்கொண்டும், நெய்யைபெருங்காயத்திற்கு இரட்டிப்பாயும், ஜலம் சூரணத்திற்கு நாலுபங்கு அதிகமாயும்சேர்த்துக் கொள்ளவேண்டியது.

சூரணங்களாகிலும், லேகியங்களாகிலும், மாத்திரைகளாகிலும், அருந்தினபிறகு பாலைக்குடிக்க வேண்டுமானால், வாதரோகத்திற்கு, (உ) துலாம், பித்தரோகத்திற்கு (அ) துலாம், சிலேத்துமரோகத்திற்கு, (ச) துலாம் குடிக்கவேண்டியது, சூரணத்தை மூழுகிறவரையிலும் பால்வார்த்து அதுகண்டுகிறவரையில் உலர்த்துவைக்கிறது சுத்திசெய்யப்படும்.

ஔஷத சேவனகாலம், மருந்து அருந்துங்காலம்.

கியாழங்கள், சூரணங்கள் உபயோகிக்குங்காலங்கள் கூறாதஇடங்களில், காலைமாலை அருந்தவேண்டும். ஆனால் (வமனவிரேசனங்களுக்கு, வாந்திக்கும், பேதிக்கும் காலையில்மருந்து பிரயோகப்படுத்தவேண்டியது. வாந்தியாவது, பேதியாவது செய்

வையாய் ஆனபிறகு லேசாய்புசிக்கவேண்டியது. அபானவாயுவு கீழ்நோக்குகிறவரையிலும் ஔஷதங்களை பிரயோகப்படுத்த வேண்டி இருந்தால் போஜனத்திற்கு முன்பாகவே ஔஷதத்தை பிரயோகிக்கவேண்டியது. அஜீர்ணத்தை ஹரிக்கபண்ணும் சகல ஔஷதங்களையும்புசிக்கும் காலத்தில்தானே பிரயோகிக்க வேண்டியது. அக்கினிதீபனத்தையுண்டாக்கும் சகலௌஷதங்களை போஜனமத்தியில் பிரயோகிக்க வேண்டியது. வியானனை சமனிக்கப்பண்ணும் ஔஷதங்களை புசித்த பிறகு பிரயோகிக்க வேண்டியது, விக்கல் கம்பவாயுவு என்னும் இவைகளுக்கும் சகல ஔஷதங்களையும் புசிக்கும் காலத்தில்தானே பிரயோகிக்க வேண்டியது, அக்கினி தீபனத்தையுண்டாக்கும், சகல ஔஷதங்களை போஜனமத்தியில் பிரயோகிக்கவேண்டியது, விக்கல், கம்பவாயுவு என்னும் இவைகளுக்கு போஜனத்திற்குமுந்தியாகிலும், போஜனகாலத்திலாகிலும், ஔஷதங்களை பிரயோகிக்க வேண்டியது. பிராணவாதம், பித்தம் இவைகளில் மாலைபோஜனமானபிறகு ஔஷதங்களை பிரயோகிக்கவேண்டியது, கொமட்டல், விக்கல், இரைப்பு, விஷம்தோஷம், தாகம்இவைகளில் புசிப்புக்கு முன்பாகிலும், அல்லதுபுசித்தப்பிறகாகிலும்,ஔஷதங்களை பிரயோகிக்கவேண்டும், கர்ணரோகம், நேத்திரரோகம் நாசிரோகம், சிரோரோகம், இவைகளது வாதாதி தோஷங்கள் ஹரிக்கிறதற்கு பிரயோகிக்கும் ஔஷதங்களை, போஜனமத்திய காலங்களிலும், இரவிலும் பிரயோகிக்கவேண்டும்,

மாத்திரைவிதி.

மாத்திரைகள் செய்யும்பொழுது அதில் சேரும்சரக்குகள் எல்லாவற்றையும் சூரணித்து கலுவத்திலிட்டு, சொல்லி இருக்கிற அனுபானங்களால் கையில் ஒட்டாமலிருக்கும்படி அரைத்து மாத்திரைகள்செய்து அதிலுள்ள நீர் உலருகிறவரையிலும் நிழலில் உலர்த்தவேண்டியது. மாத்திரைகளில் ரசம், கந்தகம் முதலியவைகள் சேர்க்கவேண்டி இருந்தால், அவைகளை வெவ்வேறாக கல்வத்திலிடித்து பிறகு மற்றசரக்குகளை கூட்டிக்கொண்டு, சகலமும்கலக்கும்படிசெவ்வையாய் அரைக்கவேண்டியது.

சிநேஹபாகவிதி ஔஷதங்கூட்டும்முறை.

நெய்யி, எண்ணெய், சலம், த்ரவபதார்த்தங்கள், இவைகளை சரக்குகளின் கூட்டைவிட நான்குபங்கு அதிகமாய்சேர்க்கவேண்டியது. சரக்குகள் மிருதுவானவைகளாயிருந்தால் அவைகளுக்கு நான்குபங்கு அதிகமாய்ஜலத்தையாகிலும், சாற்றையாகிலும் சேர்க்கவேண்டியது. சரக்குகள் கடினமாய் இருந்தால் எட்டுபங்கு அதிகமாய் சேர்க்கவேண்டியது. மிகவும்கடினமான சரக்குகளாய் இருந்தால் பதினாறுபங்கு அதிகமாய் சேர்த்துக்கொள்ளவேண்டியது. தைலங்களில் சுரசங்களை கால்பாகமாகிலும், காலேஅரைக்கால் பாகமாகிலும், அரைபாகமாகிலும்சேர்க்கவேண்டியது. பால், தயிர், சுரசம், மோர் முதலியவைகளை தைலங்களில் கலக்கவேண்டியிருந்தால் அவைகளுக்குச் சமயிடையாய் சேர்க்கவேண்டியது. மேலும் சுரசங்களை தைலங்களில் கலக்கும்பொழுது அவைகள் அரைக்கால் பாகத்திற்கு அதிகமாய் இருக்கக்கூடாது, இவ்விதமாய் இடைகளை சமமாய்கூட்டி மந்தாக்கினியில் தைலங்களை காச்சவேண்டியது, தைலங்கள் மிளகுபதமான உடனே அல்லது அதை அக்கினியில்போட்டால் சப்தமொன்றும் இல்லாமலிருந்தால் பக்குவம் திரண்டதென்று அறிந்து பாண்டத்தை இரக்கி அனல் ஆறினவுடன் வடிக்கட்டி வைத்துக்கொள்ளவேண்டியது,

---

பஸ்பவிதி.

தாம்பிரம்முதலிய லோகங்களை சாஸ்திரங்களில் பெரியவர்களின் அனுபவத்தால் சொல்லியபிரகாரம் சுத்திசெய்யவேண்டியது, சுத்தியானபிறகு அவைகளை ரேக்குகளாயும், பொடிகளாயும் தட்டிக்கொண்டு மூலிகைகளை அரைத்துலேபனம் செய்து சிப்பியில்வைத்து அதின்வாயை சீலைமண்செய்து வெய்யிலில் உலர்த்தி கஜபுடம்போட அவைகள் பஸ்பமாகும், அந்த பஸ்பத்தையெடுத்து அனுபானவிசேஷங்களால் அரைத்து வில்லைதட்டி சூரியபுடம்வைத்து, மறுபடியும்மூசையில்வைத்துசீலைமண்செய்து புடம்வைக்க பஸ்பமாகும், இதேமாதிரியாய் பிரதிபுடத்திலும் செய்யவேண்டியது,

இக்கலியுகத்து சனங்கள் மிகவும் துர்பலராயும், மந்தாக்கினியுடையவர்கள். ஆனதால், தேசம், காலம், வயது, பிரகிருதி தேகதத்துவங்களை செவ்வையாய் அறிந்து வைத்தியன் ஔஷதங்களை பிரயோகிக்கவேண்டியது.

கல்வங்கள் லட்சணம்.

கருங்கல்வத்தில் ஔஷதங்களரைத்து உட்கொண்டால் வலிவும் ஆரோக்கியமும் உண்டாம், வெள்ளைகலுவத்தில் பலம் க்ஷீணிக்கும். பச்சைகலுவத்தில்திரிதோஷசமனமாகும். சிவப்பு கலுவத்தில் திரிதோஷங்கள் உண்டாம்.

116966

பத்திய பிரசம்சை.

ரோகிக்கு பத்தியத்தைவிட வேறு மருந்து கிடையாது பத்தியமில்லாதவனுக்கு ஔஷதம் பிரயோகங்களால் பிரயோசனமில்லை. ஆகையால் பத்தியத்துடன் ஔஷதங்களை அருந்தவேண்டியது.

சிகிச்சைபேதங்கள்.

தெய்வசிகிச்சை. ரசம், கந்தம், பாஷாணம் முதலிய [illegible] வர்க்க ஔஷதங்களைகொண்டு செய்யும் சிகிச்சை.

மானிஷசிகிச்சை. ஔஷதிமூலிகைகளைக் கொண்டு செய்யும் சிகிச்சை.

ராக்ஷசசிகிச்சை. காரம், க்ஷாரம், அக்கினி, சஸ்திரம் இவைமுதலியவைகளைக்கொண்டுசெய்யும் சிகிச்சை.

மாந்திரீகச்சிகிச்சை. சித்தசிகிச்சை, மந்திரம் பூஜை ஜபம் முதலியவைகளைக் கொண்டுசெய்யும் சிகிச்சை.

ஆரோக்கியபிரசம்சை

நோய் அன்றி இருக்க

சஹஜமாய் வருஷத்திற் கிரண்டுவிசை வாந்திக்கும் மூன்றுவிசை பேதிக்கும் நான்குவிசை நசியமும், ஆறுவிசை அஞ்சனமும், செய்துக்கொள்ள வேண்டியது, தேகத்திலிடத்தத்துவங்களை அறிந்து யுக்தாஹாரமாய் வமனவிரேசனங்களை அருந்தவேண்டியது.

தைலாப்யஞ்சனகுணம்

தைலாப்யஞ்சனத்தால் சர்மகதரோகமும், பாதப்யஞ்சனத்தால் நேத்திரரோகமும், நேத்திராப் யஞ்சனத்தால் தந்த தோஷங்களும், ஸ்ரோத்ராப்யஞ்சனத்தால் தந்தரோகங்களும், சிரோப்யஞ்சனத்தால் சகலரோகங்களும், தேஹாப்யஞ்சனத்தால் சர்மகத சகலரோகங்களும் நசிக்கும்.

உ

தேவிசகாயம்.

திருமூர்த்திகளின்துதி

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்,

பத்தொடொரு பான்மூன்றிற் பெருகுசுரா தியநோய்ப்
பரப்பையெல்லாம்
கொத்தொடுத்துரைக்குமிந்த நூற்புகலத் தந்தைகடை
கூடிக்கையில்
ஒத்தொருநா மிக்கழலும் வாதமிந்த வையம்போ
லொன்றிற் றோன்றி
முத்தொழிலைப் புரியுமொரு மூவிரு பதமலரை
முடிமேற் கொள்வாம்.

வைத்தியன்லட்சணம்.

கிரமமாய் ஆசாரியனிடத்தில்வைத்தியசாஸ்திரத்தை அப்பியசித்தவனும், அபிருதஹஸ்தனும், சிகிச்சைசெய்வதில் நுட்பமான புத்தியுடையவனும், பேராசையற்றவனும், தைரியசாலியும், பிராணிகளிடத்து தயையுடையவனும், தேஹதத்துவசாஸ்திரம், பதார்த்தகுணசாஸ்திரம், யோகசாஸ்திரம் செவ்வையாய் அப்பியசித்து, தன் தேகத்தைப்போல் இதரதேகத்தை பாவித்து பரகாயபிரவேசத்தால் இதரசரீர தத்துவங்களை அறிதல்போல், ரோகியினது சரீரதத்துவங்களை அறிந்து சிகிச்சை பண்ணுகிறவன்தான் மஹாவைத்தியன் அவன்தான் ஈஸ்வரனுக்கு சமானன்.

துஷ்டவைத்தியலட்சணம்.

எந்தவைத்தியன், சாஸ்திரானுபவமில்லாது சகலமும் தெரிந்தவன்போல் நடித்துக்கொண்டு சிகிச்சைசெய்ய முயல்கின்றானோ அவனை விஷத்தைப்போல் பார்க்கவேண்டியது.

தூதபரீக்ஷை: கூப்பிடவருபவன் பரீக்ஷை.

குருடு, கூன், செவிடு முதலிய அங்கவைகல்யம் உடையவன், பயமுள்ளவன், தீனன், கெட்டியாயும், அமங்களமாயும்பேசுவோன், ரூபவீனன், மலினவஸ்திரத்தை தரித்தோன், சஸ்திரங்களை தரித்தோன், கோலை கையேந்தினவன், ரோகபீடிதன், எப்பொழுதும் கெட்டசெய்கைகளை செய்வோன், சிகப்புவர்ண புஷ்ப மாலிகாலங்கிருதன், சிகப்பு சந்தனத்தைப் பூசிக்கொண்டவன், சர்வாங்கமும் தைலத்தைப் பூசிக்கொண்டவன், சேற்றைப்பூசிக்கொண்டவன், அசுசியாயிருப்போன், கருப்புசாமரத்தை தரித்தவன், தான்வரும்பொழுது மற்றொருவனைத் துணையாய் இட்டுக்கொண்டுவருபவன், ஜடைதரித்தவன், பெண்கள், கிழவன், நாலுவிதவர்ணமுள்ள சரத்துணியையாவது அல்லது ஒரேவஸ்திரத்தை தரித்தவன், கழுதை, ஒட்டகம், எருமை, இவைகளின்மீது சவாரிசெய்துவருபவன், சரஹீனன், தூரத்திலிருந்து கூப்பிடுவோன் முதலிய லக்ஷணங்களுடையவன் ரோகியிடத்திலிருந்து வைத்தியனைக் கூப்பிடவந்தால், அந்தபிணியாளியிடத்திற்கு வைத்தியன் போகவேண்டியதில்லை.

அசுபசகுனங்கள்

வைத்தியன்ரோகியிடத்திற்குபோகும்பொழுது, துர்க்கந்த பதார்த்தங்கள், தொளைப்புள்ள பதார்த்தங்கள், உப்பு, பச்சைப்பயிர், எள்ளுமுதலான கருப்புதானியங்கள், வெல்லம், விறகு, விரட்டி, கல்கள், அமேத்தியம், மிகவும் துர்க்கந்தமாய் நாள்சென்று கெட்டபதார்த்தங்கள், சேறு, தைலம், செப்பி, வெற்றி பாத்திரங்கள், கலை, உரிகள்முதலியவைகள் தென்பட்டாலும், துர்பாஷைகளைபேசுவோன், தும்புகிறவன், சுக்குசலிட்டு அழுகிறவன், வாந்திசெய்வோன், சண்டாளன், குரூரமான ஆயுதங்களைதரித்தவன் முதலியவர்கள்வெத்திர்நோக்கினாலும், குரூரமான பக்ஷிகள், நாலுக்கால் ஜந்துக்கள் இவைகள் ஒன்றுக்கொன்று சண்டையிட்டு உண்டாயிடுகிற சத்தத்தைக் கேட்டாலும், யுத்தம் கலகம், அபாயம் இவைகளைப்பார்த்தாலும், மேடைகள், வீடு, மண்டபங்கள் பூரண கும்பங்கள், தற்செயலாய் பூமியின்மீது

விழுந்தாலும், குதிரை, ஆசனம், படுக்கை, முகம், குப்புறக்கிடக்கிறதைப்பார்த்தாலும், உடும்பு, ஓணான், பூனை, குரங்குமுதலியவைகள் மார்க்கத்தில் குறுக்கிட்டாலும், ரோகியின் வீட்டிற்குப் புகும்பொழுது அவ்வீட்டிலிருந்து மங்களகரமான வஸ்துக்கள் வெளியில்வந்தாலும் இவைகளெல்லாம் அசுபசகுனங்கள் ஆகையால் வைத்தியன் அப்பிணியாளி யிடத்திற்குப் போகப்படாது,

---

சுபசகுனங்கள்.

வைத்தியன் ரோகிவீட்டிற்குப் போம்பொழுது, புருஷன் இடதுபக்கத்திலிருந்து வலதுபக்கத்திற்கும், பெண், வலதுபக்கத்திலிருந்து இடதுபக்கத்திற்குப்போனால் சுபமுண்டாகும், வினைதீரும், அனல் ஆண்யானை, ஆண் கோவேறுகழுதை, பெண் கறுப்புநாய் இவைகள் எதிரிட்டால் அசுபமுண்டாகும். குடை, பசு, பிராம்மணர்கள், கன்னிகை, மாமிசம், கள், வாரவனிதை கோரோஜனம், செவிக்கின்பங்கொடுக்கும் சிருங்காரரச பிரதானமானபாட்டு, வாலிபன், உத்தமனானயோகி எதிரிட்டால் சுபமுண்டாகும், அதிசீக்கிரத்தில் நோய்கள்தீரும்.

சரீரலட்சணம்.

இந்தச்சரீரம் (௭௨) ஆயிரம் நரம்புகளும், (௩½) கோடி ரோமங்களும், சர்மதாது, ரத்ததாது, மாமிசதாது, மேதோதாது, அஸ்திதாது, மச்சதாது, சுக்கிலதாது என்கிற (௭) தாதுக்களும், பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்கிற (௫) பூதங்களும், அவைகளாலான (௨௫) தத்துவங்களும், (௫) கோசங்களும், (௬) ஆதாரங்களும் என்கிற இவைகளுடன்கூடி (௯௬) அங்கலமுயரமாயும் இருக்கின்றது.

தேகதத்துவசாஸ்திரசங்கிரகம்.

அன்னபானாதிகளின் இரசத்தால் உண்டான இந்தமனித தேகத்தின்மேல்பாகத்தில் (௫) கோசங்கள் இருக்கின்றன. அவை

களில், வயிற்றில் அன்னமயக்கோசம், மார்பில் பிராணமயக்கோசம், சிரசில் மனோமயக்கோசங்கள் இருக்கின்றன. இந்தமனோமயக்கோசத்தில் விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்கிற இரண்டுகோசங்கள் கலந்திருக்கின்றன.

இந்ததேகம் (௩௱) நரம்புகள், (௩௱) அஸ்திகள், (௱எ) மர்மஸ்தானங்கள், (எ௱) போலுநரம்புகள், (உ௱) இரத்தவியாபகமான போலுநரம்புகள், (ரு௱) மாமிசபண்டைகள், (௰௬) கண்டநரம்புகள் என்கிறவைகளுடன் சேர்ந்திருக்கிறது. யௌவனகாலத்தில் (ருரு) பலம் இரத்தம் தேகத்தில் இருக்கிறது. ஆண்தேகத்தில் (௯) துவாரங்களும், பெண்தேகத்தில் (௰௨) துவாரங்களும் இருக்கின்றன. இச்சரீரத்தில் (எ) கலைகள், (எ) ஆசயங்கள், (எ) தாதுக்கள், (எ) உபதாதுக்கள், (எ) பொரைகள் இருக்கின்றன.

மேலும், மார்பில் சிலேத்துமதாது, ஜீவரக்தாசயம் என்கிறவைகள் இருக்கின்றன. இவைகளுக்குக்கீழ் வஸ்தியென்கிற மூத்திராசயம் இருக்கிறது. ஆனால் பெண்களுக்கு (௩) ரக்தாசயங்கள் அதிகமாய் இருக்கின்றன.

வாதமானது வீரியவந்தமாயும், ரஜோகுணசுருபமாயும், சீதளமாயும் இருக்கிறது. பித்தமானது, உஷ்ணமாயும் சத்துவகுண சுருபமாயும் இருக்கிறது சிலேஷ்மமானது தாமதகுணசுருபமாயும், குருவாயும், சீதளமாயும் இருக்கிறது. சிரா, தமனி என்கிறநாடிகள், சுயஸ்தானத்தில் இருக்கின்றன,

இரத்தவிஷய விவரணம்.

இப்பூமியின்கண், மனிதனுல் புசிக்கப்பட்ட அன்னபானாதிகளால் ஜனித்த ரசமானது, முதலில் சுத்திப்போதும், பிறகு அதிசூக்ஷ்மமான சஸ்ருபமாயும், மாறுகின்றது, பிறகு அந்தரசம் பிராணவாயுவால் அடிக்கப்பட்டு சுத்தமாகி, தேஜசுடன் கலந்து, ரக்தமாகிறது. அந்தரக்தத்தையே பிராணரசமென்

றும், பிராணுதாரத்திற்குக் காரணமாகையால் ஜீவரசமென்றும் சொல்லுகிறார்கள். இது இடைவிடாமல் தேகமுழுதும் வியாபித்துச் சஞ்சரித்துக்கொண்டிருக்கிறது. இந்த ஜீவரசமானது விஷத்தால் பிறந்த நுரையுடனும் அதிகரித்த சிதளவிஷத்தாலும் சேருமாகில் அப்பொழுது அந்தந்த சிலேஷ்மபித்தத்தால் கலந்து மார்பில்கட்டி கட்டும், இப்படிரத்தம் ஸ்தம்பித்திருக்கும்பொழுது, தேகியானவன் அசைவற்றமரம்போல்கிடப்பான் ஹிருதயத்திலுள்ள ரத்தகோசம் ஸ்தம்பித்தால், அப்பொழுதே பிராணன்போய்விடும். ஆகையால் மார்பில் இரத்தக்கட்டியாய் கட்டியிருக்கும்பொழுதே, உஷ்ணமான ஔஷதங்களை பிரயோகிக்கவேண்டியது. அப்படி பிரயோகிப்பதால் ரத்தமானது கரைந்து தேகமுழுதும் வியாபித்து, தேகியை அசையச்செய்யும் சாதாரணமாய் ரத்தமானது தேகத்தில் இருக்கவேண்டிய அளவிற்கு அதிகரித்தாலும், குறைந்தாலும் நோயல்லது மரணமாவதுசம்பவிக்கச் செய்யாமற் போகாது ஆகையால் பிராணதாரத்திற்கு ரத்தவியாபகமன்றி வேறுதாரங்கிடையாது. இதை வைத்தியர்கள் முக்கியமாய் கவனிக்கவேண்டியது.

ஜடராக்கினி விசாரம்.

தேக போஷணைக்காக புசிக்கப்பட்ட அன்னபானாதிகள் போய் சேருகிற இடத்துக்கு (ஆமாசயம் - அன்னாசயம்) என்றுபேர். ஆமாசயத்தில் ஜனித்து அன்னபானாதிகளைத் தஹிக்கிறதிரவத்துக்கு, (ஜடராக்கினி உதராக்கினி) என்றுபேர். அந்தஉதராக்கினி கிரமமாய் இருந்தால் சமாக்கினியென்றும், இடந்தப்பினால் விஷமாக்கினியென்றும், விசேஷபதார்த்தங்களை தஹிக்கும்படி அவ்வளவு சக்தியுண்டாயிருந்தால் தீக்ஷணாக்கினியென்றும், சாதாரணமாய் உண்ணுகிற உண்டியை தஹிக்க வல்லமையில்லாமலிருந்தால் மந்தாக்கினியென்றும்பெயராம்.

வாதாதிப்பிரகிருதிபேத விவரணம்.

வாதமானது. வெப்பம், இலேசத்துவம், குளிர்ச்சி, கறகறப்பு, அணுத்துவமாகியவைகளை ரூபமாகப்பெற்றிருக்கிறது. காது, நாபியின்கீழ், இடுப்பு, தொடை, எலும்பு, சருமம் முதலிய இடங்களில் சஞ்சரித்துக்கொண்டு நாபியின்கீழ் ஸ்தானத்திலேயே குடிகொண்டிருக்கிறது. மேலும் சகலமும்பெற்றிருக்கிறதேகத்தை மனோச்சாகம் உசுவாச நிசுவாசங்கள், அபானவாயு, தும்மல், மலம், மூத்திரம், கொட்டாவி, பசி, தாகம், இருமல், நித்திரை, கண்ணீர், சுக்கிலம், சுவாசம், வாந்தி, இளைப்பு, சப்த தாதுக்களின் சுபாவங்கள், நேத்திராதி இந்திரியங்களின் சுபாவங்கள், ஆகிய இவைகளைக்கொண்டு போஷித்து தான்விகாரமில்லாமலிருப்பதாம்.

வாயுவானது. பிராணன், உதானன், வியானன், சமானன், அபானன், என (௫) பிரிவாயும், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன் என்ற (௫) உபவாயுக்களாயும் விவரிக்கப்பட்டு இருக்கிறது.

பிராணவாயுவானது. தலையே வீடாகக்குடிகொண்டு, மார்பிலும், கழுத்திலும், சஞ்சரித்துக்கொண்டு, இருதயம், பஞ்சேந்திரியங்கள், சித்தம், புத்தி என்பவைகளை தன்வசப்படுத்திக்கொண்டு, உமிழ்தல், இருமல், ஏப்பம், நிசுவாசம், அன்னத்தையுட்செலுத்தல், என்னும் இச்செய்கைகளை யுண்டாக்கும், இது உசுவாச நிசுவாசரூபமாகவிருக்கும் காரணத்தால் பிராணவாயுவென்பெயர்பெற்றது. (பிராணன்-என்பது, சுவாசரூபம்)

உதானவாயுவானது. மார்பே இடமாகவிருந்து மூக்குகண்டம் தொப்புள் என்கிற மூன்றிடங்களில் சஞ்சரித்து, பேச்சுண்டாவதற்குக்காரணமாகி சரீரத்திற்குவன்மை,ஒளி, நினைப்புகளென்னுங்குணங்களை உண்டாக்குகிறது. (உத்-என்பது, மேல்)

வியானவாயுவானது. இருதயத்தையே இடமாக்கிக்கொண்டு தலைமுதல் பாதம்வரைக்குஞ் சஞ்சரித்துக்கொண்டு,நடத்தல்,

குனிதல், நிமிர்தல், இமைத்தல், விழித்தல் என்னுஞ் செய்கைகளை உண்டாக்குகிறது. (வியானன்-என்பது, பரவுதல்)

சமானவாயுவானது. நாபிஸ்தானமே இடமாக்கிக்கொண்டு வயிறுமுழுதிலுஞ் சஞ்சரித்துக்கொண்டு புசிக்கும் அன்னபானாதிகளை உள்ளிழுத்துக்கொண்டு அவைகளைச் சேரணிப்பித்து, சாரம்வேறு, திப்பிவேறாகப்பிரித்து, மலமூத்திரமாகச்செய்கின்றது (சமம்-என்பது, நடு)

அபானவாயுவானது. குதஸ்தானமே இடமாக்கிக்கொண்டு இடுப்பின்பூட்டிலும், ஆண்குறி, பெண்குறிகளிலும், அடிவயிற்றிலும், அடித்தொடையிலுஞ் சஞ்சரித்துக்கொண்டு, சுக்கிலம், சோணிதம், மலம், மூத்திரம், கருப்பம் என்னுமிவை முதலியவைகளை வெளிப்படுத்துகின்றது. (அபானம்-என்பது, கீழ்)

இப்பஞ்சவாயுக்களுமல்லாமல், வாயிலிருந்து வாந்திபண்ணச்செய்வது (நாகனென்றும்) நேத்திரத்திலிருந்து விழிக்கச்செய்வது (கூர்மனென்றும்) மூக்கிலிருந்து குருகுருத்துத் தும்மச்செய்வது (கிருகரனென்றும்) கொட்டாவிகொள்ளச்செய்வது (தேவதத்தனென்றும்) வீங்கச்செய்வது (தனஞ்செயனென்றும்) ஐந்து உபவாயுக்கள் இருக்கின்றன.

பித்தமானது. அதிஉஷ்ணம், இலேசத்துவம், பளபளப்பு, விரேசனம், சலத்தைதருதல், ஆகிய இவைகளை ரூபமாகப்பெற்றிருக்கின்றது. உந்தி, கண், ஆமம், ரசதாது, உதிரம், வியர்வை சருமம், குழியையுணர்த்த நாவிலூறுகின்றஜலம் ஆகிய இவ்விடங்களில் சஞ்சரித்துக்கொண்டு, விசேஷமாக உந்திஸ்தானத்திலேயே இருக்கும். மேலும், சீரணம், உஷ்ணம், பார்வை, பசி தாகம், சுவை, காந்தி, புத்தி, ஞாபகம், சவுரியம், மிருது முதலியகுணங்களைக்கொண்டு தேகத்தைப்போஷித்துத் தான் விகாரமில்லாமலிருக்கின்றது. அது அனலம், இரஞ்சகம், சாதகம், ஆலோசகம், பிராசகம் என ஐந்து பிரிவாய் இருக்கின்றது.

அனிலபித்தமானது. (ஆமாசயஸ்தானத்துக்கும் - பிதகட்டிஸ்தானத்துக்கும் - நாபிஸ்தானத்துக்கும்) மத்தியில் இருந்து

பஞ்சபூதங்களுக்குப் பிரதானமாகித் தனது அக்கினியால் சகல பதார்த்தங்களை வறளப்பண்ணி, சிரணிக்கச்செய்து. மலம்சலம் வெவ்வேறாகப்பிரித்து மற்றநான்குவகைப் பித்தங்களுக்குபலத்தைக்கொடுத்து காப்பாற்றிவருகிறது. அப்படிக் காப்பாற்றிவருவதால் இதற்கு பாசகபித்தமென்றும் சொல்லுவார்கள். (அனலம்-என்பது, அக்கினி) (பாசகம்-என்பது, அன்பு)

ரஞ்சகபித்தமானது. சிதக்கட்டு ஸ்தானத்திலிருந்து ரசதாதுவைப்போஷித்துவருகிறது. (ரஞ்சகம்-என்பது,போஷித்தல்)

சாதகபித்தமானது. இதய ஸ்தானத்தில் வாசம்பண்ணிக்கொண்டு, அறிவு, புத்தி, அபிமானம் முதலானவைகளைக் கொண்டு இஷ்டமான பிரயோஜனங்களைச்சாதித்துவருகிறது. (சாதகம்-என்பது, துணைக்காரணம்)

ஆலோசகபித்தமானது. கண்களில்வாசகம் பண்ணிக்கொண்டு எல்லாப்பொருள்களையும் நன்றாய்த் தெரியப்படுத்துகின்றது. (ஆலோசகம்-என்பது, அறிவிப்பு)

பிராசகபித்தமானது. சருமத்தில் வாசம்பண்ணிக்கொண்டு சருமத்தின் ஒளிகெடாமல் காந்தியை புண்டுபண்ணுகின்றது (பிராசகம்-என்பது, காந்தி)

சிலேஷ்மமானது. வழுவழுப்பு, சீதளம், கனத்தல், மந்தத்துவம், நாறுதல், மினுமினுப்பு, ஸ்திரம் ஆகிய இவைகளை ரூபமாகப் பெற்றிருக்கின்றது. மார்பு, சிரசு, நாசி, நா, கண்டம்,புத்தி, கணுக்கள், உரோமம், ஆமம், ரசதாது, மேதோதாது ஆகிய இவ்விடங்களில் சஞ்சரித்துக்கொண்டு விசேஷமாக மார்புஸ்தானத்திலேயே இருக்கின்றது. மேலும், மழமழப்பு, அசையாமை, கீல்களுக்குறுதிமுதலியகுணங்களைக்கொண்டு தேகத்தைப் போஷித்துத் தான் விகாரமில்லாமலிருக்கின்றது. இது அவலம்பகம், கிலேதகம், போதகம், தருப்பகம், சந்திகம் என ஐந்துபிரிவாகி இதயஸ்தானத்தி லிருக்கின்றது.

அவலம்பகசிலேஷ்மமானது. இதயஸ்தானத்திலேயேவாசம்பண்ணிக்கொண்டு, தனது சுபாவபராக்கிரமத்தைக் கொண்டு

திரிகஸ்தானத்துக்கும் அதாவது (முதுகின்கீழ் நடுத்தண்டெலும்பின் மூட்டும் இரண்டுதொடைகளி னெலும்பின் மூட்டுஞ்சேர்ந்திருக்கும் இடமாம்) அன்னசாரத்தைக்கொண்டு இதயஸ்தானத்துக்கும், சலந்தொழிலைக்கொண்டு மற்ற நான்குசிலேஷ்மங்களுக்கும், ஆதாரமாயி இருக்கின்றது. இது ஒவ்வொருவேளை பிளகியும், கீல்களைவிட்டுநீங்கியும், பின்புகூடியும் இருக்கும். இப்படி இருந்தாலும் நிகழ்ச்சி ரூபமாகவே இருக்கும். இந்தத் தொழிலைக்கொண்டு மற்றநான்கு சிலேஷ்மங்களுக்கும் ஆதாரமாய் யிருக்கின்றது. (அவலம்பகம்-என்பது, பற்றுதல்)

கிலேதகசிலேஷ்மமானது. ஆமாசயஸ்தானத்திலேயேவாசம்பண்ணிக்கொண்டு உண்ணப்பட்ட அன்னபானதிகளை மிருதுவாக்குகிறது. (கிலேதகம்-என்பது, ஈரம்)

போதகசிலேஷ்மமானது. நாவில்வாசம்பண்ணிக்கொண்டு உண்ணுகிற அறுசுவைகளையும் தெரிவிக்கின்றது. (போதகம்-என்பது, உணர்தல்)

தருப்பகசிலேத்துமமானது. சிரசில்வாசம் பண்ணிக்கொண்டு இரண்டுகண்களுக்கும் குளிர்ச்சியைத் தருகின்றது.(தருப்பகம்-என்பது, சுகம்)

சந்திகசிலேஷ்மமானது. கீல்களில் வாசம்பண்ணிக்கொண்டு சுபாவமாக சகலகீல்களையுந் தளரச்செய்கின்றது. (சந்திகம்-என்பது, கீல்)

வாதத்துக்கு பாதம்முதல் நாபிவரைக்கும் இடமென்றும், பித்தத்துக்கு நாபிமுதல் கண்டம்வரைக்கும் இடமென்றும், சிலேஷ்மத்துக்கு கண்டம்முதல் சிரசுவரைக்கும் இடமென்றும், சிலநூலாசிரியர்கள் எழுதியிருக்கிறார்கள். அன்றியும்மலத்தைப் பற்றியது வாதமென்றும், மூத்திரத்தைப்பற்றியது பித்தமென்றும், விந்துவைப்பற்றியது சிலேஷ்மமென்றும், சிலசாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

வாதத்தின் தொழில்,

சரீரத்தில் கருநிறம், செந்நிறம், சஞ்சரிப்பு, பிருத்தல், முடக்குதல்,நோவு, நித்திரையின்மை, இளைப்பு, ரோகம், குத்தல்,

குடைச்சல், துவைத்தல் போலும், பிடித்தல்போலு மிருக்கு தல், இமிர், முறுக்குதல், குன்றல், புரளல், சங்கோசஷம், தாகம் நடுக்கல், கடித்தல், குழிவிழுதல், களைத்தல், அவயவ பின்னம், திருகிக்கொள்ளல், அசைதல், மரம்போற்கிடத்தல், துவர்ப்பாக வாய்நீரூறல் என்னும் இக்குணங்களை யுண்டாக்குதலாம்.

பித்தத்தின்தொழில்.

சரீரத்தில் மஞ்சள்நிறம், வெப்பம், தாகம், சோகமில்லாது போலிருத்தல், சீரணவேளையிற் காங்கைசெய்தல், வியர்வை எப்போதும் வியர்வைகசிதல், ஞாபகம், கோபம், அசைவின்மை, மூர்ச்சை, அமைதிப்பு, புளிப்பாகவும், கசப்பாகவும், காரமாகவும், *வாய்நீரூறல், என்னு மிக்குணங்களை யுண்டாக்குதலாம்.

சிலேஷ்மத்தின்தொழில்.

சரீரத்தில் சுவேதநிறம், வழுவழுப்பு, பாரிப்பு, இளைவு, சீதளம், மரியாதை, இல்களைசையாமை, கர்வம், மந்தகுணம், மினுமினுப்பு, விரைவில் சீரணித்தல், அதித்திரை, உப்பாகவும், தித்திப்பாகவும், வாய்நீரூறல் என்னும் இக்குணங்களை யுண்டாக்குதலாம், இதுவெகுநாள்நீடித்து உபத்திரவம் பண்ணத்தக்கதென்றறிக.

நாடி, ஸ்பர்சம், ரூபம், சப்தம், நேத்திரம், மலம், மூத்திரம், நாக்கு என்கிற எட்டுவிதப்பரிட்சைகளால் தேகத்தின் தோஷங்களையறியலாம்.

நாடிபார்க்கும்விதி.

வைத்தியன் ரோகியின்வலதுகையை முழங்கைமுதல், தனது இடதுகையால் செவ்வையாய்ப்பிடித்து அந்தக்கையின் அங்குஷ்டமூலத்தில் உட்புறமத்தியில் தனதுஇடதுகைவிரல்களால் வாயுவின்கதியைபரிட்சித்து ரோகநிதானம் அறியவேண்டியது.

தைல அப்பியங்கனஸ்நானம் பண்ணினவனுக்கும், தூங்கியெழுந்தவனுக்கும், புசித்தவனுக்கும் ஆற்றின் வெள்ளத்தைப்போல் நாடி அதிவேகமாய் நடக்குமாகையால் அக்காலங்களில் நாடிபரீக்ஷிக்கக்கூடாது.

ஸ்திரீபுருஷ நாடிபேதம்.

பெண்களுக்கு இடதுகையிலும் ஆண்களுக்கு வலதுகையிலும் நாடி பரீட்சிக்கவேண்டியதென்று பரமேஸ்வரர்பார்வதிக்கு அருளினார். ஆண்புருஷனுக்குவலதுகரமும் அபலைகளுக்கு யிடதுகரமும் பரீட்சிக்க வேண்டியதென்று உமாதேவியார் கேட்கச் சொல்லுகிறார்.

ஓ பெண்களினாயகமே, கூர்மமானது பெண்களுக்கு மேல்நோக்கியும், புருஷர்களுக்குகீழ்நோக்கியுமிருக்கிறபடியால் ஆண்பெண்களுக்கு நாடிகள்வித்தியாசமாயிருக்கும். ஆகையால் புருஷனுக்குவலதுகையும், பெண்களுக்கு இடதுகையும், பேடியாயிருந்தால் அவனது குறிப்பை அநுசரித்து வலது அல்லது இடதுகை நாடியை பரீட்சிக்கவேண்டியது.

ஜீவசாட்சி நாடிகதனம்.

ஓ பெண்ணே, அங்குஷ்ட மூலத்தின்நாடி ஜீவசாட்சியென்று சொல்லப்படுகின்றது. அதின் கமனவிசேஷத்தால் ரோகியின் சுகதுக்கங்களை அறியவேண்டியது. மேலும் அதற்கு ஸ்நாயுவென்றும், நாடியென்றும், ஹிம்ஸ்ராவென்றும், தமனியென்றும், தாமனியென்றும், தந்துகியென்றும், ஜீவிதஞ்ஞாவென்றும், சிரவென்றும் பெயர்களுண்டு.

நாடிசின்னம்.

ரோகியின் மணிபந்தத்தில் வைத்தியன் பரீட்சிக்கும்பொழுது (தனது அங்குளிவிரல் - பெருவிரலின்பக்கத்துவிரல்) ஸ்ப

ரிசிக்கும்நாடி வாதமென்றும், (மத்யமவிரல் நடுவிரல்) ஸ்பரிசிக்கும்நாடி பித்தமென்றும், (அனாமிகை அதின் பக்கத்துவிரல்) ஸ்பரிசிக்கும் நாடி சிலேத்துமமென்று அறியவேண்டியது. ஓ கௌரீ, முன்பு உனக்குயோகதத்துவார்த்தங்களைபோதிக்கும்பொழுது துயில்கொண்டதுபோல் இப்பொழுது யிராமல் கவனமாய்க் கேட்டிருவென்று சொல்லுகிறார். நடுவிரலில்நாடி அதிவேகமாய் நடந்தால் வாதமென்றும், தர்ஜனியில்நடந்தால் பித்தமென்றும், அனாமிகையில்நடந்தால் சிலேத்துமமென்றும், மத்யம தர்ஜனிகளில் கலந்து அதிவேகமாய்நடந்தால் பித்தவாதமென்றும், மத்யமஅனாமிகைகளில் கலந்து அதிதீவிரமாய் நடந்தால் வாத சீதளமென்றும், மத்யமாங் குளிநாடி நடக்காமல் அனாமிகைதர்ஜனி நாடிகள்கலந்து அதிவேகமாய்நடந்தால் பித்தசீதளமென்றும், வாதபித்த சிலேத்துமங்கள் மூன்றும் நடந்தால்திரிதோஷம் அல்லது சன்னிபாதமென்றுஞ்சொல்லவேண்டியது. வாயுவீசும்பொழுது அதின் எதிரிலுள்ளபதார்த்தத்தை அதிகமாயும், பின்னுள்ளபதார்த்தத்தை மந்தமாயும், அசையச்செய்வதுப்போல் மத்தியிலுள்ள வாதநாடி முதலில் இருக்கும் பித்தநாடியை அதிகமாயும், பின்னாக இருக்கும் சிலேத்துமநாடியை மந்தமாயும் அசையச்செய்கின்றது.

அஷ்டநாடிஸ்தானங்கள்,

ஹஸ்தத்வயகதநாடிகள் இரண்டு, பாதத்வயகதநாடிகள் இரண்டு, கழுத்தின் இருபாரிசத்திலுள்ள நாடிகள் இரண்டு நாசிகையின் இருபாரிசத்திலுள்ள நாடிகள் இரண்டு எனநாடிகள் எட்டு. பெருவிரலின் மணிக்கட்டுக்குக் கீழ் மூன்று அங்குலஸ்தானங்களிலும், பாதத்தை அநுசரித்த நாடிகள் குல்பபிரதேசம் அதாவது காலின் மணிக்கட்டுக்குக்கீழ் மூன்றுஅங்குலஸ்தானங்களிலும், கழுத்தில் அநுசரித்தநாடிகள்இருபக்கத்தில் இரண்டு அங்குலஸ்தானங்களிலும், நாசிகையில் அநுசரித்தநாடிகள் ஒரு அங்குலஸ்தானங்களிலும் ஆக இவ்வெட்டுஸ்தானங்களிலும் பிராணவாயுவு அநுசரித்திருக்கின்றது.

அசீரணம், மந்தம், சுரம், பசி, வாதபித்தசிலேத்துமங்கள் என்னுமிவைகளை கைநாடிகளால் அறியவேண்டியது.

அகந்துகசுரம், தாகம், ஆயாசம், புணர்ச்சி, பலஹீனம், பயம், சோகம், கோபம் என்னுமிவைகளைக் கழுத்துநாடிகளால் அறியவேண்டியது.

மரணம், ஜீவிதம், காமம், நேத்திரரோகம், தலைநோவு, காதுநோவு, முகரோகம் என்னுமிவைகளை நாசிகையின் நாடிகளால் அறியவேண்டியது.

ஸ்வஸ்தநாடிலட்சணம்,

சாதாரணமாய் நோயில்லாதமனிதனது நாடிக்கு (மூலதா) என்று சொல்லப்படும். அந்த நாடி சர்ப்பத்தின் அசைதல்போலும், ஸ்திரமாயும், பலிஷ்டமாயும் நடக்கும். காலையில்சீதளமாயும், மத்தியானத்தில் உஷ்ணமாயும், மாலையில் தீவிரமாயும் நடக்கும்.

ரோகநாடி,

நாடி வாதரோகத்தில் குருக்காயும், பித்தரோகத்தில் சஞ்சலமாயும், சிலேத்துமத்தில் ஸ்திரமாயும் துவந்தத்தில் கலப்பாயும் நடக்கும்.

வாதத்தில்நாடி பாம்பு அட்டைப்போலும், பித்தத்தில் காக்கை, ஊர்க்குருவி, தவளைபோலும், சிலேத்துமத்தில் அன்னம் மயில், புறா, கோழி இவைகளைப்போல் நடக்கும்.

வாதபித்தத்தில் நாடி சர்ப்பத்தைப்போலும், தவக்களைப் போலும் நடக்கும்.

வாதசிலேத்துமத்தில் பாம்பு. அன்னம்இவைகளைப்போல் நடக்கும்,

பித்தசிலேத்துமத்தில் மண்டூகம்,மயில், இவைகளின்நடையாயும், சூட்சுமமாயும், சீதளமாயும் இருக்கும்

திரிதோஷத்தால் உண்டானசன்னிபாதத்தில்நாடிமந்தமாயும் நின்றுநின்றுசூட்சுமமாயும் புஜத்தின்மீதிலும்மணையிலும் அநேகவிதமாய்நடக்கிறதுபோலும் இல்லாததுபோலும் தோன்றும்.

எவனுடையநாடி தோஷங்கள் அதிகரித்து மிகவும் ஸ்திரமாயும், மந்தமாயும், சூட்சுமமாயும், குறுக்காயும் நடக்குமோ அந்தநாடியை அசாத்தியநாடியென்று அறியவேண்டியது.

எந்தநாடி வியாகூலமாயும், சிதிலமாயும், மந்தமாயும்மந்தமாய் நின்றுநின்றும் இருப்பிடத்தை விட்டுவிட்டும் நடக்குமோ அந்தநாடியை மரணகுறி நாடியென்று எண்ணவேண்டியது.

நாசிகைசீதளமாயும், கண்ணிமி இல்லாமலும், நாடிதன்னிடத்தைவிட்டும் இருக்குமோ அவன் அந்தக்ஷணத்தில் மரணமாவான்.

எவனுடையநாடி, தன்னிடத்தைவிட்டு கடுகுஅளவு அப்புரம் சலித்திருக்குமோ அவன்மூன்றுநாளையில்மரணமடைவான்

ஸ்பரிசலட்சணம்.

வாதரோகத்தில், சரீரம் உஷ்ணமாயும், பித்தத்தில் அதிக உஷ்ணமாயாகிலும், அல்லது அதிசீதளமாயாகிலும், சிலேத்துமத்தில் சீதளமாயும், துவந்தத்தில் பலவிதமாயும் இருக்கும்.

ரூபலட்சணம்.

சரீரமானது வாதரோகத்தில் கறுப்பாயும் பித்தத்தில்மஞ்சளாயும், அல்லது சிவப்பாயும், சிலேத்துமத்தில் வெண்மையாயும், துவந்தத்தில் கலப்பாயும், சந்நிபாதத்தில் அனேகவர்ணங்களாயும் இருக்கின்றது.

சத்தலட்சணம்.

வாதத்தில் சமமானவார்த்தைகள், பித்தத்தில்சிறிப்பு, பிதற்றல், சிலேத்துமத்தில்ஹீனசுரம், துவந்தத்தில், கலந்தவார்த்தை

ரோகோற்பத்தி.

சாதாரணமாய் மனிதனுக்குரோகங்கள் உண்டாவதற்குஆறு விதக்காரணங்கள்கூறப்பட்டிருக்கின்றது. அவைஎவையெனில்

அதிகமாய் நீர் அருந்தல், அதிகமாய் மாதரின்புணர்ச்சி பகலில் நித்திரை, இரவில் ஜாகரணம், மலமூத்திரத்தை அடக்குதல் என்பவைகளாம்.

சுரரோகஸ்வரூபம்.

உருத்திரனது கோபாக்கினியில் ஜனித்தவனும், சகலபூதங்களை தபிக்கச்செய்கிறவனும் மூன்றுகால்கள், மூன்றுசிரங்கள் பெரியவயிறு என்னுமிவைகளை யுடையவனும், புலியின் சர்மத்தை போர்வையுடையவனும், தேகச்சாயை கபிலவர்ணமுடையவனும், மஞ்சள்நிறமுள்ள கண்களை யுடையவனும்; குட்டையான தொடை எலும்பை யுடையவனும், பயங்கரமான உருவமுடையவனும், அதிகவலுவை யுடையவனும், லோகநாசனத்திற்காக பிறந்தவனுமாகிய புருஷனை சுரமென்று சொல்லுவார்கள். இந்த சுரமென்னும் புருஷன் தாவரசங்கமங்களான சகல வஸ்துக்களில் வெவ்வேறான பெயர்களால் விளங்குகின்றான். இவன் பிராணிகளின் உற்பத்திக் காலத்திலும், முடிவுகாலத்திலும்தோன்றுகிறான். இவனது தாபத்தை தேவர்கள், மனிதர்கள் தவிர மற்றப் பிராணிகள் சகிக்கமாட்டார்கள்.

சுரமானது சகலரோகங்களில் பிரதானமாய்ப் பாவத்தால் சனித்ததால், பாபசொரூபமுடையதன மரணத்தை யுண்டுபண்ணுவதாயும், சரீரத்தை விருத்திசெய்யும் இந்திரியத்தை நாசப்படுத்தி மரணசொரூபத்தையுடையதாயுமிருக்கிறது. இதுதக்கனது யாகத்தை நாசப்படுத்திய மகாதேவரது கபாலநேத்திரத்திலிருந்துஜனித்த கோபசொரூபத்தையுடையது. உற்பத்தி, நாசனம் இவைகளில் மோகத்தையுண்டாக்கும். மிகவும் சந்தாபசொரூபமுடையது, இது அஹித ஆகாரங்கள் அருந்தலினாலும் மாதரின்புணர்ச்சி, மலமூத்திரமடக்குதல், இந்திரியங்களுக்கு அதிசந்தோஷம், அதிபீடனம்முதலிய அஹிதாசாரங்களால் உற்பவிக்கின்றது. இது பலபெயர்களால் பசுபக்ஷியாதி சகலசந்துகளில் வர்த்திக்கின்றது. ரோகபதி, பாப்மா, மிருத்யு, ஓஜோசிந, அந்தக என்னும் நாமங்களால் விவரிக்கப்படுகின்றது.

ஜ்வரஜாதிபேதங்கள்.

ஆனைகளுக்கு உண்டாகுஞ் சுரத்திற்கு பாகலமென்றும், மலைகளுக்குண்டாகுஞ் சுரத்திற்கு சிலாஜித்துவென்றும், பாம்பு

களுக்குண்டாகுஞ் சுரம் கிர்மோகமென்றும், தண்ணீருக் குண்டாகுஞ் சுரத்திற்கு நீலிகாவென்றும், பசுக்களுக் குண்டாகுஞ் சுரத்திற்கு சிதிகாவென்றும், நிலத்திற் குண்டாகுஞ் சுரத்திற்கு ஊஷரமென்றும், நாய்களுக்குண்டாகுஞ் சுரத்திற்கு அளர்க்கமென்றும், புலிகளுக் குண்டாகுஞ் சுரத்திற்கு திருஷ்டி ப்ரத்யவரோதனமென்றும், குதிரைகளுக் குண்டாகுஞ் சுரத்திற்கு அபஸ்மருதிஎன்றும், மயில்களுக்குண்டாகுஞ்சுரத்திற்குசிகோத்பேதமென்றும், காக்கைகளுக்குண்டாகுஞ் சுரத்திற்கு பிரவாஹதமென்றும், பூனைகளுக்குண்டாகுஞ்சுரம் பிருஷ்டபேதமென்றும், அல்லது ரோமநாசனமென்றும், பெருச்சாளிக்குண்டாகும் சுரம்தத்துரமென்றும், கிளிகளுக்குண்டாகும்சுரம்பித்திகாயமென்றும், சிருத்தைமுதலிய ஜந்துக்களுக்குண்டாகும் சுரம் ஸ்ரமமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மனிதர்களுக்குமித்தியா ஆஹாராதிகளால் சுரமுண்டாகும். யானைமுதலிய காட்டுமிருகங்களுக்கு மரணகாலத்தில் தம்கடையாய் சுரமுண்டாகும். இந்தப்பிரகாரம் அநேக விதங்களாய் சுரங்கள் சிவனதுகோப சொருபத்தை யுடையதாய் இருக்கின்றன.

{ நிகழ்காலத்துக்குச் சனங்களுக்குச் சம்பவிக்கிறசுரங்களின்
நிதானங்களையுஞ் சிகிச்சைகளையுந் தெரியக்காட்டி
பிறகு மற்ற சுரங்களைக் கிரமமாய
சொல்லுகிறேன். }

ஆயிகசுரலட்சணமென்பது

முறைக்காய்ச்சலின் லட்சணம்.

(மாதவநிதானம்) சரீரத்தில்குளிர், சரீரஞ்சிலுசிலுத்தல், அதிகதாகம், சந்தாபம், மார்புநோய், தலைவலி, தேகத்தில்குடைச்சல், வயிற்றுபக்கங்களில்சூலை, ஆகாதவஸ்துக்கள்மீது இஷ்டம், சோம்பல், பாதங்கள் மார்பு முகம் என்னும் இடங்களில் வீக்கம், சரீரத்தில் பாண்டுவர்ணம், கண்களில் மஞ்சள்நிறம், நேத்திரங்களில் ரத்தம் இல்லாமல் வெளுத்திருத்தல், அதிசாரம், சரீரத்தில் ஜாட்டியம், கைகால் எரிச்சல் என்னும் லக்ஷணங்களுடையது ஆஹிகசுரம்.

சீதசுரலட்சணம்,

(சித்திரசாரவணம்) தேகத்தில் குளிர்ச்சி, நடுக்கல், தினவு, சோம்பல், பிரலாபித்தல், மூர்ச்சை, பிரமை என்னும்குறியுடையது சீதசுரம்.

(மதாந்திரம்.) சிலேத்துமவாதங்கள் இரண்டும்முதலில்ரசதாதுவை அநுசரித்து நடுக்கலையும், குளிரையும் உண்டாக்கிப் பிறகு சுரத்தை உண்டுபண்ணும் அந்த சிலேத்தும வாதங்கள் சாந்தமானபிறகு பித்தம்பிரகோபித்துதாகத்தை யுண்டாக்கும், இந்தக்குறிகள் சாதாரணமாய் சீதபூர்வசுரங்களுக் குள்ளதென்று அறியவேண்டியது.

சீதசுரங்களுக்கு

பாசுபதாஸ்திரரசம்,

(ஆயுர்வேதம்)

ரசபஸ்பம் சுத்திசெய்தமனோசிலை
தாம்பிரபஸ்பம் சுத்திசெய்தசங்குபாஷாணம்
சுத்திசெய்தகந்தகம் சுத்திசெய்தகௌரீபாஷாணம்

இவைகளைச் சமயிடையாய்க்கொண்டு கல்வத்திலிட்டு காசனைக்கணிரிலே ரசத்தால் இரண்டுநாள்விடாமல் அரைத்து மாத்திரைகள்செய்து சிப்பியில்வைத்து சீலைசெய்து வாலுகாயந்திரத்தில் இரண்டுசாமங்கள் அதாவது கந்தகம் ஜீரணம் ஆகிறவரைக்கும் காடாக்கினியால் எரித்துச் சாங்கசீதலத்தில் யெடுத்து இரண்டு குன்றிமணியெடை இஞ்சிரசத்தில் ஒருநாளுக்கு இரண்டு முறைகொடுத்தால் சகல ஆயிகசுரங்களுஞ் சூரியனைக்கண்ட பனிப்போல் விட்டுநீங்கும்.

மஹாபாசுபதாஸ்திரரசம்,

சுத்திசெய்த	சங்குபாஷாணம்	பாகம்	உ
,,	கபரி	,,	க
,,	நேர்வாளம்	,,	க
,,	லிங்கம்	,,	க

இந்த திணுசுகளை கல்வத்திலிட்டு கருஊமத்தை இரசத்தால் ஒருஜாமம் அரைத்து, உளுந்தளவு மாத்திரைகள் செய்து அதில் ஒன்றை குளிர்வந்தவுடனே இஞ்சி யிரசத்தில் கொடுக்கவும். இந்தப்பிரகாரம் மூன்றுவேளை கொடுத்தால் ஒருநாள் இரண்டுநாள் மூன்றுநாள் முறைக்காய்ச்சல்களும், சீதசுரங்கள், மன்மததாபத்தினால் தபிக்கிற பூங்கொடியாள் தன்நாயகனைக்கண்ட மாத்திரத்தில் யெப்படி மன்மதாக்கினிவிட்டு ஓடுமோ அவ்வண்ணம் இந்த ஔஷத பிரயோகத்தினால் சகலமுறைசீதசுரங்களும் விலகிவிடும். இதற்குப்பத்தியம் உப்பில்லாதகஞ்சிகொடுக்கவும். இதை திரிராத்திரி சுரங்களுக்குங் கொடுக்கலாம் இந்த மகாபாசுபதாஸ்திர ரசம், சீதசுரங்களை நாசப்படுத்த சிவபெருமானால் உமாதேவியாருக்கு உபதேசிக்கப்பட்டதென்று சித்யவிதயாபூ யென்னும் ரிஷிசொல்லி யிருக்கிறார்.

இரண்டுநாட்கொருவிசைவருந்

துவாஹிகசுரலட்சணம்,

(பாஹாட்டம்.) கை, கால், எரிச்சல், முகம் பாண்டுவர்ணமாய்ச் சோகையுடன்கூடி இருத்தல், வயிற்றில் எரிச்சல், வெளியில் சீதளமாயிருத்தல், இந்த லக்ஷணங்களுடையது துவாஹிகசுரம். மேற்கண்ட பாசுபதாஸ்திர மாத்திரையைக் கொடுக்க நீக்கும்.

திரிராத்திரிசுரம்,

மூன்றுநாளுக்கொருமுறைவருஞ்சுரம்,

(பூஜ்யபாதியம்.) தேகத்தில்கறுப்புநிறம், கண்டத்தில்கோழை, தாபம், தேகங்குளிர்ந்திருத்தல் என்னும் குணங்களுடையது. திரிராத்திரிசுரம்.

பிரதாபமார்த்தாண்டரசம்,

சுத்திசெய்த	ரசம்	பாகம்	க
,,	லிங்கம்	,,	உ
,,	கேர்வாளம்	,,	ச

இவைகளைக்கல்வத்திலிட்டு நாகதந்திப்பட்டைஇரசத்தால் இரண்டு ஜாமம்அரைத்து (அ) குன்றிமணி எடை மாத்திரைகளுருட்டி வெல்லத்தண்ணீரிலாவது அல்லது சர்க்கரைத்தண்ணீரிலாவது கொடுத்தால் பேதியாகும். இதைக்கொடுத்த மறுநாளிலிருந்து அடியிற்கண்டசுராங்குசமாத்திரையை (எ)நாளைக்குக்கொடுக்கச் சொஸ்தமாகும்,

---

சுராங்குசம்.

சுத்திசெய்த	இரசம்	பலம்	க
,,	கந்தகம்	,,	க
,,	நாபி	,,	ங
,,	ஊமத்தன்விரை	,,	ரு
,,	மாச்சுக்கு	,,	கூ
,,	திப்பிலி	,,	சா
,,	மிளகு	,,	கூ

இவைகளைச் சூரணித்து கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாற்றால் ஒருநாளரைத்து இரண்டு குன்றிமணியெடை மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்தி ஒரு மாத்திரையை யிஞ்சிரசத்தில் கொடுத்தால் வாதசுரம் பறந்தோடும். இது வாதசுரங்களுக்குக் கைக்கண்டமுறை. இந்தமாத்திரைகளை (எ)நாள் காலைமாலைபிரயோகித்தால் சகல முறைக்காய்ச்சல்களும் விஷசுரங்களுந் திரிதோஷசுரங்களும் வெளிச்சத்தைக்கண்ட இருளைப்போல் விட்டு நீங்கும் என்று ஆயுர்வேதத்தில் சொல்லியிருக்கின்றது.

விஸ்வாமித்திரர்முறை. சுராங்குசம்.

தாம்பிரபஸ்மம்	பாகம்	க
சுத்திசெய்த தாளகம்	,,	உ

இத் திணுசுகளைக் கல்வத்திலிட்டு பாகயிலைச்சாற்றால் ஒரு ஜாமமரைத்துப் பில்லைசெய்து சூரியபுடமிட்டு பூதாயந்திரத்தில்புடம்வைத்தெடுத்துச் சதுரக்கள்ளிப்பாலால் மறுபடியுமரைத்து முன்பு சொன்னதுபோல் புடம்வைத் தெடுத்துக்கொண்டு ௩-குன்றிமணியெடை யிஞ்சிச்சாரசத்தில்கொடுத்தால் முறைக்

காய்ச்சல்கள்யாவும் எனது தபாக்கினியைக்கண்டு தேவர்களெல்லோரும்எப்படி தம்பதியைவிட்டு அவனிடத்திற்கு ஓடினார்களோ அப்படி ஓடிவிடும். இரசவர்க்கங்களென்றுபயப்படவேண்டாம். வாய்பிடிக்காது உபயோகித்துப்பார்க்கலாமென்று விஸ்வாமித்திரமகாரிஷியால் சொல்லப்பட்டிருக்கிறது.

நந்திதேவரால் சகல சுரங்களுக்கும் அருளிச்செய்த

மஹா சுராங்குசரசம்.

சுத்திசெய்த ரசம்	சுத்திசெய்த கபரி
,, கந்தி	அப்பிரகபஸ்மம்
,, தாம்பிரபஸ்மம்	காவிக்கல்
,, மனோசிலை	நாகதந்திவிரை
,, லிங்கம்	லோகபஸ்மம்
,, தாளகம்	வெங்காரம்
,, ஹேமாட்சிகம்	வங்கபஸ்மம்

இவைகளை வகைக்குஒருபலம்வீதம்வாங்கிக் கல்வத்திலிட்டு பழச்சாற்றால் ௩-நாள், துளசியிலைச்சாற்றால் (௩) நாள், சித்திரமூலரசத்தால் ௩-நாள், புளியிலைச்சாற்றால் ௩-நாளாக அரைத்தும் பிறகு மேற்கூறியநாலுவகைச்சாறுகளைசமமாய்க்கலுவத்தில்மருந்துடன்நிறைப்பிநிழலிலுலர்த்திக் கடலைப்பிரமாணம்மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்தி அதில் ஒருமாத்திரையை யிஞ்சி சுரசத்திற் கொடுத்தால் பசிதீவினை புண்டாகி சகலமான சுரங்களுஞ் சூரியன் இருளை ஓட்டுவதுபோல் ஓட்டிவிடுமென்று உமாதேவியார் தமது உமா கலைக்கியானத்தில் சொன்னார்களென்று நந்திதேவர் சொல்லியிருக்கிறார். இம்முறையை ஸ்ரீ ராமபிரான் தனது பத்தினியாகிய சீதாபிராட்டியாரைத் தேடிக்கொண்டு தென்திசைக்குவருகபொழுது தன்பாரியாளை யிழந்த வியாகூலத்தால்தாபசுரமுண்டாகி அகஸ்தியமுனிவர் இம்முறையைச்செய்துக்கொடுத்துஅவரதுதாபசுரத்தை சந்திரனைக்கண்ட தாமரைபூவைப்போல் மறைத்துக்கொள்ளும்படி செய்தாராம், இந்த முறையைப்போல சுரங்களை நாசப்படுத்தும் வேறுமுறையில்லையாதென்று முனிவர்களெல்லோரும் கொண்டாடினார்களாம். இதைச் செய்து அனுபவித்து அதன் உண்மைதிமையையறிந்துக்கொள்ளலாம்.

நாலுநாளைக்கொருமுறைவருஞ்சுரம்.

(மாதவநிதானம்) குளிர், தேகத்தில் சிலுசிலுப்பு, தலைச்சுற்றல், நடுக்கல், கண்கள்பச்சைநிறம் என்னுங் குணங்களுடையது நாலுநாளுக் கொருமுறைவருஞ் சுரம்.

(பாஹாட்டம்) மேதோதாது மச்சாதாதுஇவைகளில் எதிலாவது தோஷங் கலக்குமானால் இக்காய்ச்சலுண்டாகும்.

இக்காய்ச்சலுக்குத்

தன்வந்திரிபகவானாற்சொல்லப்பட்ட

மஹாதக்கினிகுமாரரசம்,

சுத்திசெய்த இரசம்	சுத்திசெய்தலிங்கம்
,, வசநாபி	சுத்திசெய்ததாளகம்
,, வெள்ளைப்பாஷாணம்	அப்பிரகபஸ்மம்
,, கந்தகம்	தாம்பிரபஸ்மம்

இவைகளைச் சமஎடையாக கல்வத்திலிட்டுகரசனாங்கண்ணிரசத்தால்ஒருநாள் அரைத்து அம்மருந்தை காசிக் குப்பியில்வைத்து சீலைமண்செய்து ஒருநாள் வாலுகாயந்திரத்தில் யந்தாக்கினியால் எரித்து, சிதளமான்பிறகு எடுத்துக்கொண்டு மறுபடியுங் கரசனாங்கண்ணி இரசத்தால் அரைத்துக் கடலை யளவு மாத்திரைகள்செய்து (௰) நாள் இஞ்சிசுரசத்தில் காலைமாலை உட்கொண்டால் சகலசுரங்களும் பறந்தோடும். இம்மருந்தை மேற்கண்ட சுரத்திற்கும் பஞ்சமூலகஷாயத்தில் சாப்பிடவேண்டியது.

இதுவுமது.

(மாதவநிதானம்) முறைக்காய்ச்சல்களுக்கு திப்பிலி, கடுக்காய் அல்லது திப்பிலி, சீரகம் அல்லது சர்க்கரை, சீரகம் அதுபானமாய்க்கொண்டு, வெந்நீர்ச்சாப்பிடவும். ஆனால் மருந்தை இஞ்சிசுரசத்தில்தானே கொடுக்கவும். இப்படிச் செய்வதால் குளிர், நடுக்கல், அதிதாபம் முதலியவைகளுடன்கலந்த முறைக்காய்ச்சல்கள் சீக்கிரமாய் விலகிவிடும்.

முறைக்காய்ச்சல்களுக்குநசியங்கள்,

வெள்ளைக்காக்கட்டான், கருங்காக்கட்டான், மிளகு, வெள்ளுள்ளி இவைகள் சமனடையாய் அரைத்து நசியம் செய்தால், முறைக்காய்ச்சல்கள் பறந்தோடும்.

இதுவுமது.

குராசாணி ஓமம், இந்துப்பு, மிளகு, வெள்ளுள்ளி இவை சமனடையாய் எருக்கன்பாலில் நசியம் செய்வித்தால் முறைக்காய்ச்சல்கள் கூச்சல்போட்டுவிழுகிற மூர்ச்சை நோயும் விட்டு அகலும்.

மசூரிகாஎன்னும் அம்மைசுரலக்ஷணம்,

(மாதவநிதானம்) இந்த அம்மைசுரம் வாதபித்த சிலேத்துமத்தால் மனிதர்களுக்கும் கற்களுக்கும்உண்டாகின்றது. அதற்குசிகிச்சை செய்வது மிகவும் அசாத்தியமாம். இந்தச்சுரம் உண்டான மூன்றுநாள் வரையிலும் மிகவும் மும்மரமாயிருக்கும். திரிதோஷ முறைக்காய்ச்சல்களுக்கு நாடி நடக்கிறது போல் இதற்கும், நடக்கும் மேலும் இது மிகவும் உக்கிராகாரமாய் (௮-௯-௰) நாட்கள்வரையிலும் தேகத்திற்குள் ளிருந்து பிறகு கொப்பளங்கள் உண்டாகிச் சீழ்கசைந்து பக்குகட்டும் இது சக்திசொரூபமுடையது. மேலும் இதுவாதபித்தசிலேத்துமங்களைரசாதிசப்த தாதுக்களுடன் அநுசரிக்கிறதினால் எட்டு அல்லது ஒன்பதாவது நாளில் சுரம்குறைகிறது, இதுமுதலில் அதிகுரூரமாய் இருக்கிறதினால் அதன் நுட்பத்தையறிய வைத்தியர்களுக்கு அசாத்தியமாயிருக்கிறது, கொப்பளங்கள் வட்டமாய்க்கண்களுக்கு இன்பமாய்த் தோன்றினால் பித்தத்தால்உண்டானதென்றுங் கருங்குரங்கு மயிர்களைப்போல் எங்கும் நடித்து விஷத்தைப்போல்இருந்தால் சிலேத்துமத்தால் உண்டானதென்றுந் தோஷத்துடன் கலந்து காக்கைப்போல் இருந்தால் வாதத்தால் உண்டானதென்றுந் திரிதோஷத்தால் உண்டானால் அவன் எமனைப்போல் பார்ப்பானென்றும் அறியவேண்டியது.

(ஆயுர்வேதம்) உக்கிரரு, அதிகக்லே, திரிசூலம், டமரகம், சோவம், நேத்திரங்களில் புகையெழும்புதல்; பெரியகோரைகள்

வென்னுங் குணங்களுடைய சுரத்தை மஹாசக்தி சுரச்சொரூபமென்று அறியவேண்டியது.

(கலைக்கியானம்) தாகத்துடன் கலந்தசுரம், எப்பொழுதும் பசி, தாகம், மூர்ச்சை, முகத்தில்துர்நாற்றம், வாந்தி, கனைச்சல் வயிற்றுநோய், என்னும் லக்ஷணங்களுடையது மசூரிகாசுரம், அல்லது அம்மைசுரமென்று அறியவேண்டியது. இது எட்டு விதமாய் உண்டாகின்றது.

அசாத்திய அம்மைசுர லக்ஷணம்.

(அஸ்வனிசம்ஹிதை) கொப்பளங்கள் பவளத்துண்டுகளைப்போலும், வட்டமாயும் நீலமும், கருப்பாயும், சிவப்பாயும்நானாவிதவர்ணமாயும், தோன்றியுஞ் சீக்கிரத்தில் மறைந்தும், தாகம் பேதி, தேகநடுக்கல், சுவாசகாசங்கள், பிதற்றல், விக்கல், மூர்ச்சை, தாபம், கால்கைகளில் வீக்கமென்னும் லட்சணங்க ளிருந்தால் அசாத்தியரோகமென்றே யறியவேண்டியது.

சிகிச்சைகள்

(சித்திசார்ணவம்) மசூரிகாசுரங்கள் மிகவுங்குரூரமானவைகளாம் மூர்ச்சை, திரிதோஷசன்னிபாதங்களால் அநேகவிதங்களாயிருக்கின்றன. மனிதர்களுக்குண்டாகும் சக்திசொரூபமான அம்மைசுரங்களுக்குத் தூபங்கள், இயந்திரங்கள், திலகங்கள், பூஜைகள் முதலிய சிகிச்சைகளால் சாந்திப்படுத்த வேண்டியது அவைகளைச் சாந்திப்படுத்தும்விதங்களை ஹாரீதர் ஆத்திரேயர் முதலான ரிஷிகள் சொல்லியிருக்கிறதை நான் சங்கிரகித்துச்சொல்லுகிறேன் அவைகளை மனிதர்கள் ஆசரிக்கவேண்டியது,

---

வாதபித்த சிலேத்துமத்தால் உண்டான
அம்மைசுரங்களுக்கு

மருசன் சீரகம்
கக்கு கொத்துமல்லி

வேப்பிலை	பற்பாடகம்
ஏலக்காய்	வெரிகாஞ்சொறி
ஆடாதொடைசர்க்கு	கொச்சிலி
சிந்தற்கொடி	வாயுவிளங்கம்
துளசியிலை	தக்கோலம்
லவங்கப்பத்திரி	லவங்கப்பட்டை
மூக்காவேளை	நிலவேம்பு
வில்வம்	

மேற்கூறியதினுசுகளைச் சமயெடையா எடுத்துத்தண்ணீர் விட்டரைத்து சாற்றைப் பிழிந்து உட்கொண்டால் அம்மை சுரங்கள் சாந்தப்படும்.

இதுவுமது.

மாதவநிதானம்.

இலுப்பைப்பூ	வேப்பிலை
மஞ்சிஷ்டி	கோரைக்கிழங்கு
வெட்டிவேர்	செவ்விப்பருப்பு
கொத்துமல்லி	சிந்திற்கொடி
அதிவிடையம்	

இவைகளைச் சமயெடையா எடுத்துச் சூரணித்து இவ்வெடைகளுக்கு எட்டுபங்கு அதிகமாய்த் தண்ணீர்வார்த்து எட்டிலொரு பாகம்இருக்கும்படிசுண்டக்காய்ச்சிய கஷாயத்தை கொடுக்கவும்

இதுவுமது.

வித்தவித்தியாது.

இலுப்பைப்பூ	குருவேர்
ஜாதிக்காய்	முசுமுசுக்கை
தேவதாரி	வில்வவேர்
பாகல்	கோரைக்கிழங்கு
சிந்தற்கொடி	

ஷ தினுசுகளை சமயெடையா யிடித்து ஒருபடி ஜலம்விட்டு அழாக்குஜலம் இருக்கும்படி சுண்டக்காய்ச்சி யக்கஷாயத்தைச்

சேவித்தால் அம்மைசுரங்கள் விட்டகலும். சுருாஞ்செய்யாது மேலும் மஹேசுவரதூபங்கள் போடவேண்டியது. சண்டபானு திலகம் வைக்கவேண்டியது. இப்படிப்பட்ட அற்புத சிகிச்சைகள் செய்தால் அம்மைசுரங்கள் உடனேவிட்டகலும்,

---

கிருமிச்சுரம் என்பது புழுக்களாலுண்டாகுஞ் சுரம்.

(ஆயுர்வேதம்) சுரம்தேகத்தில் பலவிதவர்ணங்கள் வயிற்றுவலி, மார்பெரிவு எப்பொழுதும்பிதற்றல், அன்னதுவேஷம், அதிசாரமென்னும் குணங்களுடையது கிருமிச்சுரம்.

சிகிச்சை.

(மாதவநிதானம்) வாய்விளங்கத்தைப் புளித்தநீரி லரைத்து காலையில் உட்கொண்டால் புழுக்கள் நாசமாகும். புழுக்களை நாசப்படுத்த இதைப்போன்ற ஔஷதம் வேறுயாதொன்றுங்கிடைப்பதரிது.

இதுவுமது,

கருங்காலி வேர்ப்பட்டை (குடசப்பாலை) வேப்பம் பட்டை, வசம்பு, சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், தான்றிக்காய், இவைகளைச்சமஎடையாய்ச் சூரணித்து இவைகளுக்குசமமாகச் சுத்திசெய்த வெள்ளைச் சிவதைச் சூரணம் கலந்து பிரதிதினம் மூன்றுவராகனெடை சூரணத்தைப்பசுவின்மூத்திரத்தில் ௭-நாள் உட்கொண்டால் சகலமான கிருமிகள் நாசமாகும்,

இதுவுமது,

முருக்கன் விதைகள், வெல்லம், எள்ளு, வாய்விளங்கம், இவைகளை சமஎடையாய்த் தேங்காய் நீரிலரைத்து உட்கொண்டால் கிருமிகள்நாசமாகும்,

இதுவுமது,

(ஆயுர்வேதம்) வாய்விளங்கம், கொச்சிலி, கடுக்காய், எலிக் காதிலைவிரை, வெள்ளருள்ளி, முருக்கன்விரை, சித்திரமூலம், இவைகளைச் சமஎடையாயிடித்துஒருபடிஜலம்விட்டு ஒருஆழாக்

காகச்சுண்டக்காய்ச்சித் தேவர்கள் அமிர்தத்தை அன்புடனுட்கொண்டதுபோல் கிருமிரோகமுடையவர்கள் இதையுட்கொண்டால் கிருமிகள் நாசமாகிறதுமல்லாமல் திவ்விய தேகமுடையவர்களாவார்கள்.

இதுவுமது.

பூச்யபாதியம்.

கோரைக்கிழங்கு	முருங்கைவிதை
எலிக்காதுஇலைவிரை	தண்ணீர்விட்டான்கிழங்கு
தேவதாரி	வாய்விளங்கம்
	திப்பிலி

இவைகளைச்சமயெடையா எடுத்துச் சூரணித்துஒருபடிஜலம் விட்டு ஒருஆழாக்காகச் சுண்டக்காய்ச்சின கஷாயங்குடித்தாலும் அல்லது பெருங்காயம், வாய்விளங்கம், திப்பிலி இம்மூன்று தினுசுகளை சுத்தசலத்திலரைத்து உட்கொண்டாலுங்கிருமிரோகங்கள் நாசமாம்.

கிருமிரோக பத்தியங்கள்.

புடலங்காய், வேப்பம்பூ, சக்கிரவர்த்திக்கீரை, முன்னாங்கி, பச்சைப்பயறு, வாய்விளங்கம்(கூடு) நாள்பட்டானபழையநெல்லு, இவைகளை சகலவிதமான உணவுகளில் கிருமிரோகபீடிதர்கள் சேர்த்துக்கொள்ளவேண்டியது.

கிருமிரோகிகளுக்கு ஆகாதது,

பால், இறைச்சிகள், வெல்லம், நெய், தயிர், கிழங்குவகைகள் மொச்சைக்கொட்டை, புளி, தேன்தித்திப்புப்பண்டங்கள் ஆகாது.

ஜந்துசுரலக்ஷணமென்றால்,

பூச்சிக்கடியால் உண்டான சுரலட்சணம்,

(ஆயுர்வேதம்) அருசி, கண்கள் கருநிறம், தேகம் பாண்டுவர்ணம், வாந்தி, பிதற்றல், அதிசாரம், மார்புநோய் சுரமுதலிய லக்ஷணமுண்டாயது ஜந்துசுரமென்று சொல்லப்படும்.

ஜந்துசுரங்களுக்குக்

கீ ட ம ர் த் த ன ர ச ம்.

சுத்திசெய்த ரசம்	பாகம்	௧
சுத்திசெய்த கந்தி	,,	௨
ஓமம்	,,	௩
வாய்விளங்கம்	,,	௪
விஷமுஷ்டிப்பட்டை	,,	௫
முருக்கன்விரைகள்	,,	௬

இவைகளைச் சூரணித்துத் தேனைவிட்டரைத்து ௧-குன்றிமணியளவு மாத்திரைகள்செய்து அதில் ஒருமாத்திரையைக் கோரைக்கிழங்கு கஷாயத்தில் உட்கொண்டால் ஜந்துரோகங்கள்நிவர்த்தியாகும்.

சுராதிசாரலக்ஷணம்.

(மாதவநிதானம்) சுரம், அதிதாபம், மார்புநோய், அருசி, பேதி, சீதம் அல்லது ரத்தம்விழல் என்னுங் குணங்களுடையது அதிசாரசுரமென்று சொல்லப்படும்.

க ன க சு ந் த ர ர ச ம்,

(ஆயுர்வேதம்)

சுத்திசெய்தலிங்கம்	சுத்திசெய்தகெந்தகம்
மிளகு	திப்பிலி
வெங்காரம்	சுத்திசெய்தநாபி
சுத்திசெய்தஊமத்தன்விரை	

௭-தினுசுகள் சமயெடையாய் யெடுத்துக்கொண்டு கஞ்சாயிலைச் சாற்றால் ஒருஜாமம் அரைத்துக் கடலை அளவு மாத்திரைசெய்து அநுபான விசேஷங்களால் பிரயோகித்தால் அக்கினிமாந்தம், தீவிரசுரம், சகலஅதிசாரங்கள், கிராணிகள் குமாரனதுவேலாயுதம் தாரகாசுரனது தேகத்தையும்,புகழையும்,நாசப்படுத்தியதுபோல் ஓடிவிடும். இந்த பிரயோகத்தை தேவராச

னுக்கு செய்துகொடுத்து அதிசார சுரங்கள் சுவஸ்தமானதாக தன்வந்திரிபகவான் சொல்லியிருக்கிறார்.

கொத்துமல்லி	சுக்கு
முத்தக்காசு	வில்வப்பிஞ்சு

இவைகளைச் சமவெடையாயிடித்து ஒருபடி ஜலம்விட்டு ஆழாக்காக சுண்டக் காய்ச்சிய கஷாயத்தை உட்கொண்டால், அதிசாரசுரங்கள், விஷச்சுராதிசாரங்கள், மூர்ச்சை, தாகம், வாந்தி முதலியவைகளை பறந்தோடச்செய்யும்.

ரக்தாதிசாரசுரலக்ஷணம்,

(பூஜ்ப்பாதீயம்) இரத்தக்கழிச்சல் அல்லது மலம்கீராய்ப்போகுதல், தாகம் தீவரமானசுரம், விலோமவாதம், தேகமாத்யந்தம் நோவுமுதலிய குணங்களுடையது ரத்தாதிசார மெனப்படும், இதற்கு மேற்கூறிய கனகசுந்தர ரசத்தையே பிரயோகிக்கலாம்.

இதுவுமது.

மாதவ நிதானம்,

சுக்கு	திப்பிலி
தொட்டாற்சிணுங்கி	குடசம்பாலை
அதிவிடையம்	ஓமம்
வில்வம்	

இவைகளைச் சமவெடையாயிடித்து கஷாயம்வைத்து உட்கொண்டால் சீதம், சூலை, கடும், ரத்தம், இவைகளுடனிருக்கும் சுராதிசாரங்களெல்லாம் சுவஸ்தமாகும்.

தோஷாதிசாரம்

தேகத்துக்குள் அதிதாபம், வெளியில் சீதளம், கால்கைகள் குளிர்ந்திருத்தல், பிதற்றல், வாந்தி, விக்கல், இருமல், அருசி, நடுக்கல், பிரமை, ஆயாசம், தேகம்பாரமாய் இருத்தல், தூக்கம்பிடியாமை, மதம், சீதத்துடன்கலந்து ரத்தக்கழிச்சல், மார்புவலி என்னும் லக்ஷணங்களுடையது தோஷாதி சாரமென்று

பெயர். இது அசாத்தியம், அதிசீக்கிரத்தில் எமபுரத்திலேபோய்க்குடியிருப்பான்.

சுரத்தால் பீடிக்கப்படுகிறவனும், சுரம் நீங்கினவனும், தேகத்தில் வலுவுவருமளவுஞ் சீக்கிரஞ் சீரணமாகாத ஆகாரங்கள் இறைச்சிகள் முதலியவைகள் சாப்பிடப்படாது. குளிர்ந்த சலம் அருந்தப்படாது. பகல்நித்திரை செய்யப்படாது. கஷ்டமான வேலைவெட்டிகள் செய்யப்படாது. என்று பூர்வீகநூலாசிரியர்களின் உத்தேசம். அப்படியே நடக்குதல் நலமென்று என்னுடைய அனுபோகம்.

மேற்கூறியவிதிகளைத் தவிர்ந்து நடந்தால் சுரம் மறுபடியும் வந்தணுகும் அப்படிபோன சுரத்தை விலக்கு வாங்கினவனை லக்கணம் முதலியவைகள்வைத்து சுரங்களின் தன்மைகள் அறிந்து ஔஷதங்கள் பிரயோகிக்கவேண்டியது.

சுரம்விட்டதற்குலட்சணம்,

அன்னத்தின்மீது இஷ்டம் தலைநமைச்சல், தும்மல், சரீரத்திலே சத்துவம், வியர்வை, முகபாகமென்னும் குறிகள் சுரம் விட்டதென்று அறியவும்.

சுரம்வரும்காரணம்..

வாதாதிதோஷ பிரகோபத்தால் ஆமாசயத்தைச் சேர்ந்து அசீரணம் உண்டுபண்ணும். சீரணிக்காத ஆகாரரசங்கள் ரோமகூபங்கள் முதலியஸ்ரோத்ரமார்க்கங்களைத் தடுத்து பக்குவாசயத்திலிருக்குஞ் சடராக்கினியை வெளிப்படுத்தி அத்துடன் கலந்து தேகமெல்லாம் வியாபித்து அதிசூடான சுரத்தை உண்டு பண்ணும். சுரத்தில் ரோமகூபாதி ஸ்ரோத்திர மார்க்கங்களைத் தடுக்கிறதால் வியர்வை வெகுதுர்லபமாய்த்தட்டுகிறது வியர்வை தோன்றாமை உடல் இந்திரியங்கள் மனது இவைகளில் அதிதாபஞ் சர்வாங்கமும் வேதனையென்னும் லக்ஷணங்கள் ஏககாலத்தில் எந்தரோகத்தில்தோன்றுமோ அதற்குச் சுரமென்றுபே

சுரத்தின்முன் ரூபம்,

ஆயாசம், எந்த பதார்த்தங்களின்மீதில் இச்சையில்லாமை தேகம் நிறம் நானாவித வர்ணமாய் தோன்றல், வாயில்ருசி வேற்றுமையாய்த் தோனல், கண்களில் நீர்க்கோவை, குளிர், வெய்யல், காற்று, படுக்கை இவைகள்மீதிச்சை, துவேஷம், கொட்டாவி, தலைவலி, சரீரம் பாரமாய்த்தோன்றல், கோழை, கோபம் சந்தோஷமில்லாமை என்னும் லக்ஷணங்களிருந்தால் சுரம் வருமென்று அறியவேண்டியது. மேற்கூறிய வாதபித்த சிலேத்தும சுரங்களின் சாமானியகுறிகள் வாதசுரத்தில் கொட்டாவியும், பித்தசுரத்தில் கண்களெரிவும், சிலேத்துமசுரத்தில் அன்னத்துவேஷமும் உண்டாம்.

மாதவநிதானம்

வாதசுரம்.

உறுப்புகளில் குத்தல், அதிகமாய் தலைநோவுதல், சரீரம் கொஞ்சம் உஷ்ணமாயும் அல்லது அதிக சூடாயாவது இருக்கும். சரீரமுழுதும் எரிச்சல், மலமூத்திரம் பந்தித்தல், மலமூத்திரம் சுஷ்கித்து வெளிப்படாமை அப்படி வெளிப்பட்டால் ஆட்டின் புழுக்கைப்போ லிருக்குதல், பற்கள் உதடு சருமம் கறுப்புநிறமாய்த்தோன்றல், கொட்டாவி அல்லது மயிர்விடுதல் என்றால் தேகம் ஒடிக்கல், குளிர், அரோசகம், சரீரம்பந்தித்தல், ஒருபக்கம் பந்தித்தல், நமைச்சல், கண்டத்தில் குத்தல், வாந்தி வயிறுப்பல், பிரலாபித்தல், மூர்ச்சை, தாபம், அதிக[illegible]ம், அதிகமாய் மூத்திரகாதமென்றால் நீர்பந்தித்துகொஞ்சமாய் வருதல், கால்கள் நகங்கள் இவைகளில்குத்தல், மூலை இந்தலக்ஷணங்களுடையது வாதசுரம்.

(பாஹடம்) ஒருவேளைசுரம் தோன்றல் ஒருவேளை இல்லாமற்போ லிருத்தல், மறுவேளை அதிதீவிரமாயும் கொஞ்சமாயும் இருத்தல், ஒருவேளையில் அதிதாபம், சிலவேளையில்சீதமாயிருத்தல், ஒருவேளை கைகால்களில் மிகவுஞ் சூடாயும், மறுவேளையில் குளிர்ந்து மிருத்தல், காலில் மயிர் பிடித்தாற்போலும், இல்லாமலும், உறுப்புகளில் அதிகநோயும் ஒரு

வேளை இல்லாமையும், மார்பில் நோவும் புஜங்கள் கழுத்துப்பக்கங்கள் சிரம் இவைகளில்நோவு, புசித்தஆகாரம் சீரணியாமை தூக்கம் பிடியாமை, தொண்டையும் உதடும் உலர்தல், முகம்நேத்திரம், நகங்கள், சருமம், மலமூத்திரங்கள்; கருப்புடன் கலந்ததுபோலிருத்தல், காதுகளில் ஓசை; ஒருவேளைபக்கஎலும்புமுதல் சகல எலும்புகளும் நொருங்கிப்போவதுபோ லிருத்தல், வாய்த்துவர்த்தல், பற்களெல்லாம் புளிப்புத்தின்றதுபோல் கூசல், ஏப்பம், கோழை, இருமல், வியாகூலம், நடுக்கல், பிதற்றல், வெய்யிலில்இருக்க இஷ்டம்முதலிய லக்ஷணங்கள் வாதசுரத்திற்கு உளதென்று அறியவும்.

பித்தசுரம்.

(ஆயுர்வேதம்) தேகமுழுமையும் எரிச்சல், கைகால்களில் அதிகஎரிச்சல், அதிதாகம், தேகம் சுற்றல், தலைநோவு, வாயில் தித்திப்பாயிருத்தல், முகம் சுஷ்கித்தல், மூர்ச்சை, அக்கினிமந்தம், அருசி, தேகம்வெளுத்தல், தேகம், மரத்தல் மனசாஞ்சலியம், எந்தவஸ்துக்களிலு மிச்சையில்லாமை, அதிசாரம், வாந்தி நித்திரைபங்கம், மலம்,மூத்திரம், நேத்திரம்,முகம்,சருமம்,நகம் என்னுமிவைகள் மஞ்சளைப்போலும் பச்சிலை ரசத்தைப்போலும் தோற்றல் தேகமெல்லாம் வியர்வையுஞ் சுரங்குறைந்தவுடனுண்டாகும் அப்போது பிதற்றலுடன் அபத்தவார்த்தை, வாயானது காரமாயிருத்தல், நாசியிலும் வெடித்துப் புண்காணல், சீதளவஸ்துவில் விருப்பம், கர்வம், கசப்பு புளிப்புநீரில் கொஞ்சம் இரத்தம் விழுதல், புளியேப்பம் தேகத்தில் சிவக்கபடை சுவாசத்தில் துர்க்கந்தம் விசல் என்று லக்ஷணங்களை யுடையது பித்தசுரம்.

சிலேஷ்மசுரம்.

(பிந்தவிக்கிரமம்) இருமல், சுவாசத்தொடுமைப்பு, காசி யடைப்பு, வாந்தி. கெஞ்சிற்கோழை, தாகம், பிரமை, கோழை வெண்மைநிறம், நமைச்சல், சரீரம் மஞ்சள்வர்ணம். வாயானது

சித்திப்பாய் இருத்தல், அதிக உமிழ்நீர், சிந்தை,பயம், மந்தாக்கினி, தாபம், வியர்வை, இரைரல், அதிகமாய் மூத்திரம்வெளிப்படுதல், தலைவலி, மரத்தல், கண்டத்தில் நோவு, அதிநித்திரை என்னுங் குணங்களுடையது, சிலேஷ்மசுரம்,

(பாஹடம்) அருசி, ஜாட்டியம், காதில் பிரதிசத்தம்,வாயில் இனித்த சலமுறல், மலமூத்திரங் கொஞ்சமாய் வெளிப்படுதல், மார்பு விருத்தலுடன் துடித்தல், சுவாசத்தோ டிரைப்பு, நாசியடைப்பு, சரீரமெல்லாம் விருக்தல், வாந்தி, இருமல், சுரம் மலம் மூத்திரம் இவைகள் வெளுத்தல், சர்வாங்கத்திலும் நோவின்றிச் சிறிதும் வெகிதமாய்க் கண்டு கண்டாகத் தடிப்பெழும்பல் கமைச்சல் என்னும் குணங்களுடையது சிலேஷ்மசுரம்.

வாதபித்தசுரம்.

(மாதவநிதானம்) தாகம், மூர்ச்சை, பிரமை, எரிச்சல்,சோர்ந்துவிழுதல் தலைபாரம், முகம் தொண்டைவறளல், வாந்தி, தொண்டையில் கிரிகிரிப்பு, எந்த பதார்த்தத்திலும், இச்சை யில்லாமை, கண்கள் இருண்டுபோதல், கீல்களில்நோவு, கொட்டாவி இந்தகுணங்களுடையது வாதபித்தசுரம்.

(பாஹடம்) தலைபாரம், மூர்ச்சை. வாந்தி, சர்வாங்கத்திலெரிவந்தம், மோகம், தொண்டை வாய் வறளல், எந்தபதார்த்தத்திலும் இச்சையில்லாமை, கீல்களில் நோவு, அதிதாகம்,தாபம் பிரமை, ரோமசிலிசிலிப்பு, கொட்டாவி, பிதற்றல் என்னும் இக்குணங்களுடையது வாதபித்தசுரம்.

வாதசிலேஷ்மசுரம்.

(ஆயுர்வேதம்) முகம்வற்றல், அரோசகம், கீல்களிலுந்தலையிலும்நோவு, நாசியில் பிசம்போல் சலம்பெருகல், இருமல், இரைப்பு, மலபந்தம், சைத்தியம், கண்களிரண்டுமூடல், பிரமை உடம்பு திருப்புகிறதுபோ லசைதல் என்னுமிக்குணங்களுடையது வாதசிலேஷ்மசுரம்.

(பாஹடம்) அரோசகம், கீல்களிலும் தலையிலும்நோவு, சர்வாங்கவேதனை, நடுக்கல், ரோமச்சிலிர்ப்பு, நாவெளுப்பு, தாகம், மந்தாக்கினி, நெற்றி புருவம் கழுத்து என்னு மிவைகளில் நோவு, பிதற்றல், அழுதல், பிரலாபம், நித்திரைப் பங்கம், வாயில் தித்திப்போடுவாந்தி, வியர்வை, சுவாசம், என்னு மிக்குணங்களுடையது வாதசிலேஷ்மசுரம்.

சிலேஷ்மபித்தசுரம்,

(பூஜ்யபாதீயம்) சைத்தியம், தேகமானது ஸ்தம்பம்போல் மரத்தல், சரீர அவஸ்தை ஆயாசம், வியர்வை, எரிச்சல், தாகம், இருமல், சோர்ந்துவிழுதல், சோம்பல், வாயில்கசப்பைக்தேய்த்ததுபோ லிருத்தல் என்னு மிக்குணங்களுடையது சிலேஷ்மபித்தசுரம்.

(பாஹடம்) ரோமச்சிலிர்ப்பு, மார்பிலும் பிடரியிலும் நோவு, நாவில் முட்போலிருத்தல், பிதற்றல், கண்ணிற்சலம்வடிதல், தலைநோவு, அதிநித்திரை அல்லது நித்திரைபங்கம், ஏப்பம், எரிச்சல், வாந்தி, மூர்ச்சை, இரைப்பு, சரீரம் சுருக்கிக் குலைக்கதுபோ லிருத்தல் என்னு மிக்குணங்களுடையது சிலேஷ்மபித்தசுரம்.

இரண்டுதோஷங்களாற்பிறந்த

தொந்தச்சுரலட்சணம்.

(மாதவநிதானம்) தாகம், மூர்ச்சை, பிரமை, தாபம், நித்திரைபங்கம், தலைநோவு, ரோமச்சிலிர்ப்பு, அரோசகம், சுவாசகாசம், வியர்வையில்லாமை, பிதற்றல், நடுக்கல், சோகையென்னுமிக்குணங்களுடையது தொந்தசுரமென்று ரிஷிகளாற்சொல்லப்பட்டிருக்கின்றது.

சந்நிபாதசுரம்.

(மாதவநிதானம்) பகலில்நித்திரை, இராவில்நித்திரை யின்மை, மூர்ச்சை, சரீரத்தில் அதிதாபம், வாதம் அதிகமாய் பிர

கோபித்தல், குளிர், வியர்வை, பிரலாபித்தல், மதம் நகைப்பு, மார்புநோவு, சுவாசகாசங்கள், சைத்தியம், சுரம், தாகம், தலைநோவு, நாவுதுவளலின்றிச் சுட்டதுபோ லிருத்தல், ரோமச்சிலிர்ப்பு, என்னு மிக்குணங்களுடையது சந்நிபாதசுரம்.

(பாஹடம்) சந்நிபாத சுரங்களுக்கு சொல்லியிருக்கும் குணங்களெல்லாம் உண்டாயிருக்கும், இச்சுரத்தில் அடிக்கடி தேக எரிச்சல், அதுபோலவே சைத்தியம், பகலில் நித்திரை, இரவில் நித்திரை யின்மை, ஒருவேளை இரவிலும் பகலிலும் நித்திரை அல்லது அடிக்கடி வியர்வை, ஒருவேளை யின்பம், பாடல், ஆடல், ஆசியம், நகைப்பு முதலிய விகாரச் சேட்டை, கண்கள் நீர்க்கம்மலோடுகலங்கிச் சிவந்துசொருகுதல் கண்களின் இமைபொட்டிக் கொள்ளல், விலாப்பக்கங்களிலும் சிரசிலும், அடித்தொடைகளிலும், கீல்களிலும் எலும்புகளிலும் நோவு, பிதற்றல், காதிலிரைச்சலுடன் நோவு, கண்டத்தில் முட்சொருகுதல்போ லிருத்தல், நாவுதுவளலின்றிச் சுட்டது போலிருத்தல், தேகங்கனத்தல், எல்லாக் கணுக்களிலும் துர்ப்பலம், உமிழ்நீரானது சிவந்து நரைத்திருத்தலோடு கசப்பு, தலைகடுக்கலுடன் அதிநோவு, மலபந்தம் அல்லது கொஞ்சங் கொஞ்சமாக மலம்வெளிப்படுதல், முகத்தில் பளபளப்பு ஈனத்தொனி, பிரமித்தல், சோம்பல், தோஷமானது சிரசில் நாள் பொறுத்துச் சாத்தியப் படுதல், எப்பொழுதும் கண்டத்திற் குறுகுறு வென்னும் சப்தம் இக்குணங்களுடையது சந்நிபாத சுரம்.

தாகசுரம்,

(சித்தரஸார்ணவம்) சர்வாங்கவேதனை, தாகம், வாய்வறால் விகாரவார்த்தைகள், தாபம், அதிகதுக்கம், மூர்ச்சை, பிதற்றல், அக்கினிமாந்தியமென்னு மிக்குணங்களுடையது தாகசுரம்.

அசிரணம்,

(சரகம்) சுரங்காணல், கொட்டாவி, விக்கல், அக்கினிமாந்தியம், முழங்கால்களில் நோவு, புளியேப்ப மென்னு மிக்குணங்களுடையது அசிரணசுரம்.

பூதசுரம்.

(மாதவநிதானம்) காரணமின்றி நகைப்பு, அழுதல், அதிகசுரம், குமாரகண்டவலியைப்போலிழுத்தல், கண்ணை யுருட்டிவிழித்தல், பிரலாபம், சரீரங்கறுக்குதல், அதிகதிண்டி, சகலவஸ்துக்களிலும் அபேக்ஷை, பாடல், ஆடல், உரோமச்சிலிர்ப்பு, சோம்பல் என்னு மிக்குணங்களுடையது பூதசுரம் அல்லது பூதாவேசசுரம் என்பர்சிலர்.

அபிகாதசுரம்.

(மாதவநிதானம்) அதிகநடையினாலும், பயிரிடுதல்முதலிய உழைப்பினாலும் இந்த சுரம் பிறக்கும். இதனால் முதல்முதல் உடம்பில் வாய்வானது நீக்கமறநிறைந்து அதிகரித்து இரத்தத்தை வேதனையுடன் கெடுத்து வாயுலரச், தேகநிறங்கெடுதி, சர்வாங்கநோவு என்னும் இக்குணங்களை யுண்டாக்கி சுரம்மேலிடும். இது அதிக உழைப்பினால் வருதலால் அபிகாத சுரம் எனப்பெயர்பெற்றது.

விஷசுரம்.

(பாஹடம்) பசி, அதிகதாகம், பிரமை, அடிக்கடி சுரம் வருதல், குளிர், மலமூத்திரம் வெளிப்படுதல், சரீரம் எரிச்சல், மூர்ச்சை, பிதற்றல், வாந்தி, மார்நோய், ஆயாசம், மோகம், முதல்நாள் அல்லது மூன்றாவது நான்காவது நாட்களிலாவதுதாபத்துடன் சுரம்தோற்றல், முதல்நாளில் ஒருமுறைஅல்லது பலமுறை குளிர்சுரம்வருதல் என்னுமிக்குணங்களுடையது விஷசுரம் இச்சுரத்தில் அசாத்தியக் குறிகளிருந்தால் அசாத்தியமென்றும் சாத்தியக் குறிகளிருந்தால் சாத்தியமென்றும் அறியவேண்டியது.

(நித்தியாநாதியம்) ஒருவேளை எரிச்சல், அதுபோலவேசயித்தியம், ஒருவேளை சுரங்காணல், ஒருவேளை இன்மை, ஒருவேளை மூன்று நான்குநாளுடு விட்டுவிட்டுக் குளிர்காணல்யென்னும் லட்சணங்களுடையது விஷசுரம்.

சுரத்தால் விடப் பட்டவன் அபத்தியங்கள் செய்வதால் தோஷங்கள் பிறந்து நாளுக்குநாள் ரசாதிசப்ததாதுக்களில்லொன்றுடன்கலந்து இந்தவிஷச்சுரத்தை உண்டாக்குகின்றது. இது தோஷத்தால் பிறந்ததானபடியால் முதலில் அல்பமாய் தோன்றி நாளுக்குநாளதிகரிக்கும். நீடித்தால் நித்தியசுரத்தை உண்டு பண்ணும்.

(ஆயுர்வேதம்) தோஷங்கள் ஏழுதாதுக்களுடன்கலந்து விஷசுரங்களை பிறப்பிக்கச்செய்கின்றது. இந்தசுரம் சந்ததம், சததம், துவாயிகம், திருதீயகம், சதுர்த்தகம் என்று ஐந்துவகைகளாம். தோஷம் ரசதாதுவை அநுசரித்தால் சந்ததசுரமுண்டாகும் ரத்ததாதுவை அநுசரித்தால் சததச்சுரம் உண்டாகும் மாமிசதாதுவை அநுசரித்தால் துவாயிகசுரம், அதாவது இரண்டுநாளைக் கொருமுறைவருஞ்சுரம் உண்டாகும், மேதோதாதுவைஅநுசரித்தால், திராயிகசுரம் அதாவதுமூன்றுநாளைக்கொருமுறை வருஞ் சுரம் வுண்டாகும், அஸ்திமச்சாதாதுக்களை அநுசரித்தால் மரணத்திற்குச் சமானமான சாதுர்த்திகசுரம் அதாவதுநான்குநாளைக்கொருமுறை வருஞ் சுரமுண்டாகும்.

ரசதாதுவை அநுசரித்து (௭-௮-௰௨) நாட்கள் வரையிலும் இரவும் பகலும் விடாது காயும் சுரத்திற்கு சந்ததமென்றுபேர் பகலில் இரண்டுமுறை, இராத்திரி இரண்டுமுறை அல்லது பகல் ஒருமுறை இராத்திரி ஒருமுறை அல்லது பகலிலாவது, இராத்திரியிலாவது இரண்டு முறை வருஞ் சுரத்திற்கு சததமென்றுபேர். மாமிசதாதுவை அநுசரித்து இரண்டுநாளைக் கொருமுறை வருஞ்சுரம் மாதங்கள் வரையிலும் நீடித்திருக்கும் அதற்கு அன்யேத்யுஷ்கம் என்றுபேர். மேதோதாதுவை அநுசரித்து மூன்றுநாளைக் கொருமுறை வருஞ்சுரந் திரிதீயகம் என்றுபேர். இந்தச்சுரம் அயனங்கள் அதாவது (௬) மாதங்களளவும் பாதிக்கும். அஸ்தி தாது மச்சதாதுக்களை அநுசரித்துவருஞ் சுரம் சாதுர்திகம் என்றுபேர். இது நான்குநாளைக்கொருமுறை காய்ந்து வருஷங்கள்தோறும் நீடித்து சுக்கிலதாதுவை அநுசரித்து துர்ப்பலமுண்டாக்கி மரணத்தை யுண்டு பண்ணும் ஆகையால் இந்த விஷசுரத்தின் சாத்தியா சாத்தியங்களை அறி

ந்து தகுந்த சிகிச்சை செய்யவேண்டியது, இந்த விஷசுரத்திற்கு ஆத்திரேயர் காலாக்கினிருத்திர பைரவ ரசத்தை பிரயோகித்தால் அதிசீக்கிரத்தில் நீங்குமென்று சொல்லியிருக்கிறார்.

காலாக்கினிருத்திரபைரவரசம்.

(ஆத்திரேயர்முறை.)

சுத்திசெய்த வசநாபி	பாகம் -	௧
,, கந்தகம்	,,	௧
,, பாதரசம்	,,	௧
,, சாதிக்காய்	,,	௨

ஷை திரவியங்களை கல்வத்திலிட்டு இடித்து இவைகளுக்கு பேர்பாதிபாகம் திப்பிலிச் சூரணத்தைக் கலந்து வெற்றிலைச் சாற்றால் இரண்டுநாளரைத்து இரண்டு அல்லது மூன்று குன்றிஎடை மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி வைரவமூர்த்தியை பூசித்து ஒருமாத்திரையை வெற்றிலைச் சாற்றிலாவது இஞ்சி ரசத்திலாவது தும்பைப்பூ ரசத்திலாவது கொடுத்தால் சீதசுரங்கள், சந்நிபாதங்கள், விஷசுரங்கள், பிரமேசம், அஜீர்ண சுரங்கள், வாந்தி, தலைநோவு, அக்கினிமந்தம், தருணசுரங்கள், பழய சுரங்கள், விட்டகலும் இதைசக்திபர் செவ்வையா யறிந்து பிரயோகிக்கவேண்டியது, ரோகியின்பலாபலத்தை அறிந்துதயிர்ச்சாதம் கொடுக்கவேண்டியது.

சுக்கிலகதசுரம்.

(ஆயுர்வேதம்) கண்களிருள் கம்மல், மர்மஸ்தானமாகியபுருவம், உச்சி, கண்டம், மார்பு, மார்பின்கீழ்உந்தி, உதடு, பீஜம், முழங்கால். கணுக்கால், இடுப்பு, காலின்பெருவிரல், சுண்டுவிரல் தோள்யென்னுமிடங்களில் நோதல், ஆண்குறிசுரங்கள், இந்திரியச்சிரணம், அதிகநித்திரை, பிரலாபம், ஞாபகமரதி, அவயவங்கள் சுட்டித்தல், சனத்தொனி, தலைதிருகுதல், பல்நோவு, ஏப்பம் விக்கல், அசீரணம், அரோசகம், பேதி, இருமல், சுவாசம், பிர

மை, சர்வாங்கவெளிரலுடன் வீக்கம், தடித்தல், வாந்தி, நடுக்கல் நித்திரைப்பங்கம் சோகை, அன்னத்துவேஷம், அக்கினிமந்தம், வாய்தித்திப்பு, முகத்தில் வியர்வை, கைகால்குளிர்ச்சி என்னு மிக்குணங்களுடையது சுக்கிலதாதுகதசுரம்.

சுரசிகிச்சை.

வெள்ளைச்சாரணைவேர்	கத்திரிச்செடிவேர்
எருக்கன்வேர்	கொள்ளுச்செடிவேர்
சித்தாமுட்டிவேர்	கண்டங்கத்திரிவேர்
நாய்வேளைவேர்	திப்பிலிமூலம், சுக்கு

இவைகளைச் சமஎடையாயெடுத்து இடித்து ஒருபடி ஜலம்விட்டு அரைக்காலாகக் கண்டக்காச்சி மூன்றுவிரற்கடை திப்பிலிச் சூரணம் போட்டுக்காலைமாலை மண்டலமுட்கொண்டால் சுக்கிலதாது சுரம் இவைகள் நீங்கும்.

☞ சுரங்களது குணங்களை அதிகமாய் விவரித்தால் இக்கிரந்தம் விஸ்தாரமாய் முடியும், ஆகையால் முக்கியமானவைகளைமாத்திரம் விவரித்துக்கொண்டு மற்றவைகளின்பேர்களைமாத்திரம் சொல்லிக்கொண்டு போகிறேன்.

ஆமசுரமென்பது சீதத்தைப்பற்றியசுரம்
த்வகாதிசுரமென்பது, சருமத்தைப்பற்றியசுரம்
அந்தர்கதசுரமென்பது, உட்சுரம்
ரக்ததாதுகதசுரமென்பது, ரக்தத்தைப்பற்றியசுரம்
மாமிசகதசுரமென்பது, மாமிசத்தைப்பற்றியசுரம்
அஸ்திகதசுரமென்பது, எலும்பைப்பற்றியசுரம்
காலசுரமென்பது, வயதையநுசரித்தசுரம்
ரசகதசுரமென்பது, இரசத்தைப்பற்றியசுரம்.

ஆகந்துகசுரமென்பது, அடுத்துநின்ற அநுகூலை வருக்கங்களின் காரணமில்லாமல் வருஞ்சுரம், இந்த ஆகந்துகசுரமானது அபிகாதசுரம், அபிஷங்கசுரம், சாபச்சுரம், அபிசாரசுரம் என நான்குபிரிவாயிருக்கின்றது.

அபிகாதசுரம் என்றால் குத்துகாயம் முதலியவிரணங்களினாலும், அக்கினியிடத்திருந்து நடத்துந்தொழிலினாலும் அதிக

நடையினாலும், பயிரிடுதல்முதலிய உழைப்பினாலும் உண்டான சுரத்திற்குப்பெயர்.

பூதாவேசசுரம், ஔஷதகந்தசுரம், விஷசுரம், கோபச்சுரம் பயச்சுரம், துக்கச்சுரம், காமச்சுரம், ஆகிய இவ்வேழுக்கும் அபிஷங்கசுரமென்று பேராம். அபிஷங்க மென்பது சேர்க்கை.

சாபச்சுரம் என்பது, பெரியோர்கள் சபித்ததினாலுண்டாகுஞ்சுரம்.

அபிசாரசுரம் என்றால் அதர்வணவேத மாரணமந்திரங்களைக்கொண்டு ஒருவன் பெயரைச்சொல்லி ஓமஞ்செய்தலினால் பிறந்து ஆச்சரியமான கொப்புளங்கள், மனது தபித்தல், தாகம் என்னும் இக்குணங்களை யுடையது அபிசாரசுரம்.

சங்கமதோஷச்சுரம்.

கண்கள் நீர்க்கம்மலோடு கலங்கிச்சிவந்து சொருகுதல், தலையிலும், தொடையிலும் நோவு, வயிறெரிச்சல் கீல்களெல்லாம் நோவுதல், தாகம், ஆராட்டம், நடுக்கல், பொய்பேசல், உள்ளங்கை உள்ளங்கால் குளிர்ச்சி என்னுமிக்குணங்களை யுண்டாக்கும் இது சையோகத்தினால் பிறந்ததால் சங்கமதோஷச்சுரமென்று பேர்.

விஷூசி அல்லது வாந்திசுரம்.

புளித்தாத்துவாந்தி, தபித்தல், மார்பில் நெருப்புப்பட்டது போலெரிச்சல், கண்டத்திலும், நெற்றியிலும் வியர்வை, பேதியில் சீதம் விழுதல், சதாதாகம், தூர்ப்பலம், கைகால்குளிர்ச்சி, உடம்பெல்லாந் துவைத்ததுபோ லிருத்தல், நிறக்குறைவு, இந்திரியநஷ்டமென்னும் இக்குணங்களையுண்டாக்கும், இந்தவிஷூசிசுரமுடையவன் நாலுநாளைக்குள் எமபுரத்திற்கேகுவான்.

மேற்படி சுரத்திற்கு

சிகிச்சைகள்.

பெருமரப்பட்டை இரசமாவது, அல்லது புளியன்மரப்பட்டை இரசத்தையாவது, மாம்பட்டை இரசத்தையாவது தயிர்

காசுகட்டி. இவைகளுடன் கலந்து குடித்தால் வாந்திசுரம்சொஸ்தமாகும்.

(ஆயுர்வேதம்) புளியன்வேர்ப்பட்டை ரசத்தை எண்ணெயிற்கலந்தாவது அல்லது கலக்காமலும் தலை உள்ளங்கால் நாபியென்னு மிடங்களில் தடவியுட்கொண்டால் வாந்திசுரம்நிற்கும்.

(ஆயுர்வேதம்.)

வாந்திசுரத்திற்கு

அக்கினிகுமாரரசம்.

சுத்திசெய்த-ரசம்		பாகம் -	க
,,	கந்தகம்	,,	க
,,	வெங்காரம்	,,	க
,,	நாபி	,,	ங
பலகரைபஸ்மம்		,,	ங
சங்குபஸ்மம்		,,	ங
மிளகுசூரணம்		,,	அ

மேற்படி இவைகளை கல்வத்திலிட்டு பழச்சாற்றால் இரண்டு நாள் அரைத்து இரண்டு குன்றிஎடை மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி அதில் ஒவ்வொருமாத்திரையை சரீரபலாபலத்தை அறிந்து காலைமாலை வெற்றிலைச்சாற்றால் பிரயோகித்து பிறகு சுத்தசலத்தை குடித்தால், வாந்திசுரம், ஆரோசிகம் சந்நிபாதம், அசீரணம், இவைகள்நீங்கும்.

காமாலைசுரம்.

(மாதவநிதானம்) மலங்கருப்பாயும், மூத்திரம் மஞ்சளாயும் வெளிப்படுதல், சோம்பல், மோகம், வாந்தி, தாகம், அரோசிகம் வயிறு உப்பிசம், கண்கள்சிவப்புநிறம், சுரம், என்னும் குணங்களுடையது காமாலைசுரம், இதில் சுவாசகாசங்களிருந்தால் அசாத்தியம்.

தருணசுரபிரமாணம்.

(பாஹடம்) சுரங்களுக்கு முதல் (எ) நாள், பாலியதிசை பிறகு பத்துநாள் யௌவனதிசை, அதின்மேல் வார்த்திகதிசை.

அசாத்திய சுரலட்சணம்.

(சித்தியாதியம்) இரும்பும்பொழுதும் உமிழும்பொழுதும் ரத்தத்துடன் கலந்து கோழைவிழுதல் விக்கல், மார்புநோவு,

சுவாசம், மலமூத்திரம் பந்தித்தல், பிதற்றல் என்னுங் குற்குணங்களுண்டாகி சுரமும்விடாம லிருந்தாலும் அல்லது இரைப்பு, மூர்ச்சை, அரோசிகம், வாந்தி, தாகம், அதிசாரம், பிரமை, விக்கல், இருமல்தேகவேதனையென்னுமிப்பத்து உபத்திரவங்களிருந்தாலும் மனிதர்களைக்கொல்லும்.

(ஆயுர்வேதம்) இரைப்புடனிருமல், விக்கல், சிரோபாரம் நாவறளல், வாந்தி, மூர்ச்சை, அதிசாரம் என்னும் துர்க்குணங்களுடன்கலந்து சுரம்விடாமலிருந்தால் மனிதர்களைக்கொல்லும்.

சுரத்தின் தசாவஸ்தைகள்.

(வித்தாஸ்சாரம்) க-வது, சொற்பம் தூரமாக விருக்குதல் (உ) வது, முன்னிறந்தவர்களைக் கண்ணிற்கண்டு பேசுதல்போலிருத்தல், (ங) வது, சித்தப்பிரமையாகுதல் (ச) வது, மேல்மூச்சுவாங்குதல், (ரு) வது, விழித்தவிழி விழித்தபடியா யிருக்குதல், (சு) வது, வெற்றுக்குமலுண்டாகும், (எ) வது, சரீரமுழுவதும் மரணஎரிச்ச லெழும்புதல், (அ) வது, தன்கையினால்முகத்தைத் தடவிக்கொள்ளுதல், (கூ) வது, சரீரமுழுவதுஞ் சிலேஷ்ம வியர்வையாகுதல், (ய) வது, மரணம்.

சுரதினபிரமாணம்.

(சித்தியாதியம்) வாதசுரத்திற்கு (எ) நாட்கள், பித்தசுரத்திற்கு (ய) நாட்கள், சிலேஷ்மசுரத்திற்கு (யஉ) நாட்கள், காலபிரமாணஞ் சொல்லியிருக்கின்றது.

(அக்கினிமாதம்) வாதசுரம் (யச) நாட்கள், பித்தசுரம் (யஅ) நாட்கள், சிலேஷ்மசுரம் (உஉ) நாட்கள், வியாபித்து காலப்பிரமாணம் ஆனவுடன் சொஸ்தமாகுதலுமாகும் அல்லது கொன்றுங்கொல்லும்; இத்தக்காலப் பிரமாணங்களுக்கு மேற்பட்டால் பழயசுரமாகிறது என்று அறியவும்.

(ஹரீதம்) வாதாதி சிலேஷ்மசுரங்கள் முதல்ஜாமத்தில்வெளியில் தோன்றினல் (எ) அல்லது ஒன்பதுநாட்களில் சொஸ்

தப்படும். இரண்டாவது ஜாமத்தில் தோன்றினால் (௰௧) அல்லது பதின்மூன்று நாட்களில் சொஸ்தப்படும், மூன்றும் அல்லது நான்காம்ஜாமத்தில் தோன்றினால் (௰௫) அல்லது இருபத்தொரு நாட்களில் சொஸ்தப்படும்.

பழயசுரங்களுக்கு

மாலிநீவசந்தரசம்.

(லித்தராஸாரணம்)

* சுத்திசெய்த-கபரீ	பாகம்-௨
,, மிளகு	,, ௧

இவைகளை கல்வத்திலிட்டு வேப்பன்பட்டை ரசத்தால்மூன்றுநாள் அரைத்து, குன்றியெடை மாத்திரைகள்செய்து, சீரகம், திப்பிலி, அநுபானமாய்ப்பிரயோகித்தால், சிரண சுரம், அஸ்திகதசுரம், தாதுகதசுரம், சுராதிசாரம், மாம்சகதசுரம், புராணசுரங்கள் சொஸ்தமாகும்.

ரசகல்ப்பங்கள்.

சுத்திசெய்தகபரியை கல்வத்திலிட்டு(௰௧) நாள் இடைவிடாமல் அரைத்து எழுகுன்றியெடை மாத்திரைகள் செய்துநிழலுலர்த்தி, ஒருமாத்திரையை தேன், திப்பிலி, சூரணம், அநுபானயுக்தமாய் உட்கொண்டால் பழயசுரங்கள் நான்குஜாமங்களில் சொஸ்தப்படும்.

சுத்திசெய்தகபரியை கல்வத்திலிட்டு பசுநெய்யால் எட்டுநாட்கள் இரவும் பகலும் அரைத்து நாலுகுன்றியெடை மாத்திரைகள்செய்து, திப்பிலிசூரணம், அல்லது லவங்கச்சூரண அநுபானமாய் உட்கொண்டால் புராணசுரங்கள் ஒருஜாமத்தில் விட்டகலும்.

சுத்திசெய்தகபரி, மிளகு இவைகள்சமனடையாய்கல்வத்திலிட்டு எருக்கன்வேர் ரசத்திலும், கோமூத்திரத்திலும் (௮௰)

---

* கப்ரி என்றால் துத்தம் என்று அறிக.

ஜாமங்கள் இடைவிடாமல் அரைத்து எழுகுன்றி எடை மாத்திரைகள்செய்து, இலவங்கம், திப்பிலி, தேன் அநுபானமாய் கொடுத்தால் புராணசுரங்கள் நீங்கிவிடும்.

சுத்திசெய்த-கபரி	பாகம் - ௧
,, கெந்திக்காகெந்தம்	,, ௧

இவைகளை கல்வத்திலிட்டு (௮௮)ஜாமம்வரை ஆட்டுப்பாலாலும், (௮௮) ஜாமம்வரை பசுவின் பாலாலும், அரைத்து நாலுகுன்றி எடை மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்தி சீரகம், திப்பிலி, தேன், அநுபானமாய் உட்கொண்டால் பழயசுரங்கள் அக்கினிமந்தம் முதலியவை அரைநாழிகையில் சொஸ்தமாகும்.

கபரிசுத்தி.

இரண்டுபலம் கபரியை தூளித்து துணியில்மூட்டைக்கட்டி (௭) ஜாமங்கள் நாரத்தைரசத்திலும், (௨) ஜாமங்கள் கோமூத்திரத்திலும், [illegible]ரத்தில் எரித்தாலும் அல்லது பசுவின் நெய்யில் ஏழுமுறை வருகிற வரையிலும் வருத்தாலும் சுத்தியாகும், சுத்திசெய்த கபரியை மேற்கூறிய பிரயோகங்களில் உபயோகிக்கலாம்.

இச்வரதேராரி.

(ஆயுர்வேதம்) சுத்திசெய்த கபரியை (௨௧) தடவை பழச்சாற்றால் சுருக்குகொடுத்து பிறகு அதை ஆர்க்கபொடிசெய்து அச்சூரணத்தில் ஆறுகுன்றி எடை சர்க்கரை அநுபானத்திலாகிலும், அல்லது தேன் திப்பிலி அநுபானத்திலாகிலும் உட்கொண்டால் சகல சுரங்களும் சூரியனைக்கண்ட பனிப்போல் விட்டகலும்.

(பாஷாட்டம்.)

இச்வரஹரி.

சுத்திசெய்த லிங்கம்	பாகம் - ௧	மிளகு	,, ௧
,, நாபி	,, ௧	திப்பிலி	,, ௧
,, வெங்காரம்	,, ௧	சுக்கு	,, ௧
,, கேர்வாளசூரணம்	௭	கடுக்காய்	,, ௧

ஷை திறுசுகளை கல்வத்திலிட்டு பழச்சாற்றால் ஒருஜாமம் அரைத்து நாலுகுன்றிஎடை மாத்திரைகள்செய்து இஞ்சிரசத்தில்உட்கொண்டால் அந்தக்ஷணமே சுரங்கள் நீங்கும்.

(நித்தியநாதீயம்)

சகலசுராதிஷரகுளிகைகள்,

ஜாதிக்கா	ஏலக்காய்
சுக்கு	பத்திரி
மிளகு	லவங்கப்பட்டை
திப்பிலி	கர்ச்சூர்க்கா
கடுக்காய்	திராக்ஷை
தானிக்காய்	அகர்
நெல்லிவற்றல்	முசுமுசுக்கை
சந்தனம்	தக்கோலம்
கொத்தமல்லி	அதிமதுரம்
சீரகம்	அஸ்வகந்தி

ஷை திறுசுகளை சமமாய் சூரணித்து அதற்கு சமமாய் சர்க்கரைபாகுபிடித்து மேற்படி சூரணத்தை கலக்கி, இலந்தங்காயளவு மாத்திரைகள்செய்து உட்கொண்டால் சகலசுரங்கள், பித்தரோகங்கள், சுவாசங்கள், இருமல், க்ஷயம், பாண்டு, காமாலை பிரமேஹம் முதலியவைகளை நாசப்படுத்துமென்று பூஜ்யபாத மஹாரிஷி சொல்லியிருக்கிறார் கைகண்டமுறை.

(ஆயுர்வேதம்)

இச்வரவைரிகுளிகை,

சுத்திசெய்த ரசம்	பலம்	௧	சுக்கு	பலம்	௧௨
,, கந்தகம்	,,	௧	திப்பிலி	,,	௧௬
,, வசநாபி	,,	௧	மிளகு	,,	௭
,, ஊமத்தனவிரை		௧			

ஷை திறுசுகளை கல்வத்திலிட்டு வெல்லத்தண்ணீரில் ஒருஜாமம் அரைத்து குன்றிஎடை மாத்திரைகள்செய்து ஒருமாத்திரையை வெல்லத்தில் கொடுத்து பிறகு வெந்நீர் குடித்தால் எவ்விதமான சுரங்களும் ஏழுநாளைக்குள் சொஸ்தமாகும்.

(சரகம்.)

ஜ்வரகஜகேசரி,

முத்தக்காசு	சுத்திசெய்த-ரசம்
சுத்திசெய்த லிங்கம்	,, கந்தகம்

இந்த திறுசுகளை சமஎடையாய் கல்வத்திலிட்டு தேனால் ஒருஜாமம் அரைத்து ஆறு குன்றிஎடை மாத்திரைகள் செய்து ஒருமாத்திரையை சுரம்வந்த உடனே இஞ்சிரசத்தில்கொடுத்து பால்சாதம்சாப்பிட்டால் சகலசுரங்களும் நாசமாகும்.

(ஆயுர்வேதம்)

நாரசிம்மரசம்.

சுத்தித்த, கோர்வாளம்பாகம்		௨	சுத்தித்த, நாபி	பாகம்-	௧
,, கந்தகம்	,,	௧	ரசம்	,,	௧

இந்த திறுசுகளை சூரணித்து இரண்டு குன்றியெடை சூரணத்தை சர்க்கரையில் கலந்துகொடுத்தால் சகல சுரங்களும் நிவர்த்தியாகும்.

(ரசரத்னாகரம்)

சகலசுரங்களுக்குஞ்

சண்டேஸ்வரரசம்,

சுத்திசெய்த ரசம்	சுத்தி, நாபி
,, கந்தகம்	,, தாம்பிரபஸ்பம்

இந்ததிறுசுகளை சமஎடையாய் கல்வத்திலிட்டு இஞ்சிரசத்தால் நாளொன்றிற்கு ஒருஜாமம் அரைத்து,பிறகு,நொச்சியிலைச்சாற்றால் நாளொன்றிற்கு ஒருஜாமமாக ஏழுநாள் அரைத்துகுன்றியெடை குளிகைசெய்து நிழலிலுலர்த்திஒருமாத்திரையை இஞ்சிரசத்தில் கொடுத்தால் சகல வாதாதி தோஷங்களையும் அவைகளா லுண்டாகும் சுரங்களையும் அதிசீக்கிரமாய்ச் சொஸ்தப்படுத்தும். குளிர்ந்த தண்ணீரில் குளிக்கவும், தாகத்திற்கு பாலைகொள்ளவும், வெண்டிமொருல், மா, பலா, கதலிமுதலிய பழங்களைச் சாப்பிடவும்,சந்தனம்,அத்தர், அகர்முதலிய வாசனை

திரவியங்களைப் பூசிக்கொள்ளச்செய்யவும் குளிகைகளில் இதற்குச்சமமானது கிடையாது. இவை வைத்தியர்களை புகழ்பெறச் செய்யும்,

சிவபெருமானால்சொல்லப்பட்ட

ஸ்ரீ ஜயமங்களரசம்.

(சித்தராரணவம்)

சுத்தித்த வாலைரசம்	பாகம்	க	இந்துப்பு	பாகம்	க
,, கந்தகம்	,,	க	மிளகு	,,	க
,, வெங்காரம்	,,	க	சுவர்ணபஸ்பம்	,,	உ
தாம்பிரபஸ்பம்	,,	க	காந்தபஸ்பம்	,,	க
வங்கபஸ்பம்	,,	க	லோஹபஸ்பம்	,,	க
ஹேமமாக்ஷிகபஸ்பம்	,,	க	வெள்ளிபஸ்பம்	,,	உ

இவைகளை கல்வத்திலிட்டு சூரணித்து ஊமத்தையிலைச் சாற்றிலும், கருநொச்சியிலைச்சாற்றிலும், தசமூல கஷாயத்தாலும், நிலவேம்பு கஷாயத்தாலும் மும்மூன்றுநாள் பிரத்தியேகமாய் ஒவ்வொருவிதச் சாற்றாலரைத்து இரண்டுகுன்றி எடை மாத்திரைகளைச்செய்து நிழலிலுலர்த்தி அதில் ஒருமாத்திரையை சிறுகய் தேன் இவைகளில்அநுபானமாய்கொடுத்தால் வெகுநாளாக பாதிக்கும் சீரணசுரம் எட்டுவிதங்களான சாத்தியாசாத்திய சுரங்கள், தாவந்தசுரங்கள், சந்நிபாதசுரங்கள் விஷசுரங்கள், மேகோதக மாரிகசத அஸ்திகத மாச்சாகதசுரங்கள் பயங்கரமான அந்தர்க்ககுரங்கள், நாலுதோஷங்களாலுண்டான சுரங்கள் சுக்கிலகதசுரங்கள், சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கிவிடும் இது சிவபெருமானால் கூறப்பட்ட ஜயமங்களரசம் இது பசியையுண்டுபண்ணி சகல வியாதிகளை வோட்டிவிடும்.

சகலசுரங்களைஹரிக்குங் கஷாயம்.

கண்டுபாரங்கி,முத்தக்காசு, பர்ப்பாடகம்,பூனைக்காஞ்சொறி சுக்கு, நிலவேம்பு, கோஷ்டம், திப்பிலி, கண்டங்கத்திரி, சிந்தில் கொடி, ஆடாதோடை ஈர்க்கு இவைகளை சமனெடையா யிடித்து ஒருபடிசலம்விட்டு அரைக்காக சுண்டக்காய்ச்சி காலைமாலை குடித்துவந்தால் சகலசுரங்களும் நாசமாகும்.

வாதசுரத்திற்கு சட்யாதிகஷாயம்.

கிச்சிலிக்கிழங்கு	சிந்திற்கொடி
தாமரைக்கிழங்கு	சுக்கு
சிறுதேக்கு	வட்டத்திருப்பி
கழிக்காப்பூ	நிலவேம்பு
பூனைக்காஞ்சொறிவேர்	கடுகுரோகணி

இவைகள் சமவெடையா யிடித்து கஷாயம்வைத்து குடித்தால் சகலவாதசுரங்களும் நிர்மூலம்போம்.

பித்தசுரத்திற்கு திராக்ஷாதிகியாழம்,

திராக்ஷை, கடுக்கா, பர்ப்பாடகம், முத்தக்காசு, கடுகுரோகணி, கொன்னைப்புளி இவைகளைச்சமவெடையாயிடித்து கஷாயம்வைத்து குடித்தால் பித்தமயல், மூர்ச்சை, பிரமை, தாகம், சோஷை. நாவரட்சிபோம்.

சிலேஷ்மசுரத்திற்கு

பிப்பல்யாதிகஷாயம்,

திப்பிலி, மோடி, சவ்வியம், சித்திரமூலம், சுக்கு, மிளகு, ஏலக்காய், ஓமம், வெட்பாலையரிசி, வட்டத்திருப்பி, தக்கோலம் கண்டுபாரங்கி, வேப்பன்விதை, பெருங்காயம், கடுகுரோகணி, கிரு, வாய்விளங்கம், அதிவிடையம், தர்ப்பைவேர் இவைகளைச் சமனெடையாயிடித்து கஷாயம்வைத்து உட்கொண்டால் சிலேத்துமசுரங்கள் சொஸ்தமாகும்,

வாதசிலேஷ்மசுரத்திற்கு

முஸ்தாதிகஷாயம்,

கோரைக்கிழங்கு, பர்ப்பாடகம், சுக்கு, சிந்தில்கொடி, பூனைக்காஞ்சொறிவேர் இவைகளைச் சமனெடையாகவிடித்து கஷாயம் வைத்து உட்கொண்டால் வாதசிலேத்துமசுரம், அரோசிகம், வாந்தி, தாகம், சோஷை சொஸ்தமாகும்.

வாதபித்தசுரத்திற்கு

பஞ்சபத்திரகஷாயம்,

சிந்தில்கொடி, பர்ப்பாடகம், கோரைக்கிழங்கு, நிலவேம்பு, சுக்கு இவைகளைச்சமனெடையாகவிடித்து கஷாயம்வைத்து உட்கொண்டால் வாதபித்தசுரம் சொஸ்தமாகும்.

பித்தசிலேஷ்மசுரத்திற்கு.

கண்டகாரியாதிகஷாயம்,

கண்டங்கத்திரிவேர்	நிலவேம்பு
சிந்தற்கொடி	சந்தனத்தூள்
கண்டுபாரங்கி	கோரைக்கிழங்கு
சுக்கு	பேய்ப்புடலை
வெட்பாலையரிசி	கடுகுரோகணி
பூனைகாஞ்சொறிவேர்	

இவைகளை சமனெடையாய் இடித்து கஷாயம்வைத்து உட்கொண்டால், பித்தசிலேஷ்மசுரம், தாகம், நாவரட்சி, அரோசிகம், விக்கல், இருமல், கர்ப்பசூலை, குக்ஷிசூலை, சொஸ்தமாகும்.

சன்னிபாதசுரத்திற்கு

பூநிம்பாதிகஷாயம்.

நிலவேம்பு	கடுகுரோகணி
தேவதாரி	வெட்பாலையரிசி
தாமூலம்	கொத்தமல்லி
சுக்கு	ஆனைத்திப்பிலி
கோரைக்கிழங்கு	

இவைகள் சமனெடையாய் வாங்கி இடித்து கஷாயம்வைத்து உட்கொண்டால் சோம்பல், பிரலாபம், இருமல், அரோசிகம், தாகம், மோகம், சுவாசகாசங்கள், சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கிவிடும்.

ஆகந்துகசுரத்திற்கு

வியாக்கிராதிகஷாயம்.

கண்டங்கத்திரிவேர், சுக்கு, சிந்தற்கொடி இவைகள் சமனெடையாய் இடித்து கஷாயம்போட்டு அதில் மூன்றுவிரற்கடை திப்பிலிசூரணம், போட்டு உட்கொண்டால் சீரண சுரங்கள், அரோசிகம், சுவாசம், இருமல், சூலை, அக்கினிமந்தம், பீநசம், இவைகள் சொஸ்தமாகும்.

விஷசுரத்திற்கு முஸ்தாதிகஷாயம்,

கோரைக்கிழங்கு, நெல்லிவற்றல், சிந்தற்கொடி, சுக்கு, கண்டங்கத்திரிவேர் இவைகள் சமனெடையாய் இடித்து கஷாயம் போட்டு அதில் மூன்றுவிரற்கடை திப்பிலி சூரணமும் தேனு க்கலந்து உட்கொண்டால் விஷசுரம்நீங்கும்,

---

ஆமசுரங்களுக்கு

நாகராதிகஷாயம்,

சுக்கு, சிந்தற்கொடி, கோரைக்கிழங்கு, சந்தனத்தூள், வெட்டிவேர், கொத்துமல்லி இவைகளைசமனெடையாயிடித்துகஷாயம் வைத்து அதில் தேனுஞ்சர்க்கரையும் கலந்து உட்கொண்டால் திரிபாகிக சுரங்கள் நீங்கும்.

திரிதியசுரகஷாயம்,

ஆடாதோடை, நெல்லிவற்றல், சித்தாமல்லி, தேவதாரி, கொத்துமல்லி, சுக்கு இவைகள் சமனெடை இடித்து கஷாயம் வைத்து அதில் தேனுஞ் சர்க்கரையுங்கலந்து உட்கொண்டால் திரிதியகசுரம் நீங்கும்.

சதுர்சுரத்திற்கு சுகபேதிகஷாயம்,

நெல்லிவற்றல், சித்திரமூலம், கடுக்காய், இந்துப்பு, திப்பிலி இவைகள் சமனெடைசூரணித்து வெந்நீரால் உட்கொண்டால் அலுப்பில்லாமல் சுகமாய் பேதியாகி சகலசுரங்கள், சிலேத்துமங்கள், ஆமரோகங்கள், மந்தம் இவைகள் நீங்கி பசிதீவினை யுண்டாகும்.

சாதுர்திகசுரகஷாயம்,

கடுக்காய், சித்தாமல்லி, சுக்கு, தேவதாரி, நெல்லிவற்றல், ஆடாதோடை இவைகளைச் சமனெடையாயெடுத்திடித்து கஷாயம் வைத்து அதில் கற்கண்டுந் தேனுங் கலந்து உட்கொண்டால், சாதுர்திகசுரம் அதிசீக்கிரமாய் விட்டகலும்.

அதிசாரசுரத்திற்கு கஷாயங்கள்,

சுக்கு, அதிவிடயம், கோரைக்கிழங்கு, கிலிவேம்பு, சித்தர் கொடி, வெட்பாலையரிசி, இவைகள்சமஎடையா யிடித்து கஷாயம்வைத்து உட்கொண்டால சகலஅதிசாரங்கள் விட்டகலும்.

ஆமாதிசாரத்திற்கு தான்யாதிகஷாயம்,

கொத்துமல்லி, கோரைக்கிழங்கு, குருவேர், வில்வப்பழம், சுக்கு இவைகள்சமஎடையா யிடித்து கஷாயம்வைத்து உட்கொண்டால் சீதம்கசித்த ஆமாதிசாரசுரம் விட்டகலும்.

சுராதிசாரங்களுக்கு நாகராதிகஷாயம்,

சுக்கு, தேவதாரி, கொத்துமல்லி, கண்டங்கத்திரி இரண்டுவிதம் இவைகள் சமஎடை இடித்து கஷாயம்வைத்து உட்கொண்டால் சுராதிசாரங்கள் விட்டகலும்.

இரக்தாதிசாரசுரத்திற்கு கஷாயம்,

வெட்பாலையரிசி, அதிவிடயம், வில்வபழம், குருவேர், முத்தக்காசு இவைகள் சமஎடை இடித்து கஷாயம்வைத்து உட்கொண்டால்சீதம், சூலை, இரத்தம் என்னும் இவைகளுடன்கலந்து வெகுகாலமாய் அவஸ்தைப்படுத்தும், அதிசாரசுரங்கள்சூரியனைக்கண்ட பனிப்போல் விட்டகலும். (அநுபானம்)

இதுவுமது

யானைவணங்கிப்பட்டை, இலந்தப்பட்டை, நாவல்பட்டை, மாம்பட்டை இவைகளில் யேதாகிலும் பசுவின்பாலில் இடித்து ரசம்பிழிந்து தேன்கலந்து உட்கொண்டால் ...க்தாதி சாரம் விட்டகலும்.

சோமாதிசாரத்திற்கு கஷாயம்,

தேவதாரி, அதிவிடயம், மாவுக்கு, மாய்க்காக்கம், முத்தக்காசு, மிளகு, வெட்பாலையரிசி இவைகள் சமஎடைஇடித்து கஷாயம்வைத்து உட்கொண்டால் கடியசீக்கிரத்தில் சோமாதிசாரங்கள் நீக்கும்.

(பூச்யபாதீயம்)

பழயசுரங்களுக்கு

மகாலவங்காதிசூரணம்.

இலவங்கப்பட்டை	பாகம் -	க	திப்பிலி	பாகம் -	௰௬
நாககேசரம்	,,	உ	சுக்கு	,,	௩௨
ஏலக்காய்	,,	ச	அமுக்கிறாகிழங்கு	,,	௬௪
மிளகு	,,	அ			

ஷை திறுசுகளைச்சூரணித்து அச்சூரணத்திற்கு சமஎடையாய் சற்க்கரையைக்கலந்து மூன்றுவிரற்கடை பிரமாணம் வென்னீரால் உட்கொண்டால் கபம், பித்தம், பாண்டு, குல்மம், பழயசுரங்கள், மூலவியாதி, அரோசிகம், அசீர்ணம், பெருமூச்சு, சுவாசகாசம், விக்கல், க்ஷயரோகம், மார்புநோவு, பாரிசவாதம் முதலியவியாதிகள் சிங்கத்தைக்கண்ட யானையைப்போல் பறந்தோடும்.

பழயசுரங்களுக்கும், க்ஷயகாசங்களுக்கும்,

ஏலாதிச்சூரணம்.

ஏலக்காய்	ஜாதிக்காய்
இலவங்கப்பட்டை	சித்தர்சர்க்கரை
இலவங்கபத்திரி	கொத்துமல்லி
நாககேசரம்	வாம்பு
மிளகு	கடுரோகணி
கிலிவேம்பு	ஆடாதோடைவேர்க்கு
குருவேர்	அதிமதுரம்
சாமந்தி	திராக்ஷை
கோரைக்கிழங்கு	சிற்றிலிக்கிழங்கு
திப்பிலி	சந்தனத்தூள்
துருஷ்கம்	மருதமரப்பட்டை
தக்கோலம்	ஜாதிமொக்கு
கோஷ்டம்	கண்டுபாரங்கி

இந்த திறுசுகளை சமஎடையாய் எடுத்து சூரணித்து அச்சூரணத்திற்கு சமஎடையாய்ச் சர்க்கரைக்கலந்து மூன்றுவிரற்கடை பிரமாணம் உட்கொண்டு வென்னீர் குடித்தால் சிலேஷ்மபித்தசுரங்கள், பாண்டு, க்ஷயரோகம், மூலவியாதி, அரோசி

கம், குல்மம், பழயசுரங்கள், சுவாசகாசங்கள், விக்கல், மார்பு நோவு சொஸ்தமாகும், இதுஜனங்களுக்கு மிகவும் நன்மையானதென்று பூச்சியபாதரிஷி சொல்லியிருக்கிறார்.

(ஆயுர்வேதம்)

முறைக்காய்ச்சலுக்கு

நிம்பாதி சூரணம்.

வேப்பிலை	பாகம் - ௪	ஓமம்	பாகம் - ௫
திரிபலங்கள்	,, ௧	திரிலவணங்கள்	,, ௧
திரிகடுகு	,, ௧	நவாக்ஷாரம்	,, ௧

இந்தவினுசுகளை யொன்றாய்ச்சேர்த்து சூரணித்து காலையில் உட்கொண்டால் சகலமுறைக்காய்ச்சல்களும் பழயசுரங்களும் சொஸ்தமாகும்.

சகலசுரங்களுக்கு சுதரிசனச்சூரணம்,

கடுக்காய்	ஓமம்
தானிக்காய்	கருஞ்செவ்வாலையரிசி
நெல்லிவற்றல்	முருங்கவித்து
மஞ்சள்	காவிக்கல்
மரமஞ்சள்	வசம்பு
கண்டங்கத்திரி-உ-வித்தம்	இலவங்கப்பட்டை
கிச்சிலிக்கிழங்கு	தாமரைக்கொடி
சுக்கு	கொத்துகம்மலை
மிளகு	வாய்விளங்கம்
திப்பிலி	சித்திரமூலம்
மோடி	தேவதாரி
பெருங்குரும்பை	சவ்வியம்
பூனைக்காஞ்சொறி	கொடிமுந்திரிப்பழம்
கடுகுரோகணி	பேய்ப்புடல்
பற்பாடகம்	ஆடாதோடை
முத்தக்காசு	தண்ணீர்விட்டான் கிழங்கு
புங்கம்வேர்	இலவங்கம்
வேப்பன்வேர்ப்பட்டை	வெள்ளைத்தாமரை
தாமரைக்கிழங்கு	தென்கொடிக்குசெடிசமூலம்
அதிமதுரம்	இலவங்கப்பத்திரி
வெள்ளைவெட்பாலையரிசி	ஜாபத்திரி
சிறுதேக்கு	தாளிசப்பத்திரி

இவைகளைச் சமஎடையாய்ச் சூரணித்து சூரணத்திற்கு பேர்பாதி நிலவேம்புச் சூரணங்கலந்துசலத்தால் ஒருருபாஎடை உட்கொண்டால் வாதபித்த சிலேஷ்மசுரங்கள், துவந்தசுரங்கள் திரிதோஷ சுரங்கள், ஆகிகசுரங்கள், சப்ததாதுகத சுரங்கள், மேகம், பிரமை, பித்தம், தாகம், சுவாசகாசங்கள், பாண்டு, காமாலை, பக்கசூலைகள் முதலியரோகங்களை இருமாலினதுசக்கிரம் அரக்கர்குலத்தை நாசப்படுத்தியதுபோல் நாசப்படுத்தும்.

(கார்க்கேயம்.)

சகலசுரங்களுக்கு ஆமலக்யாதி சூரணம்.

நெல்லிவற்றல்	திப்பிலி
சித்திரமூலம்	இந்துப்பு
கடுக்காய்	

இவைகளை சமஎடையாய் சூரணித்து மூன்றுவிரற்கடை பிரமாணம் உட்கொண்டால் சகலசுரங்கள் போம் தோஷங்களைபேதிக்கும் அரோசிகத்தை விலக்கும் மந்தத்தையோட்டி பசித்தீபனையுண்டாக்கும்.

விஷசுரங்களுக்கு ஹரீதக்யாதிசூரணம்.

கடுக்காய், வேப்பனிலை, சுக்கு, இந்துப்பு, சித்திரமூலம்மேற்படி இவுசுகளை சமஎடையாய் சூரணித்து மூன்றுவிரற்கடை பிரமாணம் உட்கொண்டால் விஷசுரம் விட்டகலும்.

சீதசுரங்களுக்கு கிராதாதிசூரணம்.

நிலவேம்பு	வாய்விளங்கம்
சிவதைவேர்	சுக்கு
திப்பிலி	கடுகுரோகணி

இந்தவினுசுகளை சமஎடையாய்ச்சூரணித்து அச்சூரணத்தில் ஒருசிட்டிக்கை தேனிற்கலந்துஉட்கொண்டால் சீக்கிரத்தில்சீதசுரங்கள் விட்டகலும்.

மேகசுரத்திற்கு

அஸ்வகந்திரசாயனம்.

அஸ்வகந்தி	பலம் - உசு	காட்டெருமைப்பால்
ஏலம்		சுக்கு
இலவங்கப்பட்டை		மிளகு
இலவங்கபத்திரி		திப்பிலி
சிறுநாகப்பூ		வெட்டிவேர்
கொத்துமல்லி		கிராம்பு
கொடிமுந்திரிப்பழம்		திப்பிலிமூலம்
சந்தனத்தூள்		சித்திரமூலம்
சன்னலவங்கப்பட்டை		சவ்வியம்
கடுக்காய்ப்பூ		

இவைகள் திறுசுக்கு (ட) விராகனிடை இவையெல்லாம் இடித்து வஸ்திரகாயஞ்செய்து நாலுபடிபசும்பால் ஒருசட்டியில் வார்த்து அதில் (ரும) பலம் சீனிசர்க்கரைப்போட்டு, வடிகட்டி பக்குவஞ்செய்துகொண்டு அதில் மேற்படி சூரணத்தைப்போட்டு நெய் படி (உ) தேன்படி (க) இவைகளை அதனுடன் சேர்த்து ரசாயனபக்குவமாய் செய்துகொண்டு வேளையொன்றிற்கு கொட்டைப்பாக்கு அளவாக நாள் ஒன்றுக்கு இரண்டுவேளை, ஒரு மண்டலஞ்சாப்பிட மேகசுரம், ரத்தபயித்தியம், பித்தரோகம், அஸ்திசுரம்முதலானவியாதிகள் சொஸ்தமாகும் இச்சாபத்தியம்

அந்தர்கதகாய்ச்சலுக்கு

அஸ்வகந்திலேகியம்.

நெய் படி - க	தாளிசபத்திரி
சுக்கு	சிறுநாகப்பூ
மிளகு	கிராம்பு
திப்பிலி	கொடிமுந்திரிப்பழம்
அரத்தை	ஏலம்
ஆதுவேளைவேரின்பட்டை	சீரகம்
கண்டங்கத்திரிவேர்ப்பட்டை	லவங்கப்பட்டை
லவங்கபத்திரி	கண்டதிப்பிலி

இந்ததினுசுகள்வகைக்கு பலம் (க) இத்துடன் அமுக்கிறா கிழங்கு பலம் (உய) சீனிசர்க்கரைபலம் (ய) பால்படி (க) அமுக்கிறாகிழங்கு, ஆதுவேளை, கண்டங்கத்திரிவேர் இவைகளை மாத்

திரம் வேரேயெடுத்து வைத்துக்கொண்டு, மற்றச்சரக்குகளையெல்லாம் பொன்னிறமாய் வறுத்துக்கொண்டு சகலத்தையும்சேர்த்து இடித்து வஸ்திரகாயஞ்செய்து பாலுஞ்சர்க்கரையும் பாகுப்போல் பக்குவஞ்செய்துக்கொண்டு இந்தச்சூரணத்தை அதிற்போட்டு நெய்யையும் வார்த்து அத்தோடே ஒருசேர் தேனையும் விட்டு லேக்கியபக்குவமாய்ச் செய்துக்கொண்டு வேளைக்கு கொட்டைப்பாக்களவு நாளொன்றிற்கு இரண்டுவேளை அரைமண்டலஞ்சாப்பிட அந்தர்கதசுரம், இருமல், அக்கினிமந்தம் முதலியவைகள் நீங்கும் இச்சாபத்தியம்,

சுரங்களுக்கு

வாய்விளங்காதி சூரணம்.

வாய்விளங்கம்	பெருங்காயம்
சுக்கு	இந்துப்பு
சித்தரத்தை	கண்டுபாரங்கி
திப்பிலி	

இந்ததினுசுகளை சமஎடையாயெடுத்து சூரணித்து அதில் கால்பாகம் யவாச்சாரம் பொடிசெய்து சேர்த்து வேளையொன்றிற்கு இரண்டு விராகனிடை தேனிற்கலந்து நாள் ஒன்றிற்கு இரண்டுவேளை சாப்பிட சுரங்கள், இருமல் இரைப்பு, ஆரோசிகம் அக்கினிமந்தம் அனுகூலமாகும்.

சகலசுரங்களுக்கு பிப்பிலாதிரசாயனம்.

திப்பிலி	பலம்-யசு		திப்பிலிமூலம்	பலம்	- உ
சர்க்கரை	,,	அ	சவ்வியம்	,,	உ
வாய்விளங்கம்	,,	ச	கொடிவேலி	,,	ச
கண்டுபாரங்கி	,,	ச	சுக்கு	,,	உ
மிளகு	,,	ச	லோகசிந்தூரம்	,,	உ
சீரகம்	,,	ச	கையாந்தகரைசூரணம்	,,	உ
லவங்கப்பட்டை	,,	ச	லவங்கப்பத்திரி	,,	க
ஏலம்	,,	க	கடுக்காய்	,,	க
தாளிக்காய்	,,	க	நெல்லிமுள்ளி	,,	க
ஜாதிக்காய்	,,	உ	தேன்	,,	அ

இம்மருந்துகளை யெல்லாம் இடித்து சூரணித்து வஸ்திரகாயஞ்செய்து சர்க்கரையும் தேனும் சேர்த்து அரைத்து ஒரு

பாத்திரத்தில் பெய்த்துவைத்துக்கொண்டு வேளை யொன்றுக்கு பெரியகழற்சிக்காய்ப்பிரமாணம் நாளொன்றுக்குஇரண்டுவேளை விதிதம் ஒருமண்டலம் சாப்பிட்டால் சகலசுரங்கள் பஞ்சகாசம் இருத்தரோகம், பாண்டுரோகம், வாயு, அக்கினிமந்தம் முதலிய வியாதிகள் சூரியனைக்கண்ட இருள்போல் பறந்தோடும்.

சுரபாண்டுரோகங்களுக்கு தாளிச்சாதிவடகம்.

தாளிசப்பத்திரி	ஏலம்
மிளகு	சிறுநாகப்பூ
சவ்வியம்	இலவங்கப்பட்டை
இரும்பு	விலாமிச்சைவேர்

இந்தநிறுத்தல்கள் வகைக்குப்பலம் (க௨)

திப்பிலிமூலம்	பலம் - ௨
திப்பிலி	,, ௨
சுக்கு	,, ௩

இவைகளையெல்லாம் இடித்து சூரணித்து வஸ்திரகாயஞ் செய்து சேலம்சர்க்கரை இரண்டுசேர், அச்சூரணத்தோடு சேர்த்து அரைசேர் பாலை அதின்பேரில் தெளித்து நன்றாய்பிசறி ஒருகுண்டுசட்டியில் இரண்டுபடிபசுவின்பாலையும் இரண்டுபடி சலத்தையும் ஊற்றி அந்த குண்டுசட்டியின் வாயை ஒருசவுக்கத்தால்மூடி அதின்மீது இந்தச்சூரணத்தைவைத்து ஆவிவெளியே போகாதபடி அதின்பேரில் ஒருசட்டியை கவிழ்த்து அடுப்பின்பேரில்வைத்து பால்வண்டுகிற வரையிலும் எரித்து பிறகு அதில்வெந்து இருக்கிறசூரணத்தை சுத்தமான பலகையின் மீது கொட்டி ஒருசேர் பசுவின்நெய்யைவிட்டு ஆறுமணிக்குக்கும் பொறுதே கொட்டைப்பாக்களவாக பிடிபிடித்துசாய்த்தட்டி ஒரு பீங்கானில் வைத்துக்கொள்ளவேண்டியது வேளை யொன்றுக்கு ஒருபில்லையாக நாள் ஒன்றுக்கு இரண்டுவேளை சாப்பிட்டுவந்தால் சுரத்தினால் உண்டாகும் ரோகங்கள், வாதரோகங்கள், பித்தம், வரட்சி, பிரமேகம், பாண்டுரோகங்கள், மார்புவலி, வாயுவினால் உண்டாகும்சூலரோகங்கள், குன்மம், கபம், பீநிசம், இரைப்பு, இருமல், நெஞ்சுவாட்டி, நெஞ்சுவலி முதலியவைகள் கூடியசீக்கிரத்தில் சொஸ்தமாகும்.

அசீர்ணசுரத்திற்கு
ஹரித்ராவடகம்.

மஞ்சள், வெட்பாலை, திப்பிலி, மிளகு, மரமஞ்சள், வாய்விளங்கம், கோரைக்கிழங்கு, சுக்கு இந்த எட்டையும் சமஎடையாய்சேர்த்து வெள்ளாட்டு மூத்திரத்தில் ஒருநாள் ஊரவைத்து மறுநாளெடுத்தரைத்து குன்றியெடை மாத்திரைசெய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும் அசீர்ண சுரத்திற்கு வெந்நீரில் ஒருமாத்திரையைக்கொடுக்கவும், அதிசாரம்பிரமேகங்களுக்குமூன்றுநாள் மோரிலும் சர்ப்ப விஷங்களுக்கு எட்டு மாத்திரையை உள்ளுக்குக்கொடுத்து ஒருமாத்திரையை அதின்மீது அரைத்து தடவவும், கண்ணில் சிவப்பு நீர்வொழுகல், திமிர், பூழுவெட்டு கண்மயிர் உதிரல் இவைகளுக்குகோமூத்திரத்தில் அல்லதுதண்ணீரிலுரைத்து கண்ணிற்போடவும், திரிதோஷ விஷசுரத்திற்கு வெல்லத்திலும் இரத்த அதிசாரத்திற்கு ஏலம் இலவங்கப்பத்திரி இவைகளைவறுத்து பொடிசெய்து அதோடு சேர்த்துக்கொடுக்கவும், பாண்டுக்குகோமூத்திரத்திலும் தேள்கடிக்கு எருக்கம்பாலில் ஒருமாத்திரை அரைத்துதடவ சொஸ்தமாகும்.

சுரங்களுக்கு அரக்குதைலம்.

ஒருவிசை அரக்கைவாங்கி அதில் நான்குவிசை ஜலம்விட்டு நாலில் ஒருபாக மிருக்கும்படிக்குக் கண்டக்காச்சி வடிகட்டி அதற்குச்சமமாய் நல்லெண்ணெய்வார்த்து அவைகளுக்கு நான்குபாகங்கள் அதிகமாய் தயிரின் தெட்டைசலத்தைச் சேர்த்து ஒரு பெரியசால்வைத்து அமுக்கிறாங்கிழங்கு, மரமஞ்சள், தேவதாரிசக்கை, காட்டுமிளகு, கோஷ்டம், கோரைக்கிழங்கு, சந்தனத்தூள், பெருங்குமிட்டிகிழங்கு கடுகுரோகணி, துய்பராஷ்டகம், சதாபிலை, அதிமதூரம் இவைகளைவகைக்கு ஒருரூபாஎடை சூரணித்து அந்த தைலத்தில்போட்டுகாய்ச்சி தைலபக்குவத்தில் இறக்கிக்கொள்ளவேண்டியது, இதை தேய்த்துக்கொண்டு குளித்தால் சகலசுரங்கள், உன்மாத்தம், மூர்ச்சை, அபஸ்மாரம், பூதாவேசங்கள் முதலியவைகளை விலக்கிவிடும், இது கர்ப்பிணிஸ்திரீகளுக்கு மிகவும் நன்மையைச்செய்யும்.

விஷசுரங்களுக்கு

சஹதேவிகிருதம்.

சஹதேவியிலைரசம்	படி	க	கடுகுரோகணி	பலம்	ச
பசுநெய்யி	,,	க	பால்	படி	க

இவைகளை யொன்றாய்க்கலந்து பாகம்செய்து மிளகுபதமாய்காய்ச்சி வடித்துக்கொண்டு உச்சிகரண்டிவிதம் உட்கொண்டால் விஷச்சுரங்கள், சிதசுரங்கள் முதலிய வியாதிகளை விலக்கி விடும்தேகத்திற்கு வலிவுகொடுக்கும்.

விஷசுரங்களுக்கு

க்ஷீரஷட்பலகிருதம்.

சுக்கு	செவியம்
திப்பிலி	சித்திரமூலம்
திப்பிலிமூலம்	இந்துப்பு
மிளகு	

இவைகள் வகையொன்றிற்கு (உ) பலம் எடுத்துஎல்லாதினுசு எடைக்குச்சமமாய் பசுவின்பால்விட்டு, பசுவின்நெய் பலம் (மகூ) இவைகளை ஒன்றாய்ச்சேர்த்து காய்ச்சி மிளகுபதத்தில் இறக்கிக்கொள்ளவேண்டியது ஒருகரண்டிவிதம்உட்கொண்டால் சகல விஷசுரங்கள் குன்மம் இவைகள்போம்,

மூன்றாங்காண்டம்

முற்றிற்று.

இனி நான்காவதுகாண்டம்.

உ

தேவிசகாயம். 131

ரிஜஸ்தர் அறிவிப்பு.

அடங்காப் பிரதாபம்பொருந்திய (அனுபோகவயித்திய பிரம்மரகசியமென்னும்) புத்தகமானது ஸ்ரீமான். ஜே - கோஷாயி சுவாமிகளது, சிஷ்யவர்க்கத்தான் சிரேஷ்டராகிய செழுமணவை கல்லண்ணபரிதேசியாரவர்கள் முன்னிலையிற்றானே ஷை யார் உத்திரவின்படி. திருமணவூர், முனிசாமிமுதலியாரால் யெழுதிய 1, 2, 3, 4, 5, 6, 7, 8, காண்டங்களில் தற்காலம் அச்சிட்டு முடிவுபெற்ற நாலுகாண்டத் திற்கும், உடையோராகிய சுந்தரவிலாச அச்சுக்கூடத்தலைவர் பூ. சு. குப்புசாமிமுதலியார் அனுமதியின்றி யாவரும் எவ்விதத்தும் அச்சிடாவண்ணம் கனம் பொருந்திய கெவர்மெண்டு சட்டப்படி (Registered Copy Right.) ரிஜஸ்தர் காபிரயிட்செய்யப் பட்டிருக்கிறது.

நூலினுட்பிரிவு

விஷயம்.	பக்கம்.
1. வியாதிகளின்காலபரணி	1
2. வியாதிகளின்வரலாற்றுப்பரணி	7
3. இங்கிலீஷ்வகைபரணி	13
4. பெருமருந்துவகைபரணி	21
5. மாத்திரைவகைபரணி	36
6. எண்ணெவகைபரணி	45
7. தயிலவகைபரணி	53
8. லேகியவகைபரணி	60
9. கண்டாவிழ்தவகைபரணி	76

உ

தேவிசகாயம்.

விளம்பரம்.

இதனால் சகலருக்கும் அறிவிப்பது சென்னை பெரம்பூர்போஸ்டைச் சார்ந்த பெருமாள்பேட்டை வல்லம்பக்காருசெட்டிவீதி, 3 - வது, நெ வீட்டில் ஸ்தாபித்திருக்கும் சுந்தரவிலாச அச்சுக்கூடத்தில் தமிழில் தேவையான புத்தகங்களும் அவிழ்தங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

கோயில்ஸ்ரவாழ்வு என்னும்புத்தகம் 1-க்கு விலை	0	12	0
பதினெண்சித்தர் ஞானக்கோவை விலை	0	8	0
மேற்படி இரண்டாம்பாகம் ,,	0	8	0
இரண்டுபாகமும் ஒரேகட்டடம் கலிகோபயின்டு	1	0	0

ஜாதகங்கணிக்கும்விபரமும், ஜாதகனுக்கு பலாபலன்களும், பெண்கள்ஜாதகமும், எளிதிலறியும்படி அச்சிட்டிருக்கிற

அனுபோகஜாதகரகசியம் கிளோஸ்கடிதம்	0	12	0

அனுபோகவயித்திய பிரம்மரகசியம் 8 - காண்டங்களில், ஆறுகாண்டம் தயாராயிருக்கிறது. மற்ற இரண்டு காண்டங்களும் விளம்பிஇவ கார்த்திகைமீ 15உக்குமேல் அச்சிட்டு முடிவாகும்.

தனித்தனிவாங்குவோர்க்கு காண்டம் 1-க்கு விலை	0	8	0
ஷை 4-காண்டமும் ஒரேகட்டடம்வேண்டியவர்க்கு	1	8	0
ஷை ஆறுகாண்டமும் ஒரேகட்டடம் ,,	2	4	0
ஷை எட்டுகாண்டமும் ஒரேகட்டடம் ,,	3	0	0

அஷ்டதிக்கின் ஆரூடம், பஞ்சபக்ஷிஆரூடம், ஆஞ்சனேயர்ஆரூடம், ஜெயமுனிவராரூடம், வால்மீகர் ஆரூடம், ஆக ஐந்தாரூடமும் அடங்கிய,

அஷ்டதிக்காரூடம் கிளோஸ்கடிதம்விலை அணா	0	12	0

இதுகட்கு. வி. பி, போஸ்ட்சார்ஜி பிரத்தியேகம்.

☞ இன்னம் அநேகமான தமிழ்புத்தகங்களும், மருந்துவகைகளுமுண்டு விபரம் வேணுமானால், ½ - அணாவெயில்அனுப்பி தங்கள் அட்ரஸ் எழுதியனுப்பினால் 3 கேட்லாக்புத்தகம் அனுப்பப்படும்.

இப்படிக்கு,

☞ பூ. சு. குப்புசாமிமுதலியார்.

சென்னை பெரம்பூர் போஸ்ட்.

உ

தேவிசகாயம்.

அவுஷதங்களின் அட்டவணை.

அவுஷதங்கள்.	பக்கம்.	அவுஷதங்கள்.	பக்கம்.
விநாயகர் துதி	1	பித்தபீனிசம்	11
இன்ன நட்சத்திரத்தில் ஜுரம்கண்டால் இத்தனை நாளில்தீரும்	0	சிலேஷ்துமபீனிசம்	0
		நீர்பீனிசம்	0
		சீழ்பீனிசம்	0
ஜெவதிநாட்கரம்	3	உதிரபீனிசம்	0
ஆகாத்திதிகள் அறிக	4	கபமூலம்	0
பணக்கட்டனை	0	காமாலை	12
ஓடத்கரிவு	5	சோகை	0
நாடின்பயன்	6	அதிசாரம்	0
வியாதிகளின் வரலாற்றுபரணி		பித்தஅதிசாரம்	0
நேத்திரரோகம்	7	சிலேத்தும அதிசாரம்	0
ஆசந்தவாய்வு	0	சுர அதிசாரம்	0
வாய்வுகள்	0	அசாத்திய அதிசாரம்	0
பித்தவியாதி	0	இங்கிலீஷ்வகைபரணி.	
குன்மவியாதி	8	அஜீரணத்திற்கு	13
பித்தபயித்தியம்	0	கீல்வாய்வுபிடிப்பு	0
பாண்டுநோய்	0	வாதபிடிப்புவலி	14
பிளவைகண்டமாலை	0	தொண்டைநோய்	0
குடைச்சல்கள்	9	சுவாசக்குழாய்காபனம்	0
குட்டங்கள்	0	தலைவலி, ஒருதலைவலி	0
சுரரோகம்	0	கண்மிருசசிக்கிர	15
கண்டமாலை	10	பல்லுநோய்	0
மகோதரம்	0	வயிற்றுப்பிடிப்பு	0
பெருவயறு	0	இசிவு	0
நீராம்பல்	0	மூளைகுளவி	0
பிரமேகோவை	0	பித்த இரத்து	16
நீராமை	0	நீர் ஒழுக்கிற்கு	0
பிலிகை	0	வயற்றுக்குபிகட்டு	0
பீனிசம்	0	ஒருதலைநோய்	0
வாதபீனிசம்	11	சீதளஜுலப்பு	0

அவுஷதங்கள்.	பக்கம்.	அவுஷதங்கள்.	பக்கம்.
வாய்வுகளுக்கு	16	சர்வமாந்தக்குளிகை	39
வெள்ளைக்கு	17	சஞ்சீவிக்குளிகை	0
ஆதகவாய்வுக்கு	0	கபாடமாத்திரை	40
வெருக்கிற்கு	0	குழந்தைகள்சுரமாத்திரை	0
கண்ணோய்க்கு	0	சிகப்புமாத்திரை	0
சுரங்களுக்கு	18	அமுர்தசஞ்சீவி	41
முறைகாச்சலுக்கு	0	லட்மீநாராயணக்குளிகை	0
இருமலுக்கு	0	கஸ்தூரிமாத்திரை	0
வயற்றுவலிக்கு	0	குங்குமப்பூமாத்திரை	0
விரைநோய்க்கு	19	கோடாசுழிக்குளிகை	42
குடைச்சலுக்கு	0	பூரமாத்திரை	44
பக்கவிழுப்புக்கு	0	மதுரமாத்திரை	0
அதிசாரபேதிக்கு	0	சுரபேதிக்குளிகை	0
எரிவுக்கு	20	எண்ணெய்வகைபாணி.	
அஜீரணபேதிக்கு	0		
மாரிஸ்கபமில்லாத	0	பொதுஎண்ணெய்	45
பெருமருந்துபாணி.		கதிர்எண்ணெய்	46
		சூரியபுடஎண்ணெய்	0
இராமபாணப்பிடிமருந்து	21	மண்டைகுடைச்சலுக்கு	47
சாமாரித்தயிலம்	22	கெணத்தெண்ணெய்	0
திருக்கியாதிகள்	23	பாலசஞ்சீவிஎண்ணெய்	48
சகெந்திமெழுகு	25	இரத்தகணத்திற்கெண்ணெய்	49
திருக்கியாதிகள்	26	கம்பீரத்தெண்ணெய்	0
விஷமுஷ்டித்தயிலம்	28	மேககுட்டத்துஎண்ணெய்	50
சோதிரிஷித்தயிலம்	30	காதுநோய்க்குஎண்ணெய்	0
லகுபிடிவல்லாதி	33	குறுமைஎண்ணெய்	51
சித்திரபல்லாதி	34	சிரங்குக்கு	0
மாத்திரைவகைபாணி.		ரணங்களுக்கு	0
		விங்கஎண்ணெய்	52
பாலசஞ்சீவிக்குளிகை	36	கடுகுஎண்ணெய்	0
பாலபேதிக்குளிகை	0	தயிலவகைபாணி.	
மகாசுராங்குசக்குளிகை	37		
குலேகுடாரம்	0	சங்கம்வேர்தயிலம்	53
சுராதகுளிகை	38	இருவேலித்தயிலம்	0
சீதசுரக்குளிகை	0	அருகன்வேர்தயிலம்	0
வாலசஞ்சீவி	0	கொட்டைப்பழத்தயிலம்	54
பாலவிமோசனக்குளிகை	39	கரிசாலைத்தயிலம்	0

அவுஷதங்கள்.	பக்கம்.	அவுஷதங்கள்.	பக்கம்.
இலுப்பைப்பட்டைதயிலம்	54	கெணமாந்தவாக்கிக்கி	67
கெற்பத்தயிலம்	0	அன்னமாந்தத்திற்குக்கி	0
மேகத்தயிலம்	55	மாந்தத்திற்குகியா	68
வில்வாதித்தயிலம்	0	சர்வமாந்தக்கியாழம்	0
வெட்டிவேர்தயிலம்	0	மாந்தஉப்பிஷத்திற்கு	69
கொடிவேலித்தயிலம்	0	ஐந்தாவிதமாந்தத்திற்கு	0
கிரகத்தயிலம்	56	பித்தத்திற்கு	0
கிழக்காய்நெல்லித்தயி	56	அஜீரணகிராணிக்கு	70
சவுரித்தயிலம்	0	குன்மவயற்றுவலி	0
மேருவின்தயிலம்	57	அண்டநோய்க்கு	0
ஜன்னிக்குமேற்பூசும்தயிலம்	0	ஜெலகட்டிக்கு	0
தும்பைத்தயிலம்	58	ஜன்னிதோஷத்திற்கு	71
செம்பைத்தயிலம்	0	சேத்துமசுரக்கியாழம்	0
அமிர்தசித்தயிலம்	59	சேத்துமசுரகுணம்	0
தீபாக்கினித்தயிலம்	0	பலவிதசுரக்கியாழம்	72
கியாழவகைபாணி.		பலசுரக்கியாழம்	73
		வாதசுரக்கியாழம்	74
சந்தனக்கியாழம்	60	பயித்தியசுரக்கியாழம்	0
சிறுகாஞ்சொறிக்கியாழம்	0	சிலேத்துமசுரக்கியாழம்	75
வெட்பாலைக்கியாழம்	0	கண்டாவிழ்தபாணி.	
வில்வக்கியாழம்	61		
கோரைக்கிழங்குகியா	0	பஞ்சபாக்கியசூரணம்	76
நெல்லிக்காய்க்கியாழம்	62	மூலவாய்வுக்கு	0
இலைப்பட்டைக்கியாழம்	0	சகலகிராணிக்கும்	0
இரத்தபேதிக்குகியாழம்	0	மூலமுளை	0
வாதசுரக்கியாழம்	0	சீழ்மூலத்திற்கு	77
பித்தசுரக்கியாழம்	63	கண்ணில்சதைவளர்த்திக்கு	0
சேத்துமசுரக்கியாழம்	0	வைசூரியால்தாகம்	0
மாந்தகியாழம்	0	வைசூரியிருல்நேத்திர	0
அதிசாரதாபசுரக்கியாழம்	64	கண்ணில்வைசூரிவராதி	0
குழந்தைகள்மாந்தகியாழம்	0	வைசூரிகுலைக்கு	0
முறைவாதசுரக்கியாழம்	65	ஆராதபுண்ணுக்கு	0
கணிவாதசுரக்கியாழம்	0	வயற்றுகிருமிவிழ	78
முறைபித்தசுரக்கியாழம்	0	பொருமல்வாதத்திற்கு	0
முறைபித்தவாதசுரக்கியா	66	சாம்பல்தின்னும்குழந்தை	0
விடாதசுரக்கியாழம்	0	வெட்டைகாயத்திற்கு	0
மாந்தவிக்கம்	0	வங்குகருத்தபிட்டைக்கு	0

அவுஷதங்கள்.	பக்கம்.	அவுஷதங்கள்.	பக்கம்.
மார்புசளிகோழை	78	அரணைவிரியன்கடிக்கு	0
கண்ணோய்க்கு	0	சுரட்டைகடிக்கு	0
உரம்விழுந்தால்	0	தந்தரோகத்திற்கு	80
பாம்புகடித்தால்	79	காதில்சீழ்வடிதலுக்கு	0
தேள்-நட்டுவாக்காலி	0	பாஷாணந்தின்றவர்க்கு	0
கக்கிருமலுக்கு	0	அரையாப்புக்கு	0
வெக்குருக்கு	0	எச்சிற்றழும்புக்கு	0

அவுஷதங்களின் அட்டவணை

முற்றிற்று.

இனி ஐந்தாம்பாகத்தில் வியாதிகட்குநேர்த்தியான கியாழவகைகள் சொல்லப்படும்.

உ

தேவிசகாயம். 134

அநுபோகவயித்திய பிரம்மரகசியம்.

நான்காவது காண்டம்.

முதலாவது வியாதிகளின் காலபரணி.

விநாயகர் துதி.

வெண்பா.

ஓரணிமையகலு மோங்குபுகழ்பெருகும்
காதற்பொருளனைத்துங் கைகூடும் - சீதப்
பனிக்கோட்டுமால்வரைமேல் பாரதப்போர்தீட்டும்
தனிக்கோட்டுவாரணத்தின் றாள்.

நான்முகம்.

(27 - நட்சத்திரங்களில்) (இன்னநட்சத்திரத்தில் - சுரம் கண்டால் இத்தனைநாளில் தீருமென்றறிக.)

பரணிருத்துநாளில் தோன்றுஞ்சுரங்காச்சல்
பார்த்திகையேழு நாளிற்றீரும்
விசாகமோன்பிரதமாள் தொடர்ந்தகாச்சல்
மீனாதுபவிரெண்டு நாளில்மெய்யா
எரிபிரந்தகார்த்திகைக்கு இதிமெட்டாநாள்
இலக்கமதமீதிரண்டுல் இருபத்தொன்றில்

பரவுவெப்புவிட்டகலும் நவ்விநாளில்
பற்றுசுரம்விட்டகலுந் தொட்டநாளே. 1

தொட்டரியரோகணியிற் பற்றிவந்த
சுரங்களதுபத்தானுட் போகைநல்லாய்
கெட்டதிருவாதிரையில் சுரங்கள்கொல்லும்
கேட்கவொண்ணுபொல்லாத கிலேசமுளாம்
மட்டுநெறும்புனர்பூச மீரெட்டானல்
வந்தசுரம்பூரமிரண் டாறுநாளில்
திட்டமுாவிட்டுவிடுஞ்சொன்னேன்சொன்னேன்
தீராதாயிலியமீ ரைந்திற்சாவே. 2

ஈரைந்தில் ஆயிலியங் கொல்லாதாகில்
இருபத்திநாலானுள் சாந்தமாகும்
நேரைந்துமகத்துசுர மீராறுநாளில்
நிக்கிரகம்செய்யாமல் நிற்குமாகிற்
றுர்துஞ்சமூலைவந்தா னுளில்வெப்பு
தான்றணியுமென்றுநூலோர் தாமேசொன்னுர்
சேரஞ்சாப்பூரத்திற் பிறந்தவெப்பு
செலுத்துடத்துவிருபத்தி ரெண்டிற்றீரும். 3

உத்திரத்தில்பற்றுசுரம் பத்தானுளில்
உருக்கிவிடும்மேல்நின்று லுனைக்கக்கேளு
இத்தரையிலிருபத்தி ரெண்டானுளி
-லிடருபடக்கொன்றுவிடு மின்னங்கேளே
அந்தசுரம்யெட்டானுள் விட்டுப்போகும்
ஆடுத்தசித்திரையதுதா னதுவுமெட்டே
பத்திவிடுமேல்னின்று லுரைக்கக்கேளு
பரிந்துவிடும்பயிற்றிரண்டு நாளில்மீளும், 4

கேளுரைக்கசோதிசுரம் நாலாநாளிற்
கிலேசமறுதேயிருந்தாற் பதினாலாநாள்
மீளாமல்மேல்நின்றால் பயிற்றுநான்கு
மிக்கநாள் தனிலகலும் விசாகவெப்பு

தோளாசைபடிமிருபத் தொன்றிற்கொல்லும்
தொடரனுடமெட்டானல் தொடங்கிமீண்டால்
மீளாதுபனிரெண்டா நாளிற்றீரும்
முன்கேட்டையீராறில் முடிக்கத்தீரும். 5

முடிக்கவருமூலவெப்பு பத்தானுளில்
மூண்டுபின்புந்தணியாமல் மீறிநின்றால்
கடுகவெப்புநாலைந்து நாளிற்றீரும்
காணுதியபூராட மொன்பதானுட்
படிகலமாய்கொன்றுவிடு முத்திராடம்
பாதகஞ்சேரெட்டானுள் பதினாலாநாள்
குடிகெடுத்தேவதைத்துவிடுந் திருவோணத்தில்
கொண்டவெப்புநாலெட்டில் குணமாந்தானே. 6

குணமாகும் அவிட்டமீ ரைந்துநாளிற்
கொள்சதையமாறுநாள் குணமாம்வெப்பு
அணுகாமல்மேனின்றால் பனிரெண்டாநாள்
அச்சமிகும்ஆயிழையே யறையக்கேளாய்
பிணியுருக்கும் பொல்லாதபூரட்டாதி
பிலத்தனுவொன்பதனில் பிடித்துக்கொல்லும்
தணிவுகின்றவுத்திரட் டாதிநாளில்
றரித்தவெப்புபனிரெண்டிற் சாந்தமாமே. 7

வேறு.

ரேவதிநாள்சுரம்.

சாந்தமாம்பதினாலாநாள் தணிந்திடாதிருந்தாகில்
சேர்ந்தநாளெட்டில்வெப்பு தீர்ந்திடுந்திண்ணமாக
சூழ்ந்தநாளிருபத்தேழும் தூகளறத்தெரிந்துகொண்டு
போந்தவாரிந்துமிக்கப் புகழ்பெறமருந்துசெய்யே.

புடம்வைத்தபுண்கள் - அல்லது
கட்டிகளை அறுக்க

ஆகாத்திதிகள் அறிக

அகத்தியர் வாக்கியம்.

சீர்பெரும்பிரதமை சேரும்பெருவிரல்
நேர்பெருயுள்ளங் காலதுதுதிகை
திருதிகைமுழங்கால் சேர்த்திடுமென்க
சவுத்திப்பெருந்துடை தாவியசப்தமி
குய்யத்திடத்தே குடியிருந்திடுமாம்
அய்யமேசஷ்டி யமர்ந்திடும்நாபி
சப்தமிமுலையில் தானிருந்திடுமே
யொத்திடும்அஷ்டமி யோதிடும்கரத்தில்
மெத்திடுநவமி மேவியகழுத்தில்
அதரந்தசமியி லாகுமவ்விடத்தே
ஏகாதசியில் யிருந்திடும்நாவில்
துவாதசியில் தூயின்றிடும்நெற்றி
திரியோதசியில் சேர்ந்திடும்புருவம்
சதுர்த்தசியிடரி தானிருந்திடுமே
உதித்திடும்பூரணம் உச்சியிலுறையும்
செப்பியவமிர்தம் நிலைநின்றதனுள்
சத்திரம்பண்ணில் தானெழும்நோய்கள்
கொப்பளித்திடினும் குத்துப்பிடினும்
தப்பிலாஅரவம் தான்கடித்திடினும்
அட்டைகடிக்கினும் அடிதடிச்சிலந்தியும்
வயத்தில்பிணியெனும் மரணம்தாகுமே
காசினிதனிலே கைவிஷதாரி
திதிகளையறிந்து செய்திடப்பலிக்கும்
மலைநிகழ்முனிவர் மகிழ்ந்துரைத்தனரே.

தன்மந்திரிபகவான் அருளிய

பணக்கட்டளை

கேளப்பாதோஷத்துக் கிரஞ்சுபத்து
கெனிதமாய் சுரத்துக்கிரஞ்சுபத்து

வாளப்பாசூலமுதலாய் நீரிழிவுகாசம்
வரிசையாய்மூணுபத்து பணமேகேளு
நாளப்பாமருந்திட்டு முக்கால்வாங்கு
நலமில்லா பிளவைபவுத் திரமாங்குட்டம்
சூலப்பாயிரஞ்சு பொன்னேவாங்கு
துடியான தாதுநஷ்ட மீரஞ்சுவாங்கே. 1

வாங்குவாய் மேகமென்ற சூலைக்கெல்லாம்
வரிசையா யஞ்சுபணங்கட்டிவாங்கு
நீக்கிடவே பணமிருபத்தஞ்சுகேளு
நிலையில்லா சுத்திகுன்மம் வயற்றுக்கெல்லாம்
தாக்கிட்டமகோதரமும் ரெத்தபித்தம்
தந்தத்தில்புத்துமுதல் கெற்பரோகம்
பாக்குபெறபதினைந்து பொற்பணங்கேள்
பழுதுசொன்னலவுழ்தப்பை கட்டிப்போடே. 2

போடப்பாவிந்தமுறை பொருளேதந்தால்
போய்மருந்துஅவுழ்தத்தை கொடுத்துத்திரு
கோடப்பாகோடியென்ற ரோகமெல்லாம்
குறிப்பாகப்பாதிதற்கு பென்னுலாகர்
தேடப்பாகிடைக்காது வயித்தியர்க்கு
சிறப்பளித்தமட்டமடா ரோகந்தீரும்
நாடப்பாவிதியாசை பிரியாதார்க்கும்
நாவிறல்தருமவிலை நவின்றிட்டேனே. 3

சீடற்கறிவு.

பாரடாநூலீய்ந்தோர் மனநோச்செய்தால்
பரிவானவல்வினைகள் வந்துசூழும்
வாரடாபொருளீய்ந்து நூலைப்பாரு
வளமானபொருளுனக்கு யில்லாவிட்டால்
காரடாபணிவிடைகள் செய்துக்கேளு
கனமாகஅவர்கையால் கொடுக்கவாங்கு

நாரடாபதைப்பாய்ச்சீ திருடினுக்கால்
கலமானசாபங்கள் வருகும்பாரே.

நூலின் பயன்.

ஏட்டிலுள்ள நூல்களெல்லாம் செவிக்கேயின்பம்
இன்பரசவஸ்துவெல்லாம் நாவுக்கின்பம்
ஊட்டுகின்றபொசிப்பெல்லா முடலுக்கின்பம்
உறங்குகின்றசுகமெல்லாம் உயிருக்கின்பம்
நாட்டிலுள்ள அலங்கிருதம் கண்ணுக்கின்பம்
நன்மலரின்பரிமளங்கள் நாசிக்கின்பம்
ஊட்டிவிக்கும்சித்தருட பொருளைக்காட்டி
அறிவிக்கும்குருமுகமா யறிந்துகொள்ளே.

காலபரணி - முற்றுப்பெற்றது.

இனி வியாதிகளின் வரலாற்றுப்பரணி கூறப்படும்.

உ

தேவிசகாயம்.

இரண்டாவது

வியாதிகளின்

வரலாற்றுப்பரணி.

நேத்திரரோகம்—மாதர்களையுற்றுப்பார்த்துமோகித்தல் துயில் நீங்கும் பெண்களின்மேல் பயில்விழிகாட்டல் மாதர்குளிக்கும் நீர்க்கறையினின்று நீங்காதிருத்தல் உயிர்வதைசெய்தலைக் கண்ணுற்றும் விலக்காதிருத்தல் பசுக்களின்பால் கறக்கையில் விழிநோக்கிபிரம்பித்தல் இத்தகைபோன்ற யின்னும் பலவிதகுற்றங்களால் கண்ணோய்கள் (96) விதங்களாய்ச்சம்பவிக்குமென்றறிக.

ஆநந்தவாய்வு—உயிர்ப்பிராணிகளைகட்டியுந்தூக்கி ஊஞ்சலாடவிட்டும் அறுத்தல் பசுவையடித்தல் பலஜீவராசியின் வயற்றைக்கீறிக்குடல்வெளிவரக்காணல் இவைகளால் வாதரோகம் (84) ல் - ஆனந்தவாய் வென்னும் ரோகம் சம்பவிக்குமென்றறிக.

வாய்வுகள்—சிசுக்களை இடுக்கிடவடித்தல் உதைத்தல் ஜீவஜெந்துக்களைகாலால் மிதித்தும் கையால்முரித்தல் வருமையுற்ற முதியோர்களுக்குக் காலினால் யேவலிடுதல் இவைகளால் வாதசம்மந்த வியாதிகள் அணுகுமென்றறிக.

பித்தவியாதிகள்—கடன் வாங்கிக்கொடாமையாலும் பெரியோரை மனம்நோகப்பேசி யேசுவதாலும் தாகபானம் உதவாததாலும் பித்தட்சயம் பித்தகாசம் மந்தார

காசம் ரத்தகாசம் சுவாசகாசம் இவைகள் உண்டாகும் அன்றியும் வெளிகடியாலும் மூலத்தில் அனல் அதிகரித்து மூளையில் நீர்கசிந்து நெஞ்சில்சுவாசம் சுவரி கபத்தை உரையச்செய்து விடும் என்றறிக.

குன்மவியாதிகள்—பிரர்பசியினால் வருந்துவதைக்கண்ணுற்றும் அன்னமிடாமல் உண்டதாலும் ஒருவரிடும் உண்டியைத்தடுத்தலாலும் வயர்யெரியக்கெடுத்தலாலும் அபாண்டமான குற்றங்களைச்சுமத்தி வயரெரியக் காண்டலாலும் குடும்பத்தைக்கலைத்தலாலும் குன்மம் வெரிகுன்மம் சூலைகுன்மம் கெண்டைக்கட்டிகள் இவை உண்டாகும் அன்றியும் நெல் உமி கல் இவையுண்பதால் வயற்றில் சோறைசேர்ந்து குடலில் மாசுபற்றியும் உண்டாவதுண்டு இவ்விதகுற்றங்களாலுண்டாகும் (7) விதகுன்மங்களையும் அவுஷதங்களால் நீக்க சாத்தியப்படும்.

பித்தபயித்தியம்—பெரியோரை நிந்தைசெய்தல் தேவஸ்தலங்களையழித்தல் தூஷணைசெய்தல் ஸ்ரீகள் கெற்பமோயில் விந்தாவிடல் சிசுவைமரித்தல் கன்றுக்குப் பால்விடாமல் கரத்தல் விளம்பயிரையழித்தல் பிஞ்சுகளைபரிக்குதல் இவைகளால் பித்தம் மயக்கவியாதி பித்தபயித்தியம் பித்தவய்ய சேட்டைகள் உண்டாகுமென்றறிக.

பாண்டுநோய்—தாய்தந்தையர் மனம்நோகவும் பேசல் அவர்க்குபயமுறவும் தண்டிக்கமுயலுதல் மனிதரைவம்பு செய்தல் ஆங்காரத்தால் அகந்தை யிடம்பு யியற்றல் பொய்பேசல் இவ்வகைளால் பாண்டு மகோதரம் பெருவயர் இவைவந்தணுகுமென்றறிக. அன்றியும் ஜீவருக்கு நஞ்சிடுதலாலும் மேற்படிரோகம் சம்பவிக்குமென்றறிக.

பிளவைகண்டமாலை—குருதூஷணஞ் செய்தல் வழியில் முள்ளடைத்தல் மரங்களை காரணமின்றி பூவுஇரவும்

இளையொடியவும் அடித்தல் கல்லிலரிதல் பச்சைக்கொடி பூசைகட்டியன்ற பூஞ்செடியிவைகளை இஷ்காரணமாய் வெட்டல் இன்னல் இரண்டாய் பிளந்தெறிதல் இவைகளால் பிளவை கண்டமாலை புண்டாகும் அன்றியும் தம்பார்வைக் கெட்டாவிடங்களில் கட்டிகள் புரைவிழும் ரணங்கள் காப்பான் வண்டுகடி குழிப்புண்கள் உண்டாம் என்றறிக,

---

குடைச்சல்கள்—ஜீவஜெந்துக்களின் கைகால்களை முரித்தெரிதல் கர்ப்பவதி பாவை பட்சி காகம் நாகம் இவைகளை காரணமின்றி வளிவிற்கொன்றதோடு கைகால்களில் குத்தல் குடைதல் கால்களிற் பிடிப்பு முடக்குவீக்கம் இவைகள் அணுகுமென்றறிக.

—❖—

குஷ்டங்கள்—ஸ்ரீகள் விதேவ சம்பந்தத்தாலுண்டான மேகம்பிரத்தி இவைகளால் (௮) விதகுஷ்டமும் மண்ணுளி பண்முதலிய சர்ப்பங்களு வண்டு எலி பூச்சி யிவைகளின் கடியாலுண்டாவது (௬) விதகுஷ்டமும் ஜீவவதை மாதாபிதாக்கள் மனநோகச்செய்தலும் தெய்வ குருக்களையழித்தலாலும் பெரியோரை பங்கப்படுத்திமனம் புண்படச்செய்வதாலும் (௪) வித குஷ்டம் ஆக (௰௮) குஷ்டங்களின் காரணமென்றறிக.

சுரரோகம்—கீரிதுள்ள ஜெந்துக்களை சவியில்போடல் நெருப்பிலிட்டு தப்பித்தல் கரையொருந்தல் தண்ணீர்கொடாதல் சூரியனை நினையாததோஷம் இவற்றால் சுரரோகம் வந்தணுகும். அன்றியும் சுரத்தில் மூன்றுவித முண்டு அஃதிவைப்பற்றிய சுரமானது தாகம்மிருக்க தேகம்வெளுத்து குளிர்ச்சியெடுத்து ஒவ்வொரு வேளையில் சுரமிகுதியாய் காணும் உதிரத்தைப்பற்றியசுரமானது அதிகமாய்காய்ந்து யிளைப்புவேர் வைமூர்ச்சை பித்தப்பிரமை உடல்நோகும் தாகிக்கும் மாமிஷத்தைப்பற்றியசுரமானது சமானகாச

சலும் அதிகசுவாசமும் மூர்ச்சையும் மயிர்கூச்சம் ஆயாசம் நோக்காடு நமச்சல் இவைதரும்.

கண்டமாலை—மேகநீரானது நரம்புவழியாய் சென்று உதிரங்கெட்டு கட்டிபோல் திரண்டு ரணமாகி கண்டத்தைச் சுற்றியரித்து தடித்து வெடித்து புரையோடும்,

மகோதரம்—அக்கினியதிகரித்து நீருண்டாகி தேகம் கனத்து வயற்றில்வாய்வும் ஜெலமும்சேர்ந்து பெருகச்செய்யும் இராக்கால் செந்நசுவரண்டு தாகிக்கும்.

பெருவயறு—ஞானிகளைநிந்தித்து பழித்து யிகழ்தலாலும் ஜீவஜெந்தை வதைத்தலாலும் நேரிடும் அன்றியும் தேகம் வெளுத்து வற்றி கருவிகள்மங்கித்து வயறுபெருக்கும் மலந்தீயும் அன்னம்செல்லாது,

நீராம்பல்—தேகம் வெளுத்துவற்றி மார்பின்கீழ் வயறும்காலும் வீங்கி தாங்கித்து புளிப்புமீது உண்டாக்கும்.

பிரநீர்க்கோவை—தேகத்தில்அக்கினிமீறி நீர்கோர்த்து கண்டவர்பயப்படும்படி பெரும்பூதம்போல் வீக்கமுண்டாக்கும்.

நீராமை—ஆமைபோல் வயற்றில் கட்டியுண்டாய் குடல்முருக்கி அக்கினிசுவாலையாய் அன்னத் துவேஷமாகும்.

பிலிகை—வயிற்றில் யீரலைப்பற்றி குழவிபோல்திரண்டு குருக்கேயிருந்து பிரளும் மேலேறும் உடல்வற்றும்,

பீனிசம்—மூலத்தில் கனல் அதிகப்பட்டு சிரசில்நீர்தங்கி நாசிவழியாய் உதிரமாயும் சீழாயும் ஜெலமாயும் வெளிவரும் இது (அ) வகைப்படும்.

வாதபீனிசம்—நாசி வரளும் நீர்வடிந்து சளி நாற்றமில்லாமல் வரும்,

பித்தபீனிசம்—நாசிவழியாய் மஞ்சள்நிரமாய்சளிவடியும் புலால் நாற்றம் வீசும்,

சிலேத்துமபீனிசம்--நாசியைமாறிமாறியடைத்து முத்துபோல்நீர்வடிந்துநாறும் அனுக்காகசளிவிழும்நாசியில் ஊசிபோல் குத்தும் கண்ணில் பீளைசாறும்.

நீர்பீனிசம்--நாசியில் நீர்வடியும் மழைகாலத்தில் பிடரியும் முகமும் ஊறலுண்டாகும் அடிக்கடி தும்மல்வரும்தலை கழுத்து வலிக்கும்,

சீழ்பீனிசம்--கபாலத்தில் அதிகவெப்பங்கொண்டுகபாலம்முதல் நாசிவரையில் புண்ணாகி சீழ்வடியும்தலைவலிக்கும்.

உதிரபீனிசம்--கபாலத்தில் வட்டவட்டமாய் புண்ணாகி நாசிவழியாய் உதிரம்வரும் தலைவலிக்கும்.

சிராய்பீனிசம்--நாசியில் யிருள்ளிக் கூடுபோல் சீழ்திரண்டு வரும் மணம்தெரியாது விடாமல் தலைவலிக்கும்.

நவமூலம்—உள்மூலமென்பது அபானத்தில் சதைவளர்ந்திருக்கும் பிரமூலம்பவனவாயில் கத்திபோலிருக்கும் இரத்தமூலம் முளைவெளிவந்துஇரத்தம்வடியும் சீழ்மூலம் அடிவயறுநொந்து மலத்துடன் சீழ்வரும் மூலபாண்டு சரீரம் ஊதி வயற்றில்மலம்கட்டும் முளைமூலம் வெளிதள்ளிமலமிரங்கும்வாதபித்தசிலேத்தும மூலமானது மேற்கண்டவைகள் ஒன்றோடொன்றுமிசிரமாகும்.

காமாலை—உதிரங்கெட்டு தசைவெளுத்து யீரல்கருகி தசைகளில் கிருமிகள்பட்டு மாமிசத்தைத்தின்று மஞ்சள்நீர் கொள்வதன்றி பலவியாதிகளை யுற்பவம்செய்யுமென்றறிக,

---

சோகை—சோகையானது பாண்டுரோகத்திலிருந்து நீர்கெட்டு சோகைரோகம் வந்தெய்து மென்றறிக,

அதிசாரம்—வயிறு பொருமிசரீரம்வாடும் மலங்கருமையாகவும் நுரையுடனுங் காணும் இதற்குவாத அதிசார மென்று பெயர்,

---

பித்த அதிசாரம்—மலம் பசுமையோடும் சிகரத்தம்விழும் அபானத்தில் கடுக்கும் இவைபித்தாதிசாரம்,

சிலேட்டும அதிசாரம்—மலம் வெண்மையாகவும் சீதம் நுரையாகவும் காணும்.

காசாதிசாரம்—சுரங்காயும் வயிறுகழியும் சீதமும் இரத்தமும் விழும்,

---

அசாத்தியஅதிசாரம்—மலம்ஊன்போல நுணுக்கை நுணுக்கையாய்விழும் தேன்போலும் கரிபோலும் காணும்.

வியாதிகளின் வரலாற்றுப்பரணி
முற்றுப் பெற்றது.

உ

பரமபதிதுணை.

மூன்றாவது

இங்கிலீஷ்வகைபரணி.

{ இங்கிலீஷின் அவுழ்தங்கள் அளவிறந்ததாக விருப்பினும் சகலரும் இலேசில் கையாளத் தக்கவை மாத்திரம் கூறப்படும். }

அசீரணத்திற்கு.

(பெப்பிரமெண்டாயில்) (2) துளிமுதல் (5) துளிவரையில் கல்லிஜலத்திலாகிலும் சக்கரையிலாகிலும்கொடுக்கவும். இப்படி (3) மணிக்கொருமுறையாக இரண்டுமூன்றுவேளை கொடுக்க பசிதீபனமுண்டாம்.

கீல்வாய்வு வீக்கம் பிடிப்பு

இதுகட்கு,

(லிடிஸ்க ஓரியண்டல்பாம்) என்னும் அவிழ்தத்தைகொண்டு வந்து கீல்நோய் குத்தல் குடைதல் வீக்கம் உள்ளவிடங்களில் முன்னதாகவே ஆத்துமணலைக் கொண்டுவந்து வறுத்து மெல்லியசீலையில் முடிந்து ஒத்தடம் கொடுத்து வெது விடங்களில்நன்றாய் சூடு உண்டானபிறகு மேற்கூறிய லிடிஸ்க ஓரியண்டல் பாம்பென்னும் அவுழ்தத்தில்கொஞ்சம் தொட்டு அந்தப்பாகங்களில்தேய்க்கச்செய்யவும் தடவியவிடங்களில் அந்ததயிலம் தோற்றப்படாமல் உள்ளுக்குஇறங்கும்படி மிக்கவலிவுடைத்தாய் தேய்க்கவேண்டும் இப்படி காலைமாலை இருவேளையும் தேய்த்துவரில் சவுக்கியமாகும்.

வாதம் இடுப்புவலி பக்கசூலை பாரிசவாய்வு திமிர்வாதம் இதுகட்கு,

மேற்கூரியபடி ஆத்துமணலை மிக்கசூடுகொள்ளும்படி வறுத்து துணியில்முடிந்து நோய்உள்ளபாகங்களில் நன்றாய் சூடெழும்ப ஒத்தடம்போட்டு பிறகு (விடின்ச ஓரியண்டல்பாம்) என்னும் தயிலத்தை தேய்க்கவும் நாலுமணிநேரத்திற்கு ஒருமுறையாக ஒருநாளைக்கு மூன்றுவிசை உபயோகப்படுத்தவும் ஆக்ஷேபணையின்றி சவுக்கியப்படும்.

தொண்டைநோய் இருமல் மார்சீதளம் இவைகட்கு,

மேற்கூரிய விட்டின்ஸ் ஓரியண்டல்பாம்என்னும் தயிலத்தை மார்பிலும் தொண்டையிலும் முதுகிலும் கழுத்திலும் கீழ்மட்டும் நன்றாய்தேய்த்து உடனே மார்பிலும் கழுத்திலும்பிளானல்முதலிய உயர்ந்த கம்பளிப்பட்டைகளினால் சுற்றிவைக்கவேண்டியது இப்படி இரவும்பகலும் கூடிய இரண்டுவேளை உபயோகப்படுத்திவரில் சவுக்கியத்தையுண்டுபண்ணும்.

சுவாசக்குழாய் தாபனம் இரப்பு முதலியவைகட்கு,

பத்துநிமிஷம் அல்லது கால்மணிநேரம் வரையிலும் ஷை தயிலத்தை மார்பிலும்முதுகிலும் நன்றாய்தேய்த்து அவைகளை கம்பளியினால்சுற்றி சூடுண்டாகும்படி செய்வித்துவரில் சுகத்துக்கனுகூலமாகும் சீதளநோய் உள்ளவர்கள் ஷை தயிலபுட்டியை கார்க்குத்திறந்து முகருவார்களானால் அனுகூலத்துக் கிடமுண்டாகும் ஒரு கோப்பையில் கொதிக்கக்காய்ந்த தண்ணீரில் ஒரு டீக்கரண்டி தயிலத்தைவிட்டு அதிலுண்டாகும் ஆவியைமூக்கின்வழியாய் உட்கொள்ளவேண்டியது.

தலைவலி ஒருதலைவலி யுள்ளவர்கட்கு,

கன்னட்பொரியிலும் நெற்றியிலும் கழுத்தின் பின்புறத்திலும் காதின்பின்புறத்திலும் மெதுவாயும் நன்றாயும்தேய்க்கவேண்டியது நோய் முகத்தில் இருக்குமானால் கன்னத்தில்நன்றாய் தேய்க்கவேண்டியது.

ஈளையினால் சகிக்கிற குழந்தைகட்கு,

முதலாவது வாந்தியுண்டுபண்ணும்படியாய் கொஞ்சம்படிகாரஜெலம் அல்லது பச்சை வெங்காயமும் கொடுக்கவும் பிறகு தயிலத்தை கழுத்துமுழுவதும் மார்பு முழுவதும் நன்றாய் உபயோகித்து குழந்தையை கம்பளியினால் சுற்றிவைக்கவும்.

பல்லுநோய்க்கு,

விடின்ஸ ஓரியண்டல்பாம் என்னும் தயிலத்தை கொஞ்சம்பஞ்சியினால் தொட்டு பல்லுநோயுள்ளவிடத்தில் அல்லது அதற்கருகில் வைக்கவும்.

வயற்றுப்பிடிப்பு வயற்றுவலிக்கு,

வயற்றுவலி அல்லது வயற்றுப்பிடிப்புள்ளவர்கள் உடனே அந்தபாகத்தின்மீது ஷை தயிலத்தில் கொஞ்சம்தொட்டு தேய்க்கவும் ஒருமணிநேரத்திற்கொருகால் உபயோகப்படுத்தினால் அப்பொழுதே குணப்படும்.

இசிவு அல்லது ஜன்னிக்கு,

மார்புகழுத்து சந்திலும் முதுகு அல்லது கழுத்துப்பின்புறத்தின் கீழ்பாகத்திலும் நன்றாய் தேய்த்து கம்பளியால்சுற்றி சூடுண்டாக்கிவைக்கில் குணத்திற்கிடமுண்டாம்.

தேள் குளவி பூரான்கடிக்கு,

மேற்படி விஷஜெந்துக்கள் கொட்டுதல் அல்லதுகடித்தவிடத்தில் இந்ததயிலத்தை நன்றாய் தேய்த்துவிட்டு பின்பு அதேயிடத்தில் இந்ததயிலம் கொஞ்சமிருக்கும்படி வைக்கவேண்டியது.

பித்தத்திற்கு,

(சல்பர் காந்தி க்டியுடம் டிஞ்சர் காடனம் டிஞ்சர்சிஞ்சி பரீஸ்சகர்) கொஞ்சம்தண்ணீரில்கொடுக்கவும் அல்லது சோடா கல்ம்பாதான் பீஸ்மத் ரேவல்சினி ஆனாக்கு (15) குன்றிமிடை கொடுக்கவும்.

❖❖❖

நீர் ஒழுக்கிற்கு,

(எக்ஸ்றாக்ட் பெல்டோனு) கால்கிரையன், ஓப்பியம்கால்கிரையன், கொயினன் கால்கிரையன் இவைகூட்டி மாத்திரை செய்து வேளைக்கு ஒன்று அல்லது இரண்டு கொடுக்கவும்.

❖❖❖

வயற்றுக் கிருமிகட்கு,

(சான்டனின்) பெரியவர்க்கு (5) கிரையன்வெதுகது கொஞ்சம் சக்கரையில் கலந்துகொடுக்கவும் சிறுவர்களுக்கு (1) கிரையன்முதல் தேகநிடைப்படி (4) கிரையன் வரையில் சக்கரையில் கலந்துக் கொடுக்கவும்.

❖❖❖

ஒருதலைநோய்க்கு,

காஜிபுட்டாயில், கிலம்பாயில், வோலியங்கார இவைகளில் யெதுவாகிலும் தடவலாம் உடனுக்குடன் சற்றுசவுக்கியத்தையுண்டாக்கும்.

சீதளம் ஜலுப்புக்கு,

மேற்படி ஆயில்களின் யெதுவாகிலும் கழுத்தைச்சுற்றிலும் பிடரியிலும் கொஞ்சம் தடவித்தேய்த்து நாசியில் கொஞ்சம்முகரவும் குணப்படும்.

❖❖❖

வாய்புகளுக்கு,

வாய்வு குத்தல் குடைதல் பிடிப்பு இப்போர்க்கொற்றவியாதிகள் உள்ளபாகங்களின்மீதுவருத்தமனைவெழுட்டைக்கட்டி ஒத்தடம் கொடுத்து நன்றாய்குடேறினபிறகு மேற்கூறியஆயில்களில்யெதுவானாலும் கொஞ்சகொஞ்சமாய்விட்டென்றாய்தேய்க்கவும்

தசைகள் மேல்புறம் தோற்றாமல் உள்ளுக்கு இரங்கும்படி அழுத்தமாய் தேய்க்கவும் இப்படி காலைமாலையாக இரண்டொருநாள் உபயோகப்படுத்திவரில் சவுக்கியமுண்டு.

இதுவும் வாய்வுகட்கு,

பட்டாஸ்சயின்டர்ஸ், பொட்டாஸ் அயோட்டம் இவைகளை நல்லதண்ணீரிலாகிலும் பிராந்திலாகிலும் அரை அல்லது முக்கால் டிராம் உள்ள அளவில் மேற்படி அவுழ்தம்கொஞ்சம் கலந்துக்கொடுக்கவும்.

❖❖❖

வெள்ளைக்கு,

கொப்பாப்பியா (10) துளிமுதல் (30) துளிவரையில்சக்கரையில்கலந்து கொடுக்கவும் இப்படி காலை மாலை (௨)நாள்சாப்பிட தீரும்.

இதுவும் வெள்ளைக்கு,

மூக்கில்உப்பு, மாசிக்காய், வால்மிளகு மூன்றும் சமஎடை கொண்டுஇடித்து வஸ்திரகாயம்செய்து (கொப்பாப்பியா)விட்டு பிசைந்து லேகியம்போல் வைத்துக்கொண்டு கழற்சிக்காயளவு இருவேளையும் சாப்பிடவும் இச்சாபத்தியம்.

❖❖❖

சூதகவாய்வுக்கு,

(பில்ஆலோஸ் பெயிட்மா) ௩கிரையின்புசித்துடனே நல்லஜலம் நாலுமுழுக்கு சாப்பிடவும் இப்படிஇரண்டொருநாள் செய்ய அல்லது சவுக்கியப்படுமளவும் உபயோகிக்கவும்,

சொறுக்கிற்கு,

காஷ்டிக் பெத்தபுரு, ஆயின்டு மெண்டு இவைகூட்டி நன்றாய் சேர்த்து ரணத்தின்மீது தடவிவரவும்,

---

கண்நோய்க்கு,

ஜிங்சல்பாஸ் காலறு எடை ஒருடம்ளர்ஜலத்தில் விட்டு கிளாசில்வைத்துக்கொண்டு துணியில்தொட்டு நேத்திரத்தில்துளிதுளியாக பிட்டிவரவும்,

இதுவுங் கண்ணோய்க்கு,

ஒரு டம்ளர் ஜெலத்தில் அரைபலம் (சுகர்லட்) போட்டு கலக்கி மெல்லியசீலையால் தொட்டு கண்களில்படும்படி இட்டி வரவும் சவுக்கியமாம்.

—❖—

சுரங்களுக்கு,

கொயினன், சின்கொயினன், (உ) குன்றி தேனிலாகிலும் கெந்தக திராவகத்திலாகிலும் கொடுக்கவும்.

—————

மூறைக்காச்சலுக்கு,

பவுலர்ஸ்லோஷன், திராவகம் பித்தகியாழத்தில் (2) துளிமுதல் (5) துளிவரையில் தேகதிடங்கண்டு கொடுக்கவும்,

—❖—

இருமலுக்கு,

டிஞ்சர்கேம்பர் திராவகம், (10) துளிமுதல் (30) துளிவரையில் நல்லஜெலத்தில் கொடுக்கவும் இப்படி இருவேளையுங்கொடுக்கவேண்டியது இரோகத்தின் பலமறிந்து துளிகளை குறைத்தும் உயர்த்தியும் உபயோகிக்கவும்,

—————

இதுவும் இருமலுக்கு,

டிஞ்சர்சில்லி டிஞ்சர் அய்யாசாமி இந்ததிராவகங்களையும் (10) துளிமுதல் (30) துளிவரையில் கொஞ்சம் ஜெலத்தில் கலந்து கொடுக்கலாம் இருமல் சுவஸ்த்தப்படுமளவும் உபயோகிக்கவும் சீதளபதார்த்தங்களை அனுசரிக்கக்கூடாது.

—————

வயற்றுவலிக்கு,

டிஞ்சர் ஒப்பியம் (5) துளிமுதல் (15) துளிவரையில்தேக திடமறிந்து ஒருடிராம் நல்ல ஜெலத்திற்கலந்துக் கொடுக்கவும் இப்படியிருவேளையும்,

—❖—

இதுவுமது,

டிஞ்சர் அசப்படிடா (10) துளிமுதல் (30) துளிவரையில் ஒருடிராம் நல்லதண்ணீரிற் கலந்துகொடுக்கவும்.

—————

இதுவுமது,

சோடா (25) குன்றியெடையெடுத்து கொஞ்சம் சக்கரையில்கலந்து கொடுக்கலாம்,

—❖—

விரை நோய்க்கு,

டிஞ்சர் அயிடியன் நோயுள்ளபாகத்தில் தடவி போஸ்தக்காய் கியாழம் காப்பிடம் கொடுக்கவும்.

—————

குடைச்சல்களுக்கு,

லெனிமண்டம், பெல்டோனா, கேம்பர் குளோர்ட் பாரம், லிகர் அமோனியா, லெனிமண்டம் ஒப்பியம், இவைகளை சமபாகமாகக் கலந்துக்கொண்டு குடைச்சல் உண்டாகிய பாகத்தின் மீது கொஞ்சக்கொஞ்சமாய்த் தடவி சூடுண்டாகத்தேய்க்கவும் ஒருநாளைக்கு இருமுறையாக சுவஸ்தப்படுமளவும் உபயோகிக்கவும்.

—————

பக்கவிழுப்புக்கு,

எம்பிளாஷ்டரம் பெல்டோனா விழுப்புள்ளபாகத்தில் நன்றாய்த்தேய்த்து திரும்பவும் தடவிவைக்கவும்,

☞

அதிசாரபேதிக்கு,

சில்பேட் அப்காப்பர் ௨, கிரையனும், ஒப்பியம் ௨, கிரையனும் கலந்து கொடுக்கவும் தயிர்ப்புள்ள குழம்பு துகையல் அனுசரிக்கவும்,

—————

நீர் தாவாரை அடைப்பு அல்லது எரிவுக்கு,

வால்மிளகு விராகனிடை (௩௦) கன்றுப்பொடித்து வஸ்திரகாயம் செய்து நிறுத்தெடுத்து (10) பலம் ஜெலத்தில் கரைத்து ஒருதினத்திற்கு நாலுதரம் பாவித்துக்கொடுக்கவும்.

அஜீரணபேதிக்கு,

காசுக்கட்டி விராகனிடை (உ௰) லவங்கப்பட்டை விராகனிடை (௩) ஆறுபலம் தண்ணீரை அடுப்பிலேற்றி முக்காலே அரைக்கால்பலம் கற்கண்டைப்பொடித்துப்போட்டு பாகுசெய்துக்கொண்டு மேற்படி இரண்டுசரக்கும் தூள்செய்து அந்தபாகில்போட்டு லேகியம்போல கிளரிவைத்துக்கொண்டு ஒருவேளைக்கு காலே அரைக்கால்முதல் முக்கால்பலம்வரையில் கொடுக்கலாம்.

மாசில்கபமில்லாத வரட்டிருமலுக்கு,

நரிவெங்காயம் விராகனிடை, காலேவீசம் சுக்குத்தூள் (க) விராகனிடை கபாயகம் (௨ஹ) விராகனிடை சோப்பு குன்றியிடை, இவைகளை (க) விராகனிடை கற்கண்டுபாகில்சேர்த்தரைத்து இரண்டு குன்றியிடை மாத்திரைசெய்து (5) மாத்திரை வரையில் கொடுக்கலாம்,

இங்கிலீஷ்வகைபாணி

முற்றுப்பெற்றது.

இன்னம் அனேக அற்புதமான அவிழ்தமுறைகள்
ஐந்தாம்பாகத்தில் வெளியிடப்படும்.

உ

தேவிசகாயம்.

நான்காவது

மகான்களால் கையாண்டுவந்த

பெருமருந்துபாணி.

இராமபாண இடிமருந்து.

இடிமருந்து * அரிதாரம் காந்தம்வெள்ளை
எட்டிவிதை செங்கொட்டை சித்ரமூலம்
வடிமருந்து * ரசங்கெந்தி மஞ்சள் ஓமம்
மாசிக்காய் ஜாதிக்காய் வசம்பிருள்ளி
குடிமருந்து * கொள்ளுக்காய் துருசுதுத்தம்
கோழிமுட்டை இந்துப்பு கோட்டங்கார்போகம்
அடிமருந்து * தக்கோல மக்கிராகாரம்
அமைத்திடித்து கலசமிட்டு அறையக்கேளே. 1

அறையக்கேள் யோனிதன்னி லிங்கந்தன்னில்
அண்டத்தில் புடைகரப்பான் புரையின்புண்கள்
விரையக்கேள் மூக்கெரித்தல் கரப்பான்சூலை
வெடிப்புத்துக் குலைபுத்து விரல்புத்து
விறையக்கேள் வெண்குட்டங் குறைகெய்குட்டம்
விழித்திருப்பன் விறைத்தண்டின் விஷச்சிபுத்து
முறையக்கேள் முடியாத முடக்குசூலை
மூட்டோடே வியாதியெல்லாம் போமுண்மையே. 2

உண்டிரேல் பத்தியந்தா னிதற்கோவில்லை
உயிரான விடிமருந்து ராமபாணம்
உண்டிரேல் சிறுகண்டை பளவிலேதான்
உற்றதொரு மோருஞ்சோ றுண்டுமுன்னே

---

* இடிமருந்தென்பது - வெடியுப்பு.
* வடிமருந்தென்பது - சாராயம்.
* குடிமருந்தென்பது - கெஞ்சா.
* அடிமருந்தென்பது - சவுக்காரம்.

உன்பிரேல் அடுத்தடுத்து மூழ்கிமூழ்கி
 உள்ளபடி மண்டலமே செல்லுமட்டும்
உன்பிரேல் தேகமது பொன்போலாகும்
 உள்ளபடி பூவையரைப் புணர்ந்திடாதே. 3

புருடருக்கும் பூவையர்க்கும் சொல்லுவேன்கேள்
 புணர்ச்சிதள்ளி யிருக்கட்டும் மூன்றுமாதம்
இருடருக்கும் பிணியேது ராமபாணம்
 எங்கெங்க நோய்வரினும் யெமன்வந்தாலும்
திருடருக்கும் பலிக்குமிது ராமபாணம்
 சித்துவிளை யாடுமடா சிவன்மேலாணை
குருடருக்கும் செய்முறையாய் ஜெயமேயாகும்
 கோதண்ட ரகுராமர் பாணந்தானே. 4

ஸ்ரீமகான் சொக்கலிங்கப்பரிதேசி யவர்கள்

கையாண்டுவந்த

ச ர ம ா ரி த் த யி ல ம்,

அழிஞ்சிவிதை	புன்னைவிதை
கடுக்காய்விதை	புங்கம்விதை
தாணிக்காய்விதை	கார்கோலரிசி

இந்த ஆறுவித்துகளையும் சமபாகமாய்நிறுத்தெடுத்து ஒரு பாண்டத்தில்போட்டு சிறுவர்களின் சிறுநீர்விட்டு (உ0) நாள் ஊரியபிறகு (உக) வது-நாள் யெடுத்து நிழலில் உலர்த்தியெடுத்து அத்துடன் மிளகு நாழிபோட்டு கலந்துக்கொண்டு (இ) தமருள்ள பாண்டத்தில் சரக்குகளைப்போட்டு வாய்ப்பாட்டுக்கு பானைகவிழ்த்து சீலமண்செய்து உலர்ந்தபிறகு அடியிலுள்ள தமருக்குநேராய் சிறுபாண்டம் பொருந்தச்செய்து பூமியில்அடிபாண்டம் தெரியாமல் புதைத்து சரக்குள்ள பாண்டம்துவக்கி வரட்டியடுக்கி குழித்தயிலம் யிறக்கவேண்டும்.

நடுபாண்டத்திலிருந்தே வரட்டியடுக்கவேண்டியதானபோதிலும் மூன்றுபாண்டங்களும் பூமிக்குள் இருக்கும்படி பெரும் பள்ளமாக வெட்டிகுத்தளவுக்கும் பாண்டத்திற்கும் பொருந்த மாகவரட்டிகள் அடுக்கி குருத்தியானத்துடன் அக்கினியிடவேண்டியது அவ்வாறு கபிகாத்துடன் பிரா சஞ்சரிக்காத மனைவிடமானயிடத்தில்வைக்கவேண்டிய குழிப்பு த்தின் அருகில்தயிலம் யிறங்குமளவும் நிர்வாணிபூசை செய்யவேண்டியது.

{ ஓம் இலியும் சௌவும் ஐயும் றீயும்
 வரியும் ஙிறீயும் ஆம் ஊம். }

என குழியின் திதானம் அரிந்து தயிலம் இறங்கு மளவும் இந்த ஒன்பது வாக்கியமும் புருவநிதானத்துடன் ஓதி யிருந்து பிறகு தயிலத்தை சீசாவில் யிருத்துவைத்துக் கொள்ளவும்

இந்ததயிலத்தினால்

தீ ரு ம் வி யா தி க ள்,

வைத்திருந்ததயிலத்தில் கொஞ்சந்தொட்டு
 மயிர்துணியில் தடவிவிடக் கருத்துபோகும்
வைத்திருந்தவெறுகுலே கண்டமாலை
 என்றுநாறுசொரிசிரங்கு கரப்பானெல்லாம்
உய்த்திருந்து கெட்டோடுந் தயிலந்தன்னை
 ஒதுகுளாவு நோய்களுக்கு பூசிப்பாரு
மொய்த்திருந்த நோய்களெல்லா மோடிப்போகும்
 முழித்திருந்து தயிலத்தை மூழ்குவாயே. 1

மூழ்கையிலே விஷகிரு முடிசிரங்கு
 மூர்க்கமுள்ள தலைவெட்டி மேகதிரும்
மாய்கையிலேபுழுவெட்டு ரோக்கிரும்
 மகிமையிலே மயிரதுவுங் கருத்துப்போகும்

மூழ்கையிலே யசாத்தியநோய் நடுக்கல்தீரும்
முடிசிரங்கு குருத்தடிப்பு வினையுந்தீரும்
ஆழ்கையிலே பாம்பாணை கடியுந்தீரும்
அரணைகடிச் சிலந்திகடி * வாளம்போமே. 2

போமென்ற குழிவாழை மூட்டுவாழை
புடைத்தெழுந்த துடைவாழை முதுகுவாழை
துமையடி ஊமையடி சிலந்திவாழை
அப்பனே சொல்லுகிறே னள்பாய்த்தானே
வேமென்ற கண்ணேசி யிடிப்புச்சிட்டை
இருபுடரி துனிநாசி சிலந்திபுத்து
தாணுச்சி பிளவையிமை கண்மேல்வாதம்
சரிநேத்திர பிளவையிதில் தணியும்பாறே. 3

தணிவான பெண்குறிமேல் கரப்பான்கட்டு
தடர்சிலந்தி படர்சிலந்தி யல்குல்புத்து
பிணியான பவுத்திரமும் முளைமூலந்தான்
பின்கரப்பான் முன்கரப்பான் அண்டப்புத்து
தணிவாத உக்கிப்புண் துடையில்புத்து
துடிசூலை யிடிசூலை மேகசூலை
கெணியாத அலைகடிமேல் யிலைமேற்புண்கள்
கீழ்நாக்கு மேல்நாக்கு புத்தும்போமே. 4

புத்துபோம் யிருபிளவை நகத்தின்சூலை
புரைவிழுந்த படுஞ்சிரங்கு நிருத்தும்பாரு
அத்துப்போம் நாக்குண்ணி மூக்குண்டபுண்ணு
அகலாதநோய்களெல்லா மகன்றுப்போகும்
வெத்துப்போம் முனையான நோய்களெல்லாம்
விழிமுழிங்கி யிமைமுழிங்கி வெகுநாள்புண்கள்
செத்துப்போம் இத்தனைக்கும் பூசம்போது
தீர்ந்துப்போம் யின்னமுண்டு சொல்லக்கேளே. 5

சொல்லக்கேள் கல்லரவம் விரியன்பாம்பு
சூழெலிகள் குருட்டெலிகள் புடையன்மூக்கன்

* வாளம் என்பது - வாளவிரியன் ஓர்பாம்பு.

வெல்லக்கேள் தேளோடு நட்டுவாக்காலி
விஷமுள்ள தைத்தாலும் பூசபூச
இல்லக்கேள் ஒழிந்துவிடும் விஷங்களெல்லாம்
இத்தயிலம் வெகுசுருக்கு மெத்தநன்று
கொல்லக்கேள் விஷங்களொடு நோய்களியாவும்
கொல்லவென்றே யித்தயிலம் கூறினேனே. 6

கூறினேன் புகையிலையும் புளியுந்தள்ளு
கூரிய பச்சைமீன் தள்ளுதள்ளு
மீறியே தின்னாதே அசனத்தைத்தான்
யிழுங்காதே புரங்காதே யிகச்சொல்லாதே
ஏறினேன் மென்றவனை யிகழ்ந்திடாதே
பேசாதே வையாதே திட்டாதேநீ
ஆறியே பதமாக உண்டால்மைந்தா
அமுர்தமது தன்னிலையாய் நிலைக்கும்பாரே. 7

குருதுணைவுண்டாகவும்.

சகலமேகராஜாங்க

ரசகெந்திமெழுகு

இரசம்	வாலுமுளை
கெந்தி	சோம்பு
ரசகற்பூரம்	வலம்
அரிதாரம்	ஜாதிக்காய்
காந்தம்	மிளகு
துருசு	சீரகம்
தாக்கம்	கார்கோலரிசி
முதார்சிங்கு	மாசிக்காய்
சுக்கு	தேவதாரம்
ஓமம்	வாய்விளங்கம்
மஞ்சள்	வசம்பு
திப்பிலி	லவுங்கம்

ஆரத்தை	பரிங்கிச்சக்கை
கோஷ்டம்	செங்கொட்டை
கருஞ்சீரகம்	கடுக்காய்த்தோல்
காட்டுச்சீரகம்	சிறுதேக்கு
முந்திரிக்கை	தாளிசம்
பிரம்மிமூலம்	வெட்டிவிரை
நீர்பூண்டு	தேற்றான்வித்து
கொள்ளு	எள்ளு
தேங்காய்	அமுக்குராவேர்
சின்னிவேர்	சித்திரமூலம்
சங்கம்வேர்	கொப்பரைத்தேங்காய்
	கொல்லங்கோவை

இவைகளை வகைக்கு ஒருவிராகனிடையாக நிறுத்தெடுத்து கல்லுரலில்யிட்டு யிடித்து வஸ்திரகாயம்செய்து அத்துடன்இரண்டுகோழிமுட்டைகளை உடைத்துவூற்றி பிரகுநிறுத்தெடுத்து அதுயிருக்கும் இடைக்கு சரியிடை பழயபனைவெல்லம்சேர்த்து கல்லுரலில்போட்டு பூணில்லாத மரஉலக்கையால் மைபோல்குத்தியெடுக்கவும்.

இதனால்தீரும் வியாதிகள்.

குத்தப்பா யிதுநேரே பனைவெல்லந்தானே
குணமாக நால்ஜாமம் யிடித்துத்தீரு
பெத்தப்பா வழித்தெடுத்து சிமிழில்வைத்து
பேதமில்லை கண்டக்காய் யிதங்கொள்ள
முத்தப்பா மோருஞ்சோ றுண்டுமுன்னே
முயியாமல் மருந்துண்ணு மண்டலந்தான்
சித்தப்பா முழுகுநாள் மருந்துண்ணுமே
சிறப்பாக பத்தியந்தா னில்லைபாரே. 1

தானென்ற வெட்டைசூலை மேகசூலை
தயவான பிடிசூலை புடைக்குஞ்சூலை
வானென்ற துடிவாத சூலையோடு
வளமான கால்குடைச்சல் காலைதீரும்

மானென்ற ஆம்புலிப் புருதிமானே
மதிபாத குட்டமொடு விஷசீர்தீரும்
கோனென்ற குறைநோயும் சிரக்குத்தீரும்
குணமான புழுவெட்டு தடிப்பும்போமே. 2

போமேசீ யோனிதன்னில் லிங்கத்தன்னில்
பொலிவான அலையடி சிலந்திமேகம்
தாமேசீ செங்கிரந்தி கருங்கிரந்தி
தயவான அரிகிரந்தி பொரிகிரந்தி
வாமேசீ பருங்கிரந்தி பிடிகிரந்தி
வளமாகயிடிவிழுந்த புரைமேற்புண்கள்
ஆமேசீ அரைக்கடியுந் தண்டிற்புண்ணு
அடைவானகுள்ளிமா தேவியாமே. 3

ஆமேசீ நடைவாழை மூட்டுவாழை
அடைவானகுழிவாழை முதுகுவாழை
சேமேசீ புழுகுவாழை விலாவில்வாழை
செயலானதமர்காயாச் சிலந்தியோடு
ஓமேசீ குரிப்புற்று யோனிப்புற்று
ஒளிவானபிடிப்புற்று கன்னப்புற்று
தாமேசீ பல்சிலந்திக் கன்னத்தோசை
சதையுளருங்கண்டூறைச போகும்பாரே. 4

பாரடா பிளவையொடு பிளவைப்பூச்சி
பண்பானராஜவென்ற பிளவையோடு
கூரடா நேத்திரமேல் பிளவையோடு
கொடிதான தாழ்சிலந்தி புடைசிலந்தி
சேரடா பவுத்திரங்கள் முளைமூலங்கள்
செடியபகமேட்டுச் சாத்திதேறு
வீரடா யிவையெல்லாந் தீருந்தீரும்
விதமாகபோகருட செயலாந்தானே. 5

சகலவிஷங்கள் பேய்பில்லி சூனியம் இவைகட்கு.

விஷமுஷ்டி தைலம்.

யோழிஞ்சி	சங்கங்குப்பி
எட்டி	கடம்பு
சங்கு	சிறுசின்னி
வன்னி	வெள்ளருகு
புங்கு	ஆவிப்பட்டை
செண்பகப்பூ	மருக்காரை
இண்டன்	குண்டுமணிவேர்
கொக்கான்	ஆவாரை
காயுருவி	சிவன்வேம்பு
பூனைகாஞ்சொறி	முன்னி
புரசை	கருங்காலி
சிறுளை	வாகை
புனல்யிண்டு	கருஊமத்தை
அமுக்கரா	விடத்தேறு
பூவரசு	குட்டிபலா
குமரி	பிரகருணை
கொன்றை	ஆத்தி
கழற்கொடி	செக்கத்தாரி
பெருமரப்பூண்டு	அவுரி

இவைகளை சமனிடையாயெடுத்து நிழலில்உலர்த்தி ஒன்றிரண்டாயிடித்து குழித்தயிலம்பிரக்கிவைத்துக்கொண்டு உடனே,

கழுகு	கழுதைமண்டையோடு
ஆமை	பெருமைக்கொம்பு
ஆந்தை	குதிரைக்குளம்பு
பச்சைஓணான்	ஆனைலத்தி
தேவாங்கு	ஒட்டைலத்தி
பச்சைதவளை	பன்றிலத்தி

பெருவிரியன்	கழுதைலத்தி
மனிதர்மண்டையோடு	வெள்ளாட்டுப்புழுக்கை

இவைகளை சமனிடைகொண்டு யிடித்து உலர்த்தி குழித்தயிலம் பிரக்கிவைத்து இதில் அரைப்படியும் ஷை தயிலத்தில் அரைப்படியும் ஆகஒருபடிதயிலமும் ஒன்றாய்வார்த்து (மேல்மூடி) குரியபுட மாகவைத்து எட்டிக்கொட்டையை குழித்தயிலம் வைத்து அரைப்படியெடுத்து மேற்கலந்து வைத்த தயிலத்துடன் வார்த்து நன்றாய்வாய்புரத்திற்கு கார்க்கடைத்து ரவியில்வைத்து விட்டு.

கருங்குங்கிலியம்	கஸ்தூரிமஞ்சள்
கருஞ்சீரகம்	மாசிக்காய்
இரசகற்பூரம்	இவ்வைந்தும்வகைக்குபலம் (க)

பரங்கிப்பட்டை பிரப்பங்கிழங்கு இவ்விரண்டும் வகைக்குப்பலம் (2) வலம்புரிக்காய் கடுக்காய் வகைக்கு பலம் (க) ஓதியம்பட்டைச்சாறு சித்திரமூலச்சாறு இரண்டும் கலந்துக்கொண்டு இதைவிட்டு மேற்படி கடைசரக்குகளை அரைத்து முன்பிரக்கிவைத்திருக்கும் குழித்தயிலத்துடன் கலந்துவைத்துக்கொண்டு அத்துடன் மயிலெண்ணை அரைப்படி வேப்பெண்ணை அரைப்படி கலந்து ஆவிப்பேற்றி தயிலப்தமாயும் குருவனுக்கிரகத்தாலும்கைமுறை செய்முறையோடும் தெரிந்துக்காய்ச்சி பிரக்கிவைத்துக்கொண்டு இரோகத்தின்மீது தவளையிடத்தீரும் வியாதிகளாவன.

பழமையாகிய கால்முடக்கு கைமுடக்கு திராதகுலைகுட்டம்குஷ்டரோய் புடையன் விரியன் செய்யான் செவ்வட்டை மரவட்டை சகலவிதவண்டுகடி பில்லி சூனிய வேதை வைப்பு பிசாசு பூதகுடர் வேதாளபார்வை பிரமராட்சதிசந்திப்பு இவை தீரும் மற்றுமுள் வேதர் கண்ணீர்விடவும் கைப்பு புளிப்புதள்ளவும்உடம்புகட்டு கூட்டவும் பாசிப்பயர் முருங்கைப்பிஞ்சு முழுத்துவரை ஆவின்பால் இவையாகும் வியாதியும் தேகமும் முதலாகிய சகலபலமும் தெரிந்து பத்தியம் வைக்கவும்.

பதினொன்மர் துணையுண்டாகவும்.

சகலவலிப்புகட்கும்

சோதிரிஷதயிலம்

அவுரிவேர்	குட்டிகுமிழ்வேர்
முன்னைவேர்	குட்டிக்களாவேர்
அழிஞ்சிவேர்	பெருங்குதம்பைவேர்
சிவனார்வேம்பின்வேர்	முருங்கைவேர்
சிறுபுள்ளடிவேர்	முள்ளகருணைவேர்
சங்கம்வேர்	மூக்காவேளைவேர்
செங்கத்தாரிவேர்	பாவட்டைவேர்
வாகைவேர்	ஆடுதொண்டைவேர்
புங்கன்வேர்	வெட்பாலைவேர்
கொச்சிவேர்	எருக்கன்வேர்
பூவரசம்வேர்	கண்டங்கத்திரிவேர்
கொடிவேலிவேர்	தூதுளைவேர்
சத்திசாரணைவேர்	கூந்தன்குதம்பைவேர்
வெட்பாலைவேர்	ஓரிலைதாமரைவேர்
உத்தாமணிவேர்	நன்னாரிவேர்
எலியாலம்வேர்	முருக்கம்வேர்
குட்டிவிளாவேர்	

இந்த வேர்வகைகள் முப்பத்திமூன்றும் வகைக்கு ஒருவிராகனிடையாகநிறுத்தெடுத்து நிழலில்உலர்த்தி ஒரு அங்குலம் இரண்டங்குலம் அளவாகநறுக்கி பாண்டத்தில் வைத்துக்கொண்டு,

நம்பாகல்சார்	புங்கம்யிலைச்சார்
நாய்ப்பாகல்சார்	முடக்கத்தான்சார்
ஆடாதோடைச்சார்	காட்டுக்குறிஞ்சான்சார்
சிறுசின்னிச்சார்	மாவிலிங்கஞ்சார்
எருக்கிலைச்சார்	எலுமிச்சம்பழச்சார்

இந்த சார்வகைகள் பத்தும் வகைக்கு கால்படியாகவெடுத்து வெவ்வேறு பாண்டங்களில்வைத்து ரவியில்வைத்து,

கருஞ்சீரகம்	தசகுப்பி
கஸ்தூரி	சித்தரத்தை
பூதகாப்பான்பட்டை	பேரரத்தை
தந்தைசகர்சிட்டம்	செண்பகப்பூ
பெருங்காயம்	திப்பிலி
ஜாதிக்காய்	வாய்விளங்கம்
மஞ்சள்	கடுக்காய்தோல்
மரமஞ்சள்	செவியம்
குக்கில்	சிறுதேக்கு
அரப்பொடி	கடுகுருணி

இவைகள் வகைக்கு விராகனிடை (க)

வசம்பு விராகனிடை (ம) உள்ளி விராகனிடை (ய)வலம்புரிக்காய் விராகனிடை (யக) இந்த பதினொரு இவைகளையும் கல்லுரலில்போட்டுயிடித்து வஸ்திரகாயம்செய்து முதலில்நறுக்கிவைத்திருக்கும் காட்டுவேர்களியாவும் பாண்டத்தில்போட்டு இரண்டுபடி வெயாழம்வைத்து (உ) படி வெயாழமாகக் குறுகக்காய்ச்சிவடித்து வஸ்திரகாயம்செய்திருக்கும் சரக்கை கல்வத்திலிட்டு இந்தவெயாழத்தால் அரைக்கவும் வெயாழம் [illegible]மானால் ஆரவைத்து ஆரவைத்து அரைத்தபிறகு முன்பிழிந்து வைத்திருக்கும் பத்துவகைசார்களையும்ஒவ்வொன்றாய்விட்டு அரைத்து உடனே,

பசுங்கோமியம்	படி - வ
எருமைகோமியம்	படி - வ
வெள்ளாட்டுக்கோமியம்	படி - வ
சிறுபிள்ளைகள்மூத்திரம்	படி - வ

இந்த நான்குவகை நீரும்விட்டு அரைத்துசாணிப் பதமானபிறகு அத்துடன் விளக்கெண்ணை கால்படி வேப்பெண்ணை கால்படி இவ்விரண்டும்ஊற்றி குழம்புபதமாய்க்கலந்து அடுப்பிலேற்றும்போது,

வெளவால்	இரண்டு
கள்ளிக்[illegible]க்காய்	ஒன்று
பெருவோறன்	ஒன்று

முயல்	ஒன்று
சிற்றோணான்	மூன்று
உடும்பு	ஒன்று
நல்லபாம்பின்கண்டம்	ஒன்று
பச்சைமயில்இரகு	ஐந்து

இவைகள் ஒவ்வொன்றையும் அறுத்து உதிரத்தை நை எண்ணைபாண்டத்தில் பிடித்துக்கொண்டு இரகு, தோல் குடல் இவைகளைநீக்கி இரச்சியையும் அத்துடன்போட்டு அடுப்பேற்றியெரித்து இரக்கிவைத்துவிட்டு மருநாள் அடுப்பிலேற்றியெரித்து இரச்சிகள்யாவும் வெடித்து தயிலத்தைமாத்திரம்பிழிந்துக்கொண்டு இரச்சித்துண்டுகளை யெரித்துவிட்டு எண்ணையை வேறுசீசாவில் வடித்துவைத்துக்கொண்டு ஒருதுளிமுதல் ஒருகாசு யிடைவரையில் கொடுக்கவும், தலைமுதல் தேகம்முழுவதும் தேய்த்து துவளையிடவும் தேகவலிவு வியாதிகளின் நோக்கம் இவையுணர்ந்து உள்ளுக்குக் கொடுப்பதும் சர்வாங்கதுவாளை யிடுவதும் பண்டிதர்களுடைய பக்குவமாகும்.

இதற்குதீரும் வியாதிகள்.

கோணைவலிப்பு, குமாரகண்டவலிப்பு, பிரவலிப்பு, காக்கைவலிப்பு, ஜன்னிவலிப்பு, ரணவலிப்பு, முகவாதவலிப்பு, முகஜன்னிவலிப்பு, முயல்வாதம், பாரிசவாதம், உச்சிவாதம், கனுவாதம் வாதமென்று சொல்லப்பட்ட சகலவாதங்களும் வலிப்பென்றுசொல்லப்பட்ட சகலவலிப்புகளும், ஜன்னியென்றுசொல்லப்பட்ட சகலஜன்னிகளும் தீரும்.

பத்தியம்.

புகையிலை, புளி, கருவாடு, மீன், இரச்சி, கரப்பான்பண்டம் லாகிரி, பொடி, போகம் இவைநீக்கவும், அன்றியும் நோய்க்கிசைந்தபடி சமயோசிதபத்தியம்வைப்பது வயித்தியரனுபவமாகும்.

சற்குருதுணையுண்டாகவும்.

லகுயிடிவல்லாதி.

செங்கொட்டை	பலம் -	௰
எள்ளு	,,	௰
கொப்பரைதேங்காய்		௨
பரங்கிப்பட்டை	,,	௨
அமுக்கராக்கிழங்கு	,,	௨
சித்திரமூலம்	,,	௨
கஸ்தூரிமஞ்சள்	,,	௨
கருஞ்சீரகம்	,,	௨
வாலுழுவை	,,	௨
குராசாணி	,,	௨
வெற்றிலைக்காம்பு	,,	௨
கடுக்காய்தோல்	,,	௨
திப்பிலி	,,	௨
கோஷ்டம்	,,	௨

முதலில் சொல்லியிருக்கும் செங்கொட்டை பத்துபலத்தையும் ஒவ்வொரு கொட்டைகளின் மூக்கைவெட்டிசாணிப்பாலில் போட்டு மேல்மூடி மூன்றுநாள் ஊரவைத்து யெடுத்து ஜெலத்தினால் அலம்பிவிட்டு பிரகுஇளநீரினால் அலம்பியெடுத்துகல்லுரலில்போட்டு எள்ளு பத்துபலத்தையும் அம்மியில்வைத்து அரைத்து கொப்பரை தேங்காயையும் அம்மியில் அரைத்து இந்தயிரண்டு முத்தையையும் உரலில்யிருக்கும் செங்கொட்டையுடன்போட்டு கெட்டப்பாரையினால் மூன்றுநாள் யிடிக்கவும் மைபோல் ஆகுமளவும் யிடிக்கவேண்டியது அப்படி மெழுகுபதமாய் யிடித்தானபிரகு பரங்கிச்சக்கைமுதலாய் கோஷ்டம் வரையில் உள்ள (௰௧) சரக்குகளில் வெற்றிலைக்காம்புதவிர மற்றதுகளைவேரோவுரலில்யிடித்து வஸ்திரகாயம்செய்து முன்புகல்லுரலிலிருக்கும் மருந்துடன்போட்டு ஒருநாள்யிடித்து வழித்துவைத்துக்கொள்ளவும் வெற்றிலைக்காம்பை எள்ளரைக்கும்போது கூடப்போட்டரைத்துக் கொள்ளவேண்டியது இம்மருந்தை இடிக்கவேண்டியபாளிதன் காலையில் வெறுமைத்தயிரு சேர்ந்தபழ

யது வயருநிரம்பப்புசித்து பிடிக்கத்துவக்கவேண்டும், பிடிக்கும்போது நிதம் ஒருகொப்பரைத்தேங்காய் தின்னவேண்டும்பிடித்துமுடிவானபிறகு விளக்கெண்ணெய் தலைக்குத்தேய்த்து ஸ்நானம் செய்யவேண்டும்.

இதனால்தீரும் வியாதிகள்.

தானென்ற வல்லாதி அஸ்திசுரம்
  தயவாக மண்டலந்தான் கொண்டாயானால்
வானென்ற குட்டமொடு கிரந்திகளை
  வகையான அரையாப்பு மேகமெல்லாம்
கோனென்ற குன்மமொடு சுக்கிலவாய்வு
  குணமில்லா ரணம்புரைகள் கிரந்திதீரும்
வனென்ற பத்தியந்தா னிச்சாபத்தியம்
  இதமான உப்புமுதல் வருக்கக்கூட்டே 1
கூட்டப்பா தயிர்மோரும் நெய்யுமாகும்
  குணமான துவரையும் பருப்புமாகும்
நாட்டப்பா பாசியென்ற பயறுமாகும்
  நலமான நல்லாரைப் பொன்னாங்கண்ணி
ஆட்டப்பா மச்சமென்ற தெல்லாந்தள்ளு
  அடைவாகவுற்றதெல்லா மாகும்பாரு
ஆட்டப்பா விளக்கெண்ணெய் தேய்த்துமூழ்கு
  அடவாக சந்திரம்போல் தேகமாமே. 2

நாலுகாலைக் கொருதரம் விளக்கெண்ணெயில் தலைமுழுகி வரவேண்டியது முழுகும்நாளில்மட்டும் மருந்துண்ணப்படாது, க்ஷவரம் செய்துக்கொள்ளும் தினத்திலும் மருந்துண்ணப்படாது, புகை கருப்பும் ஸாகிரிவஸ்துவும் எப்போதும் கூடாது, இந்த மருந்தை புசிக்கும்நாள் துடங்கி மருந்துவிட்டபிறகு தொண்ணூறுநாள் வரையிலும் ஸ்திரீசம்போகந்தான் கூடாது.

வேளைக்கு ஒரு சுண்டைக்காயளவு சாப்பிடவேண்டும்.

குருதுணைவுண்டாகவும்.

21-மேகத்தைத்தீர்க்கும் சித்திரபல்லாதி.

பால்வுள்ள செங்கொட்டைகளாக (ஙா) கொட்டைகொண்டுவந்து குழித்தயிலம் யிறக்கி மூன்றரைபலம் தயிலம் இருத்து யெடுத்து வைத்துக்கொண்டு என்ற (ரு) பலம் கொண்டுவந்து ஜெலத்தில் ஊரவைத்து தோல்நீக்கி மேற்றோல்போக்கி உலர்த்தி கல்லுரலில்போட்டு நன்றாய்யிடித்தபிறகு அத்துடன் நல்லவெல்லம் (ரு) பலம்போட்டியிடித்து பின்பு கொம்பு (உ) சுக்கும் பலம் (க) இவ்விரண்டும் கல்வத்தில்போட்டு அரைத்து நன்றாய் யிடித்தபிறகு யெடுத்து உரலிலிருக்கும் மருந்துடன் போட்டு முன்யெடுத்துவைத்திருக்கும் குழித்தயிலம் (௩௨) பலத்தையும் மருந்துடன்விட்டு ஒருநாள்முழுதும்யிடித்துமெழுகுபோல் ஆனபிறகுயெடுத்து பீங்கான்கோப்பையில் வைத்துக்கொள்ளவும்.

ஒருவேளைக்கு மணிப்புங்கன் விரைப் பிரமாணமாக காலை மாலை இருவேளையும் (௰க) நாள் சாப்பிடவும் யாதொருபத்தியமுமில்லையாது கம்பு நல்லெண்ணெ யாவற்றும் ஆகும் அல்லது இச்சாபத்தியமிருக்கலாம் தயிர்மோர் நெய் ஆட்டிறைச்சி விசேஷமாய் புசிக்கலாம்.

தீரும்வியாதிகள்.

கண்டமாலை, கொருக்கு, லிங்கப்புற்று; யோனிப்புற்று, ரணங்கள், கிரந்தி, மேகப்படை, குட்டக்கரப்பு, ஆசனப்பவுத்திரம், கொடிபவுத்திரம், மூலம், சிறமூலம், (உக)விதமேகமும் தீரும் மறுபத்தியம்-(கக)நாள் ஆனபிறகு நல்லெண்ணெதேய்த்து தலைமுழுகலாம், ஒருசமயம் தேகம் நமைச்சல் கண்டாலும், கைகலாலும் இரண்டு கப்பத் தேங்காயைத்துருவி பால் யெடுத்து அந்தபாலில் (௱) எலுமிச்சம்பழம் பிழிந்து சிரசுமுதல் தேகமெல்லாம் பூசி நன்றாய்த்தேய்த்துக்கொண்டு வெந்நீரில் குளிக்கவும்.

குருதுணையுண்டாகவும்.

பெருமருந்துவகைபாணி

முற்றுப் பெற்றது.

உ

தேவிசகாயம்.

ஐந்தாவது

மாத்திரைவகைபாணி.

பாலசஞ்சீவிக்குளிகை.

சுக்கு	லிங்கம்
திப்பிலி	வெண்காரம்
மிளகு	கிராம்பு
ஓமம்	வகைக்கு விராகனிடை (க)

இந்த யெழுவகையும் யிடித்து வஸ்திரகாயஞ்செய்து கல்வத்திலிட்டு யெலிமிச்சம் பழச்சார்விட்டு மூன்றுஜாமம் அரைத்து உளுந்தளவு மாத்திரைகள்செய்து நிழலில் உலர்த்தி சீசாவில் வைத்துக்கொள்ளவும்.

குழந்தைகளுக்குச் சுரத்திற்கு துளசி அல்லது நாய்த்துளசியிட்டவியல்செய்து பிழிந்தசாற்றில் குழந்தையயதுக்கு தக்கின்படி (க) அல்லது (உ) மாத்திரையிழைத்துக் கொடுக்கவும் தாய்பிச்சாபத்திய மிருக்கவும் சன்னிசுரமானுல் முலைப்பாலில் கொடுக்கவும், பெரியவர்களுக்கு ஜலதோஷம் தலைபாரம் கண்டால் ஒரு மாத்திரை வெற்றிலையில்வைத்து மடித்துத்தின்னவும் வெடிகாய்களுக்கு அம்பிசந்தியாக மூன்றுநாள் கொடுக்கவும்.

பால்பேதிக்குளிகை

ஜாதிக்காய்	திப்பிலி
ஓமம்	கஸ்தூரிமஞ்சள்
கிராம்பு	கட்டவசம்பு
கருஞ்சீரகம்	காய்ம்[illegible]க்குவிராகனிடை-க
சுக்கு	வெள்ளைகா[illegible]களுக்குமேவர் ,, க

இவைகளையிடித்து வஸ்திரகாயஞ்செய்து கல்வத்திலிட்டு வெந்நீர்விட்டு (அ) ஜாமம் அரைத்து மிளகு, கடலை, சிறுகண்டை இந்த அளவுகளாக உருட்டி நிழலில் உலர்த்திவைத்துக் கொண்டு குழந்தைகளின்வயதும் திடமும்பார்த்து வெந்நீரில் ஒருமாத்திரை யிழைத்துக்கொடுக்கவும் இப்படி (எ) நாள் கொடுக்க மூன்றுநாளுவரை வயருபோகும் பால்குடிக்கும் சிறுகுழந்தையாயில் தாயார் பத்தியமிருக்கவும் வெந்நீரின்சாதம் உப்பில்லாமலே தின்னவேண்டும் அல்லது சங்கம்மிலேயில்சுட்டுபஸ்பமான உப்புசேர்த்து முழுத்துவரையைவருத்துடைத்தபருப்பு துவையலாகும்.

தீரும்வியாதிகள்.

சளியிருமல், சுழிகவாம், விக்கழி, அன்று: சன்னிதோஷம் மந்தம், வயருநோய், பொருமல், இரச்சல், கொருகொருப்பு, சுரம் இவைதீரும்.

மகாசுராங்கிசக்குளிகை.

ரசம்	விராகனிடை-க	சுக்கு	விராகனிடை - ச
கெந்தி	,, க	திப்பிலி	,, ச
நாபி	,, க	மிளகு	,, ச
ஊமத்தம்விரை	,, ரு		

இவைகளை கல்வத்திலிட்டு எலிமிச்சம்பழச்சார்விட்டுமூன்றுஜாமம் அரைத்து குன்றிமணியளவு மாத்திரைசெய்து நிழலில் உலர்த்திகொள்ளவும் இந்தமருந்தை தகுந்த அனுபானங்களுடன் பிரயோகித்தால் தினசுரம், இருமுறைசுரம், மும்முறைசுரம், நாலாமுறைசுரம், சகலசுரச்சனும் தீரும்.

சூலைகுடாரம்.

ரசம்	நெல்லிமுள்ளி
நாபி	சுக்கு
வெண்காரம்	மிளகு
கெந்தகம்	திப்பிலி
கடுக்காய்	அரிதாரம்
கான்றிக்காய்	தாம்பிரபஸ்பம்
சேர்வாசிம்	வாய்விளங்கம்

இவை சமன்கொண்டு கையாந்தகரைச் சாறுவிட்டு (அ) ஜாமம் அரைத்து குன்றிமணியளவு உருட்டி மிளகு பொழுதில் கொடுத்தால் சூலைகள் குன்மங்கள் தீரும்.

கஸ்தூரிக் குளிகை.

அரிதாரம்	பலம்	க
தாருசு	,,	௧

இவ்விரண்டும் பாகலிலைச்சாற்றால் மூன்றுநாள் அரைத்து உளுந்தளவு மாத்திரைசெய்து நிழலில் உலர்த்திக்கொண்டு இஞ்சிரசத்தில் ஒருமாத்திரை யிழைத்துக்கொடுக்க சீதசுரம் தீரும் காலை ஒருவேளை உபயோகிக்கவும்.

சீதசுரக்குளிகை,

வெள்ளைபாஷாணம்	பலம்	க
ஜாதிலிங்கம்	,,	உ

பசும் மோரைத் தெளியவைத்து அதில் கீழ்க்கண்ட வண்டல் பலம்-௧, எடுத்து அந்தமருந்தில்போட்டு ஒருநாள் முழுதும் அரைத்து பச்சைப்பயறளவு மாத்திரைசெய்து நிழலிலுலர்த்திக்கொண்டு மோரில் ஒருமாத்திரை யிழைத்துக் கொடுக்கவும், குளிர்சுரம் சொஸ்தமாகும்.

வாலசஞ்சீவி,

காவிதிப்பிலிவெண்காரம் கல்மெக்காசெனைமூவைந்து
மேவும்ஜாதிலிங்கமது விசுக்காசெடையத்தாகும்
துவுகிம்பழத்தின்சாற்றில் ஏகமாயரைத்துஒருஜாமம்
காவியக்கயற்கண்ணுவே கடலைபோலுருண்டைசெய்யே.

இதுவுமது.

சுக்குநீர்தன்னிற்கொள்ள சுகமுடன்பேதியுந்தீரும்
தக்கசீரகஞ்சீரம்பூக்கனீரிடதாகந்தீரும்
பக்கலின்னிரிற்கொள்ள * பண்டையின்சுரங்கடிதும்
மைக்கண்ணுய்குளிகையின்பேர் வாலசஞ்சீவியாமே.

* பண்டை - பழயசுரம்.

பாலவிரேசனக் குளிகை.

திப்பிலி	களஞ்சி	உ	கடுகுரோகணி	களஞ்சி	உ
மிளகு	,,	உ	தேசாவரம்	,,	உ
சுக்கு	,,	உ	வாய்விளங்கம்	,,	உ

இவையாவும் பிடித்து வஸ்திரகாயஞ்செய்து கல்வத்திலிட்டு சுத்திசெய்தவாளம், களஞ்சி (௧உ) சேர மருந்துடன்போட்டு எலுமிச்சம்பழச்சார்விட்டு இரண்டுஜாமம் அரைத்து குன்றிமணிப்பிரமாணம் உருட்டி நிழலில் உலர்த்திவைத்துக்கொள்ளவும், பிள்ளைகளுக்கு நிலாவிரை பொழுதிலைவது சுக்குப்பொழுதிலாவது (க) அல்லது (உ) மாத்திரை இழைத்துக் கொடுக்கவும், நன்றாய் விரேசனமாகும், மாந்தம், வாய்வு, சுரம் இவைதீரும்.

சர்வயாந்தக்குளிகை.

வாளம்	விராகிடை	அ
சுக்கு	,,	எ
மிளகு	,,	ங
கெந்தி	,,	உ
வெண்காரம்	,,	உ
ரசம்	,,	உ
கடுகுரோகணி	,,	உ

இவைகளை யிலைக்கள்ளிச் சார்விட்டு அரைத்து மிளகளவு மாத்திரைசெய்து நிழலில்உலர்த்திவைத்துக் கொள்ளவும் சுக்கு பொழுத்திலிட காக்தீரும், வாழைப்பழத்தில் கொடுக்கபேதியாகும். கொச்சி ஆடாதொடை துளசி இதுகள் பிட்டிட்டு சார்பிழிந்து அந்தசாற்றில் (க) மாத்திரையிழைத்துக்கொடுக்க சகலமாந்தமும் கண்டிக்கும்.

சஞ்சீவிக் குளிகை,

நாபி	களஞ்சி	க	சுக்கு	களஞ்சி	க
கருநாபி	,,	க	தாளிக்காய்	,,	க
தாரம்	,,	க	மிளகு	,,	க
இரசம்	,,	க	திப்பிலி	,,	க
வெண்காரம்	,,	க	வாளம்	,,	ரு

இவைகளை கல்வத்திலிட்டு கையாந்தகரைச்சார்விட்டு ஒரு ஜாமம் அரைத்து நிருத்தவும் இப்படி ஒருநாளைக் கொருஜாமமாக ஏழுநாள் அரைத்து குன்றுமணியளவு மாத்திரைசெய்து நிழலில் உலர்த்திவைத்துக்கொள்ளவும், மாந்தம், மாந்தவலிப்பு குன்மம் இதுகட்கு தொச்சிலிசாற்றிலிடத்தீரும். மூலவாய்வுக்கு ஜாதிக்காய் பொடியில் ஒருமாத்திரைவைத்து முலைப்பால்விட்டு யிழைத்துக்கொடுக்கவும் சூலை, வாய்வு, சர்வாங்கவாதம் இவைகட்கு முருங்கைப்பட்டை சாற்றிலிடவும் பாம்புகடிக்குபழச்சாற்றிலிடவும் தீரும்.

கபாடமாத்திரை,

ஜாதிக்காய், ஜாபத்திரி, சீரகம், அதிவிடயம், லவுங்கம், அபினி, வன்னிகெருப்பம், வெந்தியம், களச்சிவித்து, குரோசாணி ஓமம் வகைக்கு விராகினிடை (வ) கெஞ்சாசாறுவிட்டு அரைத்து வெந்தயப்பிரமாணம மாத்திரைசெய்து நிழலில் உலர்த்திவைத்துக்கொள்ளவும் தயிரிலாவது தேனிலாவது வாழைப்பூசாற்றிலாவது மூன்றுநாள் யிருவேளையும் கொடுக்க ரத்தமூலம், கிராணி, ஜெலக்கிராணி, வாய்வுக்கிராணி, சுழிக்கிராணி, கீர்தாரைக்கிராணி, பாண்டுக்கிராணி, அதிசாரக்கிராணி யாவும்தீரும்.

குழந்தைகள்சுரமாத்திரை,

லவுங்கம், சுக்கு, மிளகு, ஓமம், வெண்காரம், லிங்கம், குங்குமப்பூ வகைக்கு விராகனிடை (க) பழச்சாற்றலரைத்து உளுந்தளவுமாத்திரைசெய்து துளசி, நாய்துளசி, முலைப்பால் இதுகளில் கொடுக்கவும், ஜன்னி சுரதோஷம் இவைகள் தீரும் பெரியவர்கள் இரண்டுமாத்திரையை ஒரு வெற்றிலையில்வைத்து மடித்துத்தின்னவும், ஜலுப்பு, சீதளம் தலைபாரம்சுரம் இதுகள் தீரும்.

சிகப்புமாத்திரை,

சுக்கு	அக்கிராகாரம்
திப்பிலி	கோஷ்டம்
மிளகு	வெண்காரம்
லவுங்கம்	லிங்கம்
வால்மிளகு	வகைக்கு விராகனிடை (க)

இவைகளை இஞ்சிச்சார்விட்டு இரண்டு ஜாமம் அரைத்து துவரையளவு மாத்திரைசெய்து நிழலில் உலர்த்திவைத்துக்கொள்ளவும் சகலவியாதிகள் சுரம் யாவற்றிற்கும் கொடுக்கலாம்.

அமுர்த்தசஞ்சீவிக் குளிகை,

கஸ்தூரி	பச்சைகற்பூரம்
குங்குமப்பூ	மிளகு
கோரோஜனம்	சஷ்னராஷ்டம்
செண்பகப்பூ	பளிங்குசாம்பிராணி

இவைகள் சமனிடைகொண்டு கல்வத்திலிட்டு இஞ்சிச்சாற்றில் ஒருஜாமம் முலைப்பாலில் ஒருஜாமம் அரைத்து பயறுபோல் உருட்டி நிழலில் உலர்த்திவைத்துக்கொள்ளவும் வெற்றிலையில் ஒருமாத்திரைவைத்து மடித்துதின்ன ஜலதோஷம் சுரதோஷம் சன்னியாவும் தீரும்.

லட்சுமிநாராயணக் குளிகை,

கெந்தகம், துருசு, சீனகாரம், அரிதாரம் இவைசமனிடை சேர்த்து சாரணைவேர் சியாழத்தால் (உ)ஜாமம்அரைத்துஅதே சியாழத்தில் தொளாந்திரமாகக்கட்டி ஒருஜாமம்யெரித்துஆறினபிறகுயெடுத்து அரைத்து குன்றியளவு மாத்திரைசெய்து அநுபானமறிந்துகொடுக்க, வாதசுரம், பித்தசுரம், சிலேட்டுமசுரம், விஷசுரம், சன்னிபாதசுரம் சகலமும் அநுகூலமாகும்.

கஸ்தூரிமாத்திரை,

கஸ்தூரி	ஜாபத்திரி
குங்குமப்பூ	தாளிசப்பத்திரி
பச்சைகற்பூரம்	வால்மிளகு
செஞ்சந்தணம்	தக்கோலம்
ஏலம்	கிராம்பு

இவைகளை வகைக்கு விராகனிடை (க) யெடுத்து இடித்து வஸ்திரகாயம்செய்து செவ்விளநீர் விட்டரைத்து பயறுபிரமாணம் மாத்திரைசெய்து நிழலில் உலர்த்திவைத்துக் கொள்ளவும் குழந்தைகள்முதல் உபயோகப்படுத்தலாம்.

குங்குமப்பூகுளிகை,

குங்குமப்பூ	ஓமம்
பச்சைகற்பூரம்	அதிவிடயம்

அக்கிராகாரம்	லவுங்கப்பட்டை
மராட்டிமொக்கு	குராசானிஓமம்
ஏலஅரிசி	கருஞ்சீரகம்

இவைகள் வகைக்கு விராகனிடை (க)யெடுத்து ஆவாரைவேரின்பியாழத்தாலரைத்து பயறளவு குளிகைசெய்து நிழலில் உலர்த்திவைத்துக்கொள்ளவும்.

சகலரோகத்திற்கும்

கோடாசூழிக்குளிகை.

சுக்கு	நாவி
திப்பிலி	நிருவிஷம்
மிளகு	இரசம்
கடுக்காய்தோல்	கெந்தகம்
தானிக்காய்	வெண்காரம்
நெல்லிப்பருப்பு	நேர்வாளம்

நேர்வாளத்தை மாத்திரம் கிரமப்படிசுத்திசெய்து (௬) விராகனிடை எடுத்துக்கொண்டு மற்றபதினொருசரக்கும் வகைக்கு ஒருவிராகனிடையாகயெடுத்து கரசனாங்கண்ணிச்சாற்றால் ஒரு ஜாமம் அரைத்து கலுவத்துடன் அப்படியேவைத்துவிட்டு மறுநாளுதயத்தில் ஷை சாறுவிட்டு ஒருஜாமம் அரைக்கவும்இப்படி நிதம் ஒருஜாமமாக ஏழுநாள் அரைத்தபிறகுகுன்றிப்பிரமாணம் மாத்திரைசெய்துநிழலில்உலர்த்திசீசாவில்வைத்துக்கொள்ளவும்

இதனால் தீரும் வியாதிகள்,

விளக்கெண்ணெயில் ஒருமாத்திரை யிழைத்துக்கொடுக்க பேதியாகும.
மோரில் (க) அல்லது (உ) மாத்திரைகொடுக்கபிரமாணிகள்தீரும்
இஞ்சிசாற்றில்கொடுக்க செரியாகுணம்தீரும்
கரசனாங்கண்ணி சாற்றிலிட குளிர்சுரம்தீரும்
ஷை சாற்றிலிட அல்லது பொழுக்கிலிட உடம்புநோய்தீரும்
கொச்சிச்சாற்றிலிட சுக்கிலபிரமியந்தீரும்
பழச்சாற்றிலிட உடம்புவீக்கந்தீரும்
ஜாதிக்காயில்கொடுக்க பேதிகட்டும்
பிரண்டைசாற்றில்கொடுக்க போகம் அதிகரிக்கும்
ஆனைவணங்கி சாற்றிலிட உடம்பு யெரிப்புதீரும்

கோரைக்கிழங்குசாற்றில்க-மண்டலமிடநாள்பட்டபிராணிதீரும்
பாக்கில்கொடுக்க கெர்ப்பமுண்டாகும்
முருங்கப்பட்டைசாற்றிலிட வயற்றுசூலைதீரும்
தயிரில்கொடுக்க அஜீரணம்தீரும்
ஊமத்தைசாற்றிலிட ஜன்னிபாதம்தீரும்
வெள்ளாட்டுபாலிலிட செயரோகந்தீரும்
நெல்லிக்காய்சாற்றிலிட உடம்புஎரிவுதீரும்
வெல்லத்திலிட மலக்கட்டுதீரும்
அன்னக்காடியிலிட பத்தந்தீரும்
பொன்னாங்கண்ணிசாற்றிலிட பிள்ளையுண்டாகும்
புளிப்புமாதளம்பழச்சாற்றிலிட பசியுண்டாகும்
கழுநீரிலிட சகலஉஷ்ணமும்தீரும்
கோமூத்திரத்திலிட பித்தம் உடம்புதிமிரும் தீரும்
முள்ளங்கிசாற்றிலிட மூலந்தீரும்
இலவம்பட்டைசாற்றிலிட விக்கல்தீரும்
வெள்ளிலைசாற்றிலிட கண்படலம்தீரும்
சிறுநீரிலிட ஐந்துவகைகுன்மம்தீரும்
ஜாதிக்காயிலிட மூலக்கிறாணிதீரும்
மிளகு பசும்நெய்யிலரைத்து அதிலிட பாம்புவிடம்தீரும்
வசம்பில்கொடுக்க வாய்வுதீரும்
சுக்கில்கொடுக்க இரைப்புகம்புதீரும்
சீரகப்பொடியும் சக்கரையும் கலந்து அதில்கொடுக்க
சகல சுரமும் உஷ்ணமுமதீரும் குளிர்ச்சிதரும்
அலரியிலையில் நசியமிடவெறிதீரும்
காடியிலிழைத்துப்பூச சந்துவாதம்தீரும்
செண்பகமொக்கில் அரைத்துப்பூச வாதம்தீரும்
பழச்சாற்றிலிட பாம்புவிஷம்தீரும்

இந்த குளிகையை தினம் மூன்று உருண்டையாக இடைவிடாமல் மூன்றுவருஷகாலம் தின்றுவந்தால் தேகம் வச்சிரகாயமாகுமென்று இந்தமுறை தந்தவர் சொல்லுகிறார் அன்றியும் வயித்தியர்களையாகும் பக்குவத்தினால் எல்லாவியாதிகட்கும் இந்த ஒருவித மருந்தையே உபயோகிக்கலாமென்றும் தெரிவிக்குறார்.

பூரமாத்திரை.

இரசகற்பூரம்	விராகனிடை -	௰	மிளகு	விராகனிடை -	௨
வெண்காரம்	,,	௨௰	திப்பிலி	,,	௨
பச்சைகற்பூரம்	,,	௧	கருஞ்சீரகம்	,,	௧
வாய்விளங்கம்	,,	௨	மோடி	,,	௨
லவுங்கம்	,,	௧	ஏலரிசி	,,	௧
சுக்கு	,,	௨	வாளம்	,,	௯

இவைகளில் சூரணிப்பதை சூரணித்துக்கொண்டு யாவும் கல்வத்திலிட்டு சுக்கு கியாழத்தால் ஒருஜாமம் அரைத்துகுன்றி யளவுமாத்திரைசெய்து நிழலில் உலர்த்திவைத்துக் கொள்ளவும் அந்திசந்தி இருவேளையும் பத்துநாளுணணவும்இச்சாபத்தியம்.

மதுரமாத்திரை,

அதிமதுரம் — மாதளம்பூ
ஜாதிக்காய் — சீரகம்
அதிவிடையம் — அக்கிராகாரம்

இவைகளை சமனிடைகொண்டு பொன்வருப்பாய் வறுத்து யிடித்து சூரணித்து புளியாவாரைச் சாற்றாலாட்டி மிளகளவு குளிகைசெய்து நிழலில் உலர்ததிவைத்துக்கொண்டு தேனில் சக்கரையில் (௧) மாத்திரைகொடுக்கவும் வெப்புக்கழிச்சல்தீரும் இச்சாபத்தியம்.

சுரயேலாதிக்குளிகை,

ஏலம் — சீரகம்
கோஷ்டம் — கருஞ்சீரகம்
திப்பிலி — அக்கிராகாரம்
மாசிக்காய் — பேய்ப்புடல்
மாஞ்சில் — கோரோசனை

இவைகள் வகைக்கு விராகனிடை(௨௰)யாக வாங்கி பொன் வருப்பாய்வருத்து யிடித்துச் சூரணித்து முலைப்பால்விட்டு இரண்டுஜாமம் அரைத்து கடலைப்பிரமாணம மாத்திரைசெய்து வைத்துக்கொண்டு முலைப்பாலில் தாய்யிழைத்துக் கொடுக்க கணக்காச்சல் உட்சுரம் இவைதீரும் இச்சாபத்தியம்.

மாத்திரைவகைபரணி

முற்றுப்பெற்றது.

—✧—

தேவிசகாயம்.

116

ஸ்ரீ குருவரு

எண்ணெய்வகைபரணி.

சர்வரோகத்திற்கும்

பொருபெண்ணெய்

ஜாதிக்காய் — சிற்கரத்தை
ஜாபத்திரி — கடுக்காய்
ஏலம் — தானிக்காய்
கோஷ்டம் — மாசிக்காய்
அதிவிடையம் — சீரகம்
குங்குமப்பூ — வால்மிளகு
அதிமதுரம் — குராசானிஓமம்
சித்திரமூலம் — சதகுப்பி
சுக்கு — வசம்பு
செவியம் — ஓமம்
பேராத்தை

கடைசியில் கூறிய ஓமம் (௫) விராகனிடை வசம்பு (௯)விராகனிடையெடுத்துக்கொண்டு மற்ற சரக்குகள்யாவும் வகைக்கு இரண்டு விராகனிடையாக யெடுத்து உலர்த்தியிடித்துவஸ்திரகாயம் செய்துவைத்துக்கொண்டுவசம்பைசுட்டு சாம்பலாக்கிசேர்க்கவும்

காயத்தன்டு — தபசுமுருங்கை
பழம்பாசியிலை — காவற்கொழுந்து
நுணாயிலை — கொட்டைக்கரந்தை
புங்கன்யிலை — சிறுபுள்ளடி
சங்கன்யிலை — துளசி
கழற்சியிலை — தும்பை
குதிரைவாலி — பொடுதலை
கண்டங்கத்திரி — வேளை
செருப்படை — வரட்பூலா

கோழியாவாரை　　வெள்ளருகு

ஆடாதோடை　　பருத்தி

இவைகளின் சாறு வகைக்கு அரிக்கால்படியாக வெடுத்து விளக்கெண்ணைபடி (உ) இவையாவும் ஒன்றாய் கலந்து முலைப் பால் ஆழாக்குவிட்டு திருநீற்றுப்பச்சிலைவேரும் கருவேப்பிலை யிர்க்கு வகைக்கு ஒவ்வொருபிடியெடுத்து ஒன்றிரண்டாய் நருக் கிக்கூடப்போட்டு முன்செய்து வைத்திருக்கும் சூரணத்தையும் கொட்டி நன்றாய் கரைத்து ஒருநாள் சூரியபுடம்வைத்து பின்பு அடுப்பேற்றி மெழுகுபதமாய்காச்சி வடித்துக்கொண்டு காலையி ல் உச்சிக்கரண்டிவீதம் கொடுக்கவும் கணம் மாந்தம் சொரிசிர ங்கு புண்கள் வாய்வுகள் நீர்மேகம் பிரமேகம் யாவுந்தீரும் குழ ந்தைகள்முதல் பெரியவர்களுக்கும் ஆகும் வியாதியின்இடமும் தேகதிடமும் அரிந்து இச்சாபத்தியம் அல்லதுகடும்பத்தியமும் வைக்கலாம்.

கதிர்யெண்ணெய்.

சிறுபுள்ளடியிலைச்சாறு　　பொடுதலைச்சாறு

கெச்சக்காய்கொழுந்துச்சாறு　　புங்கம்வேர்பட்டைப்பால்

அவுரியிலைச்சாறு.　　கோரோசனம்

கோரோசனம் (க) விராகனிடை புங்கம்பால் காலணாயிடை மற்றசாறுகள் வகைக்கு பலம் அறை விளக்கெண்ணை கால்படி யில் யாவும்விட்டு ஒருநாள் சூரியபுடம்வைத்து மருநாள் அடுப் பேற்றி மெழுகுபதமாய் காச்சிவடித்து குழந்தைகளுக்கு துட் டிடைகொடுக்கவும் தாய்பத்தியமிருக்கவேண்டும் மாந்தம்வாய்வு வய்ருப்பிஷம் இவைதீரும் இச்சாபத்தியம்.

ஷை சூரியபுடயெண்ணெய்.

சிறுபுள்ளடியிலை　　அவுரியிலை

கழற்கொழுந்து　　பொடுதலையிலை

இன்னான்கும் வகைக்கு ஒருபிடியெடுத்து பஞ்சுபோல்நசு க்கி ஆழாக்கு நல்லெண்ணையில்போட்டு (ரு) நாள் சூரியபுடம்

வைத்து உள்ளுக்குங்கொடுத்து மேலுக்கும்பூசலாம், கணமாந் தம்தீரும். இச்சாபத்தியம்.

மண்டைக்குடைச்சலுக்குயெண்ணெய்,

மணித்தக்காளி　　கீழாநெல்லி

பொன்னாங்கண்ணி　　வில்வயிலை

கரிசலாங்கண்ணி　　தேள்கொடுக்கிலை

இவைகள் யாவும் சமபாகமாய் கொண்டுவந்து யிடித்துசா றுபிழிந்து அந்தசாற்றுக்கு சமவிடை நல்லெண்ணை கூடவிட்டு ஒருநாள் சூரியபுடம்வைத்து மருநாள் அடுப்பேற்றி கடுகுபதமா ய்காச்சிவடித்து (ரு)நாளைக்கொருமுறை ஸ்தானம்செய்யவேண் டியது தலைமுழுகியவுடன் கடுக்கா மிளகுநீர் அரையாழாக்கு கு டிக்கவேண்டியது பிசுகுபோஜனம் செய்யவும் மாமிசம் மச்சம் இவையாகாது பகலில்நித்திரைசெய்யவேண்டியது (ரு-ரு) முழு க்கில் மண்டைக்குடைச்சல்தீரும்.

கெணத்தெண்ணை,

லவுங்கம்　　லவுங்கப்பத்திரி

வெந்தயம்　　கோஷ்டம்

கடுக்காய்ப்பூ　　சோம்பு

சீரகம்　　பூண்டு

ஜாதிபத்திரி　　ஜாதிக்காய்

இவைகள் வகைக்கு (கல) விராக னிடையாக உலர்த்தியிடி த்து வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொண்டு,

கற்றாழை　　பொற்றலைக்கையான்

கோவை　　பொன்னாங்கண்ணி

புளியாரை　　ஈருள்ளி

கற்பூரவள்ளி　　ஓமவள்ளி

இவைகளின்சாறு வகைக்குக் கால்படியாகவெடுத்துசித்தா மணக்கெண்ணை ஒருபடி பசும்பால் அரைப்படி இவைகள்யாவும் ஒன்றாய்கலந்து மேற்படி சூரணமும்போட்டு நன்றாய் கலந்து அடுப்பேத்தி மெழுகுபதமாய்காச்சி வடித்துக்கொண்டு ஆரிய

பிசகு குங்குமப்பூ கோரோசனம் வகைக்கு விராகனிடை (உ,) யெடுத்து ஷை யெண்ணெயிற் கலந்துக்கொண்டு காலையில் அரைபலம் அல்லது கால்பலம் வீதமாய் (ம) நாள்கொடுக்கவும்என்ணை கொடுக்கும்போது என்ணெய்க்குசமனிடை முலைப்பால்கலந்து அனலில் காட்டிக்கொடுக்கவும்

பாலசஞ்சீவி யெண்ணெய்,

பொன்னாங்கண்ணி	குப்பைமேனி
எலிக்காதிலை	அவுரி
குரும்பை	பொடுதலை
முசுமுசுக்கை	ஆடாதோடை
கோவை	வல்லாரை
இம்பூரல்	துளசி
சிறுகீரை	குதிரைவாலி
கோழியாவாரை	தூதுவேளை
கொன்றை	தகரையிலை
விஷ்ணுகாந்தி	கரசனாங்கண்ணி
ஓரிதழ்தாமரை	முருங்கயிலை
கருவிலியிலை	முருங்கப்பட்டை
இண்டு	சுருள்ளி

இவைகளை வகைக்கு வொவ்வொரு கொத்துயெடுத்து கல்லுரலில்போட்டு நன்றாய் பஞ்சுபோல்யிடித்து எட்டுபடிஜெலம் வார்த்து அடுப்பிலேற்றி ஒருபடி கியாழமாகக்காச்சி யிறக்கிவடித்துக்கொண்டு முத்தெண்ணை ஒருபடி அத்துடன்விட்டுகலந்துவைத்துக்கொண்டு,

பற்பாடகம்	சித்திரமூலம்
நிம்பப்பட்டை	கண்டுபரங்கி
சுக்கு	ஏலம்
செவியம்	சண்பகப்பூ
பேரரத்தை	சீரகம்
கோஷ்டம்	கிராம்பு

இவைகள் வகைக்கு உ-விராகனிடையெடுத்து யிடித்து வஸ்திரகாயஞ்செய்து எண்ணெயிற்கலந்து கம்பிப்பின் ஒரு களஞ்சிகொண்டுவந்து எண்ணெய்விட்டரைத்து அத்துடனகலந்து

க்கொண்டு அடுப்பேற்றி மெழுகுபதமாய் காச்சிவடித்துக் கொண்டு வேளைக்குதுட்டிடை அல்லது காலணாயிடையாக அந்திசந்திகொடுத்துவந்தால் அட்சரங்கள் காச்சல் பதினெட்டுகணங்கள் யாவும் தீரும்,

இரத்தகணத்திற் கெண்ணெய்

விருத்தம்.

எண்ணெய்படி கால்குமரிச் சோறுதானும்
யெழில்விளாங் காயளவு கழுவிக்கொண்டு
அண் இண்டு தும்மட்டிக்காய் சோறுகூட்டி
அதில்சுர காயம்பத் தரித்துபோட்டு
கண்ணெனவே மெழுகுபத மெரிந்துவாங்கி
கனமான துட்டிடையா மெண்ணெய்தானும்
நண்ணெனவே நாலுநாட் கொருபோதீய
நாடாது ரத்தகணந் தீருந்தானே,

விபரம்.

எண்ணெ ஒ-படி, விளாங்காயளவு, கத்தாழைமடல் சாதம், தும்மட்டிக்காய்சோறுஎலுமிச்சங்காயளவு யீரவெங்காயம்பத்து.

சம்பீரத்தெண்ணெ,

பசும்பால்	படி - க	வெந்தயம்	பலம்-க
சித்தாமணக்கெண்ணெ	,, க	கோஷ்டம்	விராகனிடை-உ
பழச்சார்	,, க	சீரகம்	பலம்-க
சுருள்ளிச்சார்	,, ௨	கிராம்பு	,, க
கடுக்காய்தோல்	சய	சம்பங்கிமொக்கு	,, க
சன்னலவுங்கப்பட்டை	பலம்-க	ஜாதிக்காய்	,, க
அதிமதுரம்	,, க	ஏலம்	,, க

சரக்குவகைகள் யாவும்யிடித்து சூரணித்துபழச்சாற்றுலரைத்து எண்ணெயிற் கலந்து மற்றயாவும் ஒன்றுபடுத்தி பதமாய் காச்சிவடித்து தேகத்திற்கு தக்கபடி (௩-ரு-எ) நாள்வீதம் கொடுக்கவும் மூலச்சூடு, கணச்சூடு, காந்தல், சொறி, சிரங்கு, மேகச்சூடுகளும்தீரும், இச்சாபத்தியம்.

மேகருட்டுக்கு யெண்ணை,

சித்தாமணக்கெண்ணெய்	படி	க
எலுமிச்சம்பழச்சாறு	,,	வ
இலந்தயிலைச்சாறு	,,	வ
வெங்காயச்சாறு	,,	வ
கருஞ்சீரகம்	பலம்	வ
கத்தாழைச்சோறு	,,	ரூ
வெந்தயம்	,,	க

கத்தாழை சாதத்தை ஏழுதிரம் நல்லஜெலத்தில் போட்டு கழுவிப் பிசைந்தெடுத்துசுத்தியான்து பலம்(ரூ) கருஞ்சீரகத்தை பொடித்து வஸ்திரகாயம்செய்தது பலம்(வ) வெந்தியத்தைபசும் பால்விட் டரைத்துக்கொண்டு யாவும் ஒன்றாய் கலந்து அடுப்பி லேற்றி கற்றாழைச்சாகம் நன்றாய் சிவக்குமளவும் காச்சி யிரக்கி வைத்துக்கொண்டு உச்சிக்கரண்டி விதம் அந்திசந்தி இருவேளை யும் கொடுக்க சொதிப்புகணம் (யஅ) கணச்சூடு, அஸ்திசுரம், அஸ்திவெட்டை, மேகச்சூடு, பித்தவெட்டைமுதலியயாவும் தீரு ம் குழந்தைகள்முதல் பெரியவர்களுக்கும் ஆகும் இச்சாபத்தியம்

காதுநோய்களுக்கு எண்ணெய்.

கோழியாவாரைவேர்	விராகனிடை	க
குத்துப்பாலைவேர்	,,	க
ஆடுதின்னாப்பாலைவேர்	,,	க
கற்பூரம்	,,	க
பூண்டு	,,	க

இவைகளை நல்லெண்ணைவிட் டரைத்து (கஉ) பலம் நல் லெண்ணையில் கலந்து அடுப்பேற்றிக் காச்சியிரக்கி பஞ்சியில் தொட்டு வேளைக்கு(ரூ) துளியாக (சா-ரு) வேளை காதில்விட்டால் காதுநோய் தீரும் மழையில் நனையக்கூடாது சீதளபண்டம் ஆகாது.

இதுவுமது

காதுநோய்க்கு எண்ணெய்,

முசுருமுட்டை	விராகனிடை	கஉ
சூதகம்	,,	கஉ

159

நண்டுரைச்சி	விராகனிடை	கஉ
பூண்டு	,,	கஉ

பூண்டைமாத்திரம் நசுக்கி (கஅ) பலம் நல்லெண்ணையில் போட்டு காச்சியிரக்கி பஞ்சியில் தொட்டு (சா-ரு) வேளை காதில் விடவும் சவுக்கியமாகும்.

நெற்புருட்டுக்கும் மேககாரகத்திற்கும்

குளுமையெண்ணை

சித்தாமணக்கெண்ணை	பலம்	ய
கற்கண்டு	,,	க
வெந்தியம்	,,	க
ஏலம்	,,	க
வெள்ளைவெங்காயம்	,,	ரூ

வெங்காயத்தை சிறுக அரிந்துக் கொண்டு மற்றசரக்கை அரைத்துக்கொண்டு யாவும் எண்ணையில் கலந்து சூரியபுடம் (ய) நாள்வைத்து வேளைக்கு அரிக்கால் பலம் சாப்பிடவும்,

---

சிரங்குக்கும் மேகருட்டுக்கும் எண்ணை.

சித்தாமணக்கெண்ணை	பலம்	ரு
மிளகு	,,	க
பூரம்	விராகனிடை	உ
முலைப்பால்		ஆழாக்கு

பூரமும் மிளகும் முலைப்பால் விட்டரைத்து யாவும் ஒன் றாய்கலந்து (10) நாள் சூரியபுடம்வைத்து வேளைக்குக் கரண்டி விதம் சாப்பிடவும், இச்சாபத்தியம்.

ரணங்களுக்கு தேங்காயெண்ணெய்.

சுத்திசெய்தகெந்தி	பலம்	வ
சுத்திசெய்ததாளகம்	,,	வ
குளகநீறு	,,	வ
காட்டுசீரகம்	,,	வ
தொடிக்கள்ளிப்பால்	,,	வ

இரண்டு தேங்காய்களை திருகிபால்பிழிந்துக்கொண்டு கேடி ஜினுசுகளை வஸ்திரகாயம் செய்து பாலில்கலந்துக்கொண்டு பதமாய்காச்சி யிரக்கிபிரதிதினம் காலையில் காலரூபாயிடைசாப்பிட்டு வரவும் (௰) நாள் சாப்பிடலாம் இச்சாபத்தியம்,

லிங்கயெண்ணெய்

லிங்கம்	பலம்	௨
விளக்கெண்ணெய்	சேர்	௧௰

லிங்கத்தை முலைப்பாலில் மூன்றுநாள் ஊரவைத்து யெடுத்துக்கொண்டு கல்வத்திலிட்டு கொஞ்சம் எண்ணெவிட்டு ஒன்றரைஜாமம் அரைத்து கேடி யெண்ணெயில் கலந்து (௩)நாள்சூரியபுடம் வைத்தெடுத்து காலையில் அரைபலம் வீதமாய் (௭) நாள் அல்லது (௰)நாள் சாப்பிடவும் மேகப்படை கரிமேகம் வெள்ளை சுருக்குதீரும் கடும்பத்தியம்,

கடுகெண்ணெய்

பெருங்காயம்	விராகனிடை	௩	வெள்ளுள்ளி	விராகனிடை	௩
வசம்பு	,,	௩	ஓமம்	,,	௩
சுக்கு	,,	௩	சதகுப்பை	,,	௩
கார்த்திகைக்கிழங்கு	,,	௩	மாவிலிங்கம்பட்டை	,,	௩
சாம்பிராணி	,,	௩			

மேற்படி சரக்குகளை குப்பமேனி சார்விட்டரைத்து எண்ணெயில் கலக்கி அடுப்பேற்றி கடுகுபதம் வரும்போது இரக்கி வைத்துக்கொள்ளவும்,

மேற்படி யெண்ணெயை சிருகயெடுத்து மேலேதடவினால், ஜன்னிபோகும், சயித்தியம்தீரும், கைகால்குடைச்சல், மேல்வலி, காதிரைச்சல், மண்டைகுத்து,வலிப்புகள்தீரும், இச்சாபத்தியம்.

யெண்ணெவகை பாணி

முற்றிற்று.

உ

தேவிசகாயம்.

ஏழாவது

தயிலவகைபாணி.

சங்கம்வேர் தயிலம்,

நல்லெண்ணெய்	படி	௨
மிளகு	பலம்	௧
சங்கம்வேர்	தொலாம்	௰

சங்கம்வேரை ஒருதூணி ஆற்றுஜெலத்தில் போட்டு எட்டுக்கொருபங்காய் கியாழம்வைத்து யிரக்கி மிளகை கல்வத்திலிட்டு கேடி கியாழம் விட்டரைத்து எண்ணெய் கியாழம் யாவும் ஒன்றாய்க்கலந்து மெழுகுபதமாய்காச்சி (௪)நாளைக்கொருமுறை முழுகிவர குட்டம் சொறி சிரங்கு கிரந்தி சூலைரோகம் செங்கரப்பான் வண்டுகடி சிலவிஷங்கள் க்ஷயம் குத்திருமல் வாதக்ஷயம்போகும்,

இருவேலித்தயிலம்.

வெட்டிவேர் பலம் (௱) கொண்டுவந்து ஒன்றிரண்டா யிடித்து தூணிநீரில்போட்டு எட்டொன்றாய் கியாழம்வடித்து எண்ணெயில்கலந்து மெழுகுபதமாய்காச்சி முழுகிவர தோராதசெடலம் தேரிப்போகும் இருகிருப்பு பித்தமயக்கம் வாய்நீரூரல் தீரும்.

அருகன்வேர் தயிலம்.

கணுவுகள் நீக்கிய அருகன்வேர் பலம் நூறு யெடுத்து யிடித்து, ஒருபடி ஜெலத்தில் போட்டு எட்டொன்றாய் காச்சி முழுகிவர மூலச்சூடு கபாலச்சூடு சகலபித்தம் எட்டுவகை குன்மம் அழுகிரந்தி சூலைவாய்வு வயற்றுவலி நெஞ்சில்நோய் நீக்கிப்பு மேல்வரட்சி இவைதீரும்.

கொட்டைப்பழத்தயிலம்,

அவ்விரிபழம் நாறு பலம் கொண்டுவந்து யிடித்து தூணி நீரில்போட்டு எட்டொன்ருய் கியாழம்வைத்துயிருத்து நாழிநல் லெண்ணெயில் கலந்து ஒருபலம் கருஞ்சீரகத்தையும் யிடித்து க்ஷெடி கியாழம் விட்டரைத்து அத்துடன்கலந்து மெழுகுபதமாய் காச்சியிரக்கி முழிகிவர வாதம் குட்டம் வாதகரப்பான் கண்ட வீக்கம் இவைகள்தீரும்,

---

கரிசாலைத்தயிலம்,

கரிச்சாலைச்சாறு	படி	க
கற்ருழைச்சோற்றின்சாறு	,,	க
நெல்லிக்காய்சாறு	,,	க
நல்லெண்ணெ	,,	க

இவையாவும் ஒன்ருய்க் கலந்து ஒருபலம் ஜாதிக் காயை க்ஷெடி சாற்ருலரைத்துப்போட்டு மெழுகுபதமாய் காச்சிவடித்து முழுகிவர தலைநோய், செவிநோய், பித்தம், பீனிசங்கள், உஷ் ணங்கள்யாவும் தீரும்,

---

இலுப்பைப்பட்டை தயிலம்.

இலுப்பைப்பட்டை	பலம்	௱
நல்லெண்ணெ	படி	௰
வேப்பெண்ணெ	,,	௫
கம்மாருவெற்றிலைசாறு	,,	க

இவையாவும் ஒன்ருய்க்கலந்து அடுப்பேற்றி மெழுகுபத மாய்க்காய்ச்சி முழுகிவர கபாலச்சூடு பாந்துபோகும் எண்ணெ கணக்கின்பேரில் பட்டைமுதலியதை கணக்கிட்டு பிரித்துக்கொ ண்டு வேண்டியவரையில் செய்துக்கொள்ளலாம்.

கெற்பத்தயிலம்.

கொம்மட்டிப்பழவித்து அத்தயிடைக்கு வாளப்பருப்பும் கலந்து குழித்தயிலம் யிரக்கி புட்டியில் வைத்துக்கொண்டு தீட் டுவந்த (௩)நாள் தொடங்கி மஞ்சள்தூளில் களஞ்சித் தயிலம் வி ட்டு, (௩)நாள் காலையில்கொடுத்து வெந்நீர்கொடுக்கவும் பேதி யாகும், மருந்து ஒரேவேளைதான்.

மேகத்தயிலம்.

சந்தனம்	பலம்	௰
விலாமிச்சம்வேர்	,,	௰
ஆவாரம்பட்டை	,,	௰

இந்தமூன்று வகையும் யிடித்து பானையில் போட்டு தூணி நீர்விட்டு யெட்டொன்ருய்காச்சி முழிகிவர மேகம்தீரும் தேகம் யிருகும் நமை, சொரி, திமிர் இவைதீரும்,

---

வில்வாதித்தயிலம்.

வில்வவேர் பத்துபலம் யெடுத்து யிடித்து பதக்குநீரில் போட்டு எட்டொன்ருய் காச்சியிரக்கி அத்துடன் நாழிநல்லெ ண்ணெவிட்டு மெழுகுபதமாய் காச்சிவடித்து முழுகிவர பித்தம், கபாலவெட்டை, மேகம், இருமல், தழுதணை, செங்கரப்பான், புண்புரை இவைதீரும்.

வெட்டிவேர்தயிலம்,

வெட்டிவேர்	பலம்	௰
அதிமதுரம்	,,	க
நல்லெண்ணெ	,,	௰௨

வெட்டிவேரை யிடித்து பதக்குநீரில்போட்டு எட்டொன் ருய்கியாழம்வடித்து அதிமதுரத்தை அந்தகியாழத்தாலரைத்து எண்ணெயில்போட்டு கியாழத்தையும் விட்டு மெழுகுபதமாய் காச்சிவடித்து முழிகிவர, பீனிசம், மண்டைகுலை, குட்டம், புரநீர்க்கோவை, கண்புரைச்சல், காதுமந்தம், இளைப்பு,கைகால் ஓச்சல், காதுநஷ்டம், இருமல், தேககாந்தல் யிவைதீரும் நாள் விட்டு நாள் ஒருமண்டலம் முழிகிவரவேண்டியது.

கொடிவேலித்தயிலம்,

கொடிவேலி	பலம்	௰
நல்லெண்ணெ	நாழி	க
சீரகம்	பலம்	க

கொடிவேலியை யிடித்து பதக்குநீரில்போட்டு எட்டொன்ருய்கியாழம் வைத்திறக்கி வடித்து இந்தகியாழத்தால் சீரகத்தை அரைத்துயாவும் எண்ணெயில் கலந்து மெழுகுபதமாய் காச்சி வடித்து முழிகிவர ஆநந்தவாய்வு, மற்றபலவிதவாய்வு, சொரிசிரங்கு, தினவு, கிரந்திவீக்கம் யாவும்தீரும்.

சீரகத்தயிலம்,

சீரகம்	பலம்	ரு
கார்போகியரிசி	,,	க
நல்லெண்ணெ	படி	க

சீரகத்தை பதக்குநீரில் போட்டு எட்டொன்ருய் கியாழம் வடித்து இதேகியாழத்தால்கார்போகியரிசியை அறைத்துயாவும் யெண்ணெயில் கலந்து மெழுகுபதமாய்காச்சி முழிகிவர எண்வகைசுரம், வாய்வு, வாந்தி, பித்தம், கிறுகிறுப்பு, சோகை, பாண்டு உஷ்ணரோகம், கெணம், கபாலச்சூடு, கபநீர்க்கட்டுஇவை தீரும். கண்கள் குளிர்ச்சியுண்டாகும்.

கீழ்க்காய்நெல்லித் தயிலம்,

கீழ்க்காய்நெல்லி அறைதுலாம் எடுத்து நிழலில்உலர்த்தி ஆத்துஜெலம் தூணிகொண்டுவந்து அதிற்போட்டு எட்டொன்ருக கியாழம் காச்சியிரக்கி (உ)படி நல்லெண்ணெயில் விட்டுக்காச்சி ஒருபலம் சக்கரைபோட்டு மெழுகுபதத்தில் முழிகிவர மேகம், உட்டிணம், கைகாலெரிவு, உட்காச்சல், தினவுயாவும் தீரும்.

சவுரித் தயிலம்

சவுரிப்பழம்		ஒன்று
பச்சைகெஞ்சாயிலை		ஒருபிடி
சடாமாஞ்சி	விராகனிடை	உ௦
மிளகு	,,	உ௦
பளிங்குசாம்ராணி	,,	உ௦
கஸ்தூரிமஞ்சள்	,,	உ௦
பச்சிலை	,,	உ௦
கிச்சிலிக்கிழங்கு	,,	உ௦
அமுக்கறுங்கிழங்கு	,,	உ௦
அதிமதுரம்	,,	உ௦

இவையாவும் யிடித்து வஸ்திரகாயம்செய்து ஒருபடி நல்லெண்ணெயில் போட்டுக்கலந்து மெழுகுபதமாய்க் காய்ச்சி (௪) நாளைக்கொருமுறை முழுகிவர புரயிசுவு, ஒற்றைத தலைவலி, விடாததலைபாரம் ஜன்னி இவையாவும் தீரும்.

மேருவின் தயிலம்.

எள்ளெண்ணெ யோர்படியில் தும்பைமல ரோர்பிடி
 எரித்துபத மாய்வடித்து
இன்பமுடன் மூன்றுமுறை முழுகுமதின் விபரமும்
 எடுத்துரைக்கக் கேளுமே
கள்ளமர சிரசுமட் டாகவதை தேய்த்துமே
 காச்சியே சீக்காய்தனை
கருத்துடன் வென்னீரில் பச்சைஜெலமின்றியே
 கணக்குடன் முழ்கியன்று
தல்லிவிரு புளிமோர் குளிர்ந்தஜெல மின்றியே
 ஸ்தானமது கொள்ளவல்லோர்
தள்ளாத சிரசிடிகள் பீனிசமு நேத்திரநோய்
 தான்பயந் தோடுமிதினில்
வள்ளிதெய் வானையா ஞர்கிருபை பெத்தபொதி
 மாயலை யகஸ்த்தியரிதை
வரிசையுடன் மேருவின் தயிலமதை கவிதையாய்
 வகுத்துரைத் தனர்பாருமே.

ஜன்னிக்கு மேற்பூசுந் தயிலம்

வேப்பெண்ணெ	படி	க
கலப்பைக்கிழங்குசாறு	,,	க
கருநாபி	விராகனிடை	க
வசம்பு	,,	ரு
வெள்ளைப்பூண்டு	,,	ரு
காயம்	,,	க
ஓமம்	,,	ரு
சதகுப்பை	,,	ரு
ஜாதிக்காய்	,,	௰

இந்தசரக்குகள் யாவும் ஷை கிழங்குசாற்றுல் மைபோல் அறைத்து எண்ணெயில் கலந்து அடுப்பேற்றி கடுகுபதமாய் காச்சிவடித்து சகலஜன்னிக்கும் மேலுக்குபூசவும் கைகால்குடைச்சல் வாய்வுபிடிப்பு சகலத்திற்கும் பூசி தேய்க்கலாம் உள்ளுக்கு கொடுக்கக்கூடாது மஞ்சள் அறைத்துப்பூசி அதற்குமேல் சாணம்போட்டு தேய்த்து நீர்விட்டு கழுவிப்போடவும்.

தும்பைத்தயிலம்.

நல்லெண்ணெ	பலம்	௧0
தும்பைப்பூ	பிடி	௨
கருஞ்செம்பைப்பூ	,,	௧
கம்மாறுவெற்றிலைக்காம்பு	,,	௨
நஞ்சறுப்பான்பூண்டு	,,	௨
கோழிக்கிழக்கு	விராகநிடை	௧
கஸ்தூரிமஞ்சள்	,,	௧
மிளகு	,,	௧
பூண்டு	,,	௧
வசம்பு	,,	௧
பால்சாம்ராணி	,,	௨
சுக்கு	,,	௧

மேற்கூறிய பூவும் காம்பும் நசுக்கி யெண்ணெயில் போட்டு மற்றசரக்குகள் யாவையும் யிடித்துப் பொடித்து வஸ்திரித்து அத்துடன் போட்டுக்கலந்து அடுப்பேற்றி கடுகுபதமாய் காச்சி வடித்து முழுகிவர சுகஜன்னி, சுரம் வாய்வு முகவாதஜன்னி சுரம், இன்னும் சிலவியாதிகள் தீரும்.

செம்பைத்தயிலம்.

கருஞ்செம்பைச்சாறு	படி	௧0
வெள்ளுள்ளி	,,	௧0
நல்லெண்ணெ	,,	௨
பளிங்குசாம்ராணி	விராகநிடை	௨௨
டிக்காமல்லி	,,	௧௨

சாம்ராணியும் டிக்காமல்லியும் யிடித்துப்பொடித்துயாவும் ஒன்றாய்க்கலந்து அடுப்பேற்றி தயிலபதமாய் காச்சிவடித்து ஜன்னிநோய்கள் வாதநோய்களுக்குப்பூசி நன்றாய்த் தேய்க்கவும்.

அழிஞ்சித்தயிலம்,

167

அழிஞ்சிவிரை	பலம்	௧
புங்கன்விரை	,,	௧
கடுக்காய்விரை	,,	௧
தாணிக்காய்விரை	,,	௧
கார்போகியரிசி	,,	௧
எட்டிவிரை	,,	௧0
நல்லெண்ணெ	,,	௰௨
வேப்பெண்ணெ	,,	௨௨

வித்துகள் யாவையும் யிடித்து பொடித்து வேப்பெண்ணெ விட்டரைத்து நல்லெண்ணெயிற் கலந்து அடுப்பேற்றி கடுகு பதமாய்காச்சி வடித்து தலைவலி, கழுத்துவலி, வாய்வு, வீக்கங்கள் சகலத்திற்கும் தேய்த்துவர நீங்கும்,

---

தீபாக்கினிதயிலம்.

கெந்தி	பலம்	௧0	மனோசிலை	பலம்	௧0
சூதம்	,,	௧0	பொன்னரிதாரம்	,,	௧0

மேற்படி சரக்குகளை காடிவிட்டு அரைத்து சீலையில்தடவி திரிசெய்து வேப்ப யெண்ணெய் விட்டு கொளுத்தி சுடர் தைலம் வாங்கி வைத்துக்கொண்டு ஒருவிராகனிடை வெற்றிலைச்சாற்றில் ஒரு குண்டுமணிபிரமாணம் ஷை தைலத்தை கலந்துகொடுக்க, வாதம் எண்பதும்தீரும், இச்சாபத்தியம்.

தயிலவகைபாணி

முற்றுப்பெற்றது.

ௐ

தேவிசகாயம்.

எட்டாவது

கியாழவகைபாணி

சந்தனக்கியாழம்.

செஞ்சந்தனத்தூள்	பலம்	உ
விலாமிச்சம்வேர்	விராகனிடை	உ
வெட்பாலரிசி	,,	உ
கோரைக்கிழங்கு	,,	உ
சுக்கு	,,	உ

ஆத்து ஜெலம் இரண்டுபடிகொண்டுவந்து அதில்மேற்படி சரக்குகள் யாவும் யிடித்துப்போட்டு அடுப்பேற்றி கால்படிகியாழமாகயிரக்கிவடித்துக்கொண்டு ஆறுவேளையாக பாகித்துக்கொடுக்கவும், கொடுக்கும்போது கொஞ்சம் சக்கரைபோட்டு கொடுக்கவும், சிரதோஷம், சிரவாய்வு, தலையிலுள்ளபித்தம் சேத்துமவாதம், வாதசுரம், நீர்கடுப்பு, மஞ்சளுநும் பித்தம், இவை தீரும். இருமுறைகாச்சி (ிஉ)நாள் இருவேளையும் கொடுக்கவும்.

சிறுகாஞ்சொரிக்கியாழம்.

சிறுகாஞ்சொரிவேர்	பலம்	உ
ஏலக்காய்	,,	வ
சீரகம்	,,	வ

இவைகளை யிடித்து இருநாழி நீர்விட்டு எட்டொன்றாய் காச்சி வடித்து இருவேளையுமாக எட்டுநாள் குடிக்க உட்சுரம் சூலைவாய்வு, பித்தம், வாந்தி இவைதீரும்.

வெட்பாலைக்கியாழம்,

வெட்பாலையரிசி	பலம்	க
சீரகம்	,,	வ
கொடிவேலிவேர்	விராகனிடை	கஉ

இவைகளை யிடித்து இருநாழி நீர்விட்டு எட்டொன்றாய்க் காச்சிவடித்து (கூ) நாள் இருபோதும்குடிக்க வாய்வு, பித்தசுரம் தீரும், கொடுக்கும்போது கொஞ்சம் தேன்விட்டுக்கொடுக்கவும்.

வில்வக்கியாழம்,

வில்வவேர்	பலம்	க
வில்வப்பழம்	,,	க
நெற்பொரி	,,	வ
சுக்கு	,,	வ
மிளகு	,,	வ
கொடிவேலிவேர்	,,	வ

இவைகளையிடித்து இருநாழி நீர்விட்டு எட்டொன்றாய் வடித்து இருவேளையும் மூன்றுநாள் கொடுக்க வாய்வு, மேகவாய்வு பித்தவாய்வு யாவும்தீரும்.

இதுவுமது.

வில்வவேர்	பலம்	வ
அமுக்கனங்கிழங்குவேர்	,,	வ
சுக்கு	,,	வ

இவைகளை யிடித்து இருநாழி நீர்விட்டு எட்டொன்றாய் கியாழம் வடித்து மூன்றுநாள் இருவேளையும் கொடுக்க விக்கல் வாந்தி இவையாவும் தீரும். பித்தசாந்தியாம்.

கோரைக்கிழங்குகியாழம்

கோரைக்கிழங்கு	பலம்	க
விஷ்ணுகிராந்தி	,,	ஹ
பற்படாகம்	,,	ஹ
மிளகு	,,	வ
மதுரம்	,,	வ

இவைகளை யிடித்து இருநாழி நீர்விட்டு எட்டொன்றாய் வடித்து (கூ)நாள் இருவேளையும் கொடுக்கவும் க்ஷயம், யிளை, யிளைப்பு, அதிகசுவாசம் இவைதீரும், கியாழம் கொடுக்கும் போது கொஞ்சம் தேன்கூட்டவும்.

நெல்லிக்காய்கியாழம்,

நெல்லிக்காய்	பலம்	வ
தாணிக்காய்	,,	வ
கடுக்காய்	,,	வ
மிளகு	விராகனிடை	கவ

இவைகளை இருநாழி நீர்விட்டு எட்டொன்றாய் கியாழம் வடித்து மூன்றுநாள் குடிக்கும்போது, சுக்கு, திப்பிலி, மிளகு மூன்றும் சரியிடையாய் பொடித்து ஒரு சிட்டிக்கை போட்டு கொஞ்சம் தேன்விட்டு குடிக்கவும் மினெ, மிசவு, மேகச்சூடு தணியும்,

---

இலவம்பட்டை கியாழம்,

இலவம்பட்டை இரண்டுருந்து பெடுத்து பஞ்சிபோல் நசுக்கி அரிக்கால்படி கஞ்சித்தண்ணியில் போட்டு நல்லதண்ணீர் கால்படி வார்த்து இராத்திரி அடுப்பில்போட்டு வைத்து காலையில் பிழிந்து அசடுகள் போக்கி வடிக்கட்டி கொஞ்சம் சக்கரை கலந்து சாப்பிடவும் இப்படி (ரு-சு)நாள் சாப்பிட மேகவெள்ளை திரும். இச்சாபத்தியம்.

இரத்தபேதிக்கு கியாழம்,

நாகப்பட்டை	பலம்	உ௳
அத்திப்பட்டை	,,	உ௳
மாம்பட்டை		உ௳

இவைகளை பஞ்சுபோல்யிடித்து ஒருபடி தண்ணிவைத்து கால்படி கியாழமாக யிரக்கி இருவேளை சாப்பிடவும் இப்படி (ரு-சு)நாள் சாப்பிட இரத்தபேதி திரும்.

வாதசுரக்கியாழம்

பாவட்டம்வேர்	பலம்	க
சித்தாமுட்டிவேர்	,,	க
ஓமம்	,,	க
உத்தாமணிவேர்	,,	க

இவைகளை பஞ்சுபோல் யிடித்து ஒருபடி ஜெலம்வைத்து கால்படி கியாழமாகயிரக்கி வடித்து(ரு-சு) வேளைசாப்பிடவாதசுரம்தீரும் கொஞ்சம் தேன்விட்டுசாப்பிடவும்.

பித்தசுரக்கியாழம்,

பேய்ப்புடல்	பலம்	க
கோஷ்டம்	,,	க
கொத்தமல்லி	,,	க
சுக்கு	,,	க
வில்வவேர்	,,	க
பற்பாடகம்	,,	உ௳

இவைகளை பஞ்சுபோல்யிடித்து (க௳) படி ஜெலத்திலிட்டு யெட்டுக்கொன்றாய்க்கியாழம் வடித்து (ரு - சு) வேளை கொடுக்க சவுக்கியமாகும் கொடுக்கும்போது கொஞ்சம் தேன்விட்டுக்கொடுக்கவும்.

சேத்துமசுரக்கியாழம்,

இஞ்சி	பலம்	உ௳
பிரண்டை	,,	க
கண்டங்கத்திரிவேர்	,,	௳
சித்தரத்தை	,,	க
சுக்கு	,,	௳
பூனைக்காலிவேர்	,,	௳
பூலாவேர்	,,	௳
பொன்முசுட்டை	,,	௳
பூண்டு	,,	௳
வில்வவேர்	,,	உ

இவைகளை பஞ்சுபோல் யிடித்து (க௳)படி ஜெலம்விட்டு எட்டொன்றாய் கியாழமிட்டுகொடுக்கும்போது கொஞ்சம்தேன் விட்டுக் கொடுக்கவும் (ரு-சு) அல்லது (அ) வேளை கொடுக்க தாகம், வாந்தி, மயக்கம், சுரம், இவைதீரும்.

மாந்தக்கியாழம்

வசம்பு காவட்டம்புல்லு, இவ்விரண்டும் சமன்கொண்டு சட்டியில்போட்டு சாம்பலாக்கி கருஞ்சீரகம் வெடிக்கவிட்டு

அழாக்கு தண்ணிவிட்டு காலாழாக்காக யிரக்கிக் கொடுக்கவும். இப்படி (ச-ரு) வேளைகொடுக்க மாந்தம் குணப்படும்.

அதிசாரதாபசுரம்,

கொத்தமல்லி	சற்கரை
சீரகம்	கோஷ்டம்
விலாமிச்சம்	கற்பூரம்
வெட்டிவேர்	அதிமதுரம்
சந்தனம்	தாமரைக்கிழங்கு
கோரைக்கிழங்கு	அத்திப்பட்டை
நெல்லிப்பருப்பு	ஆலம்பட்டை
மாம்பட்டை	அரசம்பட்டை

இவை சமன்கொண்டிடித்து ஒருபடி ஜெலம்விட்டு எட்டி லொன்ருய் கியாழம்வடித்து இருவேளையும் அஞ்சுநாள் கொடுக் கவும் அதிசாரதாபசுரம் சொஸ்தமாகும்.

குழந்தைகள் மாந்தத்திற்குகியாழம்,

துளுயிலை	உத்தாமணியிலை
நொச்சியிலை	கெச்சக்காய்வேர்

இவைகள் வகைக்கு ஒருபிடி யெடுத்து நன்ருய் நருக்கி நாழிநீர்விட்டு அடுப்பேற்றி யெரிக்கும்போது.

ஓமம்	திப்பிலி
சுக்கு	வசம்பு
மிளகு	[illegible]ாடுதலைக்காய்

இவைகள் வகைக்கு விராகனிடை [illegible]ன்றுயெடுத்து துளி [illegible] வண்ணீவிட்டு சிலக்கவருத்து யிடித்[illegible]ப்பொடித்து மெல் லிய [illegible]ணியில் கட்டிமுடிந்து மேற்படி கியாழத்தில்போட்டுக் காச்சி வடித்து ஒருசங்கு வார்க்கவும் இப்படி (ஙு-ச) வேளை வார்க்க மாந்தம் தீரும்.

[illegible]ாந்தத்திற்கு வேறுகியாழம்,

ஓமம்	மிளகு
உள்ளி	திப்பிலி
வாய்விளங்கம்	பெருங்கிழங்கு

இவைகள் சமன்கொண்டு யிடித்து மெல்லிய துணியில் முட்டைகட்டி நாழிநீரில்போட்டு மூன்று பொங்குவரும்படி கா ச்சியிருத்து (உ-ஙு) வேளைகொடுக்கவும்.

மாந்தத்திற்கு வேறுகியாழம்,

விருத்தம்.

சுக்குமிளகு திப்பிலியும் துய்யஓமம் உள்ளியுடன்
ஒக்கநருக்கிச் சீலையினில் உகந்துமுடிந்து நீர்வுழக்காய்
செக்கச்சிவக்கக் காச்சியபின் சிராய்சங்கு புகட்டிடவே
மிக்கமாந்த பிணிதோஷம் விட்டேயோடுங் கண்டாயே.

முறைவாதசுரக்கியாழம்,

சண்பகப்பூ	தானிவேர்
ஆமணக்குவேர்	செருப்படைவேர்
கொத்தமல்லி	கண்டங்கத்தரி
சுக்கு	மிளகு

இவை சமன்கொண்டு பஞ்சுபோல்யிடித்து ஒருபடி தண் ணீர்விட்டு எட்டொன்ருய் கியாழம்வடித்து உட்கொள்ளவும்.

தனிவாதசுரக்கியாழம்,

நல்லசந்தனம்	கோரைக்கிழங்கு
சுக்கு	பற்பாடகம்

இவை பஞ்சுபோல்பிடித்து ஒருபடி ஜெலம்விட்டுஎட்டொ ன்ருய்கியாழம் வடித்து உட்கொள்ள வாதசுரம்தீரும். இப்படி (ஙு) நாள் ஆறுவேளையாம்.

முறைபித்தசுரக்கியாழம்.

கோரைக்கிழங்கு	சிந்திற்கிழங்கு
நன்னாரிவேர்	கோஷ்டம்
சந்தனம்	சுக்கு
தண்ணிவிட்டான்கிழங்கு	அதிமதுரம்

இவை சமன்கொண்டு பஞ்சுபோல் யிடித்து எட்டொன்றாய்கியாழம் வடித்து இருவேளையுமாக மூன்றுநாள் கொடுக்க நிவர்த்தியாகும் தேன்கொஞ்சம் கூட்டிக்கொடுக்கவும்.

முறைபித்தவாதசுரக்கியாழம்,

தேள்கொடுக்குவேர்	ஆரைவேர்
இலந்தைவேர்	கடுக்காய்தோல்
சித்தாமுட்டிவேர்	சுக்கு

இவை சமன்கொண்டிடித்து படிஜெலம்விட்டு எட்டொன்றாய் கியாழம்வடித்து மூன்றுநாள் ஆறுவேளை உட்கொள்ள முறைபித்த வாதசுரம் சவுக்கியமாகும்.

விடாசுரக்கியாழம்,

சிறுதேக்கு	ஆரைவேர்
சீந்திற்கொடி	கோஷ்டம்
நிலவேம்பு	திப்பிலி
பற்பாடகம்	சுக்கு

இவை சமன்கொண்டிடித்து ஒருபடி ஜெலம்விட்டு எட்டொன்றாய் கியாழம்வடித்து கொஞ்சம் தேன்விட்டு கொடுக்கவும் (ரு-சு) வேளை கொடுக்கவும் அல்லது (ம) வேளைகொடுக்க சவுக்கியமாகும்.

மாந்தவீக்கம் விஷவீக்கம் சுரம் நீர்கட்டுக்குக் கியாழம்,

பூவரசன் பழுப்பு	வாதுள்ளி
சங்கன்வேர்பட்டை	முருங்கையீர்க்கு
சீந்திற்கொடி	சாரணைவேர்
துளசி	மருள்கிழங்கு
பிரமியிலை	சிறுகுறிஞ்சான்வேர்
தூதுவேளை	கருஞ்சீரகம்
சத்திசாரணை	நீர்முள்ளிவேர்
சுக்கு	பெருங்கிழங்கு

இவைகளை வகைக்கு (வ) பலம் எடுத்து கல்லுரலிலிட்டு பஞ்சுபோல்யிடித்து ஒருபடி ஜெலம்வைத்து எட்டொன்றாய் கியாழம் வைத்திருத்து வடித்து வேளைக்கு ஒருசங்குவீதம் காலைமாலையாக மூன்றுநாள் கொடுக்கவும் சகலவீக்கம், சுரம் வயருப்பிஷம் யாவும்தீரும்.

கெணமாந்தம் வாந்தி வயருப்பிசத்திற்கு கியாழம்.

வசம்பு	மிளகு
கருப்புப்பட்டு	மயிலிறகு
வட்டத்திருப்பி	நிலவேம்பு

இவைகள் வகைக்கு ஒருவிராகனிடை யெடுத்து சட்டியிலிட்டு சாம்பலாகவறுத்துக்கொண்டு மாதுளம்யிலை, நிலவிளாயிலை, செம்பருத்தியிலை இவைகள் வகைக்கு ஒருபிடி யெடுத்து ஷை சட்டியில்போட்டு சிவக்கவறுத்துக்கொண்டு அத்துடன்,

கண்டுபரிங்கி	அக்கிராகாரம்
சுக்கு	அதிமதுரம்
சன்னருஷ்டம்	ஏலக்காய்அரிசி

இவைகள் வகைக்கு ஒரு விராகனிடையெடுத்து நறுக்கிப்போட்டு அரைப்படி ஜெலம்வார்த்து அரையாழாக்கு கியாழமாக வடித்து (அனுபோகவயித்திய முதற்காண்டம்) 74-வது பக்கத்தில் கூறியிருக்கும் மாந்தக்குளிகையில் ஒருமாத்திரையிழைத்து ஒருசங்கு கியாழத்திற்கலந்து வார்க்கவும் இப்படி இரண்டு மூன்றுவேளைவாக்க மேற்கண்டவியாதி சவுக்கியமாகும்.

முக்குமாந்தம் அள்ளுமாந்தத்திற்கு கியாழம்,

ஒருபிடி துணையிலையை சிறுக அரிந்து அடுப்பிலேற்றி அத்துடன் மிளகு ஒருவிராகனிடை கடுகு ஒருவிராகனிடை போட்டு

கருகவருத்து கருஞ்சீரகம் ஓமம் வகைக்கு ஒருவிராகனிடைபோட்டுவெடிக்கவிட்டு சன்னராஷ்டம் சுக்கு நரிக்கிப்போட்டு அரைபடிஜெலம்விட்டு ஆழாக்கு கியாழமாக சுண்டக்காச்சிவடித்துக்கொண்டு ஒருசங்குகியாழத்தில் (அனுபோகவயித்திய) முதற்காண்டத்திற்கூரிய பாலசஞ்சீவி மாத்திரை ஒன்றிழைத்து வார்க்கவும் இப்படி (உ-கூ) வேளைவார்க்கதீரும்.

மாந்தத்திற்கு பொதுகியாழம்,

வெற்றிலைக்காம்பு பதினொன்று மேவும்வசம்பு அவ்வளவு
பற்றிஉள்ளி தான்மிரண்டு பண்பாக் திப்பிலிதானொன்று
சுற்றிவெதுப்பித் தான்அரைத்து சுகமாய்பருவக் தக்கபடி
வற்றியவெந்நீர் தனிவிடவே மாந்தம்போமென் றருளினரே.

மாந்தத்திற்கு வேறுகியாழம்,

விடுமேஓமம் உள்ளியுடன் மிளகுடன்மிளகு திப்பிலியும்
கடுமேசிலை தனில்முடிந்து நன்றாய்நாழி நீர்தன்னில்
இடுமேஅடுப்பில் வெட்டொன்றாய் இதமாய்காச்சி குடிநீரை
கொடுமேமாந்தம் உள்ளவெலாம் குடிபோமென்று கூறினரே.

மாந்தத்திற்கு வேறுகியாழம்

வெண்பா.

வேளைவேர் சுக்குடனே வெந்தயமும் வெள்ளுள்ளி
பாளைசேர் ஓமம் பருவசம்பு — வாய்விளங்காய்
ஒன்றாகக் காச்சி உடன் குழவிக்கீய
கண்டாலும் மாந்தம்போங் காண.

சர்வமாந்தக்கியாழம்.

உத்தாமணிஇலை	பொடுதலை
வேளைவேர்	முருங்கைப்பட்டை
கொச்சிலி	நுரையீர்க்கு

இவைகள் சமன்கொண்டு சட்டியிலிட்டு வருத்து அரைப்படிநீர்விட்டு ஓமம், சுக்கு, திப்பிலி, மிளகு, வசம்பு இவைகள் சமன்கொண்டு பொடித்து சீலையில் முடிந்து அதை ஜெலத்தில் போட்டெட்டொன்றாய் காச்சிவடித்து முதற்பாகத்திற்கூரியமாந்தக்குளிகை ஒன்றிழைத்து வார்க்கவும் இப்படி (ச-ரு) வேளைவார்க்கவும்.

மாந்தஉப்பிஷத்திற்கு கியாழம்.

ஒப்பும்ஓமம் காசெடையை உகந்துசட்டி தனில்வருத்து
குப்பைமேனி வேர்பட்டை கூறும்இரண்டுபலந்தானே
அப்பாத்தண்ணீ ரரைப்படியை அளவாயெட்டுக் கொன்றாக்கி
வைப்பாய் கொடுக்கவேஉப்பல் மாந்தம்போகும் கண்டாயே.

ஐந்துவிதமாந்தத்திற்கும்

ஒரேகியாழம்.

வேப்பம்யீர்க்கு	பொடுதலை
கொச்சிலியீர்க்கு	ஓமம்
நுரையீர்க்கு	உள்ளி
மாவிலையீர்க்கு	திப்பிலி
கொடிவேலியீர்க்கு	வாய்விளங்கம்
புளியம்யீர்க்கு	கற்பூரவள்ளி

இவைகள் சமன்கொண்டு பஞ்சுபோலநசுக்கிநாழிநீர்விட்டு எட்டுக்கொன்றாய் கியாழம்வைத்து வேளைக்கொரு சங்காய் (ரு-கூ) வேளைவார்க்கவும் ஊதுமாந்தம், போர்மாந்தம், சத்திமாந்தம், கட்டுமாந்தம் செரியாமாந்தம் இவைதீரும்.

பித்தத்திற்கு கியாழம்.

நெல்லிமுள்ளி	சிந்தாமுட்டி
வில்வப்பழம்	நெற்பொரி
சீரகம்	கொத்தமல்லி

இவைகளை சமன்கொண்டு யிடித்து அரைப்படி ஜெலம் வைத்து எட்டொன்றாய் கியாழம்வைத்து (ச-ரு) வேளைகொடுக்கநிவர்த்தியாகும்.

அஜீரணக்கிராணிக்குக் கியாழம்.

ஓதியம்யிர்க்கு	சுக்கு
கருவேப்பிலையிர்க்கு	சீரகம்
முக்காவேளை	அசமதாகம்

இவைகளை சமன்கொண்டு யிடித்து கால்படி ஜெலம்வைத்து அரிக்கால்படியாக யிரக்கி இருவேளைசாப்பிடவும் இப்படி (ச-ரு) வேளைசாப்பிடத் தீரும்.

குன்மவபற்றுவலிக்கு கியாழம்.

பிரண்டை, வேப்பம்யிர்க்கு, புரசவித்து, அசமதாகம், இவை சமன்கொண்டு யிடித்து கால்படி தண்ணிவைத்து அரிக்கால்படியாக யிரக்கி இருவேளைசாப்பிடவும். இப்படி (ச-ரு) வேளைகொள்ளவும்.

அண்டநோய்க்கு கியாழம்.

புனல்முருங்கைவேரின் பட்டை
ஆண்கெச்சைக்காயின்பருப்பு
கண்டங்கத்திரியிலை

இவைகள் சமன்கொண்டு அரைப்படி தண்ணிவைத்து அரிக்கால்படியாகக் கியாழமிட் டிரக்கி இருவேளை கொள்ளவும் இப்படி ஆறுவேளை கொள்ள விரைநோய் நரம்புதடிப்பு இவை தீரும்.

ஜெலக்கட்டுக்குக் கியாழம்.

ஜெலத்திலிருக்கும்கொடிப்பாசி
கண்டங்கதிரியிலை
வாழைமரத்தின்அடிக்கிழங்கு

இவைகள் வகைக்கு பலம் (உ) யெடுத்து அரைப்படி ஜெலத்திலிட்டு அரிக்கால்படியாகக் காச்சியிரக்கிவடித்து கொஞ்சம் பொட்டிலுப்புபோட்டு குடிக்கவும் இப்படி (ச-ரு) வேளை கொடுக்க நீர்கட்டு உடையும்.

ஜன்னிதோஷத்திற்கு கியாழம்.

கடுக்காய்தோல்	சுக்கு
தான்றிக்காய்	வெதுப்படக்கி
கொத்தமல்லி	சித்திரமூலம்
நெல்லிப்பருப்பு	கடுகுரோகணி
ஏலம்	கஞ்சாங்கோரை

இவைகள் வகைக்கு பலம் (க) யெடுத்து பஞ்சுபோல் யிடித்து படிஜெலம்வைத்து கால்படியாகயிரக்கி (ரு-சு) வேளைகொடுக்க ஜன்னிதோஷம் தாகம் இவைதீரும்.

சேத்துமசுரக்கியாழம்.

வேம்பு	பற்பாடகம்
கண்டங்கத்திரி	நன்னாரிவேர்
ஆலங்கனி	காவட்டம்புல்
வில்வம்	துளசி
ஆடாதோடை	கஞ்சாங்கோரை

இவைகள் ஷை யிடைகொண்டு யிடித்து ஒருபடிஜெலம் வைத்து நாலுக்கொன்றாய் கியாழம்வடித்து (ரு-சு) வேளைகொடுக்க சேத்தும சுரம்தீரும்.

இதுவுமது.

சேத்துமசுரக்கியாழம்.

சுக்கு	அதிவிடையம்
கடுக்காய்	தேவதாரம்
வசம்பு	இலவம்பட்டை
முத்தக்காசு	மிளகு

இவைகள் வகைக்கு ஒருபலம்கொண்டு ஒருபடிஜெலத்தில் போட்டு நாலுக்கொன்றாய் கியாழம்வடித்து (ரு-சு) வேளைகொடுக்க சவுக்கியமாகும்.

சேத்துமசுரத்தின்குணம்,

விருத்தம்.

வெய்யவுளக்க மிருமலுடன் விதனமுருக்கி மேல்வெளுத்து
செய்யமலமும் அடைப்பட்டு தினவுந்தினமும் சுரமுண்டாய்

பையவாயு மிரத்திக்கும் பசியுமில்லை பார்க்குங்கால்
அய்யசுரத்தின் குணமென்றுரெல்லாந்தெரிந்த பெரியோரே.

இதற்குக்கியாழம்,

மலைதாங்கி	நீர்பூலாவேர்
முத்தக்காசு	நாவற்பட்டை
அத்திப்பட்டை	மாதளங்கொழுந்து
இருவேலியிலை	அதிவிடையம்
மாம்பட்டை	கோஷ்டம்
காசுக்கட்டி	அதிமதுரம்
சீரகம்	வகைக்கு பலம் (உ)

இவைகளை யிடித்து ஒருபடி ஜெலத்திலிட்டு நாலுக்கொன்றாய்கியாழம்வடித்து இருவேளையுமாக(ஈ-ச) நாள்கொள்ளசேத்துமத்தாலெடுத்த சகல வியாதியும் தீரும்.

ஷை சுரத்திற்கு

வேறு-கியாழம்,

நிலவேம்பு அதிவிடையம் கோரைக்கிழங்கு சிந்திற்றண்டு கொடிசைபாலை இவைசமன்கூட்டி இருநாழிநீர்விட்டு நாலுக்கொன்றாய்காச்சி (ஈ) நாள் கொள்ளத்தீரும்.

ஷை. சுரத்திற்கு

வேறு-கியாழம்,

கோரைக்கிழங்கு, பெருமரப்பட்டை, வேப்பம்பீர்க்கு,நிலவேம்பு, வில்வப்பத்திரி,சுக்கு, இவைசமன்கூட்டி முன்மாதிரிகாச்சி குடிக்க நிவர்த்தியாகும்.

குளிர்சுரம்முதலியபலவித
சுரத்திற்கும் கியாழம்,

கோரைக்கிழங்கு	கடுக்காய்தோல்
சிந்தில்தண்டு	குராசானிஓமம்
வில்வம்	சிற்றுமுட்டி
கொற்றுமல்லி	திப்பிலி
பேய்புடல்	வகைக்குசமனிடை

இவைகளையிடித்து இருநாழிநீர்விட்டு அறைத்திட்டமாய் காச்சிகாலைமாலையாக (ச-ரு) நாள்கொள்ளசகலசுரமும்விட்டோடும் மலக்கட்டும்விடும் வாதபித்த சேட்டுமமாகிய மூவிதசுரமும் தீரும்.

இதுவுமது,

பலசுரக்கியாழம்.

விருத்தம்.

குருவிக்கரும்புகண்டங்காலி குருந்தமுட்டிவேரினொடு
மருவிக்கொண்டங்கிருநாழி நீர்விட்டெரித்துஉழக்காக்கி
வெருவிக்கொண்டுசக்கரையை விட்டுசெலக்கிக்குடிப்பீராய்
உருவிக்கொண்டுவாதபித்தம் உள்ளதெல்லாங்குடிபேர்மே.

இதுவுமது.

பலசுரக்கியாழம்.

கொத்தமல்லிசுக்குவலை யத்துநிலவேம்புடனே
முத்தமொடுபெருங்குமிழு முத்துசிறுதேக்குகாரம்
வித்தகபற்பாகமும் வெத்திருநாழிச்சலத்தில்
பெத்திடவேவாதமொடு பித்தமறுமென்றனரே.

இதுவுமது,

பலசுரக்கியாழம்.

நிலவேம்பு, சித்திரமூலம், தாமரைவளையம், முக்காவேளைவேர், சிந்திற்றண்டு, விஷ்ணுகாந்தி, பற்பாடகம், இவை சரியிடை கூட்டி இருநாழிநீர்விட்டு பாதியாகக் காச்சி குடித்துவர சருவசுரமும் தீரும்.

இதுவுமது,

பலசுரக்கியாழம்.

கொன்றைப்பிசின், சுக்கு சிறுகாஞ்சொரிவேர், ஆடாதோடையீர்க்கு, பேய்ப்புடல், கொத்தமல்லிவிரை, கோரைக்கிழங்கு இவைகளை இருநாழிநீர்விட்டு நாலுக்கொன்றாய் கியாழம்வடித்து இருவேளையாகக் குடிக்கவும் இப்படி (ச-ரு) நாள்குடிக்க சருவ சுரமும்தீரும்.

வாதசுரக்கியாழம்.

நல்லசந்தனம்	கோரைக்கிழங்கு
சுக்கு	சிறுகாஞ்சொரி

இதுகள் சமன்கொண்டு கியாழம்வைத்து (ரு-சா) வேளை யருந்த வாதசுரம் வாதத்தா லெடுத்த நோக்காடுதீரும்,

இதுவுமது.

வாதசுரக்கியாழம்,

ஆமணக்கம்வேர்	செருப்படை
கூந்தன்குதம்பைவேர்	சுக்கு
தழுதாழைவேர்	

இவை சமன்கூட்டி அஷ்டபாகமாகக் கியாழம் வைத்து (சா-எ-அ) வேளை யருந்தவாதசுரம் தீரும்.

இதுவுமது.

வாதசுரக்கியாழம்,

அத்திவேர்	கடுக்காய்தோல்
இலந்தைவேர்	சுக்கு
கண்டங்கத்திரிவேர்	

இவை சமன்கூட்டி அஷ்டபாகமாகக் கியாழம் வைத்து (சா-அ) வேளை கொடுக்க வாதசுரம்தீரும்.

இதுவுமது.

வாதசுரக்கியாழம்,

தழுதாழைவேர் மஞ்சள் சுக்கு தாணிக்காய் இவைசமன்கூட்டி அஷ்டபாகமாகக் கியாழம்வைத்து (சா-அ) வேளை கொடுக்க வாதசுரம் நிதானப்படும்,

பயித்தியசுரக்கியாழம்,

நரிபயிற்றம்வேர்	சித்தாமல்லிவேர்
கோரைக்கிழங்கு	பேராமல்லிவேர்
வெட்டிவேர்	சீரகம்

இவைசமன்கூட்டி அஷ்டபாகமாகக்கியாழம்வைத்துமாறு கிழவரையில் (எ-அ) நாள் இருவேளையும் கொடுக்கவும்,

இதுவுமது,

பயித்தியசுரக்கியாழம்,

சீந்தில்கொடி	கோஷ்டம்
விலாமிச்சம்வேர்	நல்லசந்தனம்
கோரைக்கிழங்கு	சிறுகுறிஞ்சிவேர்

இவை சமன்கொண்டு அஷ்டபாகமாகக் கியாழம் வடித்து (ய) நாள் யிருவேளையும் கொடுக்கவும்.

இதுவுமது,

பயித்தியசுரக்கியாழம்,

சிறுதுட்டிவேர்	ஜடாமாஞ்சி
நரிபயிற்றம்வேர்	கோரைக்கிழங்கு
சீந்திற்கொடி	பேராமல்லிவேர்
சுக்கு	அதிமதுரம்

இவை சமன்கொண்டு அஷ்டபாகமாகக் கியாழம்வடித்து (ரு-சா) வேளை கொடுக்கவும் தீரும்.

சிலேத்துமசுரக்கியாழம்,

கண்டங்கத்திரிவேர்	செம்முள்ளிவேர்
முக்காவேளைவேர்	சுக்கு
ஆடாதோடையிர்க்கு	மிளகு

இதுகள் சமன்கொண்டிடித்து அஷ்டபாகமாகக் கியாழம் இருவேளை (ங-ச) நாள் கொள்ள சவுக்கியமாகும்.

இதுவுமது,

சிலேத்துமசுரக்கியாழம்,

ஆடாதோடையிர்க்கு	வசம்பு
செம்முள்ளிவேர்	கண்டங்கத்திரி
பிரண்டை	கடுகுரோகணி

இதுகள் சமன்கொண்டு அஷ்டபாகமாகக்கியாழமாக்கி (ச-ரு) நாள் யிருவேளையும் கொடுக்கவும்.

கியாழ வகைபரணி

முற்றிற்று.

உ

தேவிசகாயம்.

கண்டாவிழ்தவகைபாணி

பஞ்சபாக்கியச்சூரணம்.

மாங்கொட்டைபருப்பு கருவேப்பிலை சுண்டக்காய்வற்றல் வெந்தயம் ஓமம் இவ்வைந்தும் சமனிடையெடுத்து வறுத்துசூரணம்செய்து மூவிரல்பிரமாணம் தயிரில் கொள்ளவும் தீரும்வியாதிகள் சகலகிராணி அதிசாரம் வயிற்றிரச்சல் கழிச்சல் சீதம் இரத்தம் விழுதல் மூலக்கடுப்பு வயிற்றுக்கடுப்பு முதலியவை நீங்கும்.

மூலவாய்வுக்கு,

வெள்ளுள்ளிபலம் (௫) அரைபடி ஆவின்பாலில் அரைத்து கலக்கிகாச்சி புறைக்குத்திகடைந்து தயிரெடுத்து அந்தத்தயிரை அந்திசந்தி மூன்றுநாள் அன்னத்திலிட்டு சாப்பிடவும்.

சகலகிராணிகளுக்கு,

திப்பிலி, சுக்கு, மிளகு, சாதிக்காய், கிராம்பு, இந்துப்பு, ஏலம், சீரகம், பெருங்காயம், வேலம்பிசின், மாம்பிசின், இலவம்பிசின், முத்தக்காசு, புளியம்விரைதோல், மாதுளந்தோல், அபின், வகைக்கு விராகனிடை ஒன்று வீதம்யெடுத்து பொடித்து இதற்கு சமனிடை சுத்திசெய்த கஞ்சாதூள்கலந்து வேளைஒன்றுக்கு ஒருவிராகனிடைவீதம் தேனிற்கலந்து கொள்ளவும்.

மூலமுளை மூலக்கடுப்புக்கு,

மருதம்பட்டைபலம் கால்பலம் யெடுத்து கால்படி ஆவின் பாலில் அரைத்து கலக்கி மூன்றுநாள் கொடுக்கவும்.

மூலமுளைக்கு,

வேப்பமுத்தின் பருப்பு ஒரு எலுமிச்சங்காய் பிரமாணம் அரைத்து சற்றே வெதுப்பி பலகைதட்டி மூன்றுநாள்கட்டபுழு விழும் முளைகரையும்.

சீழ்மூலத்துக்கு.

காரெள்ளு, கடுகு, திப்பிலி சுக்குவகைக்குப் பலம் ஒன்று இவைகளை வெதுப்பிசூரணித்து திருகடிபிரமாணம் வெந்நீரில் காலைமாலை (௫) நாள்கொள்ளவும்.

கண்ணில்சதைவளர்த்திக்கு.

ஈருள்ளியும் குருஞ்சாவும் ஓர்கிரையாய்யிடித்து (௧) நாள் கண்ணில் பிழியவும்.

வசூரியில்தாகமெடுத்தால்.

கலைமான் கொம்பை ஊரவைத்து கழுவிப்போட்டு அதை ராவிய தூள்பலம் (௨) யெடுத்துசுடுதண்ணீரில்போட்டுஊரவைத்துக்கொடுக்கவும்.

வசூரினால் நேத்திரத்தில் வலிகண்டால்.

சீரகத்தை துணியில்பொட்டலங்கட்டி முலைப்பாலில் ஊரவைத்து கண்ணில் ஒத்தடமிடவும் (௨) சுடுசோற்றில் வெண்ணெய்சேர்த்து மத்தித்து துணியில் பொட்டலங்கட்டி நீராகாரத்தண்ணீரில் தோய்த்து ஒத்தடமிடவும்.

கண்ணில்வசூரிவராதிருக்க

வசூரி காய்ச்சலடிக்கும்போது ஈருள்ளியைவாயிற்போட்டு மென்று காச்சலடித்தவன்கண்ணில் ஊத்தவும்.

வசூரியினால்நேரிடும்குலைகட்டுக்கு.

ஒருபழங்கூரைவைக்கோலும், ஒருபிடிவேப்பிலையும், சேர்த்தவித்து (௯) நாள் வரைவேதுவிட்டு ஒத்தடம்போட்டுக் கட்டவும் (௨) வட்டத்துத்தியை சமூலம் வேகவைத்து (௰௧) நாள் வேதுவிட்டு ஒத்தடம்போட்டுக் கட்டவும்.

ஆராதவசூரிபுண்ணுக்கு.

முற்றின தேங்காயை திருகி அதில் புளியம்விரையின் மேற்றோலைப் பொடித்துப்போட்டு பிசைந்து பிழிய தயிலம்வரும் அதைபுண்ணிற்போடவும்.

வயற்றுக்கிருமிவிழ.

எலிச்செவியும் முருங்கைவேரும் திரிபலையும் கருக்கிக்கியாழம்செய்து சங்களவுகொடுக்கவும்.

குழந்தைகளின் ஊதுமாந்தம் பொருமல்வாதத்துக்கு.

இரசம், சுக்கு, வெண்காரம், கெந்தகம், வகைக்கு விராகனிடை ஒன்று பேர்வாளம் விராகனிடை (௪) இவைகளை சுத்திசெய்து குளிர்ந்தநீர்விட்டரைத்து பாசிபயற்றளவு உண்டைசெய்து ஒருஉண்டை தண்ணீரில்கரைத்துக் கொடுக்கவும்,

குழந்தைகள் சாம்பல் மண் தின்றதற்கு.

கீழ்க்காய் நெல்லிவேர் விராகனிடை ஒன்று கடுக்காதோல் விராகனிடை இரண்டு மிளகுவிராகனிடைமூன்று புளித்தமோரிலரைத்து கலக்கி சங்களவுமூன்றுநாள் கொடுக்கவும்

வெட்டுகாயத்துக்கு.

வெட்டுப்பட்ட புண்ணில் சுய எள்ளெண்ணெயை விட்டு துணிசுற்றி ஒரேகட்டு கட்டிவிடவும் ஜலம்படாமல் பார்த்துவரவும்.

வங்கு கநஞ்சிட்டைக்கு.

இலந்தைக்கொட்டை, திப்பிலிவகைக்கு விராகனிடை(உ) மஞ்சள் விராக்னிடை (௪) வேண்டியமட்டும தேன்விட்டரைத்து வங்குவந்தவிடத்தில் தடவிவரவும்.

மார்புச்சளிகோழைகட்டுக்கு.

பிரண்டையை வெதுப்பிச்சாறு பிழிந்து ஐந்துநாள் சங்களவு இருபொழுதும் கொடுக்கவும்.

கண்ணோய்க்கு.

கற்கண்டைப் பொடித்து துணியில்முடிந்து புளிப்புமாதளஞ்சாற்றில் ஊறவைத்து கண்ணிற்பிழியவும்.

குழந்தைகளுக்கு உரம்விழுந்தால்.

வெள்ளைப்பூண்டு, கடுகு, வகைக்கு பலம் - 2, அரைபடி நல்லெண்ணெயிற்போட்டுக் காய்ச்சிவடித்து குழந்தைமேற்பூசி

நொச்சியிலை, வேப்பிலை, மாவிலை, மூக்கிரட்டை இவைகளைபோட்டுகாச்சிய வென்னீரில் ஸ்தானம்செய்விக்கவும்.

பாம்புக்கடித்தால்.

கடிவாயுக்கு (22) அங்குலத்துக்குமேல், பலமானமெல்லியகயிற்றைபோட்டு இருக்கிகட்டவும், அதற்குமேல், இரண்டுகட்டுதனித்தனிகட்டவும், கடிவாயில்கத்தியால் ஆழமாய்கீறிஇரத்தம் வடியசெய்யவும், அப்பால் அந்தகாயத்தில் (கார்பாலிக் ஆசிட்) 4-5 துளிவிடவும்.

தேள், நட்டுவக்காலி, தேனீ, குளவி முதலியவை கொட்டியதர்க்கு.

பொருக்கக்கூடிய சூடுள்ள வென்னீரை வார்த்து அதில் சோங்கை உப்புபோட்டு அந்தவென்னீரை அகலபாத்திரத்தில் வைத்து அதிற்குள் மேல்படி விஷஜெந்துகள் கொட்டியபக்கத்தை சற்றுநேரம் வைத்திருக்கவும் அப்பால் சுயம்பு யெள்ளெண்ணெய் தடவவும்.

குழந்தைகள் கக்கிருமலுக்கு.

குழந்தையின்வயதெத்தனையோ அத்தனை கிரேயின்ஸ்குயினைவை ஒரு அவுன்ஸ் ஜலத்தில் கரைத்து ஒருமணிநேரத்துக்கொருதரம் ஒருதேக் கரண்டிவீதம் கொடுக்கவும்.

வெக்குருக்கு.

1. ஒருசீசா சுத்தஜலத்தில், 4-ரூபா எடைவெண்காரத்தை கரைத்து உடம்பில் பூசிவரவும், 2. சர்தனத்தை பன்னீரில் அரைத்து கலக்கி சற்றுநேரம் [illegible]திருந்து சல்லாவில் வடித்து அதில் ஒருஅவுன்சுக்கு 10 - கிரேயின்வீதம், மயில்துத்தத்தை கரைத்து வெக்குரு இருக்குமிடத்தில் சொற்பஞ் சொற்பமாய் பூசிவரவும்.

அரணை, விரியன் பாம்புகடிக்கு.

குத்தாயிலையை அரைத்து பசுவின்பாலில் கலக்கி சாப்பிடவும்.

சுருட்டைகடிக்கு

சுண்டவேரை அரைத்து இளவென்னீரில் சாப்பிடவும்.

தந்தரோகத்திற்கு.

செங்கொட்டை பலம்-10 கிரியுப்பு பலம்-5 இவை இரண்டையும் செப்புபாத்திரத்தில் வைத்துபுடமிட்டு பல்விளக்கவும்.

காதில்சீழ்வடிகிறதற்கு.

சந்திசாரணைகிழங்கு ஊமத்தைவேர் தென்னிவேர் கையாந்தகரை சிகப்புநெருஞ்சில் சமன்தட்டி வேப்பயெண்ணெயில்போட்டுகாச்சி காதில் விடவும்.

பாஷாணந்தின்றவர்களுக்கு,

மிளகை அரைத்து எருமைவெண்ணெயில் மத்தித்து உள்ளுக்குக் கொடுத்து எருமை தயிரில் சந்தனம் அரைத்து உடம்பிற்பூசவும்.

அரையாப்புக்கு,

முடக்கற்றானிலை, சுண்ணாம்பு, வெல்லம், எலுமிச்சம்பழச் சாறுவிட்டு அரைத்துப் பூசவும்.

எச்சிற்றழும்புக்கு,

எருக்கம்வேர்பட்டை தகரவிரை எலுமிச்சம்பழச்சாறு விட்டு அரைத்துப்பூசவும்.

இனி அனேகவிதமான முறைகள் ஐந்தாங்காண்டத்தில் வெளியிடப்படும்.

நான்காங் காண்டம்.

முற்றிற்று.

பரமபதிதுணை.

174

முகவுரை.

இந்த அனுபோகவயித்திய பிரம்மரகசியமென்னும் நூலானது வெளிவந்த காரணமும், இதனுள் அடங்கிய விஷயங்களுக்கும், இவ்வனம் முகவுரையெனப் பெயர்வகித்து சுருக்கமாக எழுதி முடிக்கப்பட்டிருக்கிறது.

ஜெகந்நாதஸ்தலம் ஸ்ரீமான் கோஷாயி சுவாமிகளால் நெடுவருடங்களாக கைசிமுதலான திவ்யக்ஷேத்திர யாத்திரைவாசிகளுக்கு தருமத்திற்கு உபயோகித்துவந்த சத்தியமான உத்தம முறைகள் யாவையும், இன்னும் சில கைமுறைகளையும் சேர்த்து யின்னூலுக்கு போதுமான பொருளைச் செலவிட்டு அச்சிடுவித்த வராகிய ம - ள - ள-ஸ்ரீ, பூ. சு. குப்புசாமிமுதலியார், அனுமதியின்றி இன்னூலை பிறர் எவ்விதத்தும் அச்சிடாதபடிக்கு (கெவர்மெண்ட் சட்டப்படி) ரிஜிஸ்டர் காப்பிரயிட் செய்திருக்கிறது.

{ அனுபோகவயித்திய பிரம்மரகசியம் 8-காண்டங்களில் 6-காண்டம் தயாராயிருக்கிறது மற்ற இரண்டுகாண்டமும் விரைவிலுப சாதுவாயி அச்சிட்டுமுடிவாகும். }

காண்டம் 1-க்கு விலை அணா	0	8	0
ஷை 4-காண்டமும் ஒரேகட்டடம்	1	8	0
ஷை 6-காண்டமும் ஒரேகட்டடம்	2	4	0
ஷை 8-காண்டமும் ஒரேகட்டடம்	3	0	0

V. P. போஸ்டசார்ஜு பிரத்தியேகம்.

10-புத்தகம் மொத்தமாய்வாங்கினால் 1-புத்தகம் கமிஷன் கொடுக்கப்படும்.

ரிப்ளைகார்ட்யெழுதினால் பதில்சங்கதிகிடைக்கும்.

பூ. சு. குப்புசாமிமுதலியார் கம்பெனி.
சுந்தரவிலாசம்பிரஸ் பிரம்பூர்போஸ்ட் மதராஸ்.

உ

தேவிசகாயம்.

அவுஷதவிளம்பரம்.

பல்அசைவு, கடுத்தல், குத்தல், இரத்தம் முதலானஎல்லா விதபல்நோவுக்கு (வச்சிரதந்தப்பொடி) 1-டப்பி விலை அணா-4,

சீதபேதி ரத்தபேதி, ரத்தமும் சீதமும் கலந்தபேதி, இதுகளுக்கு (இரத்தகபாடசூரணம்) 1-டப்பி விலை அணா 0 8 0

இடுப்பு, அரைசந்து, கழுத்துமார்பு இதுகளில் உண்டாகும் மேகப்படை, காரிகப்படை இதுகட்கு (சண்முகத்தைலம்) விலை அணா, 0 12 0

பக்கவாய்வு - உஷ்ணவாய்வு - பித்தவாய்வு-மார்நோய்-மூலவாய்வு-பெருவயறு-வெள்ளை-இருமல் இதுகட்கு (அக்கினிகுமாரச்சூரணம்) விலை. 1 0 0

தேள்விஷத்திற்கு உடனே சவுக்கியமாகும் மருந்து 0 5 0

தலைமயிர்கள் கருப்பாயும் நெருக்கமாயும் வளரும் தலைசுண்டுகள் நீங்கும் மயிர்வளருந்தைலம் விலை 1 0 0

கண்ணெரிச்சல்-கண்புகைச்சல் கண்ணில் நீர்வடிதல் பித்தமயக்கம் கபாலக்குடு முதலானதற்கு (வில்வாதித்தைலம்) 1 8 0

மேகவெள்ளை சொருக்கு பிடிப்பு சகலத்திற்கு (தேவசஞ்சீவிஎண்ணெ) விலை ரூபா 2 0 0

முறைக்காச்சல் முதலான எல்லாசுரத்திற்கு (தசாவதாரக்குளிகை) விலை 0 12 0

சாதாரண இருமல். கோழைஇருமல், சத்திஇருமல், புகையிருமல், நெஞ்சு சொரு சொருப்பு முதலானதற்கும் (இராமபாணச்சூரணம்) விலை ரூபா 1 0 0

தாம்பூலத்துடன்ஒருமாத்திரை தின்றுவர வாதபித்தசிலேட்டுமம், ஜலுப்பு, சீதளம், தலைபாரம் தீரும் முகவசீகரமுண்டு, 60-மாத்திரையடங்கிய (தாம்பூலக்குளிகை) விலைரூபா 1 0 0

லேகியம் சூரணம் 20 நாள் சாப்பிட்டுவந்தால் இந்திரியத்தைக்கெட்டிப்படுத்தி நல்லபலத்தையுண்டு பண்ணும் புணர்ச்சியாரம்பத்தில் தானேகழிதமாகாமல் நீடித்திருக்கும் (லேகியம் சூரணம்) டப்பி 2-க்கு விலை ரூபா 2 0 0.

பூ. சு. குப்புசாமிமுதலியார் அண்டு கம்பெனி
சுந்தரவிலாசம்பிரஸ் பிரம்பூர்போஸ்ட மதராஸ்.

உ

தேவிசகாயம்.

அவுஷதங்களின் அகராதி.

அவுஷதங்கள்.	பக்கம்.
நாடிகள் நடக்கும்விபரம்	1
நாடியைப்பரிக்ஷிக்குமிடம்	0
நாடிகள்பரிக்ஷிக்கும விவரம்	2
நாடிபார்க்குமாதவணை	0
நாடிபார்க்கும் விவரம்	0
புருஷருக்கு நாடிநடக்கும்வித	0
பெண்களுக்குநாடிநடக்கும்வி	0
பஞ்சபூதநாடிகளிருக்கு மிடத்தின் விபரம்	3
ரோகத்தில் வாதபித்த சிலேஷ்மம் இருக்கவேண்டிய நிதானம்	0
ஒரு நிமிஷத்திற்கு நாடி நடக்கும் பிரமாணம்	0
நாடிபேதாபேதம்	0
மனிதர்வயதின் விவரம்	4
தேகக்கட்டளை விபரம்	0
வாததேகக்குறிகள்	0
பித்ததேகக்குறிகள்	5
சிலேத்மதேகக்குறிகள்	0
வாதபித்த சிலேத்துமநிலை	0
வாதபித்தசிலேத்துமத்திரிய	0
வாதபித்த சிலேத்துமகாலம்	0
ரோகஸ்தர்களின் தேக முதலான குறிகள்	6
வாதக்கூறு	0
பித்தக்கூறு	0
சிலேத்மக்கூறு	7
குருநாடியிருக்குமிடம்	0
குருநாடியின்குணம்	0
நாடிகள்மூழ்மேலுமீறி யோடும் விதம்	8
நாடித்தொந்திப்பு	0
நாடியின் குறிப்பு	10
மரணக்குறிகள்	11
குழந்தைகட்குவரும் நோயின் விபரமும் அவிழ்தமும்.	
செங்கிரந்தியின்குணம்	14
கருங்கிரந்திக்குணம்	0
கிரந்தி-12- சூலை 18-க்கும்	15
அரைவீட்டிற்குழந்தைக்கு கழுத்துவீங்கி முழங்கால் முழங்கைகுளிர்ந்து வயிற்றில் வலிகண்டால்	0
பிள்ளை வயிறுநொந்தழுதால் மலங்கட்டினல்	0
குழந்தைக்குச் சிறுநீர் கட்டினல்	16
பிள்ளைக்கு உரம்விழுந்தால்	0
பிள்ளை சிறியழுதால் விக்கலெடுத்தால் வயிறுபொருமினல்	0
பிள்ளைவயிறு வீங்கினல் குடித்தபாலெதிரெடுத்தால் அடிக்கடி கொட்டாவியிட்டால்	0
பால்சுரக்க	0
தோஷவகுப்பு.	
பக்ஷிதோஷகுணம்	17
பறவைதோஷகுணம்	0
எட்சிதோஷகுணம்	0
வீங்குபுள்ளின்தோஷகுணம்	0
தூங்குபுள்ளின்தோஷகுண	18

அவுஷதங்கள்.	பக்கம்.
விளக்கொளிக்கண் புள்ளின் தோஷகுணம்	0
வெங்கண்புள்ளின்தோஷகு	0
கருடக்கண்புள்ளின்தோஷ	19
செங்கண்புள்ளின்தோஷகுண	0
அர்திப்புள்ளின்தோஷகுணம்	0
நீர்ப்புள்ளின்தோஷகுணம்	0
புள்ளின்தோஷகுணம்	20
முட்டுதோஷகுணம்	0
குழிந்தோஷகுணம்	0
கெர்ப்பமழிந்த தோஷகுண	21
தேரைத்தோஷகுணம்	0
மாந்தவகுப்பு	0
மாந்தகுணம்	22
வாதமாந்தகுணம்	0
பித்தமாந்தகுணம்	0
சிலேட்டும மாந்தகுணம்	0
இவைகட்குநிவர்த்தி	0
ஊதுமாந்தகுணம்	24
நீர்மாந்தகுணம்	0
விஷமாந்தகுணம்	25
போர்மாந்தகுணம்	0
பால்மாந்தகுணம்	26
செரியாமாந்தகுணம்	0
கட்டுமாந்தகுணம்	27
தலைமாந்தகுணம்	28
துலைமாந்தகுணம்	0
சுழிமாந்தகுணம்	0
வீக்கமாந்தகுணம்	29
முக்குமாந்தகுணம்	0
வாள்மாந்தகுணம்	0
உளைமாந்தகுணம்	30
அட்சரமாந்தகுணம்	0
தோஷமாந்தத்திற்கு	31
மாந்ததோஷம் வலிப்பு மலக்கட்டுக்கு	0
மாந்தம்பாலகிரியைக்கு	0
மாந்தம்வயிற்றுப்பொருமலு	32
மாந்தம் பொருமல் வலி செரியாமாந்தத்திற்கு	0
மாந்தங்களுக்குப்பொதுப்பிரயோகம்	0

கண வகுப்பு.

அவுஷதங்கள்.	பக்கம்.
வாதகணத்தின்குணம்	34
பித்தகணத்தின்குணம்	0
சேஷ்மகணத்தின்குணம்	0
இவைகட்குநிவர்த்தி	0
கணமாந்தகுணம்	0
ஊதுமாந்தகணத்தின்குண	35
நீர்கணமாந்தகுணம்	36
சிங்கிமாந்தகணத்தின்குணம்தேவிஷ்மாந்தகணம்	0
நீர்க்கணத்தின்குணம்	0
சுழிகணத்தின்குணம்	37
சூலிக்கணத்தின்குணம்	0
மகாகணத்தின்குணம்	38
பிரளிக்கணத்தின்குணம்	0
பிறக்கணத்தின்குணம்	39
வரட்கணத்தின்குணம்	0
கொதிப்புக்கணத்தின்குண	40
அந்தகணத்தின்குணம்	0
மந்தாரகணத்தின்குணம்	0
எரிகணத்தின்குணம்	0
ஆமகணத்தின்குணம் இதுவேசீதகணம்	41
கீராமகணத்தின்குணம்	0
சோமகணத்தின்குணம்	42
முக்குக்கணத்தின்குணம்	0
[illegible]கணத்தின்குணம்	43
ஜனங்களுக்குப்பொதுப் பிரயோகம்	0
கணத்திலுல் இரத்தம்விழுத	44
கணச்சூடுதணிய	45
கணம்இருமல்வாய்நாற்றத்திற்	0
மாந்தகணம் பொருமல் இருமல் கபத்திற்கு	0

அவுஷதங்கள்.	பக்கம்.
பொருமல் மாந்தகணத்திற்கு	0
கணமாந்த வயிற்றுளைவு பொருமலுக்குப் பால சஞ்சீவி மாத்திரை	0
தெற்கத்துக் கணமாந்தம் போர் மாந்தத்திற்கு	46
வீக்ககணத்துக்கு	0
கணக்கடுப்புக்கு	0
இரத்தக்கடுப்பு அடிப் புறப்பட்டதற்கு	0
இரத்தசீதக்கடுப்பு பல விதக்கழிச்ச சுரத்திற்கு	0
இரத்தம் சீதம் கடுப்பு நீர்ச்சுருக்கிற்கு	47
கிராணிக்கடுப்புக்கு	0
ஆமக்கடுப்புக்கு	0
இரத்தக்கடுப்புக்கு	0
சீமூலத்திற்கு	48
இரத்தமூலவரட்கணம் ஊதுமாந்தத்திற்கு	0
அடித்தள்ளினதற்கு	0
முக்கல்வயிற்று கடுப்பின்குண	0
மூலரத்தகணம்விஷகணம் மாந்தத்திற்கெண்ணெய்	49
இரத்தகணத்தின்குணம்	0
சுழிகணம் வரட்கணம் ஊதுகணம்மாந்தகணம் இரத்தகண முதலானதற்கெண்ணெய்	50
சகலகணம் பிரளிக்குச் சஞ்சிவியெண்ணெய்	0
சுழிகணத்திற்குக் கஷாயம்	51

(கரப்பன் வகுப்பு.)

அவுஷதங்கள்.	பக்கம்.
விஷவாதகரப்பன்குணம்	0
வாதகரப்பன்குணம்	0
பித்தகரப்பன்குணம்	52
வாதபித்தசிலேற்பனகரப்பன்-18-க்குமெண்ணெய்	0
செங்கரப்பன்குணம்	53
கருங்கரப்பன்குணம்	0
சூலைக்கரப்பன்குணம்	0
ஊதுகரப்பன்குணம்	54
பாலகரப்பன்குணம்	0
அரிகரப்பன்குணம்	55
வரகூழிகரப்பன்குணம்	0
சொரிசிரங்கிற்கு	56
பேய்ச்சொரிக்கு	0
சிரங்கிற்கு	57
சகலகரப்பன் சிரங்குக்கு மேற்பூசும் எண்ணெய்	0
சிரங்குப்புண்ணுக்குகளிம்பு	58
வாதகரப்பன் வீக்கத்திற்கு	0
மாந்தம்செவ்வாப்புகரப்பானு	0
சிறுசிரங்கு சொரிசிரங்கிற்கு	0
காற்கடுவன்மண்டைக்கடுவ	59
சிரங்கு சொரிகரப்பன் ஆறாப்புண்ணுக்கு	0
கரப்பனுக்கெண்ணெய்	0
கபாலகரப்பனுக்குத்தயிலம்	0
கரப்பனுக்குமேற்பூசுமெண்	60
கொள்ளிகரப்பானுக்கெண்ணெ	0

சுர வகுப்பு.

அவுஷதங்கள்.	பக்கம்.
கணக்காச்சலின்குணம்	61
[illegible]டம்புநோய்காச்சலின்குண	62
[illegible]ட்காய்ச்சலின் குணம்	0
ஆமசுரத்தின்குணம்	63
இரத்தசுரத்தின்குணம்	0
அன்பறுதிசுரத்தின்குணம்	64
மாய்விஷசுரத்தின்குணம்	0
அஸ்திசுரத்தின்குணம்	65
வாதபித்தசிலேற்பனசுரத்துக்	0
மாந்தசுரத்திற்கு	0
அட்சரமாந்த சுரத்திற்கு	66
மாந்தகணசுரம் வயிற்று பொருமல் வாந்திக்கு	67
மாந்தசுரதோஷத்திற்கு	0

ஔஷதங்கள்.	பக்கம்.
கணசுரம் தோஷம் வயிற்றுக்கழிச்சல் பித்தம்	0
இரத்தகணமூலத்திற்கு	0
கணக்காச்சலுக்கு	0
குளிர்சுரத்திற்கு	68
கணக்காச்சல்மாறலுக்கு	0
கணக்காச்சல்மயக்கத்திற்கு	0
கணபாண்டு கணசுரம் அல்லிவெட்டை இருமல் இரத்தம் இவைகட்கு	0
கழிச்சல்தோஷத்திற்கு	0
காச்சல் அதிசாரம்சுவாசகாசத்	0
ஆமசுரமாறலுக்கு	6)
ஆமக்குளிர்சுரங்கடுப்பிற்கு	0
விக்கல்வாந்திசுர இருமலுக்கு	0
சீதசுரத்திற்கு	0
சுரம் இருமல் சீதசுரத்திற்கு	0
சீதம்விஷசுரத்திற்கு	0
சுரத்திற்கு ஏலாதிமாத்திரை	70
சுரம்வரட்கணம்இரத்தகணம்குழிக்தோஷம்சவலைக்கு	0
பழஞ்சுரத்திற்கு	0
பழஞ்சுரம் விடாச்சுரம் விஷதோஷம் சன்னிக்கும்	0
அதிசாரம் காச்சல்சுவாசம் வாந்தி சுரதாபம் விக்கல் தாகத்திற்கு	7[illegible]
பித்தசுரம்தாபசுரம் பழவெதுப்புக்குமேற்பூசும்எண்	0
கணக்காய்ச்சலுக்குக்கஷாயம்	0
சகலசுரங்களுக்கும் பச்சைக்கர்ப்பூரமாத்திரை	0
குளிர்சுரத்திற்கு	72
சகலசுரத்திற்குமாத்திரை	0
சுரத்திற்காகாபதார்த்தங்கள்	0
சன்னி வகுப்பு.	
மாந்தசன்னிக்குணம்	0
ஆமசன்னியின்குணம்	73
கோரமஜன்னிக்குணம்	0
தாந்திரிகஜன்னிகுணம்	74
தீராதஜன்னிக்குணம்	0
சகலமார்தஜன்னிகுணம்	0
தோஷசன்னி மாந்தசன்னி பித்தசுரம் வாந்திக்கு	0
மாந்தகணஜன்னிக்கு	75
மாந்தகளஜன்னிக்கு பலஜன்	0
சன்னிசுரம் கபத்திற்கு	0
விஷசன்னி குளிர்சன்னி சுரம் விக்கலுக்கு	0
விஷதோஷசன்னி மாந்தம்பித்தசுரம் வாந்திக்கு	76
வலிப்பின் வகுப்பு.	
மாந்தவகுப்பின்குணம்	0
மார்தவலிப்புகாக்கைவலிப்புக்	0
காக்கைவலிப்புக்கு	0
சளி இருமல் கக்கல் விஷசுரம் விச்சுழி வலிப்புஜன்னிதோஷம் வயிற்றுப்பொருமலுக்கு	77
பிறஇசிவுக்கு	0
கழிச்சல் வகுப்பு.	
கழிச்சல்தோஷத்திற்கு	0
மாந்தக்கழிச்சல் மாந்தசன்னி	0
கழிச்சலுக்கு	0
பால்போற்கழிவதற்கு	78
கழிச்சல்சுரத்திற்கு	0
கழிகணம் சுரம் வரட்சிக்கு	0
கழிச்சல் இருமலுக்கு	79
கழிச்சல்வாந்திக்கு	0
கழிச்சல் இருமல் வாந்திக்கு	0
மாந்தக்கழிச்சலின்குணம்	0
கணக்கழிச்சலின்குணம்	0
ஆமக்கழிச்சலின்குணம்	80
சலக்கழிச்சலுக்கு	0
வெப்புக்கழிச்சலுக்கு	0